| தொகுதி. | தொகுதி 1-க்கு சங்கியை. | புத்தகங்களின் விபரம். | |
|---|---|---|---|
| 13 | 4 | கலம்பகம் | –125 பிரபந்தங்கள் |
| | 5 | பிள்ளைத்தமிழ்—மூலம் | வரையில் |
| | 6 | சூடாமணி நிகண்டு 11, 12 தொகுதிகளும் | |
| | 7 | திரிபு | |
| | 8 | யமகம் | |
| | 9 | நிரோட்டகம் | |
| | 10 | பதிற்றுப்பத்து | |
| | 11 | வெண்பா அந்தாதி | |
| | 12 | கலித்துறை அந்தாதி—மூலம் | 7 முதல் 19 முடிய– |
| | 13 | சிலேடை | 125 பிரபந்தங்கள் |
| | 14 | மடல் | வரையில் |
| | 15 | குறவஞ்சி | |
| | 16 | குறம் | |
| | 17 | பள்ளு | |
| | 18 | பரணி | |
| | 19 | வண்ணம் | |
| | 20 | சதகம்—மூலம் | 20 முதல் 27 முடிய |
| | 21 | மாலை | –125 பிரபந்தங்கள் |
| | 22 | நான்மணி மாலை | வரையில் |
| | 23 | மும்மணிக்கோவை | |
| | 24 | இரட்டைமணி மாலை | |
| | 25 | நவமணி மாலை | |
| | 26 | பதிகம் | |
| | 27 | சிறந்த சில்லறைப் பிரபந்தங்கள் | |
| 14 | 1 | வேழமுகம் | |
| | 2 | பிள்ளையார் சிந்தனை | |
| | 3 | சரஸ்வதி சிந்தனை | |
| | 4 | சகலகலாவல்லிமாலை | |
| | 5 | ஆத்திசூடி | |
| | 6 | கொன்றைவேந்தன் | |
| | 7 | மூதுரை | |
| | 8 | நறுந்தொகை | |
| | 9 | உலகநீதி | |
| | 10 | நல்வழி | |
| | 11 | நன்னெறி | |
| | 12 | நீதிவெண்பா | |
| | 13 | அறநெறிச்சாரம் | |
| | 14 | நீதிநெறி விளக்கம் | |
| | 15 | சோமேசர் முதுமொழிவெண்பா | |

| தொகுதி | தொகுதி 1-க்கு சங்கியை. | புத்தகங்களின் விபரம். |
|---|---|---|
| 14 | 16 | விவேகசிந்தாமணி |
| | 17 | நீதிசாரம் |
| | 18 | நீதிநூல்—வேதநாயகம்பிள்ளை |
| | 19 | குமரேச சதகம் |
| | 20 | அறப்பளீசுவரர் சதகம் |
| | 21 | சூடாமணி நிகண்டு 12 தொகுதிகளும் |
| | 22 | வருஷாதிநூல் |
| | 23 | திருப்புகழ் |
| | 24 | நன்னூல் வசனச் சுருக்கம் |
| | 25 | கந்தர் கலிவெண்பா |
| | 26 | சரசுவதியந்தாதி |
| | 27 | அருணகிரியந்தாதி |
| | 28 | அபிராமியந்தாதி |
| | 29 | திருப்புகலூரந்தாதி |
| | 30 | திருவேங்கடத்தந்தாதி |
| | 31 | பழமலையந்தாதி |
| | 32 | மறைசையந்தாதி |
| | 33 | கல்வளையந்தாதி |
| | 34 | திருவரங்கத்தந்தாதி |
| | 35 | திருச்செந்தில் நிரோட்டக யமகவந்தாதி |
| | 36 | திருக்கருவைப் பதிற்றுப்பத்தந்தாதி |
| | 37 | மதுரைப்பதிற்றுப்பத்தந்தாதி |
| | 38 | கலைசைச் சிலேடைவெண்பா |
| | 39 | சிங்கைச் சிலேடைவெண்பா |
| | 40 | திருவரங்கத்துமாலை |
| | 41 | சோணசைலமாலை |
| | 42 | பெரியநாயகியம்மை திருவிருத்தம் |
| | 43 | மதுரை மீனாட்சியம்மை இரட்டை மணிமாலை |
| | 44 | சிதம்பர மும்மணிக்கோவை |
| | 45 | நால்வர் நான்மணிமாலை |
| | 46 | திருவாரூர் நான்மணிமாலை |
| | 47 | செங்கழுநீர் விநாயகர் பிள்ளைத் தமிழ் |
| | 48 | முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழ் |
| | 49 | அமுதாம்பிகை பிள்ளைத்தமிழ் |
| | 50 | மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ் |
| | 51 | திருவிடைமருதூர் உலா |
| | 52 | தஞ்சைப் பெருவுடையாருலா |
| | 53 | நெல்விடுதூது |
| | 54 | பணவிடுதூது |
| | 55 | வருணகுலாதித்தன்மடல் |
| | 56 | சித்திரமடல் |

| தொகுதி | தொகுதி 1-க்கு சங்கியை | புத்தகங்களின் விபரம். |
|---|---|---|
| 14 | 57 | வெங்கைக் கலம்பகம் |
| | 58 | மதுரைக்கலம்பகம் |
| | 59 | சமுத்திர விலாஸம் |
| | 60 | சந்திரவிலாஸம் |
| | 61 | கலிங்கத்துப்பரணி |
| | 62 | ஏலாதி |
| | 63 | சிறுபஞ்சமூலம் |
| | 64 | நான்மணிக்கடிகை |
| | 65 | திரிகடுகம் |
| | 66 | இன்னா நாற்பது |
| | 67 | இனியவை நாற்பது |
| | 68 | ஆசாரக்கோவை |
| | 69 | முதுமொழிக்காஞ்சி |
| | 70 | பழமொழி நானூறு |
| | 71 | நாலடியார் |
| | 72 | திருக்குறள் |
| | 73 | நன்னூல் காண்டிகையுரை |
| | 74 | நன்னூல் விருத்தியுரை |
| | 75 | பஞ்சலட்சணம், வச்சணந்திமாலையுடன் வசனம் |
| | 76 | தஞ்சை வாணன் கோவை |
| | 77 | வெங்கைக் கோவை |
| | 78 | கோடீச்சுரக் கோவை |
| | 79 | சீகாழிக்கோவை |
| | 80 | கல்லாடம் |
| | 81 | அருணாசல புராணம் |
| | 82 | அரிச்சந்திர புராணம் |
| | 83 | நைடதம் |
| | 84 | நளவெண்பா |
| | 85 | சிவராத்திரி புராணம் |
| | 86 | ஏகாதசி புராணம் |
| | 87 | முக்கூடற் பள்ளு |
| | 88 | கதிரைமலைப் பள்ளு |
| | 89 | திருக்குற்றாலக் குறவஞ்சி |
| | 90 | சரபேந்திர பூபாலக் குறவஞ்சி |
| | 91 | அருணாசலக்கவி இராம நாடகக் கீர்த்தனை |
| | 92 | நந்தனர் சரித்திர கீர்த்தனை |
| | 93 | குசேலோபாக்கியானம் |
| | 94 | பாகவதம்—செவ்வைச்சூடுவார் |
| | 95 | வில்லிபுத்தூரார் பாரதம் |
| | 96 | அஷ்டாவதானம் அரங்கநாதகவி பாரதம் |

| தொகுதி | தொகுதி 1-க்கு சங்கியை. | புத்தகங்களின் விபரம். |
| --- | --- | --- |
| | | நூல்களின் தகுதிக்கேற்பக் குறிப்புரை, அரும்பதவுரை, பதவுரை, பொழிப்புரை கருத்துரை, இன்றியமையாத இடங்களில் விசேட உரை முதலியன இனிய எளிய நடையில். |
| 15 | 1 | நாளிதுவரையில் வெளியாயிருக்கிற இலக்கியங்களிலுள்ள பெருங்காப்பிய உறுப்புக்களின் செய்யுள் தொகுதி—மூலம் |
| 16 | 1 | தொல்காப்பியம் முழுவதும் எல்லாருடைய உரையுமுள்பட |
| 17 | 1 | சகலகலாவல்லிமாலை பாக்கெட் சைஸ் ஒரு பைண்டு |
| | 2 | தொல்காப்பியம்—மூலம் |
| 18 | 1 | கந்தர் கலி வெண்பா |
| | 2 | திருமுருகாற்றுப்படை |
| | 3 | சகலகலாவல்லிமாலை |
| | 4 | தொல்காப்பியம் எழுத்ததிகாரம் |
| | 5 | தொல்காப்பியம் சொல்லதிகாரம்—மூலம்— பாக்கெட் சைஸ் ஒரு பைண்டு |
| | 6 | நேமிநாதம் |
| | 7 | வீரசோழியம் |
| 19 | 1 | சகலகலாவல்லிமாலை |
| | 2 | நன்னூல் |
| | 3 | நம்பி அகப்பொருள் |
| | 4 | இறையனார் அகப்பொருள் |
| | 5 | புறப்பொருள் வெண்பாமாலை |
| | 6 | யாப்பருங்கலம் உரைகளுள்பட—டெம்மி சைஸ் |
| | 7 | யாப்பருங்கலக்காரிகை |
| | 8 | தண்டியலங்காரம் |
| | 9 | வச்சணந்திமாலை |
| 20 | 1 | கந்தர் கலிவெண்பா<br>சகலகலாவல்லிமாலை<br>பஞ்சலட்சண மூலம் பாக்கெட் சைஸ் ஒரு பைண்டு<br>வச்சணந்திமாலை [—மூலம்<br>வரையறுத்த பாட்டியல் |

| தொகுதி | தொகுதி 1-க்கு சங்கியை. | புத்தகங்களின் விவரம். |
|---|---|---|
| 20 | | உவமான சங்கிரகம் |
| | | இரத்தினச் சுருக்கம் |
| 21 | 1 | எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி, பாட்டியல் முதலியவைகளின் இலட்சணங்களைகூறச் சூத்திரங்களாகவும் செய்யுட்களாகவும், வசனங்களாகவும். |
| | | நாளிதுவரையில் வெளியாயிருக்கிற சிறந்த நூல்களுடன் அவற்றிற்குப் போதுமான தகுந்த உதாரணங்களோடு கூடிய நூற்றொகுதி |
| 22 | 1 | நாளிதுவரையில் வெளியாயிருக்கிற இலக்கிய இலக்கணங்களிலுள்ள உரைகளில் உதாரணங்களாகக் காட்டப்பட்டிருக்கும் செய்யுட்களின் தொகுதி |
| | 2 | பழைய சாசனங்களிலுள்ள செய்யுள் தொகுதி. |
| | 3 | தமிழ்ச்சாசனங்களின் தொகுதி |
| 23 | 1 | இந்த அட்டவணையிற்கண்ட நூல்களின் ஆசிரியர்கள், உரையாசிரியர்கள், இவர்களை ஆதரித்தவர்கள் முதலியவர்களுடைய சரித்திரம், காலம், இவைகளைப்பற்றிய ஆராய்ச்சிகளின் தொகுதி. |
| | 2 | இந்த அட்டவணையிற் கண்டிராத தமிழ் இலக்கிய இலக்கண நூல்களின் ஆசிரியர்கள், உரையாசிரியர்கள், இவர்களை யாதரித்தவர்கள் முதலியவர்களுடைய சரித்திரம், காலம், இவைகளைப் பற்றிய ஆராய்ச்சிகளின் தொகுதி |
| | 3 | தமிழ் இலக்கிய இலக்கண நூல்களைப்பற்றிய பலவித ஆராய்ச்சிகளின் தொகுதி. |
| 24 | 1 | அன்னிய தேசங்களுள்பட இந்தியா முழுவதற்கும் கெய்டும் டைரெக்டரியும் (நகரங்கள் விளக்கம்) |
| 25 | 1 | தருக்க சாஸ்திரம் (Logic) |
| | 2 | தத்துவ சாஸ்திரம் (Philosophy etc.) |
| | 3 | வான சாஸ்திரம் (Astronomy) |
| | 4 | கணிதம் (Mathematics etc.) |
| | 5 | பௌமிய சாஸ்திரம் (Geology etc.) |

| தொகுதி | தொகுதி 1-க்கு சங்கியை | புத்தகங்களின் விபரம். | |
|---|---|---|---|
| 25 | 6 | பூகோளம் (Geography etc.) | |
| | 7 | தாவர சாஸ்திரம் (Botany etc.) | |
| | 8 | பிராணி வர்க்கம் (Zoology etc ) | |
| | 9 | தேகதத்துவ நூல் (Physiology etc.) | |
| | 10 | பிரகிருதி சாஸ்திரம் (Physics etc.) | |
| | 11 | சுகாதார முறை (Sanitary Science etc.) | |
| | 12 | ரஸாயனம் (Chemistry etc.) | |
| | 13 | விவசாயம் (Agriculture etc.) | |
| | 14 | தேச சரித்திரம் (History etc.) | தமிழில் கூடிய வரையில் சுருக்கமாகவும், விளக்கமாகவும், தமிழ் மட்டும் தெரிந்தவர்களுக்கு உபயோகப்படும் தகுதியில் |
| | 15 | ராஜாங்கமுறை (Politics etc.) | |
| | 16 | அர்த்தசாஸ்திரம் | |
| | 17 | (Economics etc.) | |
| | 18 | சங்கீதம் (Music etc.) | |
| | 19 | இயந்திர சாஸ்திரம் (Engineering etc.) | |
| 26 | 1 | தமிழ் அகராதி பிரயோகமுள்பட (தமிழுக்குத் தமிழ்) | |
| 27 | 1 | தமிழ் வித்யாமண்டபம் (என்ஸைக்களோபிடியா) | |

## ஷெடியூல்

தஞ்சாவூர் டிஸ்டிரிக்டு குத்தாலம் சப்ரிஜிஸ்ட்டரைச்சேர்ந்த 21-ம் நம்பர் சிறுகுடி வட்டம் 132-ம் நம்பர் பட்டாவிலும், 23-ம் நம்பர் கீழ்மாந்தூர் வட்டம் 47-ம் நம்பர் பட்டாவிலும் உள்ள நன்செய் புன்செய்

நிலங்களின் விபரம்

| தொடர்ந்த நம்பர் | வட்டம் நம்பர் பெயர் | ரீ சர்வே நம்பரும் உள் நம்பரும் | விபரம் | விஸ்தீர்ணம் ஏ. | விஸ்தீர்ணம் செ. | ஆக மொத்தம் ஏ. | ஆக மொத்தம் செ. |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 21 நெ. சிறுகுடி | 373—1 | நன்செய் | 5 | 40 | | |
| 2 | ,, | 373—3 | ,, | 0 | 4 | | |
| 3 | ,, | 374—2 | ,, | 2 | 4 | | |
| 4 | ,, | 375—1 | ,, | 5 | 7 | | |
| 5 | ,, | 376—1 | ,, | 2 | 76 | | |
| 6 | ,, | 377—1 | ,, | 2 | 79 | | |
| 7 | ,, | 377—3 | ,, | 0 | 48 | | |
| 8 | ,, | 378—2 | ,, | 1 | 91 | | |
| | | | ஆக நன்செய் | | | 20 | 49 |

## ஷெடியூல்—தொடர்ச்சி

தஞ்சாவூர் டிஸ்டிரிக்டு குத்தாலம் சப்ரிஜிஸ்டரைச் சேர்ந்த 21-நம்பர் சிறுகுடி வட்டம் 132-ம் நம்பர் பட்டாவிலும், 23-ம் நம்பர் கீழ்மாந்தூர் வட்டம் 47-ம் நம்பர் பட்டாவிலும் உள்ள நன்செய் புன்செய்

நிலங்களின் விபரம்—தொடர்ச்சி

| தொடர்ந்த நம்பர் | வட்டம் நம்பர் பெயர் | ரீ சர்வே நம்பரும் உள் நம்பரும் | விபரம் | விஸ்தீரணம் ஏ. | விஸ்தீரணம் செ. | ஆக மொத்தம் ஏ. | ஆக மொத்தம் செ. |
|---|---|---|---|---|---|---|---|
| 9 | 21 நெ. சிறுகுடி | 378—1 | புன்செய் | 0 | 22 | 0 | 22 |
| | | | ஆக நன்செய் புன்செய் | | | 20 | 71 |
| 10 | 23 நெ. கீழ்மாந்தூர் | 198 | நன்செய் | 4 | 91 | | |
| 11 | ,, | 199 | ,, | 3 | 59 | | |
| 12 | ,, | 200—2 | ,, | 3 | 46 | | |
| 13 | ,, | 201 | ,, | 6 | 7 | | |
| 14 | ,, | 202—2 | ,, | 3 | 8 | | |
| 15 | ,, | 203—2 | ,, | 4 | 41 | | |
| 16 | ,, | 204—2 | ,, | 5 | 56 | | |
| 17 | ,, | 205—2 | ,, | 3 | 51 | | |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 18 | 23 கெ. கீழ்மாந்தூர். | 206 | நன்செய் | 4 | 40 | | |
| 19 | ,, | 207—2 | ,, | 4 | 8 | | |
| 20 | ,, | 208—2 | ,, | 3 | 68 | | |
| 21 | ,, | 209—2 | ,, | 3 | 3 | | |
| 22 | ,, | 210—2 | ,, | 2 | 35 | | |
| 23 | ,, | 211—2 | ,, | 2 | 3 | | |
| 24 | ,, | 213—1 | ,, | 0 | 58 | | |
| 25 | ,, | 214 | ,, | 2 | 48 | | |
| 26 | ,, | 215—4 | ,, | 0 | 40 | | |
| 27 | ,, | 216—2 | ,, | 3 | 6 | | |
| 28 | ,, | 217—2 | ,, | 3 | 88 | | |
| 29 | ,, | 218 | ,, | 2 | 31 | | |
| 30 | ,, | 219 | ,, | 1 | 80 | | |
| 31 | ,, | 221 | ,, | 2 | 99 | | |
| 32 | ,, | 222—2 | ,, | 2 | 93 | | |
| 33 | ,, | 223 | ,, | 3 | 65 | | |
| 34 | ,, | 227—2 | ,, | 3 | 87 | | |
| 35 | ,, | 238—2 | ,, | 3 | 24 | | |
| 36 | ,, | 239 | ,, | 2 | 86 | | |
| 37 | ,, | 240 | ,, | 2 | 59 | | |
| 38 | ,, | 241—2 | ,, | 2 | 74 | | |
| | | | ஆக நன்செய் .... | | | 93 | 54 |

## ஷெடியூல்—தொடர்ச்சி

தஞ்சாவூர் டிஸ்டிரிக்டு குத்தாலம் சப்ரிஜிஸ்ட்டரைச் சேர்ந்த 23-ம் நம்பர் வட்டம் 47-ம் நம்பர் பட்டாவில் உள்ள நன்செய் புன்செய் நிலங்களின் விபரம்—தொடர்ச்சி

| தொடர்ந்த நம்பர் | வட்டம் நம்பர் பெயர் | ரீ சர்வே நம்பரும் உள் நம்பரும் | விபரம் | விஸ்தீரணம் ஏ. | விஸ்தீரணம் செ. | ஆக மொத்தம் ஏ. | ஆக மொத்தம் செ. |
|---|---|---|---|---|---|---|---|
| 39 | 23-ம் நெ. கீழ்மாந்தூர் | 111—5 | புன்செய் | 0 | 53 | கிட்டங்கி வகையறு | |
| 40 | ,, | 212—2 | ,, | 1 | 18 | | |
| 41 | ,, | 213—2 | ,, | 1 | 3 | | |
| 42 | ,, | 220 | ,, நத்தம் | 1 | 76 | | |
| | | | ஆக புன்செய் .... | | | 4 | 50 |
| | | | ஆக நன்செய் புன்செய் .... | | | 98 | 4 |
| | | | ஆக வட்டங்கள் இரண்டுக்கு .... | | | 118 | 75 |

குறிப்பு:—"இந்த தஸ்தாவேஜி 1940ம் வருஷம் அக்டோபர் மாதம் 24உ பகல் 3-மணிக்குமேல் 4-மணிக்குள் குத்தாலம் சப் ரிஜிஸ்தாராபீஸில் தாக்கல் செய்யப்பட்டு 1 நெ. புத்தகம் 445வது வால்யூம் 197 முதல் 215 வரையுள்ள பக்கங்களில் 1940ம் வருஷத்திய 2152ம் நம்பராக ரிஜிஸ்தர் செய்யப்பட்டது.



His Holiness Kasivasi Arulnandi Tambiran Swamigal Avergal
The 20th in the Holy Line of Succession, Sri Kasi Mutt, Tirupanandal.
திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம் இருபதாம் பட்டத்தில் எழுந்தருளியிருக்கும்
ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள்.

# பதிப்புரை

செல்வ நெடுமாடஞ் சென்று சேணோங்கிச்
செல்வ மதிதோயச் செல்வம் உயர்கின்ற
செல்வர் வாழ்தில்லைச் சிற்றம்பலமேய
செல்வன் கழலேத்துஞ் செல்வஞ் செல்வமே.

செந்தமிழும் சிவ நெறியும் வளரப் பெருந்தொண்டு புரிந்து திருப்பனந்தாள் காசி மடத்தின் தலைவராய் விளங்கிய தவத்திரு காசிவாசி சாமிநாதத் தம்பிரான் சுவாமிகள் சென்னைப் பல்கலைக் கழகத்தில் ஆண்டுதோறும் தமிழ் வித்துவான் தேர்வில் முதல் வகுப்பில் முதல்வராகத் தேர்ச்சி பெறும் மாணவரொருவர்க்கு ஆயிரம் வெண்பொன்களைப் பரிசாக வழங்குதற்குரிய பெரும் பொருளை முதலீடு வைத்தது போன்றே, அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் ஆண்டு தோறும் தேவார சங்கீத பூஷண முடிவுத் தேர்வில் முதல் வகுப்பில் முதல்வராகத் தேர்ச்சிபெறும் மாணவ ரொருவர்க்கு ஐந்நூறு ரூபா பரிசளித்தற்கும் தமிழிலக்கிய இலக்கண நூல்களை எல்லோரும் எளிய விலைக்குப் பெற்றுப் பயிலுமாறு வெளியிட்டுப் பரப்புதற்கும் திருமுறை கண்ட சோழ மன்னனாகிய இராச ராச அபயகுலசேகரனது நினைவாகச் சேமநிதி வழங்கியுள்ளார்கள்.

அருளுள்ளம் வாய்ந்த தம்பிரான் சுவாமியவர்கள் இத் தேவாரத் திருமுறைப்பரிசு நிதியினை நிறுவியதன் விளைவாக அமைந்த விதிகளின்படி அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தார் தம்மால் நடத்தப்பெறும் தேவார சங்கீத பூஷணத் தேர்வுகளுக் குரிய பன்னிரு திருமுறைத் திருப்பாடற்றிரட்டினை வெளியிடுவது இன்றியமையாததாயிற்று. தேவார சங்கீத பூஷணத் தேர்வு களுக்குப் பாடமாகவுள்ள ஆயிரத்திருநூறு திருப்பாடல்களுள் முதல் நிலை (Preliminary) வகுப்புக்குரிய அறுநூறு திருப்பாடல் களடங்கிய முதற்றொகுதி பல்கலைக் கழகத் தமிழ் விரிவுரையாளர் வித்துவான் தி. பொ. பழனியப்ப பிள்ளையவர்கள் எழுதிய குறிப் புரையுடன் 1944-ம் ஆண்டு பல்கலைக்கழகத்தாரால் வெளியிடப் பெற்றது. அதனையொட்டி எஞ்சிய முடிவுநிலை (Final) வகுப் புக்குரிய அறுநூறு திருப் பாடல்களும் அடங்கிய இரண்டாந்

தொகுதி இப்பொழுது பல்கலைக்கழகப் பதிப்பாக வெளிவருகின்றது. இதன்கண் ஒவ்வொரு பாடலிலும் அமைந்த அருஞ்சொற்களுக்குப் பொருளும் சில தொடர்களுக்குப் பொருள் விளக்கமும் அடிக் குறிப்பாகத் தரப் பெற்றுள்ளன. இயலிசைத் தமிழ் பயிலும் மாணாக்கர்களுக்கு இக்குறிப்புக்கள் ஓரளவு பயன்படுமெனை நம்புகின்றேன். இதன்கண் ஒவ்வொரு பாடலின் ஈற்றிலுமுள்ள எண்கள் அவ்வத் திருமுறைப் பதிகப் பாடல்களின் எண்களாகும்.

இத்தொகுதியின் அச்சுவேலை 1944-ம் ஆண்டில் தொடங்கப்பட்டது. எனினும் போர்க்காலத்தில் நேர்ந்த சில தடைகளால் இடையே நின்றுவிட்டது. இதன்கண் 1 முதல் 80-ஆம் பக்கம் முடியவுள்ள பகுதி திருச்சிராப்பள்ளி யுனைடெட் அச்சகத்திலும் 81-ம் பக்க முதல் உள்ள ஏனைப் பகுதி சிதம்பரம் கிராஸ்வேடு அச்சகத்திலும் அச்சிடப் பெற்றனவாகும்.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் தேவாரத் திருமுறைப் பரிசு முதலியவற்றிற்குரிய பெரும்பொருளை வழங்கிய தவச் செல்வர் ஸ்ரீலஸ்ரீ சாமிநாதத் தம்பிரான் சுவாமிகளைத் தமிழ் மக்கள் என்றும் மறவாது போற்றுங் கடமையுடையவராவர். அவ்வடிகளார் அறிவுறுத்திய நன்முறையினையுளத்துட்கொண்டு குமரி முதல் இமயம் வரை பலவகை நல்லறங்களுக்கும் பெருநிதி வகுத்து அவ்வறங்கள் என்றும் நிலைபெறுதற்குவேண்டும் திட்டங்களை நிறைவேற்றியருளும் திருப்பனந்தாள் ஸ்ரீ காசி மடத்தின் தலைவர் காசிவாசி தவத்திரு அருள்நந்தித்தம்பிரான் சுவாமிகளுக்குத் தமிழ் மக்களது அன்புகலந்த வணக்கம் என்றும் உரியதாகும்.

என்னை இப்பதிப்புப் பணிக்கு உரியவனாகச்செய்த பல்கலைக் கழகத்தார்க்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

க. வெள்ளைவாரணன்.

திருச்சிற்றம்பலம்

# திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் தேவாரப் பதிகங்கள்

# முதல் திருமுறை

## திருவீழிமிழலை – பண் – நட்டபாடை

சடையார்புன லுடையா[1]னொரு சரிகோவண முடையான்
படையார்மழு வுடையான்பல பூதப்படை யுடையான்.
மடமான்விழி யுமைமாதிடம்[2] உடையானெனையுடையான்
விடையார்கொடி[3] யுடையானிடம் வீழிம்மிழ லையே. 1

[1]ஈறாய்முத லொன்றாயிரு பெண்ணாண்குண மூன்றாய்[2]
மாறாமறை நான்காய்வரு பூதம்அவை ஐந்தாய்
ஆறார்சுவை ஏழோசையொ டெட்டுத்திசை தானாய்
வேறாய்உடன் ஆனா[3]னிடம் வீழிம்மிழ லையே. 2

---

1. [1] திருச்சடையின்கண்ணே நிறைந்த கங்கையாகிய நீரையுடையான்.
[2] இடப்பாகம். [3] இடபக்கொடி.

2. [1] ஈறாய் முதலாய் என ஆய் என்பதனைப் பின்னுங் கூட்டுக.
[2] சாத்துவிகம், இராசதம், தாமதம் எனக்குணம் மூன்றும்.
[3] 'வேறாய் உடனானான்' என்பது இறைவன் உயிர்கட்குப் பொருள்களை அறிவித்துக்காட்டும்நிலையில் உயிர்களின் வேறாகவும், கண்ணொளியும் ஆன்மபோதமும் போல் தான் உயிரறிவிற் கலந்து நின்று காணும் நிலையில் உயிர்களின் உடனாகவும் நின்று அருளும் இயல்பினன் என்னும் உண்மையினை யுணர்த்துகின்றது. இயல்பாகவே பாசங்களின் நீங்கிய முதல்வன் உலகப்பொருளொன்றினுந் தோய்வின்றித் தன்னியல்பில் நிற்றலாற் சிவமெனவும், உலகெலாமாகி வேறாய் உடனுமாய் இவ்வாறு உயிர்களின் வழிநிற்குந் தன்மையிற் சத்தியெனவும் ஒற்றுமைத் திறத்தால் இருதிறப்பட்டுப் பின் படைத்தல் முதலாக ஐந்தொழில் செய்யும் நிலையில் பதி யெனவும் பெயர் பெற்று நிற்பன் என்பர். இம்மூவகை நிலையினையும் இத்திருப்பாடல் விளக்கி நிற்றல் காண்க.

இதன்கண் ஒன்றுமுதல் எட்டீறான எண்கள் பயின்று வந்தமையின் இஃது எண்ணலங்காரம்

வம்மின்னடி யீர்நாண்மலர்[1] ரிட்டுத்தொழு துய்ய
உம்மன்பினொ டெம்மன்புசெய் தீசன்உறை கோயில்
மும்[2]மென்றிசை முரல்வண்டுகள் கெண்டித்திசையெங்கும்
விம்மும்பொழில் சூழ்தண்வயல் வீழிம்மிழ லையே. 3

பண்ணும்[1]பதம் ஏழும்[2]பல வோசைத்தமி ழவையும்[3]
உண்ணின்றதொர் சுவையும்[4]உறு தாளத்தொலி பலவும்
மண்ணும்புனல் உயிரும்வரு காற்றுஞ்சுடர் மூன்றும்[5]
விண்ணும்முழு தானானிடம் வீழிம்மிழ லையே. 4

வீழிம்மிழ லைம்மேவிய விகிர்தன்[1]றனை விரைசேர்
காழிந்நகர்க் கலைஞானசம் பந்தன்தமிழ் பத்தும்
யாழின்னிசை வல்லார்சொலக் கேட்டாரவ ரெல்லாம்
ஊழின்மலி வினை[2]போயிட வுயர்வானடை வாரே. 11

---

**3.** [1] அன்றலர்ந்த மலர். [2] ஒலிக்குறிப்பு.

ஈசன் உறைகோயில் வீழிம்மிழலையே யென இயைத்து, அடியீர் உம் அன்பினோடு எம் அன்பு செய்து நாண்மலரிட்டுத் தொழுதுய்ய வம்மின் எனக்கூட்டுக.

**4.** [1] பாலை, குறிஞ்சி, மருதம், செவ்வழி என்னும் நாற்பெரும்பண்களும் அவற்றின் திறங்களும்.

[2] குரல் முதல் எழிசைக்குரிய இசைச்சுவரங்கள் எழும்.

[3] பல்வகை வண்ணங்களமையப் பெற்றனவாய் இசைக்குரிய இன்னோசை தழுவிய தமிழ்ச் சொற்கள்.

[4] நகை முதலிய சுவைகள். [5] ஞாயிறு, திங்கள், தீ என்பன.

இத்திருப்பாடலின் முன்னிரண்டடிகளால் இறைவன் தமிழ்தழீஇய இசையுருவாய் நின்ற தன்மையினையும், பின்னிரண்டடிகளால் அவன் எண்பேருருவினனாக (அட்ட மூர்த்தமாக) நின்ற தன்மையினையும் ஆளுடைய பிள்ளையார் விளக்கியருளினமை நோக்குக.

**11.** [1] சதுரப்பாடுடையான்.

[2] செய்தாரையே முறைமையாற் சார்ந்து வருத்தும் வினை.

## திருநெய்த்தானம் – பண் – நட்டபாடை

மையாடிய கண்டன்மலை மகள்பாகம துடையான்
கையாடிய கேடில்கரி யுரிமூடிய வொருவன்
செய்[2]யாடிய குவளைம்மலர் நயனத்தவ ளோடும்
நெய்யாடிய பெருமானிடம் நெய்த்தான[3]மெ னீரே. 1

பறையும்பழி பாவம்[1]படு துயரம்பல தீரும்
பிறையும் புனல் அரவும்படு சடையெம்பெரு மானூர்
அறையும்புனல் வருகாவிரி அலைசேர்வட கரைமேல்
நிறையும்புனை மடவார்பயில் நெய்த்தானமெ னீரே. 2

பேயாயின பாடப்பெரு நடமாடிய பெருமான்
வேயாயின தோளிக்கொரு பாகம்மிக வுடையான்
தாயாகிய வுலகங்களை நிலைபேறுசெய் தலைவன்[1]
நேயாடிய[2] பெருமானிட நெய்த்தானமெ னீரே. 3

தலமல்கிய புனற்காழியுள் தமிழ்ஞானசம் பந்தன்
நிலமல்கிய புகழான்மிகு நெய்த்தானனை நிகரில்
பலமல்கிய பாடல்இவை பத்தும்மிக வல்லார்
சிலைமல்கிய செல்வனடி சேர்வர்சிவ கதியே. 11

---

1. [1] கருமை. [2] வயல்.
[3] நெய்யாடிய பெருமான் எழுந்தருளியிருத்தலால் இவ்வூர் நெய்த்தானம் எனப் பெயர் பெற்றது.

2. [1] பழி பாவம் பறையும் என மாற்றிப் பழி பாவங்கள் அறவே கெட்டொழியும் எனப்பொருள் கொள்க.
எம்பெருமான் ஊர், நெய்த்தானம் என்னீர் (அங்ஙனங் கூறுவீராயின்) நும் பழி பாவம் பறையும் துயரம் பலவும் தீரும் என வினை முடிவு செய்க.

3. [1] தாயாகிய தலைவன், உலகங்களை நிலைபேறுசெய் தலைவன் எனத் தனித் தனி கூட்டுக.
[2] நே–அன்பு, எவ்வுயிர்க்கும் அன்பினையருளிய எனப் பொருள் கொள்க; அன்றி 'நெய்யாடிய' என்பதன் எதுகை நோக்கிய திரிபெனினும் அமையும்.

## திருமயிலாடுதுறை – பண் – தக்கராகம்

கரவின் றி[1] நன்மா மலர்கொண்டே
இரவும் பகலுந் தொழுவார்கள்
சிரமொன் றியசெஞ் சடையான்வாழ்
வரமா[2] மயிலா டுதுறையே. 1

உரவெங் கரி[1]யின் உரிபோர்த்த
பரமன் உறையும் பதியென்பர்
குரவம் சுரபுன் னையும்வன்னி[2]
மருவும் மயிலா டுதுறையே. 2

ஊனத் திருள்[1]நீங் கிடவேண்டில்
ஞானப் பொருள்[2]கொண் டடிபேணும்
தேனைத் தினியா னமருஞ்சேர்
வானம் மயிலா டுதுறையே. 3

அஞ்சொண் புலனும் அவைசெற்ற
மஞ்சன்[1] மயிலா டுதுறையை
நெஞ்சொன் றிநினைந் தெழுவார்மேல்
துஞ்சும் பிணியா யினதானே. 4

---

1. [1] வஞ்சனையின்றி. தொழுவார்கள் சிரத்தின்கண் அமர்ந்தருளும் செஞ்சடையான் என்றும், அவன் வாழ்தலாகிய மேன்மையது மயிலாடுதுறை என்றும் இயைத்துப் பொருள்கொள்க.
   [2] வரம்—மேன்மை.
2. [1] திண்மையுடையதாய கொடிய யானை.
   [2] வன்னியும் என்பதன்கண் எண்ணும்மை விகாரத்தால் தொக்கது.
3. [1] ஊனத்தைத்தரும் இருள்; அஃதாவது மேன்மேலும் பிறவித்தொடர்ச்சியினை யுண்டாக்கித் துன்புறுத்தும் ஆணவமலமென்னும் இருள்.
   [2] இறைவனது திருவருண் ஞானமாகிய பொருள்.
4. [1] ஒண்மையை (அறிவுடைமையினை) விளக்கும் ஐந்துபுலன்கண் மேலும் செல்லுந் திறத்தனவாகிய அவா வைந்தனையும் அவியப்பொருதுவென்ற மைந்தன்; என்றது 'பொறிவாயில் ஐந்து அவித்தான்' என்ற பொருளுரையினைக் கருதியது. அஞ்சு, மஞ்சன் என்பன போலி. துஞ்சும் என்னும் சொல் அறவே கெடும் என்னும் பொருளினது. உயிர்களின் அறிவு வளர்ச்சிக்குப் புலன்கள் வழியாகலான் 'ஒண்புலன்' என்றார்.

## திருச்சேய்ஞலூர் – பண் – பழந்தக்கராகம்

நூலடைந்த கொள்கையாலே நுன்[1]னடி கூடுதற்கு
மாலடைந்த நால்வர்[2]கேட்க நல்கிய நல்லறத்தை
ஆலடைந்த நீழல்மேவி யருமறை சொன்னதென்னே
சேலடைந்த தண்கழனிச் சேய்ஞலூர் மேயவனே. 1

நீறடைந்த மேனியின்கண் நேரிழை யாளொருபால்
கூறடைந்த கொள்கையன்றிக் கோல வளர்சடைமேல்
ஆறடைந்த திங்கள்சூடி யரவம் அணிந்த தென்னே
சேறடைந்த தண்கழனிச் சேய்ஞலூர் மேயவனே. 2

காடடைந்த ஏன[1]மொன்றின் காரண மாகிவந்து
வேடடைந்த வேடனாகி விசயனொ டெய்ததென்னே
கோடடைந்த மால்களிற்றுக் கோச்செங்க ணாற்கருள்செய்[2]
சேட[3]டைந்த செல்வர்வாழுஞ் சேய்ஞலூர் மேயவனே. 6

பீரடைந்த பாலதாட்டப்[1] பேணாத வன்றாதை[2]
வேரடைந்து பாய்ந்ததாளை[3] வேர்த்தடிந் தான்[4]தனக்குத்
தாரடைந்த மாலைசூட்டித் தலைமை வகுத்ததென்னே[5]
சீரடைந்த கோயில்மல்கு சேய்ஞலூர் மேயவனே. 7

---

1. [1] நின் நுன் எனவழங்குதல் அக்கால வழக்கு.
[2] விருப்பங்கொண்ட சனகர் முதலிய நான்கு முனிவர்கள்.

6. [1] அருச்சுனன் தவத்திலிருக்கையில் அவனைக் கொல்லுதற்பொருட்டுத் துரியோதனனால் ஏவப்பட்டுவந்த மூகாசூரன் என்னும் பன்றி. இந்நிகழ்ச்சியைப் பாரதத்திற் காண்க.
[2] முன்னைப் பிறப்பில் திருவானைக்காவில் தன்னை வழிபட்ட சிலந்தியைச் சோழர்மாபிற் கோச்செங்கணாகப் பிறக்கும்படி திருவருள் செய்தமை.
[3] சேடு—பெருமை.

7. [1] சுரைக்காம்பினின்றும் பீராய்ச்சுரந்த பாலினைச் சிவலிங்கத் திருமேனியிற் சொரிந்து வழிபட.
[2] அவ்வழிபாட்டினை விரும்பாத எச்சதத்தன்.
[3] மரத்தின் பாங்கர் மறைந்திருந்து வழிபாட்டிற்குரிய பாற்குடத்தினை இடறிக்கவிழ்த்த தந்தையின்காலை.
[4] தம் அருகே கிடந்த சிறிதாகிய வோரால் வெட்டி வீழ்த்திய சண்டேசப் பிள்ளையார்.
[5] இங்ஙனம் நின்னடிக்கு அன்பாகிய சண்டேசப்பிள்ளையார் தம் தந்தையைக்கொன்ற பாவச்செய்கை அறமாய் முடிந்தது எவ்வண்ணம் என இறைவனை வினவிய குறிப்புணர்க.

## திருநெடுங்களம் - பண் - பழந்தக்கராகம்

மறையுடையாய் தோலுடையாய் வார்சடைமேல் வளரும்
பிறையுடையாய் பிஞ்ஞகனே[1] யென்றுனைப் பேசினல்லால்
குறையுடையார் குற்றம்ஓராய் கொள்கையினால் உயர்ந்த
நிறையுடையார்[2] இடர்களையாய் நெடுங்களம் மேயவனே 1

கனைத்தெழுந்த[1] வெண்திரைசூழ் கடலிடைநஞ்சுதன்னைத்
தினைத்தனையா[2] மிடற்றில்வைத்த திருந்தியதேவ நின்னை
மனத்தகத்தோர் பாடல்ஆடல் பேணியிராப் பகலும்
நினைத்தெழுவார் இடர்களையாய் நெடுங்களம் மேயவனே 2

நின்னடியே வழிபடுவான்[1] நிமலா நினைக் கருத
என்னடியான் உயிரைவவ்வேல் என்றடற்கூற் றுதைத்த
பொன்னடியே பரவிநாளும் பூவொடுநீர் சுமக்கும்
நின்னடியார் இடர்களையாய் நெடுங்களம் மேயவனே 3

மலைபுரிந்த மன்னவன்[1]றன் மகளை[2]யோர்பால் மகிழ்ந்தாய்
அலைபுரிந்த கங்கைதங்கும் அவிர்சடை யாரூரா
தலைபுரிந்த பலிமகிழ்வாய் தலைவ நின் றாள்நிழற்கீழ்
நிலைபுரிந்தார்[3] இடர்களையாய் நெடுங்களம் மேயவனே 4

---

1. [1] தலைக்கோலம் உடையவனே.
[2] ஞானவொழுக்கங்களாகிய கோட்பாட்டினாலுயர்ந்த மனஅடக்கமுடைய அடியார்கள்.

2. [1] ஆரவாரித்து எழுந்த.
[2] மிகச்சிறிய அளவாகிய தினையென்னும் அளவினதாக வலிகுறைந்து அடங்க.

3. [1] மார்க்கண்டேயர். பிள்ளையார் இறைவன்கூற்றில்வைத்து 'என்னடி யான்' என்றதும் அவரையேயாம்.

4. [1] எல்லா மலைகளாலும் விரும்பப்பெற்ற அரசனாகிய இமவான்.
[2] அவன் மகளென்றது உமையம்மையாரை.
[3] இறைவன் திருவடிநிழற்கீழ் இன்பமார்ந்து நிற்றலை விரும்பின அடியார்கள்.

## திருத்தோணிபுரம் — பண் — பழந்தக்கராகம்

வண்டரங்கப் புனற்[1]கமல மதுமாந்திப்[2] பெடையினொடும்
ஒண்டரங்க இசைபாடும் அளி[3]யரசே ஒளிமதியத்
துண்டரங்கப் பூண்மார்பர்[4] திருத்தோணி புரத்துறையும்
பண்டரங்கர்க்[5] கென்நிலைமை பரிந்தொருகாற் பகராயே. 1

எறிசுறவங் கழிக்கானல் இளங்குருகே என்பயலை[1]
அறிவுறாத் தொழிவதுவும் அருவினையேன் பயனன்றே
செறிசிறார் பதம்ஓதுந் திருத்தோணி புரத்[2]துறையும்
வெறிநிறார்[3] மலர்க்கண்ணி வேதியர்க்கு விளம்பாயே. 2

பானாறு மலர்ச்சூதப் பல்லவங்க[1] ளவைகோதி
ஏனோர்க்கும் இனிதாக மொழியும்எழில் இளங்குயிலே
தேனாரும் பொழில்புடைசூழ் திருத்தோணி புரத்தமரர்
கோனாரை[2] யென்னிடத்தே வரவொருகாற் கூவாயே. 8.

---

1. [1] வண்தரங்கப்புனல். தரங்கம்—அலை
[2] தாமரை மலரிலுள்ள தேனையுண்டு. [3] வண்டு
[4] ஒளிமதியத்துண்டர் அங்கப்பூண்மார்பர் எனப்பிரித்து ஒளிர்கின்ற பிறைத்திங்களை யணிந்தவர் என்புமாலையை யணிந்த மார்பினையுடையார் எனப்பொருள் கொள்க. அங்கம்—எலும்பு
[5] பாண்டரங்கம் என்னும் கூத்தினையுடையார்.

2. [1] பசலை; அஃதாவது காதலரைப்பிரிந்த மகளிர்க்குளதாகுந் தேமல் என்னும் நிறவேறுபாடு.
[2] ஒருங்குகூடிய வேதியச் சிறுவர்கள் வேதத்தின் தொடர்களை இடைவிடாது ஓதும்படியான சீகாழிப்பதி.
[3] வெறிநிறமார் என்பது வெறிநிறார் எனமருவியது. வெறி—மணம்

8. [1] மாவின் தளிர்கள். மாமரத்தின் தளிர்முதலாயின அம்மரத்தின் பால் மணம் நாறும் இயல்புடையனவாதலின் 'பால்நாறு மலர்ச் சூதப் பல்லவங்கள்' என்றார்.
[2] கோனார்—தலைவர், ஆர் உயர்த்தற்கண் புன்மையாய் வந்தது.

நற்பதங்கள் மிகஅறிவாய்[1] நானுன்னை வேண்டுகின்றேன்
பொற்பமைந்த வாயலகிற் பூவை[2]நல்லாய் போற்றுகின்றேன்
சொற்பதஞ்சேர் மறையாளர் திருத்தோணிபுரத்துறையும்
விற்பொலிதோள் விகிர்தனுக்கென் மெய்ப்பயலை விளம்பாயே. 9

சிறையாரும் மடக்கிளியே யிங்கேவா தேனொடுபால்
முறையாலே யுணத்தருவன்[1] மொய்பவளத்தொடுதரளந்
துறையாருங் கடற்றோணி புரத்தீசன் துளங்குமிளம்
பிறையாளன் திருநாமம் எனக்கொருகாற் பேசாயே. 10

## திருப்பழனம் - பண் - தக்கேசி

வேதமோதி வெண்ணூல்பூண்டு வெள்ளையெருதேறிப்
பூதஞ்சூழப் பொலியவருவார் புலியினுரிதோலார்
நாதாஎனவும் நக்கா[1]எனவும் நம்பா[2]என நின்று
பாதந்தொழுவார் பாவந்தீர்ப்பார் பழனநகராரே. 1

---

9. [1] இறைவனை இசைவித்தற்குரிய நல்ல இசைப்பதங்களில் தேர்ச்சி பெற்றுள்ளாய் என்றும், நல்ல இனிமைதருஞ்சொற்களாற் பேசித் தலைவனை மகிழ்வித்து என்வினை முடிக்கவல்லாயென்றும் இருபொருள்படத் தலைவி பூவைக்குக் குறிப்பிட்டமையுணர நின்றது.
[2] நாகணவாய்ப் பறவை.

10. [1] தேனொடுபால் கலத்தல் பருகுதற்குப் பெரிதுஞ் சுவையுடைத்து 'பாலொடுதேன் கலந்தற்றே' (குறள்-ககஉக) ஒப்பு நோக்குக. திருத்தோணிபுரத்தீசன் திருநாமங் கேட்டற்கு விழைந்த தலைவி கிளியையழைத்த திறம் மிகவும் நயமுடைத்து.

1. [1] நக்கன் என்பது சிவபிரான் திருப்பெயர்களுள் ஒன்று.
[2] எல்லாவுயிரானும் விரும்பப்படுவோன் இறைவன் ஆதலின் அவனை 'நம்பா' என அழைத்தார். "நம்பும்மேவும் நசையாகும்மே" (தொல். உரி. 31) என்பது நோக்குக.

கண்மேற்கண்[1]ணுஞ் சடைமேற்பிறையும் உடையார்காலனைப்
புண்ணுறுதிர மெதிராமுேடப் பொன்றப்[2]புறந்தாளால்
எண்ணுதுதைத்த எந்தைபெருமான் இமவான்[3]மகளோடும்
பண்ணார்களிவண் டறைபூஞ்சோலைப் பழனநகராரே. 2

பிறையும்புனலுஞ் சடைமேலுடையார் பறைபோல்விழிகட்பேய்[1]
உறையும்மயான மிடமாவுடையார் உலகர்தலைமகன்[2]
அறையுமலர்கொண் டடியார்பரவி ஆடல்பாடல்செய்
பறையுஞ்சங்கும் பலியும்[3]ஓவாப்[4] பழனநகராரே. 3

உரமன்னுயர்கோட் டுலறு[1]கூகை[2] யலறுமயானத்தில்
இரவிற்பூதம் பாடஆடி யெழிலாரலர்மேலைப்
பிரமன்தலையி னறவமேற்ற பெம்மான்[3]எமையாளும்
பரமன்[4]பகவன்[5] பரமேச்சுவரன் பழனநகராரே. 4

---

2. [1] நெற்றிக்கண். [2] இறக்க. [3] மலையரசன்.

3. [1] விழித்துப் பார்க்குங்கால் பறைபோன்று வட்டவடிவாகத் தோன்றும் கண்ணையுடைய பேய். "பட்டபிணங்கள் பார்ந்தகாட்டிற் பறைபோல் விழிகட்பேய்" (திருவாலங்காட்டு மூத்ததிருப்பதிகம்) என வரும் அம்மையார் பாடற்றொடர் ஈண்டு ஒப்பு நோக்குதற்குரியது.
[2] யாவர்க்கும் உயிர்க்குயிராய்நின்று இயக்கும் முதல்வன் இறைவன் ஆதலின் அப்பெருமானை 'உலகர் தலைமகன்' என்றார்.
[3] பூப்பலியாகி அருச்சனை. [4] ஒழியாத.

4. [1] நீர்ப்பசையற்று வறண்ட. [2] கோட்டான்.
[3] பிரமன் ஐந்து தலையுடன் தருக்கடைந்தகாலை அவனது ஐந்தாம் தலையைக் கிள்ளி அதன்கண் திருமாலது திருமேனியின் உதிரத்தை யிரந்துநின்ற பயிரவ மூர்த்தியின் செயலை இவ்வடி குறித்து நின்றது. இங்கு நறவம் என்றது உடலிற் குருதியை.
[4] மேலானவன்.
[5] இச்சொல்லிற்குக் 'கேவலஞானி' எனப் பொருள் கூறுவர் அடியார்க்கு நல்லார். கேவல ஞானமாவது முக்காலவுணர்ச்சி. இனிப்பகம் என்பதற்கு ஆறு எனப் பொருள்கொண்டு ஐசுவரியம் முதலிய இறைமைக் குணங்கள் ஆறினையும் உடையான் எனப் பொருள் கூறுவதும் உண்டு.

சூலவெஞ்சிலையான் மதில்மூன்றெரித்த கொல்லேறுடை
யண்ணல்
கலவ[1]மயிலுங் குயிலும்பயிலுங் கடல்போற்காவேரி[2]
நலமஞ்சுடைய நறுமாங்கனிகள் குதிகொண்டெதிருந்திப்
பலவின்கனிகள் திரைமுன்சேர்க்கும் பழனநகராரே. 5

### திருஅச்சிறுபாக்கம் - பண் - குறிஞ்சி

பொன்றிரண்டன்ன புரிசடைபுரளப் பொருகடற் பவளமொ
டழல்நிறம்புரையக்
குன்றிரண்டன்ன தோளுடை[1]யகலங் குலாயவெண் ணூலொடு
கொழும்பொடியணிவர்
மின்றிரண்டன்ன நுண்ணிடையரிவை மெல்லிய லாளையோர்
பாகமாப்பேணி
அன்றிரண்டுருவம் ஆயஎம்அடிகள் அச்சிறுபாக்கம
தாட்சிகொண்டாரே. 1

---

5. [1] தோகை.
[2] வெள்ளப்பெருக்கால் காவிரியாறு கடல்போற் றோன்றுகின்றதென்பார் 'கடல்போற் காவேரி' என்றார்.

1. [1] பவளமும் தீயும் தோளின் செந்நிற வொளிக்கும், குன்று தோளின் திரட்சிக்கும் முறையே வண்ணமும் வடிவும் பற்றிய உவமையாய் வந்தன.

தேனினுமினியர் பாலனநீற்றர் தீங்கரும்பனையர்தந்
திருவடிதொழுவார்
ஊன்நயந்துருக உவகைகள்தருவார் உச்சிமேலுறைபவர்
ஒன்றலாதாரார்[1]
வானகமிறந்து வையகம்வணங்க வயங்கொளநிற்பதோர்
வடிவினையுடையார்[2]
ஆனையினுரிவை போர்த்தஎம்அடிகள் அச்சிறுபாக்கம
தாட்சிகொண்டாரே. 2

காரிருளுருவ மால்வரை புரையக் களிற்றின துரிவைகொண்
டரிவைமேலோடி
நீருருமகளை நிமிர்சடைத்தாங்கி நீறணிந்தேறுகந்
தேறியநிமலர்
பேரருளாளர் பிறவியிற்சேரார் பிணியிலர்[1]கேடிலர்
பேய்க்கணஞ்சூழ
ஆரிருண்மாலை யாடும்எம்அடிகள்[2] அச்சிறுபாக்கம
தாட்சிகொண்டாரே 3

---

2. [1] மெய்யுணர்வின் வடிவாகிய இடபத்தினையல்லாது பிறிதொன்றினையும் ஊர்தியாகக்கொள்வாரல்லர் என்றது மெய்யுணர்வின்கண்ணேயே தோன்றி வெளிப்படுவர் என்னுங் கருத்தினதாம். இறைவன் ஊர்ந்த ஆனேறு மெய்யுணர்வின் வடிவமே யென்னு முண்மை 'உணர்வெனு மூர்வதுடையாயாய்' (6.57.6) என்னுந் தமிழ்மறையாற் புலனும்.

[2] வையகம் வணங்க வானகமிறந்து வயங்கொள நிற்பதோர் வடிவினையுடையார் என மாற்றிப் பொருள்கொள்க.

3. [1] பேரருளாளர், பிறவியிற் சேரார், பிணியிலர் என்னுந்தொடர்கள் இறைவனுக்குரிய எண்குணங்களுள் பேரருளுடைமை, இயல்பாகவே பாசங்களின் நீங்குதல், தூயவுடம்பினனுதல் என்பனவற்றை முறையே யுணர்த்திநிற்றல் காண்க.

[2] நிறைந்த இருட்பொழுதிலும் மாலைப்பொழுதிலும் ஆடல் புரியும் எம்பெருமான்.

மைம்மலர்க்கோதை மார்பினரெனவும் மலைமகளவளொடு
மருவினரெனவும்
செம்மலர்ப்பிறையுஞ் சிறையணிபுனலுஞ் சென்னிமே லுடையரேஞ்
சென்னிமேலுறைவார்
தம்மலரடியொன் றடியவர் பரவத் தமிழ்ச்சொலும் வடசொலுந்
தாள்நிழற்சேர
அம்மலர்க்கொன்றை யணிந்தஎம்அடிகள் அச்சிறு பாக்கம
தாட்சிகொண்டாரே[1] 4

திருவாரூர் - திருவிருக்குக்குறள். பண் - குறிஞ்சி

சித்தந் தெளிவீர்காள். அத்தன் ஆரூரைப்
பத்தி மலர்தூவ,[1] முத்தி யாகுமே 1

பிறவி யறுப்பீர்காள், அறவன்[1] ஆரூரை
மறவா தேத்துமின், துறவி[2]யாகுமே 2

துன்பந் துடைப்பீர்காள், அன்பன்[1] அணியாரூர்
நன்பொன் மலர்[2]தூவ, இன்பமாகுமே 3

---

4\. [1] 'தம்மலரடி............ஆட்சிகொண்டார்' என்பது ஏகனாகி இறைபணி நிற்கும் இயல்பினால் தமது மலர்போலுந் திருவடியினை ஒன்றிநிற்கும் அடியார்கள் பரவவும், அவர்கள் திருவாய்மலர்ந்தருளிய தேனினுமினிய தமிழ்ப் பாடல்களும் வடமொழித் தோத்திரங்களும் தமது திருவடி நீழற்கண் சென்று சாரவும் எம்மடிகள் அச்சிறுபாக்கத்தினை யாட்சி கொண்டார் என்பதாம்.

1\. [1] அன்பினால் மலர்தூவி வழிபட. பத்திமலர் என்பதற்கு அன்பென்னும் மலர் எனக் கொள்ளினும் அமையும்.

2\. [1] அறங்களைத் தனக்கு வடிவாகவுடையவன். 'அறவாழியந்தணன்' என்னுந் திருக்குறளுக்குப் பரிமேலழகர் கூறிய உரை ஈண்டு நினைவுகூரத் தக்கது.

[2] பற்றறத் துறத்தலாற் பெறக்கடவதாகிய வீட்டின்பம்.

3\. [1] அன்பே சிவம் ஆதலின் அப்பெருமானை அன்பன் என்றார்.

[2] அழகிய பொன்போலும் மலர்கள்.

உய்ய லுறுவீர்காள், ஐயன் ஆரூரைக்
கையி னாற்றொழ, நையும் வினைதானே[1] 4

பிண்டம்[1] அறுப்பீர்காள், அண்டன் ஆரூரைக்
கண்டு மலர்தூவ, விண்டு வினைபோமே[2] 5

திருச்சிராப்பள்ளி — பண் - குறிஞ்சி

நன்றுடையானைத் தீயதிலானை நரைவெள்ளே
றொன்றுடையானை உமையொருபாகம் உடையானைச்
சென்றடையாத திருவுடையானைச்[1] சிராப்பள்ளிக்
குன்றுடையானைக் கூறஎன்னுள்ளங் குளிரும்மே. 1

---

4. [1] வினை தானே நையும் என இயைக்க.

5. [1] உடல்; ஈண்டு அதன் தொடர்பாகிய பிறவியை யுணர்த்தி நின்றது.
[2] வினை விண்டுபோம் என இயைத்துரைக்க.

1. [1] பிறர் எவரும் தம் அறிவு ஆற்றல்களால் முயன்று சென்று அடைதற்கியலாத பெருஞ்செல்வத்தினைத் தன்கண் உடையான். சென்றடையாத திருவினை இவன் உடையான் எனவே அப்பெருந்திரு இவனால் நாடப்பெறாது தான் நிலைத்து நிற்றற்குரிய நிலைக்களமாக இவனை நாடியடைந்ததென்பதூஉம், அத்திருவினை இவனுடையனாதல் அதனைத் தம் முயற்சியாற் சென்றுபெறும் ஆற்றலிலாதார்க்குத் தன்னருளாற் சென்று வழங்குதற் பொருட்டேயாம் என்பதூஉம் நன்குவிளங்கும்.

கைம்மகவேந்திக் கடுவனொடூடிக் கழைபாய்வான்
செம்முகமந்தி கருவரையேறுஞ்[1] சிராப்பள்ளி
வெம்முகவேழத் திருரிபோர்த்த விகிர்தாநீ
பைம்முகநாகம் மதியுடன் வைத்தல் பழியன்றே[2]. 2

மந்தம்முழவம் மழலைததும்ப வரைநீழல்
செந்தண்புனமுஞ் சுனையுஞ்சூழ்ந்த சிராப்பள்ளிச்
சந்தம் மலர்கள்[1] சடைமேலுடையார் விடையூரும்
எந்தம் அடிகள் அடியார்க்கல்லல் இல்லையே. 3

தேனயம்பாடுஞ் சிராப்பள்ளியானைத் திரைசூழ்ந்த
கானல்[1]சங்கேறுங் கழுமலவூரிற் கவுணியன்
ஞானசம்பந்தன் நலமிகு பாடல் இவைவல்லார்
வானசம்பந்தத் தவரொடு[2]மன்னி வாழ்வாரே. 11

---

2. [1] கடுவன்—ஆண் குரங்கு, மந்தி—பெண் குரங்கு, கழை—மூங்கில் கடுவனொடு பிணங்கி வருத்த மிகுதியால் மூங்கிலின்மேலேறிக் கீழ்வீழ்ந்து உயிர்விடக் கருதிய மந்தி தன்னையின்றி உயிர்வாழாத தன் குட்டியினையும் உடன்கொண்டு செல்லும் என்றது, உலகியலில் கணவனொடு கலாய்த்த மகளிர் சிலரது செய்கை கருதிப்போலும். குறிஞ்சியின்கண் மருதவுரிப் பொருள் மயங்கியது.

[2] இங்ஙனம் ஒருங்கு வாழும் அன்புடையாரும் பிணங்குதற்குக் காரணமாகிய மலையில் வாழ்பவராகிய நீவிர், என்றும் நீங்காப் பகையினவாகிய பாம்பினையும் திங்களையும் ஒரு சேர அணிந்திருத்தல் நுமக்குப்பழி விளைக்குஞ் செயலாமன்றோ? என வினவியதாகக் கொள்க. பழியென்றது, இறைவன் சடையைப் புகலிடமாகக்கொண்ட திங்களைப் பாம்பு ஒருகால் விழுங்கினும் விழுங்குமென்பது கருதி.

3. [1] நிறத்தையுடைய மலர்கள்.

11. [1] கடற்கரைச் சோலை.

[2] துறக்கத்து வாழும் உரிமைத் தொடர்புடைய மேலோர்கள்,

திருவலிவலம் — திருவிராகம். பண் — வியாழக்குறிஞ்சி

பூவியல் புரிகுழல் வரிசிலை நிகர்நுதல்
ஏவியல் கணை[1]பிணை[2]யெதிர்விழி யுமையவள்
மேவிய திருவுரு வுடையவன் விரைமலர்
மா[3]வியல் பொழில்வலி வலம்உறை யிறையே. 1

இட்டம்[1] தமர்பொடி[2] யிசைதலின் நசைபெறு
பட்டவிர் பவளநன் மணியென அணிபெறு
விட்டொளிர் திருவுரு[3]வுடையவன் விரைமலர்
மட்ட மர்[4] பொழில்வலி வலம்உறை யிறையே. 2

உருமலி கடல்[1]கடை வுழிவுல கமருயிர்
வெருவுறு வகையெழு விடம்வெளி மலை[2]யணி
கருமணி நிகர்களம் உடையவன்[3] மிடைதரு
மருமலி பொழில்வலி வலம்உறை இறையே. 3

---

1. [1] எய்யப்பெறும் அம்பு.
[2] பெண்மான்; ஈண்டு அதன் மருண்ட நோக்கத்தைக் குறித்துநின்றது.
[3] மா என்னும் பலபொருளொருசொல் விரைமலர் என்னுஞ் சார்பினால் வண்டினையுணர்த்தி நின்றது.

2. [1] விருப்பம். [2] திருநீறு.
[3] பொடிஇசைதலின் நசைபெறு திருவுருவெனவும், பட்டு அவிர்பவளம் நன்மணியென அணிபெறு திருவுரு எனவும் தனித்தனி இயைத்து, திருநீறணிந்த வலப்பாகத்தினையும், பட்டும் ஒளிவிளங்கு பவளமேகலையும் அணிந்த நீலமணி போலும் நிறந்தங்கிய இடப்பாகத்தினையும் முறையே உணர்த்தியவாறு கண்டுகொள்க. 'விட்டொளிர் திருவுரு' என்றது இவ்விரு வேறு நிறத்தானும் இடையிடையே மாறி மாறி யொளிரும் திருமேனி யென்றவாறு.
[4] மட்டு—தேன்.

3. [1] அச்சந்தருங் கடல். உரு—அச்சம். கடல்போல் அளவிறந்த நீர் அஞ்சத் தகுவது என்னும் இயல்பினை 'நாமநீர்' (குறள்—149) என வரும் சான்றோர் சொற்குறிப்பான் உணர்க.
[2] வெள்ளிமலை (இடைக்குறை).
[3] நீலமணியையொத்த கண்டமுடையவன்.

பிடியதன் உருவுமை கொளமிகு கரியது
வடிகொடு[1] தனதடி வழிபடு மவரிடர்
கடிகண பதி[2]வர அருளினன் மிகுகொடை
வடிவினர்[3] பயில்வலி வலம்உறை யிறையே. 5

**திருவையாறு - பண் : மேகராகக்குறிஞ்சி**

புலனைந்தும்[1] பொறி[2]கலங்கி நெறிமயங்கி யறிவழிந்திட் டைம்[3]மேலுந்தி
அலமந்த போதாக[4] அஞ்சேலென் றருள்செய்வா னமருங்கோயில்
வலம்வந்த மடவார்கள் நடமாட முழவதிர மழையென் றஞ்சிச்
சிலமந்தி யலமந்து மரமேறி முகில்[5]பார்க்குந் திருவையாறே. 1

---

5. மூத்தபிள்ளையார் தோன்றிய வரலாறு இதனுற் கூறப்படுகிறது.
[1] யானையின் வடிவுகொண்டு.
[2] தன் திருவடிகளை வழிபடும் அடியார்களது இடரை நீக்கியருளும் மூத்த பிள்ளையார். 'இடர்கடி கணபதி' என்றது 'விக்கின விநாயகன்' (திருநாவுக்கரசர். சூ-13-10) என்பதனோடு ஒப்புநோக்கத் தற் குரியது.
[3] இரவலர்க்கு மிகவுங் கொடுத்தலாலுளதாம் புகழையே தமது வடிவாகக் கொண்ட வள்ளல்கள்.

1. [1] 'சுவையொளி யூறோசை நாற்றமென் றைந்தின் வகை' யென்னுந் திருக்குறளான் உணர்க.
[2] மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐந்துமாம்.
[3] ஐ—கோழை.
[4] இங்ஙனம் சுழற்சிமிக்கு உயிர்போங் காலத்து என்றவாறு.
[5] மேகம்.

விடலேறு[1] படநாகம் அரைக்கசைத்து வெற்பரையன்
பாவையோடும்
அடலேறொன்[2] றதுவேறி யஞ்சொலீர் பலியென்னும்
அடிகள்கோயில்
கடலேறித் திரைமோதிக் காவிரியி னுடன்வந்து
கங்குல்வைகித்
திடலேறிச் சுரிசங்கஞ் செழுமுத்தங் ஈன்றலைக்குந்
திருவையாறே. 2

கங்காளர்[1] கயிலாய மலையாளர் கானப்பே ராளர்மங்கை
பங்காளர் திரிசூலப் படையாளர் விடையாளர் பயிலுங்
கோயில்
கொங்காளப்[2] பொழில்நுழைந்து கூர்வாயால்
இறகுலர்த்திக் கூதல்[3] நீங்கிச்
செங்கால்நல் வெண்குருகு பைங்கானல் இரைதேருந்
திருவையாறே. 3

---

**2.** [1] வன்மைமிக்க. மிடல் என்பதன்றிரிபுபோலும்.
[2] வெற்றிமிக்க ஆனேறு. சுரிசங்கம் கடலேறித் திரைமோதிக் காவிரியின் உடன்வந்து திடல்எறி கங்குல்வைகி அங்கு செழுமுத்துஈன்று அலைக்கும் திருவையாறு எனக்கூட்டுக. வெளிநிலத்தாரெல்லாம் இங்கு வந்து உரிய பயன்பெற்று மகிழ்வர் என்றவாறும்.

**3.** [1] திருமால் பிரமர்களுடைய என்புக்கூட்டினை யணிந்தவர்.
[2] கொங்கு ஆள எனப்பிரித்து நறுமணத்தை நுகரவிரும்பி எனப் பொருள்கொள்க.
[3] குளிரால் வந்த நடுக்கம்.

ஊன்பாயு முடைதலை[1]கொண் டூரின் பலிக்குழல்வார்
உமையாள்பங்கர்
தான்பாயும் விடையேறுஞ் சங்கரனார் தழலுருவர்
தங்குங்கோயில்
மான்பாய வயலருகே மரமேறி மந்திபாய்
மடுக்கள்தோறும்
தேன்பாய மீன்பாயச் செழுங்கமல மொட்டலருந்[2]
திருவையாறே. 4

நீரோடு கூவிளமும்[1] நிலாமதியும் வெள்ளெருக்கும்
நிறைந்தகொன்றைத்
தாரோடு தண்கரந்தை சடைக்கணிந்த தத்துவனார்
தங்குங்கோயில்
காரோடி விசும்பளந்து கடிநாறும் பொழிலணைந்த
கமழ்தார்வீதித்
தேரோடும் அரங்கேறிச்[2] சேயிழையார் நடம்பயிலுந்
திருவையாறே. 5

---

4. [1] முடைநாற்றமுடைய தலை; ஆவது பிரமகபாலம்.
[2] மரமேறி மந்திபாய் மடுக்கள்தோறும் மீன்பாய்தலால் செழுங்கமல மொட்டு தேன்பாய அலரும் என முடிக்க.

5. [1] கூவிளம்—வில்வம்.
[2] அரங்கு—நடனசாலை.

# இரண்டாந் திருமுறை

## திருநெல்வாயில் - பண் : இந்தளம்

புடையி னார்புள்ளி கால்பொ ருந்திய
மடையி னார்மணி நீர்நெல் வாயிலார்
நடையி னால்விரற் கோவ ணந்நயந்
துடையி னாரெம துச்சி யாரே.[1] 1

வாங்கி னார்மதில் மேற்க ணை[1]வெள்ளந்
தாங்கி னார்தலை யாய தன்மையர்
நீங்கு நீரநெல் வாயி லார்தொழ
ஓங்கி னாரெம துச்சி யாரே. 2

நிச்ச[1] லேத்துநெல் வாயி லார்தொழ
இச்சை யாலுறை வாரெம் ஈசனார்
கச்சை யாவதோர் பாம்பி னார்கவின்
இச்சை யாரெம துச்சி யாரே. 3

மறையி னார்மழு வாளி னார்மல்கு
பிறையி னார்பிறை யோடி லங்கிய
நிறையி னாரநெல் வாயி லார்தொழும்
இறைவ னாரெம துச்சி யாரே. 4

---

1. [1] எமது தலையின்மேல் எழுந்தருளியுள்ளார் என்பதாம். இறைவனை உள்ளத்திலும் தலையின் உச்சியிலும் வைத்து வழிபடுதல் மரபு. 'மனத் தகத்தான் தலைமேலான்' (திருநாவுக்கரசர் 6.8.5.) என்னும் சான்றோர் வாய்மொழி நோக்குக. இப்பதிகம் முழுவதும் இக்குறிப்பு வருதல் காண்க.

2. [1] மதில்மேற் கணை வாங்கினார் எனக்கூட்டுக. வாங்கினார் என்பது ஈண்டு வளைத்து எய்தார் என்னும் பொருளது.

3. [1] நிச்சல்—நாள்தோறும்; நித்தல் என்பதன் திரிபு.

4. [1] நிறையின் ஆரத்தொழும் என இயைத்து நிறை யென்னும் சால்புமிக வழிபடும் எனப்பொருள் கொள்க.

**திருக்கருப்பறியலூர் - திருவிராகம் — பண் : இந்தளம்**

சுற்றமொடு பற்றவை துயக்கற[1] அறுத்துக்
குற்றமில் குணங்களொடு கூடும்அடி யார்கள்
மற்றவரை வானவர்தம் வானுலக[2] மேற்றக்
கற்றவ[3] னிருப்பது கருப்பறிய லூரே. 1

வண்டணைசெய் கொன்றையது வார்சடைகண்மேலே
கொண்டணைசெய் கோலமது கோளரவி னோடும்
விண்டணைசெய் மும்மதிலும் வீழ்தரவொ ரம்பாற்
கண்டவ[1] னிருப்பது கருப்பறிய லூரே. 2

வேதமொடு[1] வேதியர்கள் வேள்விமுத லாகப்
போதினொடு[2] போதுமலர்[3] கொண்டுபுனை கின்ற
நாதனென நள்ளிருண்முன் ஆடுகுழை தாழும்
காதவ னிருப்பது கருப்பறிய லூரே. 3

மடம்படு மலைக்கிறைவன் மங்கையொரு பங்கன்
உடம்பினை விடக்கருதி நின்ற மறையோனைத்[1]
தொடர்ந்தணவு காலனுயிர் கால[2]வொரு காலாற்
கடந்தவ[3] னிருப்பது கருப்பறிய லூரே. 4

---

1. [1] தொடக்கற; சோர்வு நீங்க எனவும் பொருள்கொள்ளலாம்.
[2] வானவர்க்கும் அப்பாற்பட்ட வானுலகமாவது வீட்டுலகமாம். இதனை ‘வானோர்க்குயர்ந்தவுலகம்’ (குறள் - ௩௪௬) என்பர் ஆசிரியர் திருவள்ளுவர்.
[3] கற்றவன் என்பது அவ்வருட்டொழிலின் பயிற்சி மிகுதியை யுணர்த்தும்.
2. [1] மும்மதிலும் ஓர் அம்பால் வீழ்தரக்கண்டவன் எனக் கூட்டுக. கண்டவன்—செய்தவன்.
3. [1] வேதத்தால். [2] காலந்தோறும். [3] போதாகியமலர்.
4. [1] மறையோன் என்றது மார்க்கண்டேயனை.
[2] நீங்க. [3] வென்றவன்.

### திருச்சாய்க்காடு - பண் - சீகாமரம்

மண்புகார் வான்புகுவர் மனமிளையார் பசியாலுங்
கண்புகார்[2] பிணியறியார் கற்றாருங் கேட்டாரும்
விண்புகா ரெனவேண்டா[3] வெண்மாட நெடுவீதித்
தண்புகார்ச் சாய்க்காட்டெந் தலைவன்[4]தாள் சார்ந்தாரே. 1

போய்க்காடே மறைந்துறைதல் புரிந்தானும் பூம்புகார்ச்
சாய்க்காடே பதியாக வுடையானும் விடையானும்
வாய்க்காடு முதுமரமே[2]யிடமாக வந்தடைந்த
பேய்க்காடல் புரிந்தானும் பெரியோர்கள் பெருமானே. 2

நீநாளும் நன்னெஞ்சே நினைகண்டா யாரறிவார்
சாநாளும் வாழ்நாளுஞ் சாய்க்காட்டெம் பெருமாற்கே
பூநாளுந் தலைசுமப்பப் புகழ்நாமஞ் செவிகேட்ப
நாநாளும் நவின்றேத்தப் பெறலாமே நல்வினையே. 3

---

1. [1] பிறவார். [2] பசியால் வருந்திக் கண்உட்குழியப் பெறார். 'விண்புகார் எனவேண்டா' என இருமுறையெதிர்மறுக்கவே அவர்கள் விண்புகுதல் உறுதியென்பது பெற்றாம்.

   [4] சோழர்களின் தொன்மைக் கடற்றுறைப்பட்டினமாகிய புகார் நகரத்தின் எல்லையுட்பட்டது இத்திருக்கோயில் என்பார் 'தண்புகார்ச் சாய்க்காடு' என்றார். தலைவன்தாள் சார்ந்தார் மண்புகார், வான்புகுவர், கண்புகார் பிணியறியார் எனவும், கற்றாருங் கேட்டாரும் விண்புகாரென வேண்டா எனவுந் தனித்தனி கூட்டுக.

2. [1], [2] காடேபோய் மறைந்துறைதல் எனவும், காடுவாய்முதுமரம் எனவும் மாறிக் கூட்டுக.

3. நன்னெஞ்சே! சாநாளும் வாழ்நாளும் யாரறிவார், சாய்க்காட்டு எம் பெருமாற்கே நாளும் தலை பூசுமக்க, செவி புகழ்நாமம் கேட்ப, நாளும் நா நவின்று எத்த நல்வினையே பெறலாம் (ஆதலின்) நாளும் நீ நினைசண்டாய் எனவினை முடிவு செய்க.

கட்டலர்த்த மலர்தூவிக் கைதொழுமின் பொன்னியன்ற
தட்டலர்த்த பூஞ்செருந்தி கோங்கமருந் தாழ்பொழில்வாய்
மொட்டலர்த்த தடந்தாழை முருகுயிர்க்குங் காவிரிப்பூம்
பட்டினத்துச் சாய்க்காட்டெம் பரமேட்டி[1] பாதமே. 4

**திருமயிலாப்பூர் - பூம்பாவைத் திருப்பதிகம் - பண் - சீகாமரம்**

மட்டிட்ட புன்னையங் கானல் மடமயிலைக்
கட்டிட்டங் கொண்டான் கபாலீச் சரமமர்ந்தான்
ஒட்டிட்ட பண்பின் உருத்திர பல்கணத்தார்க்[2]
கட்டிட்டல்[3] காணாதே போதியோ பூம்பாவாய். 1

மைப்பயந்த ஒண்கண் மடநல்லார் மாமயிலைக்
கைப்பயந்த நீற்றான் கபாலீச் சரமமர்ந்தான்
ஐப்பசி ஓண விழாவும் அருந்தவர்கள்
துய்ப்பனவுங்[1] காணாதே போதியோ பூம்பாவாய். 2

---

4. [1] பரமேட்டி—மேலோன். எம்பரமேட்டி பாதமே கட்டலர்த்த மலர் தூவிக் கைதொழுமின் என முடிக்க. இத்திருப்பாடல் பூட்டுவிற் பொருள்கோள்.

1. [1] மயிலைக்கட்டு—மயிலாப்பூரிற் கட்டப்பெற்ற கபாலீச் சரமென்னுந் திருக்கோயில். அதன்கண் வீற்றிருத்தலின் இட்டம் (விருப்பங்) கொண்டான் என்றார்.

[2] தம் தன்மையாகிய சீவபோதம் ஒடுங்கப்பெற்றுச் சிவபரம்பொருளை இடைவிடாது நினைந்து அப்பெருமான்றன் எண்குணங்களில் தோய்ந்து ஒன்றுதல் அடியார்க்கியல்பாதலின், அப்பெருமக்களை 'ஒட்டிட்ட பண்பின் உருத்திர பல்கணத்தார்' எனச் சிறப்பித் தருளினர்.

[3] அவர்கட்கு அட்டிட்டலை இக்காலத்தார் மாகேசுவர பூசையென்பர். அட்டிடல் என்பது அட்டிட்டல் என எதுகை நோக்கி ஒற்றி ரட்டியது.

2. [1] ஐப்பசித் திருவோண விழாவில் ஆண்டவனடியார்களாகிய அருந்தவ முனிவர்கட்குத் திருவமுதளித்தல் பிள்ளையார் காலத்து வழக்கென் பதும் அந்நிகழ்ச்சி அன்பாயினர்க்கு மகிழ்வுதருந் தோற்றத்தின தென்பதும் இப்பாடலால் விளங்குதல் காண்க.

வளைக்கை மடநல்லார் மாமயிலை வண்மறுகில்
துளக்கில் கபாலீச் சரத்தான்தொல் கார்த்திகைநாள்[1]
தளத்தேந் திளமுலையார் தையலார் கொண்டாடும்
விளக்கீடு[2] காணாதே போதியோ பூம்பாவாய். 3

ஊர்திரை வேலை யுலாவும் உயர்மயிலைக்
கூர்தரு வேல்வல்லார்[1] கொற்றங்கொள் சேரிதனில்[2]
கார்தரு சோலைக் கபாலீச் சரமமர்ந்தான்
ஆதிரைநாள் காணாதே போதியோ பூம்பாவாய். 4

மைப்பூசும் ஒண்கண் மடநல்லார் மாமயிலைக்
கைப்பூசு நீற்றான் கபாலீச் சரமமர்ந்தான்
நெய்ப்பூசும் ஒண்புழுக்கல் நேரிழையார் கொண்டாடும்
தைப்பூசங்[1] காணாதே போதியோ பூம்பாவாய். 5

---

3. [1] இறைவனை ஒளியுருவில் வழிபடுந் திருக்கார்த்திகை விழா நமது சங்கச் செய்யுட்களிற் பேசப்பெறும் பழைய தமிழர் திருவிழாவாகும். அது குறித்தே ஆளுடைய பிள்ளையாரும் 'தொல் கார்த்திகை நாள்' எனச் சிறப்பித்தருளினர் போலும்.

[2] இவ்விழாவில் மனையுறை மகளிர்க்கே பெரும்பணி யுண்டென்பது 'தையலார் கொண்டாடும் விளக்கீடு' என்பதனாற் புலனாம்.

4. [1] கூர்மை பொருந்திய வேற்படையுடைய வீரர்கள்.

[2] வெற்றி கொண்டாடும் அவர்தம் சிற்றூர். அதன்கண் கபாலீச் சரமமர்ந்தான் ஆதிரைநாள்விழா கொண்டாடப்பெற்றதென்பதனால் இத்திருவாதிரை விழா வீரர் வாழ்க்கையொடு தொடர்புடையது என்பது புலனாம். இவ்விழா வருவதற்குரிய மாதம் 'வில்' என்னும் பெயரினதாகிய மார்கழியாதலும் கருதற்குரியது.

5. [1] தைப்பூச விழாவில் மகளிர் நெய்யளைந்த பொங்கலைப் பொங்கிப் படைத்து இறைவனை வழிபடுவர் என்னும் குறிப்பு இத்தொடராற் புலனாகின்றது. இக்காலத்தும் புதிதாய் விளைந்து பெற்ற செந்நெல்லினைத் தைப்பூச நாளிற் சமைத்துண்ணும் பழக்கம் தமிழ் நாட்டிற் சிலவிடங்களிற் காணப்படுகிறது. இதற்கும் தைப்பொங்கலுக்கும் நெருங்கிய தொடர்புண்டெனக் கருதுதல் பொருந்தும்.

மடலார்ந்த தெங்கின் மயிலையார் மாசிக்
கடலாட்டுக்[1] கண்டான் கபாலீச் சரமமர்ந்தான்
அடல்ஆனே றூரும் அடிக ளடிபரவி
நடமாடல்[2] காணாதே போதியோ பூம்பாவாய் 6

மலிவிழா வீதி மடநல்லார் மாமயிலைக்
கலி[1]விழாக் கண்டான் கபாலீச் சரமமர்ந்தான்
பலி[2]விழாப் பாடல்செய் பங்குனி யுத்திரநாள்
ஒலிவிழாக்[3] காணாதே போதியோ பூம்பாவாய். 7

தண்ணா[1] அரக்கன்தோள் சாய்த்துகந்த தாளினான்
கண்ணார் மயிலைக் கபாலீச் சரம் அமர்ந்தான்
பண்ணார் பதினெண் கணங்கள்[2]தம் அட்டமிநாள்[3]
கண்ணாரக் காணாதே போதியோ பூம்பாவாய். 8

---

6. [1] மாசித் திங்களில் நிகழும் கடல் நீராடல் விழா.
[2] கடலாடிய பின்னர் இறைவனை வணங்கிப் பல்வகைக் கூத்துக்களை ஆடிக் கண்டு மகிழ்தல் இத்திருவிழாவின் சிறப்பென்பது "மயிலையார் அடிகள் அடி பரவி நடமாடல் காணாதே" என்பதனால் புலனாகும்.

7. [1] ஆரவாரம். [2] பலி—பூப்பலியாகிய அருச்சனை
[3] இறை வழிபாட்டில் இசைப் பாடல்கள் இன்றியமையாது வேண்டப் படுவனவாதலால் பலிவிழாப் பாடல்செய் பங்குனி யுத்திர நாள் ஒலி விழா என்றார்.

8. [1] தண்ணா—இழிந்தனவாக, தாழ்ந்தனவாக. 'தண்பதத்தான்' என்னும் குறளுரையும் 'தண்காண்' (சிலம்பு—மனையறம்) என்பதற்கு அடியார்க்கு நல்லார் கூறும் பொருளும் நோக்குக. அரக்கன்தோள் தண்ணா (தாழச்) சாய்த்துகந்த எனக் கூட்டுக.
[2] தேவர், அசுரர், முனிவர், கின்னரர், கிம்புருடர், கருடர், இயக்கர், இராக்கதர், கந்தருவர், சித்தர், சாரணர், வித்தியாதரர், நாகர், பூதம், வேதாளம், தாராகணம், ஆகாசவாசிகள், போக பூமியோர் எனவிவர்.
[3] இப்பதினெண் கணங்களாற் பரவப்பெறும் விழா அட்டமிவிழாப் போலும். இவ்விழாவின் முன்னைய எழு நாட்களிலும் இறைவன் திருவுலாப்போந்து எட்டாநாள் தீர்த்தமாடியருளுதலியல்பு என்பது "தீர்த்தமாம் அட்டமீமுன் சீருடை யேழுநாளுங் கூத்தராய் வீதி போந்தார் குறுக்கை வீரட்டனாரே" என வரும் திருநாவுக்கரசர் பாடலாற் புலனாம்.

நற்றா மரைமலர்மேல் நான்முகனும் நாரணனும்
உற்றாங் குணர்கிலா மூர்த்தி திருவடியைக்
கற்றார்க ளேத்துங் கபாலீச் சரம்அமர்ந்தான்
பொற்றாப்புக்[1] காணாதே போதியோ பூம்பாவாய். 9

உரிஞ்சாய வாழ்க்கை அமணுடையைப் போர்க்கும்
இருஞ்சாக் கியர்கள்[1] எடுத்துரைப்ப நாட்டில்
கருஞ்சோலை சூழ்ந்த கபாலீச் சரத்தான்றன்
பெருஞ்சாந்தி[2] காணாதே போதியோ பூம்பாவாய். 10

கானமர் சோலைக் கபாலீச் சரம்அமர்ந்தான்
தேனமர் பூம்பாவைப் பாட்டாகச்[1] செந்தமிழான்
ஞானசம் பந்தன் நலம்புகழ்ந்த பத்தும்வல்லார்
வானசம் பந்தத் தவரோடும் வாழ்வாரே. 11

---

**9.** [1] பொன்னூசல் திருவிழா. பொன் + தாம்பு பொற்றாப்பு என்றாயிற்று. தாம்பு—கயிறு, ஈண்டு ஊசற்கயிற்றைக் குறிக்கும். இவ்விழா இளவேனிற்பருவத்து நிகழ்வது.

**10.** [1] ‘ உரிஞ்சாய வாழ்க்கை அமண் ’ எனவும்
‘ உடையைப் போர்க்கும் இருஞ்சாக்கியர்கள் ’
எனவும் பிரித்துப் பொருள் கூறுக. அமண்-சமணர். சாக்கியர்-புத்தர்.

[2] நாட்டில் பசியும் பிணியும் பகையும் நீங்கி மழையும் விளையுளும்மாறாது வாய்ப்பனவாகுக என உலக அமைதி வேண்டி இறைவனுக்கு எடுக்குந் திருவிழா ஆதலின் இது பெருஞ்சாந்தியெனப்பெறும். “ விழவொடு சாந்திசெய்ய நாடு மலிய மழை பெய்து நோயுந்துன்பமும் நீங்கியது ” (சிலப்—உரைபெறு) என்பது நோக்குக.

**11.** [1] திருமயிலாப்பூரில் சிவநேசர் என்னும் வணிகர் மகள் பூம்பாவை பூக்கொய்யுங்கால் விடந்தீண்டி யிறக்க, அவளது என்பினைக் குடத்திற் சேமித்து வைத்திருந்த தந்தையார், அங்கு எழுந்தருளிய ஞானசம்பந்தப்பிள்ளையாரை வரவேற்று வணங்க, அவர்தம் அன்புக்கு உவந்த பிள்ளையாரும் அக்குடத்தினைக்கோயின் முன்னர்க் கொணரச்செய்து இறைவன் திருவருளை நினைந்து, “ மக்களடைதற்குரிய பயன் சிவன் அடியார்களை அமுது செய்வித்தலும் அவர்தம் திருவிழாப் பொலிவு கண்டு மகிழ்தலுமே என்பது உண்மையானால் பூம்பாவாய் நீ உலகர் முன் உயிர்பெற்று வருக ” என்பார், ‘ மட்டிட்ட ’ எனத் தொடங்கும் திருப்பதிகத்தைப் பாடியருளிப் பூம்பாவை உயிர்பெற்றெழச் செய்தருளுதலால் இத்திருப்பதிகம் ‘ பூம்பாவைப் பாட்டு ’ என வழங்கப்பெற்றது.

### சீகாழி - பண் - காந்தாரம்

நலங்கொள் முத்தும் மணியும் அணியுந் திரளோதங்
கலங்கள்[1] தன்னிற் கொண்டு கரைசேர் கலிக்காழி
வலங்கொள் மழுவொன் றுடையாய் விடையா யெனஏத்தி
அலங்கல்[2] சூட்ட வல்லார்க் கடையா அருநோயே. 1

ஊரார்[1] உவரிச்[2] சங்கம் வங்கங்[3] கொடுவந்து
காரார் ஓதங்[4] கரைமேல் உயர்த்துங் கலிக்காழி
நீரார் சடையாய் நெற்றிக் கண்ணா என்றென்று
பேரா யிரமும் பிதற்றத் தீரும் பிணிதானே. 2

வடிகொள் பொழிலின் மழலை வரிவண் டிசைசெய்யக்
கடி[1]கொள் போதிற் றென்றல் அணையுங் கலிக்காழி
முடிகொள் சடையாய் முதல்வா என்று முயன்றேத்தி
அடிகை தொழுவார்க் கில்லை அல்லல் அவலமே. 3

மனைக்கே யேற வளஞ்செய் பவளம் வளர்முத்தம்
கனைக்குங் கடலுள் ஓதம் ஏறுங் கலிக்காழிப்
பனைக்கைப் பகட்டீர் உரியாய்[1] பெரியா யெனப்பேணி
நினைக்க வல்ல அடியார் நெஞ்சி னல்லாரே. 4

---

1. [1] மரக்கலங்கள். [2] மாலை.
2. [1] ஊருந்தொழிலினையுடைய. [2] கடல். [3] நாவாய். [4] அலை.
3. [1] நறுமணம்.
4. [1] பனைக்கைப்பகடு—பனைபோலும் கையையுடைய யானை. ஈர்உரி—அதனைக் கொன்று உரித்த தோல்.

*** திருநெல்வாயிலரத்துறை - பண் - பியந்தைக் காந்தாரம்**

எந்தை யீசனெம் பெருமான் ஏறமர் கடவுளென் றேத்திச்
சிந்தை செய்பவர்க் கல்லாற் சென்றுகை கூடுவதன்றால்
கந்த மாமல ருந்திக் கடும்புனல்[1] நிவா[2]மல்கு கரைமேல்
அந்தண் சோலை நெல்வாயில்[3] அரத்துறை[4] யடிகள்தம் அருளே. 1

ஈர வார்சடை தன்மேல் இளம்பிறை யணிந்தஎம் பெருமான்
சீருஞ் செல்வமும் ஏத்தாச் சிதடர்கள்[1] தொழச்செல்வ தன்றால்
வாரி மாமல ருந்தி வருபுனல் நிவாமல்கு கரைமேல்
ஆருஞ் சோலை நெல்வாயில் அரத்துறை அடிகள்தம் அருளே. 2

பிணி கலந்த[1]புன் சடைமேற் பிறையணி சிவனெனப் பேணிப்
பணி கலந்துசெய் யாத பாவிகள்[2] தொழச் செல்வ தன்றால்
மணி கலந்துபொன் னுந்தி வருபுனல் நிவாமல்கு கரைமேல்
அணி கலந்தநெல் வாயில் அரத்துறை யடிகள்தம் அருளே. 3

---

* தளர்நடை பயிலும் இளம் பருவத்தினராகிய திருஞானசம்பந்தப் பிள்ளையார் தம் தந்தையார் தோண்மேலமர்ந்து இறை வழிபாடு செய்பவர், திருநெல்வாயில் அரத்துறை யென்னும் ஊர்க்குச் செல்லும்போது தாமரை யிதழினும் மெல்லிய தம் பாதங்களால் நடந்து சென்றார். அது பொறாத நெல். வாயிலரத்துறை யிறைவர் கட்டளைப்படி அவ்வூரார் முத்துச் சிவிகை குடை சின்னம் முதலியவற்றைக் கொணர்ந்து ஏற்றுக்கொள்ளும்படி வேண்டிய போது அத் திருவருளை வியந்து பிள்ளையார் பாடிய திருப்பதிகம் இதுவாகும்.

1. [1] விரைந்து செல்லும் நீர். [2] வடவெள்ளாறு.
[3] ஊர்ப் பெயர். [4] அவ்வூரிலுள்ள கோயிற் பெயர்.

2. [1] சிதடர்கள்—குருடர்கள்.

3. [1] ஒன்றோடொன்று பிணிக்கப்பெற்றுக் கலந்த.
[2] தம்மால் செய்தற்குரிய திருத்தொண்டுகளை இறைவன் திருவருள்வழி யடங்கித் தாழ்மையுடன் செய்யாது தருக்கித் திரியும் கொடியோர்.

துன்ன ஆடை[1]யொன் றுடுத்துத் தூயவெண் ணீற்றின ராகி
உன்னி நைபவர்க் கல்லால் ஒன்றுங்கை கூடுவ தன்றால்
பொன்னு மாமணி யுந்திப் பொருபுனல் நிவா மல்கு கரைமேல்
அன்ன மாருநெல் வாயில் அரத்துறை யடிகள்தம் அருளே. 4

**திருக்கோவ லூர்வீரட்டம் : திருவிராகம் - பண் - நட்டராகம்.**

படைகொள் கூற்றம் வந்துமெய்ப் பாசம்[1]விட்ட போதின்கண்[2]
இடைகொள்வா[3] ரெமக்கிலை யெழுகபோது நெஞ்சமே
குடைகொள்வேந்தன் மூதாதை குழகன்கோவ லூர்தனுள்
விடையதேறுங் கொடியினன் வீரட்டானஞ்[4] சேர்துமே. 1

கரவலாளர்[1] தம்மனைக் கடைகள்தோறுங் கால்நிமிர்த்
திரவ[2]லாழி நெஞ்சமே யினியதெய்த வேண்டில்நீ
குரவமேறி வண்டினங் குழலொடியாழ்செய் கோவலூர்
விரவிநாறு கொன்றையான் வீரட்டானஞ் சேர்துமே. 2

உள்ளத்தீரே போதுமின்[1] னுறுதியாவ தறிதிரேல்
அள்ளற்சேற்றிற்[2] காலிட்டிங் கவலத்து ளழுந்தாதே
கொள்ளப்பாடு கீதத்தான் குழகன்கோவ லூர்தனுள்
வெள்ளந்தாங்கு சடையினன் வீரட்டானஞ் சேர்துமே. 3

---

4. [1] தைக்கப்பட்ட கந்தையாகிய ஆடை. துன்னம்—தையல்.

1. [1] உடம்பினைப் பிணித்தற்குரிய கயிறு. [2] வீசிய பொழுதில்.
[3] நடுநின்று விலக்குபவர்.
[4] திருக்கோவலூரிலுள்ள திருக்கோயிலைக் குறிக்கும். வீரஸ்தானம் என்னும் ஆரியச் சொல் 'வீரட்டானம்' எனத் தமிழிற் கேற்பத்திரிந்து வழங்குவதாம். இறைவன் வீரச் செயல் புரிந்தருளிய எட்டு இடங்களுள் இதுவும் ஒன்றாதலின் இப்பெயர்த்தாயிற்று. அந்தகன் என்னும் அசுரனை வென்ற வீரச் செயல் இங்கு நிகழ்ந்ததென்பர்.

2. [1] தம்பால் இரந்தோர்க்குப் பொருளைக் கொடாது மறைத்துவைப்போர்.
[2] இரவல்—யாசித்து நில்லாதே.

3. [1] வாருங்கள். [2] மிக்க சேறு.

கணைகொளிருமல் சூலைநோய் கம்பதாளி[1] குன்மமும்[2]
இனையபலவு மூப்பினோ டெய்திவந்து நலியாமுன்
பணைகளுலவு பைம்பொழிற் பழனஞ்சூழ்ந்த கோவலூர்
வினையைவென்ற வேடத்தான்[3] வீரட்டானஞ் சேர்துமே 4

உளங்கொள்போக முய்த்திடா[1]ருடம்பிழந்த போதின்கண்
துளங்கிநின்று நாடொறுந் துயர[2]லாழி நெஞ்சமே
வளங்கொள்பெண்ணை[3] வந்துலா வயல்கள்சூழ்ந்த கோவலூர்
விளங்குகோ வணத்தினான் வீரட்டானஞ் சேர்துமே. 5

### திருவலஞ்சுழி - பண் : நட்டராகம்

என்ன புண்ணியஞ் செய்தனை நெஞ்சமே யிருங்கடல்
வையத்து
முன்ன நீபுரி நல்வினைப் பயனிடை முழுமணித்
தரளங்கள்[1]
மன்னு காவிரி சூழ்திரு வலஞ்சுழி வாணனை[2] வாயாரப்
பன்னி[3] யாதரித் தேத்தியும் பாடியும் வழிபடு மதனாலே. 1

---

4. [1] ஒருவகை நோய். [2] வயிற்று நோய்.
[3] பிறவிக்குக் காரணமாகிய இருவினைகளையும் ஒழித்தருளி அடியார்க்கு வெற்றிதரவல்ல அருளாகிய திருமேனியுடையான்; என்றது வினையின் நீங்கி விளங்கிய அறிவின் முனைவன் என்றவாறும். ஏனையுயிர்களின் உடம்பெல்லாம் வினையின் வந்தனவாக அங்ஙனமன்றி அருளால் வந்த இறைவன் திருமேனியொன்றே வினைகளை நீக்கியருளும் வெற்றியுடையதென்பது கருத்து.

5. [1] தம்மனம் விரும்பிய நுகர்ச்சியினை அனுபவியாதார்.
[2] துயரல்—வருந்தற்க. [3] பெண்ணையாறு.

1. நெஞ்சமே! வலஞ்சுழிவாணனை வாயாரபன்னி ஆதரித்து எத்தியும் பாடியும் வழிபடும் அதனாலே முன்னம் நீபுரி நல்வினைப்பயனிடை என்ன புண்ணியஞ் செய்தனை என வினவியதாக முடிக்க.
[1] முத்துக்கள். [2] வாழ்நன் வாணன் என்றாயிற்று. [3] பலபடப்பாராட்டி.

விண்டொழிந்தன நம்முடை வல்வினை விரிகடல்
வருநஞ்சம்
உண்டிறைஞ்சு வானவர்தமைத் தாங்கிய இறைவனை
யுலகத்தில்
வண்டுவார்குழல் மங்கையொர் பங்கனை வலஞ்சுழி
யிடமாகக்
கொண்ட நாதன்மெய்த் தொழில்புரி தொண்டரோ
டினிதிருந்தமையாலே. 2

திருந்த லார்புரந் தீயெழச் செறுவன விறலின்க
ணடியாரைப்
பரிந்து காப்பன பத்தியில் வருவன[1] மத்தமாம்
பிணிநோய்க்கு
மருந்து மாவன[2] மந்திரமாவன வலஞ்சுழி யிடமாக
இருந்த நாயக னிமையவ ரேத்திய இணையடித்
தலந்தானே. 3

---

2. நாதன் மெய்த்தொழில்புரி அடியரொடு இனிதிருந்தமையாலே நம்முடை வல்வினை விண்டொழிந்தன எனக் கூட்டுக. விண்டுஒழிதல்—வேறுபட்டு நீங்குதல்.

3. இத்திருப்பாடல் இறைவன் திருவடிச் சிறப்பினை எடுத்துரைப்பதாகும்.

[1] இறைவன் திருவடிகள் உள்ளம் கசிந்துருகும் அன்புடையார் அன்பின்கண் விளங்கித் தோன்று மியல்புடையன என்பார், 'பத்தியில் வருவன' என்றார்.

[2] உயிர்களின் உணர்வைத் தடைப்படுத்தி நிற்கும் அறியாமை யென்னும் நோயினை அகற்றவல்ல மருந்தாகவும் விளங்குவன என்பது பொருள். 'உறுநர்த்தாங்கிய மதன் உடை நோன்றாள்' (திருமுருகா) என நக்கீரருங் கூறுதல் காண்க. மதன்—அறியாமை.

கறை[1]கொள் கண்டத்தர் காய்கதிர் நிறத்தின[2] ரறத்திற
முனிவர்க்கன்
றிறைவ ராலிடை நீழலி லிருந்துகந் தினிதருள்
பெருமானார்
மறைக ளோதுவர் வருபுனல் வலஞ்சுழி யிடமகிழ்ந்
தருங்கானத்
தறைக ழல்சிலம் பார்க்க[3]நின் றாடிய அற்புத
மறியோமே. 4

மாதொர் கூறனை வலஞ்சுழி மருவிய மருந்தினை வயற்காழி
நாதன் வேதியன் ஞானசம் பந்தன்வாய் நவிற்றிய
தமிழ்மாலை
ஆதரித்திசை கற்றுவல் லார்சொலக் கேட்டுகந்
தவர்தம்மை
வாதியாவினை மறுமைக்கு மிம்மைக்கும் வருத்தம்வந்
தடையாவே. 11

## திருக்கேதாரம் : பண் - செவ்வழி

தொண்டரஞ்சு களிறும் மடக்கிச்[1] சுரும்பார்மலர்
இண்டைகட்டி வழிபாடு செய்யும்மிட மென்பரால்
வண்டுபாட மயிலால மான்கன் றுதுள்ளவரிக்
கெண்டைபாயச் சுனைநீல மொட்டலருங் கேதாரமே. 1

---

4. [1] நஞ்சக்கறை. [2] ஞாயிறுபோன்றொளிரும் செம்மை நிறமுடையார். [3] கழல்—ஆடவர் வெற்றி கருதி அணிதற்குரிய காலணி. சிலம்பு—மகளிர் கால்களில் அணிதற்குரியது. இறைவன் உமையவள் ஒரு திறனாக நின்றாடினான் என்பார் ‘ அறைகழல் சிலம் பார்க்க ’ என்றார்.

5. தமிழ்மாலை கேட்டுகந்தவர் தம்மை வினை வாதியா மறுமைக்கும் ’ இம்மைக்கும் வருத்தம் வந்து அடையா எனக் கொண்டு கூட்டுக.

1. [1] அஞ்சுகளிறும் என்றது பொறிகளாகிய யானை ஐந்தனையும் ஆம். தொண்டர் அவற்றை அடக்கும் முறையாவது திண்ணிய அறிவென்னும் அங்குசத்தால் அவை தத்தம்புலங்களிற் சென்று அழியாதபடி அடக்கி யாளுதலாம். தெய்வப்புலவரும் “ உரனென்னுந் தோட்டியான் ஓரைந்துங் காப்பான் ” (திருக்குறள் 24) என்பதனால் இம்முறையினை அறிவுறுத்தினமை நோக்குக.

பாதம்விண்ணோர் பலரும் பரவிப்பணிந் தேத்தவே
வேதம்நான்கும் பதினெட்டொ டாறும்[1] விரித்தார்க்
தாதுவிண்ட மதுவுண்டு மிண்டிவரு வண்டினம் [கிடம்
கீதம்பாட மடமந்தி கேட்டுகளுங்[2] கேதாரமே, 2

முந்திவந்து புரோதாய[1] மூழ்கி முனிகள்பலர்
எந்தைபெம்மா னென நின் றிறைஞ்சும்மிட மென்பரால்
மந்திபாயச் சரேலச் சொரிந்தும் முரிந்துக்கபூக்
கெந்த[2]நாறக் கிளருஞ் சடையெந்தை கேதாரமே. 3

உள்ளமிக்கார்[1] குதிரைம் முகத்தா ரொருகாலர்கள்[2]
எள்கலில்லா இமையோர்கள்சே ரும்மிட மென்பரால்
பிள்ளைதுள்ளிக்கிளை பயில்வகேட் டுப்பிரி யாதுபோய்க்
கிள்ளையேனற்கதிர் கொணர்ந்து வாய்ப்பெய்யுங்
கேதாரமே. 4

ஊழியூழி யுணர்வார்கள் வேதத்தினெண் பொருள்களால்
வாழியெந்தை யெனவந்தி றைஞ்சும்மிட மென்பரால்
மேழிதாங்கி யுழுவார்கள் போலவ்விரை தேரிய
கேழல்பூழ்தி கிளைக்க[1] மணிசிந்துங் கேதாரமே. 5

---

2. [1] பதினெட்டு என்றது பதினெண் புராணங்களை.
ஆறு என்றது வேதத்தின் வழியமைந்த அங்கங்கள் ஆறனையும்.
[2] உகளுதல்—மகிழ்ச்சியால் தாவிக் குதித்தல்.

3. [1] புரோதாயம் என்னுஞ் சொல் தூய்மைகருதி நீராடும் வகையைக் குறித்ததென்பர்.
[2] மணம் என்னும் பொருளுடைய வடசொல்.

4. [1] இறைவனை வழிபடுவதில் ஊக்கம் மிக்க அடியார்கள்.
[2] குதிரை முகத்தார், ஒரு காலர் என்போர் வியத்தகு பிறவி வேறுபாட்டினையுடைய மக்களினத்தவராகலாம்.

5. [1] கலப்பையைத் தாங்கி நிலத்தினை உழும் உழவர்களைப்போன்று பன்றிகள் நிலத்திற் புழுதியைக் கிளைத்தன என்பதாம்.

## திருநாகேச்சரம் : பண் - செவ்வழி

தழைகொள்சந் தும்மகி லும்மயிற் பீலியுஞ் சாதியின்
பழமுமுந் திப்புனல் பாய்பழங் காவிரித்[1] தென்கரை
நழுவில்வா னோர்தொழ நல்குசீர் மல்குநா கேச்சரத்
தழகர்பா தந்தொழு தேத்தவல் லார்க்கழ காகுமே. 1

பெண்ணொர்பா கம்மடை யச்சடை யிற்புனல் பேணிய
வண்ணமா னபெரு மான்மரு வும்மிட மண்ணுளார்
நண்ணிநா ளுந்தொழு தேத்திநன் கெய்துநா கேச்சரங்
கண்ணினாற் காணவல் லாரவர் கண்ணுடை யார்களே.[1] 2

குறவர்கொல் லைப்புனங் கொள்ளைகொண் டும்மணி குலவுநீர்
பறவையாலப்[1] பரக்கும்[2] பழங் காவிரித் தென்கரை
நறவநா றும்பொழில் சூழ்ந்தழ காயநா கேச்சரத்
திறைவர்பா தந்தொழு தேத்தவல் லார்க்கிட ரில்லையே. 3

கூசநோக் காதுமுன் சொன்னபொய் கொடுவினை குற்றமும்
நாசமாக்கும் மனத்தார்கள்[1] வந் தாடுநா கேச்சரந்
தேசமாக் குந்திருக் கோயிலாக் கொண்டசெல் வன்கழல்
நேசமாக்குந் திறத்தா ரறத்தார் நெறிப்பாலரே. 4

---

1. [1] எல்லா ஆறுகளினும் காலத்தாற் பழமையுடையது காவிரியாதலின் 'பழங்காவிரி' யென அதனைப் பிள்ளையார் பாராட்டினரென்க.

2. [1] கண்கள் பெற்றதனாற் பயன், நாகேச்சரத்தி லெழுந்தருளிய வண்ணமான பெருமானைக்கண்டு வழிபடுதலேயாம் என்பது கருத்து.

3. [1] ஆரவாரித்து எழ. [2] புனல்பாவிச்செல்லும்.

4. [1] உண்மையும் உறுதியும் பெற்று இறைவனை வழிபடுதலால் எத்தகைய தீமைகளையும் அறவே போக்கி நன்னெறிப்படுத்தவல்ல ஒருமைபெற்ற வுளமுடைய தொண்டர்கள்.

# மூன்றாந்திருமுறை

* திருவாவடுதுறை . நாலடிமேல் வைப்பு பண் - காந்தாரபஞ்சமம்

இடரினும் தளரினும் எனதுறுநோய்
தொடரினும் உனகழல் தொழுதெழுவேன்
கடல்தனில் அமுதொடு கலந்த நஞ்சை
மிடறினில்[1] அடக்கிய வேதியனே[2].
இதுவோஎமை யாளுமா றீவதொன் றெமக்கில்லையேல்
அதுவோவுன தின்னருள்ஆவடுதுறை யரனே. 1

வாழினுஞ் சாவினும் வருந்தினும் போய்
வீழினும் உனகழல் விடுவேனல்லேன்
தாழிளந் தடம்புனல் தயங்கு[1]சென்னிப்
போழிள மதி வைத்த புண்ணியனே.
இதுவோஎமை யாளுமா றீவதொன் றெமக்கில்லையேல்
அதுவோவுன தின்னருள் ஆவடு துறையரனே. 2

---

* திருஞானசம்பந்தப் பிள்ளையார் தம் தந்தையார் செய்ய விரும்பிய வேள்வியின் பொருட்டாக ஆவடுதுறை யிறைவனைப் பொன் வேண்டிப் பாடிய திருப்பதிகம்.

"ஆவடுதுறையி லமர்ந்தருளும் இறைவனே! எத்தகைய அல்லற்காலத்தும் நின்னை வழிபடுதலிற்றவறாத உள்ளமுடையவர்கள் யாங்கள். எமக்கு அல்லற்காலத்துத் தங்களால் அருள்கூர்ந்து அளிக்கப்பெறுவ தொருபொருளும் இல்லையென்றால் இதுவோ எங்களை யாட்கொள்ளும் முறை? இங்ஙனம் எம்மை நின்னருட் கண்ணுற் பாராதிருக்கும் அதுவோ நினது திருவருளியல்பு" என வினவிய பொருண்மையினவாக இப்பதிகப் பாடல்கள் அமைந்தமை காணலாம்.

1. [1] கண்டத்தில். [2] வேதப்பொருளாயுள்ளவன்.
2. [1] விளங்கு. [2] பிளந்த இளமதி ; என்றது பிறையை.

நனவினுங் கனவினும் நம்பாவுன்னை
மனவினும் வழிபடல் மறவேனம்மான்
புனல்விரி நறுங்கொன்றைப் போதணிந்த
கனலெரி யனல்புல்கு கை[1]யவனே.
இதுவோஎமை யாளுமா றீவதொன் றெமக்கில்லையேல்
அதுவோவுன தின்னருள் ஆவடு துறையரனே. 3

தும்மலோ டருந்துயர் தோன்றிடினும்
அம்மலர் அடி[1]யலால் அரற்றுதென் நாக்
கைம்மல்கு வரிசிலைக்[2] கணை[3]யொன் றினால்
மும்மதில்[4] எரியெழ முனிந்தவனே.
இதுவோஎமை யாளுமா றீவதொன் றெமக்கில்லையேல்
அதுவோவுன தின்னருள் ஆவடு துறையரனே. 4

கையது வீழினுங் கழிவுறினும்
செய்கழல் அடியலால் சிந்தைசெய்யேன்
கொய்யணி நறுமலர் குலாய[1]சென்னி
மை[2]யணி மிடறுடை மறையவனே.
இதுவோஎமை யாளுமா றீவதொன் றெமக்கில்லையேல்
அதுவோவுன தின்னருள் ஆவடு துறையரனே. 5

---

3. [1] கனன்று எரியும் தீ பொருந்திய கை என்பதாம்.

4. [1] அழகிய மலர்போலுந்திருவடி. [2] நாணேற்றப்பட்ட வில். [3] அம்பு. [4] திரிபுரம்.

5. [1] பொருந்தி விளங்கிய. [2] நஞ்சின்கறை.

## திருமழபாடி - பண் - கொல்லி

காலையார் வண்டினங் கிண்டிய காருறும்
சோலை[1]யார் பைங்கிளி சொற்பொருள் பயிலவே
வேலையார் விட[2]மணி வேதியன் விரும்பிடம்
மாலையார் மதிதவழ் மாமழ பாடியே. 1

கறையணி மிடறுடைக் கண்ணுதல் நண்ணிய
பிறையணி செஞ்சடைப் பிஞ்ஞகன் பேணுமூர்
துறையணி குருகினந்[1] தூமலர் துதையவே[2]
மறையணி நாவினான் மாமழ பாடியே. 2

அந்தணர் வேள்வியும் அருமறைத் துழனியும்[1]
செந்தமிழ்க் கீதமும் சீரினால் வளர்தரப்[2]
பந்தணை மெல்விர லாளொடும் பயில்விடம்
மந்தம்[3]வந் துலவுசீர் மாமழ பாடியே. 3

அத்தியின் உரி[1]தனை யழகுறப் போர்த்தவன்
முத்தியாய் மூவரின் முதல்வனாய் நின்றவன்[2]
பத்தியாற் பாடிடப் பரிந்தவர்க் கருள்செயும்
அத்தனார் உறைவிடம் அணிமழ பாடியே. 4

---

1. [1] மேகந்தவழும் சோலை. [2] கடலிற்றோன்றிய நஞ்சு.
2. [1] சிறு பறவையாகிய வண்டின் கூட்டம். [2] நெருங்க.
3. [1] அரிய வேதம் ஓதுதலின் ஆரவாரம்.
   [2] இசைக்கலைக்கு உயிர்போன்று இன்றியமையாத திறமுடையது செந்தமிழ் மொழியாதலின் 'செந்தமிழ்க் கீதமுஞ் சீரினால் வளர்தர' என்றார். சீரினால்–தாளத்தொடு. [3] மென்காற்றாகிய தென்றல்.
4. [1] யானைத்தோல்.
   [2] படைத்துக் காத்து அழிக்கும் மூத்தேவர்களினும் உலகத்தை எஞ்சாமல் ஒடுக்குதற்கும் அங்ஙனம் ஒடுங்கிய உலகத்தை மீளத்தோற்றுவித்தற்கும் முதலாய் விளங்குபவன் மாசங்காரத்தைச் செய்யும் சிவபரம்பொருளொருவனே யாதலின் அப் பெருமானை மூவரின் முதல்வனாய் நின்றவன் என்றார். "செழும் பொழில்கள் பயந்து காத்தழிக்கும் மற்றை மூவர் கோனாய்நின்ற முதல்வன்" எனத் திருவாசகத்துங் கூறப்பட்டது. (திருச்சதகம்)

கங்கையார் சடையிடைக் கதிர்மதி யணிந்தவன்
வெங்கண்வா ளரவு[1]டை வேதியன் தீதிலாச்
செங்கயற் கண்ணுமை யாளொடுஞ் சேர்விடம்
மங்கைமார் நடம்பயில் மாமழ பாடியே. 5

### திருக்காளத்தி - பண் - கொல்லி

சந்தமார்[1] அகிலொடு சாதிதேக் கம்மரம்
உந்து[2]மா முகலி[3]யின் கரையினில் உமையொடும்
மந்தமார் பொழில்வளர் மல்குவண் காளத்தி
எந்தையார் இணையடி யென்மனத் துள்ளவே. 1

ஆலமா மரவமோ டமைந்தசீர்ச் சந்தனம்
சாலமா பீலியுஞ் சண்பக முந்தியே
காலமார் முகலி[1]வந் தணைதரு காளத்தி
நீலமார் கண்டனை நினையுமா நினைவதே. 2

கோங்கமே குரவமே கொன்றையம் பாதிரி
மூங்கில்வந் தணைதரு முகலியின் கரையினில்
ஆங்கமர் காளத்தி யடிகளை அடிதொழ
வீங்குவெந் துயர்கெடும் வீடெளி தாகுமே. 3

---

5. [1] வெம்மையைத் தரும் கண்களையும் ஒளியினையுமுடைய பாம்பு.

1. [1] சந்தம்—அழகு. [2] செலுத்தும்.
[3] பெருமை தங்கிய பொன்முகலி யென்னும் யாறு; இது திருக்காளத்தி மலையின் பாங்கர்ச் செல்வதாம்.

2. [1] எல்லாப் பருவத்தும் நீர் நிறைந்துவரும் முகலி யென்பது கருத்து.

3. காளத்தி யடிகளை அடி தொழுதலால் மிக்க பிறவித்துயர் கெடுதலும் வீடு பேறு எளிதிற் கைவரப் பெறுதலும் ஆகிய நற்பயனுண்டாம் என்பது கருத்து.

கரும்புதேன் கட்டியுங் கதலியின் கனிகளும்[1]
அரும்புநீர் முகலியின் கரையினி லணிமதி
ஒருங்குவார் சடையினன் காளத்தி யொருவனை
விரும்புவார் அவர்கள்தாம் விண்ணுல காள்வரே. 4

அட்டமா சித்திகள்[1] அணைதரு காளத்தி
வட்டவார் சடையனை வயலணி காழியான்
சிட்டநான் மறை[2]வல ஞானசம் பந்தன்சொல்
இட்டமாப் பாடுவார்க் கில்லையாம் பாவமே. 11

**திருவாரூர் - பண் : கௌசிகம்**

அந்த மாயுல காதியு மாயினான்
வெந்த வெண்பொடிப் பூசிய வேதியன்
சிந்தை யேபுகுந் தான்திரு வாரூரெம்
எந்தை தானெனை யேன்றுகொ ளுங்கொலோ[1]. 1

கருத்த னேகரு தார்[1]புரம் மூன்றெய்த
ஒருத்த னே[2]யுமை யாளொரு கூறனே
திருத்த னே[3]திரு வாரூரெந் தீவண்ணா
அருத்த[4] வென்னெனை யஞ்சலென் னாததே. 2

---

4. [1] வாழைப் பழங்கள்.

11. [1] அணிமா முதலாகச் சொல்லப் பெறும் எண்வகைச் சித்திகள்.
[2] உலகியல் ஒழுக்கத்தினை யுணர்த்தும் நால் வேதங்கள்.

1. [1] எம்பெருமான் எளியேனை அடியவனாக ஏற்றுக்கொள்வானோ என வினவிய இக் குறிப்பு இப் பதிகம் முழுவதும் வருதல் உணர்க.

2. [1] கருதார் பகைவர்; ஆவார் திரிபுரத்து அவுணர். [2] ஒப்பிலாதவனே.
[3] திருத்தன்— தூயோன்.
[4] மெய்ப் பொருளானவனே. 'எனை அஞ்சல் என்னாதது என்' என மாறிக் கூட்டுக.

மறையன் மாமுனி வன்மரு வார்[1]புரம்
இறையின் மாத்திரை[2] யில்லெரி யூட்டினன்
சிறைவண் டார்பொழில் சூழ்திரு வாரூரெம்
இறைவன் றனெனை யேன்றுகொ ளுங்கொலோ 3

பல்லில் ஓடு[1]கை யேந்திப் பலிதிரிந்
தெல்லி[2] வந்திடு காட்டெரி யாடுவான்
செல்வம் மல்கிய தென்றிரு வாரூரான்
அல்லல் தீர்த்தெனை யஞ்சலெனுங் கொலோ. 4

குருந்த மேறிக் கொடிவிடு மாதவி[1]
விரிந்த லர்ந்த விரைகமழ் தேன்கொன்றை
திருந்து மாடங்கள் சூழ்திரு வாரூரான்
வருந்தும் போதெனை வாடலெ னுங்கொலோ.[2] 5

---

3. [1] மருவார்—தன்னைச் சேராத பகைவர்.
[2] இறையின் மாத்திரை—சிறிது பொழுதளவில்.

4. [1] பல் உதிர்ப் பெற்றதாகிய மண்டையோடு. [2] இராப்பொழுது.

5. [1] குருந்த மரத்தின்கண் ஏறிப் படரவல்ல மாதவியென்னுங் கொடி
[2] தளர்ந்து வருந்தா தொழிக என்று அமைதியளிப்பானோ. வாடல்—வருந்தா தொழிக.

## *திருப்பாசுரம் - பண் : கௌசிகம்

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்[1]
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக[2]
ஆழ்க தீயதெல் லாம்[3] அரன் நாமமே
சூழ்க[4] வையக முந்துயர் தீர்கவே[5]. 1

அரிய காட்சிய ராய்த்[1] தம தங்கைசேர்
எரியர் ஏறுகந் தேறுவர் கண்டமும்
கரியர் காடுறை வாழ்க்கைய[2] ராயினும்
பெரிய[3] ராரறி வாரவர் பெற்றியே[4]. 2

---

* ஆளுடைய பிள்ளையார் மதுரையில் சமணரொடு புனல்வாதம் செய்தருளியபோது சிவசமய நுண்பொருள் செறியப் பாடி யருளப்பெற்று வையையாற்றில் எதிரேறிச் சென்ற திருப்பதிகம் இதுவாகும்.

1\. [1] உலகியல் ஒழுக்கமாகிய வேள்வி முதலியனவும் அவற்றிற்குக் காரணமாகிய இறை வழிபாடும் நிலைபெறுக என்பதாம்.

[2] இனி அவற்றின் பயன் கூறுவார் வேள்வியின் பயன் மழையும் வழிபாட்டின் பயன் அரசியல் வளர்ச்சியும் என்றார்.

[3] இவற்றிற்கு முரண் விளைக்குந் தீயநெறி யகன்றொழிக என்றது மேற்கூறிய வழிபாட்டின் பயனைக் காத்தற் பொருட்டாம்.

[4] பிறவிக்கடலிற் றுன்புறும் உயிர்கள்யாவும் அஞ்செழுத்தின்புணை பிடித்து உய்தல் வேண்டும் என்பதாம்.

[5] உலகத்தவர் இருமையினுந் துயர்நீங்கி யின்புறுக என்பது கருத்து.

2\. [1] தம் திருவருளே கண்ணாகத் தெரிதலாம்நிலையிற் றெளியாதவர்க்குக் காண்டற்கரியர்.

[2] உரிய அன்பினால் தம்மை வழிபடும் அடியார்கட்கு வெளிப்படத்தோன்றி யருளும் இயல்புடையார் என்பார் அப்பெருமான் திருமேனியடையாளங்களைக் குறிப்பிட்டருளினார்.

[3] மேற்கூறிய இயல்பேயன்றி, பரவிய விண்முதற் பூதங்கள், பல்வகை உயிர்கள், அண்டங்கள் முதலாகப் பொருந்திய யாவற்றையும் தமக்கு வடிவாகக் கொண்டு கலந்து நிற்கும் எண்பேருருவினர் என்பார் 'ஆயினும் பெரியர்' என்றார்.

[4] எத்தகையோர் உணர்வுஞ் சென்று எட்டுதற்கரிய நிலைபெற்ற தனிமையியல்புடையார் என்பார் அரிய காட்சியர் என முன்னர்க் கூறியதன்றிப் பின்பும் 'ஆரறிவார் அவர்பெற்றியே' எனத் திருவாய் மலர்ந்தருளினார்.

வெந்த சாம்பல் விரையெனப் பூசியே[1]
தந்தை யாரொடு தாயிலர்[2] தம்மையே
சிந்தி யாஎழு வார்வினை தீர்ப்பரால்[3]
எந்தை யாரவர் எவ்வகை யார்கொலோ[4]. 3

ஆட்பா லவர்க்கருளும் வண்ணமும் ஆதி மாண்பும்
கேட்பான் புகில்அளவில்லை கிளக்க வேண்டா[1]
கோட்பா லனவும் வினையுங் குறுகாமை யெந்தை
தாட்பால் வணங்கித் தலைநின் றிவைகேட்க தக்கார்[2]. 4

---

3. [1] இறைவனது ஈறிலா வொளியன்றி ஏனைப் பொருள்களின் ஒளியெல்லாம் அறவே கெட்டுப் பொடியாகி அவன் திருமேனியழகால் மிளிர்வன என்பது கருத்து.

[2] உலகம் யாவையும் அமைத்து, அவை வீந்தபோது தன் திருவடிக்கண் அடக்கி மீளவும் தோற்றுவித்தலால் எம்இறைவர் பிறப்பிலர் என்பதாம்.

[3] நிலைபெற்ற மெய்ப்பொருளாய் விளங்கும் பேரொளியுடையவன் இறைவன் ஒருவனேயென இப்பிறப்பிலேயே தம்மை நினைந்து போற்றுவார்தம் இருவினைப் பொய்மை வல்லிருளைப் போக்கி யருளுமியல்பினர் இறைவர் என்பதாம்.

[4] முன்னைப் பழம்பொருட்கு முன்னைப் பழம் பொருளாய் விளங்கும் இறைவனை அருவம் உருவம் அருவுருவம் எனப் பொருள்கட்கு வகுக்கப்பட்ட மூவகைக் கூற்றினுள் எக்கூற்றினும் அடக்கிக் கூறுதல் இயலாதென்பதாம்.

4. [1] ஆதி பகவனாகிய பெருமான் தன் அடியார்கட்கு அருளும் முறையும் அங்ஙனம் அருளவல்ல அவ்விறைவனது திருவருண் மாண்பும் இன்ன தன்மையவென யாவராலும் ஓதுதற்குரிய எல்லையைக் கடந்து நிற்பனவாகலின் அவைபற்றிச் சிற்றறிவினராகிய நம்மனோராற் செய்யப்படும் ஆராய்ச்சி யாதும் இல்லை என்பதாம்.

'ஆதி ஆட்பாலவர்க்கு அருளும் வண்ணமும்' என 'ஆதி' யென்பதனை முன்னர்க்கூட்டிப் பொருள்கொள்க.

[2] அங்ஙன மாதலின் முதல்வன் திருவடியைச் சார்ந்து வணங்கி நின்று அப்பெருமான் அருளும் வண்ணமும் அவன்மாண்பும் கேட்டுணரும் திருவருள் நெறியினர்க்குப் பிறவி நிலைக்கோள்களான் உளவாம் இடையூறுகளும் முன்னை வல்வினையும் அறவே கெட்டொழிவனவாம் என்றவாறு.

ஏதுக்களாலும் எடுத்த மொழியாலும் மிக்குச்
சோதிக்க வேண்டா[1] சுடர்விட்டுளன் எங்கள் சோதி[2]
மாதுக்கம் நீங்க லுறுவீர் மனம்பற்றி வாழ்மின்[3]
சாதுக்கள் மிக்கீர் இறையேவந்து சார்மின்களே[4]. 5

---

5. [1] தனக்குவமையில்லாதானாகிய இறைவன் இயல்பினை ஏதுக்களாலும் எடுத்துக்காட்டாலும் இவ்வியல்பிற்றென ஆராய்ந்து அளத்தல் இயலாதென்பதாம்.

[2] அண்டத்தின் புறத்தே ஞாயிறு தீ முதலியவற்றின் ஒளியாகவும், உயிர்களின் அகத்தே அன்பில் ஊன்றித் தோன்றும் உள்ளொளியாகவும் இறைவன் விளங்குகின்றான் ஆதலின் இந்நிலையை அவன் திருவருளோடியைந்து, எதிரேற்றுக் காணுந் திறத்தார்க்கு இதுவே உளங்கொளத் தக்க உறுதிப்பொருளாகும் என்பது கருத்து.

[3] சோதியாய் விளங்கும் ஆதி முதல்வனை அன்பினால் வணங்கி அவன் அருளால் அறிவுறுத்திய மெய்யுணர்வின் வழியே பொருந்தி வாழ்ந்து, உள்ளுணர்வைத் திரித்து வேறுபடுத்தும் பிணிப்பாகிய வினைத் தொடர்பை அறவே எறிந்து விலக்குமின் என்பதாம்.

[4] நீவிர் விரும்பிய அனைத்தையும் இறைவன் திருவடியிற் பூண்ட பேரன்பினாற் போற்றிப் பெறுதற்கு உரிமையுடையீர் ஆதலின் விரைவிற் பயன்பெறச் சார்ந்து உய்மின் என அடியார்களை ஆளுடைய பிள்ளையார் அழைத்தருள்கின்றார். இறையே—விரைவிலே.

ஆடும் எனவும் அருங்கூற்றம் உதைத்து வேதம்
பாடும் எனவும் புகழல்லது பாவம் நீங்கக்
கேடும் பிறப்பும் அறுக்கும் மெனக் கேட்டீராகில்
நாடுந் திறத்தார்க் கருளல்லது நாட்ட லாமே. 6

**திருப்பனந்தாள் - பண் : பஞ்சமம்.**

கண்பொலி நெற்றியினன் திகழ் கையிலோர் வெண் மழுவான்
பெண்புணர் கூறுடையான் மிகு பீடுடை மால்விடையான்
விண்பொலி மாமதிசேர் தரு செஞ்சடை வேதியனூர்
தண்பொழில் சூழ்பனந்தாள் திருத் தாடகை யீச்சரமே[1]. 1

---

6. " ஊழி முடிவில் உலகத்துப் பல வடிவுகளையும் தன்னிடத்தே ஒடுக்கிக் கொண்டு அருட் கூத்தியற்றுதலும், யாவராலுங் கடத்தற்கரிய கூற்றத்தை யுதைத்தருளலும், உணர்தற்கரிய வேதங்களை அருளிச்செய்தலும் என இறைவனுக்குரிய திருவிளையாடல்களாகப் பேசப்படும் மூன்று செயல்களும், அப்பெருமானது நிலைபெற்ற புகழைக் குறித்தற் பொருட்டு எழுந்தனவோ அல்லது, பாசத்துட்பட்டு வருந்தும் உயிர்களின் துன்பத்தை நீக்குதற்பொருட்டெழுந்தனவோ என்று ஆராயும் உணர்வுடையீர், இச்செயல்கள் தன் புகழுணர்த்தற் பொருட்டன்றி உயிர்களின் பாவம் நீங்கக் கேடும் பிறப்பும் அறுத்தற் பொருட்டே இறைவனால் மேற்கொள்ளப்பெற்றன என்னும் உண்மையைக் கேட்டுணர்வீராயின் இச்செயல்கள், இறைவன் நம்மனோர்பால் வைத்த அருளின்றிறத்தனவாமென்று தெளிதலல்லது பிறவாறு துணிதல் இயலுமோ " எனத் திருஞான சம்பந்தப் பிள்ளையார் உலக மக்களை வினவிய திறம் ஓர்க.

இவ்வாறு சைவசமயச் செம்பொருள் செறியத் திருஞானசம்பந்தப் பிள்ளையார் திருவாய் மலர்ந்தருளிய இத்திருப்பாசுரத்திற்குத் திருஞான சம்பந்தர் புராணத்தில் 820 முதல் 844 வரையுள்ள செய்யுட்களால் சேக்கிழார்பெருமான் மெய்ப்பொருள் விரித்த திறம் உணர்ந்து போற்றுதற்குரிய தொன்றாம்.

1. [1] தாடகையென்னும் பெயருடைய பெருமாட்டியார் இறைவனை வழிபட்டுப் போற்றிய திருக்கோயில் இதுவாதலின் தாடகையீச்சரம் என்னும் பெயர்த்தாயிற்று.

விரித்தவன் நான்மறையை மிக்க விண்ணவர் வந்திறைஞ்ச
எரித்தவன் முப்புரங்கள்[1] இய லேழுல கில்லுயிரும்
பிரித்தவன் செஞ்சடைமேல் நிறை பேரொலி வெள்ளந்தன்னைத்
தரித்தவன் ஊர்பனந்தாள் திருத் தாடகை யீச்சரமே. 2

உடுத்தவன் மானுரிதோல் கழ லுள்கவல் லார்வினைகள்
கெடுத்தருள் செய்யவல்லான் கிளர் கீதமோர் நான்மறையான்
மடுத்தவன் நஞ்சமுதா[1] மிக்க மாதவர் வேள்வியை முன்
தடுத்தவன் ஊர்பனந்தாள் திருத் தாடகை யீச்சரமே. 3

சூழ்தரு வல்வினையும் உடல் தோன்றிய பல்பிணியும்
பாழ்பட வேண்டுதிரேல் மிக ஏத்துமின் பாய்புனலும்
போழிள வெண்மதியும் அனல் பொங்கர வும்[1] புனைந்த
தாழ்சடை யான்பனந்தாள் திருத் தாடகை யீச்சரமே. 4

விடம்படு கண்டத்தினன் இருள்[1] வெள்வளை மங்கையொடும்
நடம்புரி கொள்கையினன் அவன் எம்மிறை சேருமிடம்
படம்புரி நாகமொடு திரை பன்மணி யுங்கொணரும்
தடம்புனல் சூழ்பனந்தாள் திருத் தாடகை யீச்சரமே. 5

---

2. [1] நான்மறையை விரித்தவன், மிக்க விண்ணவர் வந்திறைஞ்ச முப்புரங்கள் எரித்தவன் எனக்கூட்டுக.

3. [1] கடலிற்றோன்றிய நஞ்சினை அமுதென உட்கொண்ட பேருளாளன்.

4. [1] தீயென வுயிர்த்தெழும் பாம்பு.
வினையும் பிணியும் அறவே போக்குதற் குரியதோர் உபாயம் இறைவழி பாடே என்பது கருத்து.

5. [1] நள்ளிரவில். [2] படம் விரித்தாடுதலில் விருப்புடைய பாம்பு.

**திருக்காளத்தி - திருவிராகம். பண் : சாதாரி.**

வானவர்கள் தானவர்கள்[1] வாதைபட வந்ததொரு
மாகடல்விடம்
தானமுது செய்தருள் புரிந்தசிவன் மேவுமலை
தன்னைவினவில்
ஏனம்[2] இள மானினொடு கிள்ளை[3] தினை கொள்ளஎழி
லார்கவணினால்
கானவர்தம் மாமகளிர்[4] கனகமணி விலகுகா
ளத்திமலையே. 1

முதுசினவில் அவுணர்புரம் மூன்றுமொரு
நொடிவரையின்[1] மூளஎரிசெய்
சதுரர்மதி பொதிசடையர் சங்கரர்வி ரும்புமலை
தன்னை வினவில்
எதிரெதிர வெதிர்பிணைய எழுபொறிகள்[2] சிதறஎழி
லேன முழுத
கதிர்மணியின் வளரொளிகள் இருளகல நிலவுகா
ளத்தி மலையே. 2

வல்லைவரு காளியை வகுத்து வலி யாகிமிகு தாருகனைநீ
கொல்லென விடுத்தருள் புரிந்தசிவன் மேவுமலை
கூறிவினவில்
பல்பல விருங்கனி[1] பருங்கி[2] மிக வுண்டவை
நெருங்கியினமாய்க்
கல்லதிர நின்றுகரு மந்திவிளை யாடுகா ளத்திமலையே. 3

---

1. [1] அசுரர்கள். [2] பன்றி. [3] கிளி. [4] குறவர் மகளிர்.

2. [1] ஒரு நொடிப்பொழுதில்.
[2] மூங்கில் ஒன்றோடொன்று உரசுதலால் தோன்றிய தீப்பொறிகள்.

3. [1] பலவாகிய பலாவின் பெரிய பழங்கள். [2] பறித்து.

வேயனைய தோளுமையொர் பாகமது வாகவிடை
யேறிசடைமேல்
தூயமதி சூடிசுடு காடில்நட மாடி[1]மலை தன்னை வினவில்
வாய்கலச மாகவழி பாடுசெயும் வேடன்[2]மலர் ராகுநயனம்
காய்கணை யினாலிடந் தீசனடி கூடுகா ளத்திமலையே[3]. 4

மலையின்மிசை தனில்முகில்போல் வருவதொரு
மதகரியை மழைபோலலறக்
கொலைசெய்துமை யஞ்சவுரி போர்த்தசிவன் மேவுமலை
கூறி வினவில்
அலைகொள்புனல் அருவிபல சுனைகள்வழி யிழியவயல்
நிலவுமுதுவேய்[1]
கலகலென வொளிகொள்கதிர் முத்தமவை சிந்துகா
ளத்திமலையே. 5

---

4. [1] விடையேறி, மதிசூடி, நடமாடி என்பன இகரவீற்று வினைமுதற் பெயர்கள் ; சிவபெருமானைக் குறித்து நின்றன.

[2] தமது தூய்மைமிக்க வாயாகிய கலசத்திற்கொண்டு சென்ற நன்னீரால் காளத்திமலையிற் குடுமித்தேவரை வழிபட்ட திண்ணனார் என்னும் வேடர் பெருமான்.

[3] குடுமித்தேவருடைய திருக்கண்களில் குருதி சோர்வது கண்டு அஞ்சி ஊனுக்கு ஊனிடும் முறையில் தமது தாமரை மலர்போலுங் கண்ணினைத் தம் கையிலுள்ள கொல்லும் அம்பினால் தோண்டி இறைவன் கண்ணில் அட்பிக் கண்ணப்பன் என அப்பெருமானால் அழைக்கப்பெற்று இறைவன் திருவடியில் இரண்டறக் கலந்த வரலாறு திருக்காளத்தியில் நிகழ்ந்ததாதல் திருத்தொண்டர் புராணத்தால் அறிக. நயனம்—கண்.

5. [1] முதுவேய்—முற்றிய மூங்கில்.

### திருப்பல்லவனீச்சரம் - பண் - பழம் பஞ்சுரம்

பரசுபாணியர்[1] பாடல்வீணையர் பட்டினத்துறை
பல்லவனீச்சரத்[2]
தரசுபேணி நின்றார் இவர் தன்மை யறிவாரார். 1

பட்டநெற்றியர்[1] நட்டமாடுவர் பட்டினத்துறை
பல்லவனீச்சரத்
திட்டமா[2] யிருப்பார் இவர்தன்மை யறிவாரார். 2

பவளமேனியர் திகழும்நீற்றினர் பட்டினத்துறை
பல்லவனீச்சரத்
தழகரா யிருப்பார் இவர்தன்மை யறிவாரார். 3

பண்ணில் யாழினர் பயிலும் மொந்தையர்
பட்டினத்துறை பல்லவனீச்சரத்
தண்ணலா யிருப்பார் இவர்தன்மை யறிவாரார். 4

பல்லிலோட்டினர் பலிகொண்டுண்பவர் பட்டினத்துறை
பல்லவனீச்சரத்
தெல்லியாட் டுகந்தார்[1] இவர்தன்மை யறிவாரார். 5

---

1. [1] மழுப்படையினைக் கையகத்தேயுடையார். பரசு—மழு. பாணி—கை.
[2] காவிரிப்பூம் பட்டினத்தின்கண் உள்ள பல்லவனீச்சரம் என்னுந்திருக் கோயில்.

2. [1] நெற்றிப் பட்டத்தினையணிந்தவர். [2] இட்டம்—விருப்பம்.

4. [1] இசை நிலைபெற்ற யாழினை யியக்க வல்லவர். "எம்மிறை நல்வீணை வாசிக்குமே" (திருநாவுக்கரசர் தேவாரம்.) ஒப்புநோக்குக.

5. [1] இரவில் ஆடலை விரும்பினர்.

### *திருவாலவாய் - பண் - புறநீர்மை

மங்கையர்க்கரசி வளவர்கோன் பாவை[1] வரிவளைக்
கைம்மட மானி
பங்கயச் செல்வி[2] பாண்டிமா தேவி[3] பணிசெய்து
நாடொறும் பரவப்
பொங்கழ லுருவன் பூதநா யகன்நால் வேதமும்
பொருள்களும்[4] அருளி
அங்கயற் கண்ணி தன்னொடும் அமர்ந்த ஆலவா
யாவதும் இதுவே. 1

வெற்றவே[1] அடியார் அடிமிசை வீழும் விருப்பினன்
வெள்ளைநீ றணியும்
கொற்றவன் தனக்கு மந்திரி யாய குலச்சிறை குலாவி[2]
நின்றேத்தும்
ஒற்றைவெள் விடையன் உம்பரார் தலைவன் உலகினில்
இயற்கையை ஒழிந்திட்
டற்றவர்[3]க் கற்ற சிவ[4]னுறை கின்ற ஆலவா யாவதும்
இதுவே. 2

---

* திருஞானசம்பந்தப்பிள்ளையார் மதுரைக்குச் செல்பவர் திருவாலவாய்த் திருக்கோயிலைச் சேய்மையிற் கண்டபொழுதே வியந்து வணங்கி நின்று பாடிய திருப்பதிகம்.

1\. [1] சோழ மன்னன் திருமகளார்.
[2] தாமரை மலரிலெழுந்தருளிய திருவினையொத்த பேரழகுடையார்.
[3] பாண்டியன் நின்ற சீர் நெடுமாறன் பெருந் தேவியார்.
[4] ஈண்டுப் பொருள் என்றது, எழுத்துஞ்சொல்லும் பெற்றுப் பொருளதிகாரம் பெறாது கவன்ற பாண்டிய மன்னனது கவற்சியை நீக்குதற் பொருட்டுத் திருவாலவாயில் எழுந்தருளிய அழல்நிறக் கடவுள் அருளிச் செய்த இறையனார்களவியல் என்னும் அகப்பொருள் நூலினையேயாம். 'பொருட்டிரு மறைகள்தந்த புனிதரை' (பெரிய-எறிபத்த 6.) என்பர் ஆசிரியர் சேக்கிழாரும்.

2\. [1] தனக்கென ஒருபயனும் கருதாது. [2] அளவளாவி மகிழ்ந்து.
[3] உலகியல் வாழ்வை அறவே மறந்து பொது நீக்கி இறைவனை வழுத்த வல்லார்.
[4] அங்ஙனம் தமது சீவபோதம் ஒடுங்கப்பெற்ற அடியார்கள் செயலினைத் தம் தன் செயலெனக் கொண்டு அவர்களை யகத்திட்டுக்கொண்டு தானேயாய் நின்றருளவல்ல சிவபெருமான்.

செந்துவர்[1] வாயாள் சேலன கண்[2]ணாள் சிவன்திரு
நீற்றினை வளர்க்கும்
பந்தணை விரலாள் பாண்டிமா தேவி பணிசெயப்
பாரிடை நிலவும்
சந்தமார் தரளம்[3] பாம்புநீர் மத்தந்[4] தண்ணெருக்கம்மலர்
வன்னி
அந்திவான் மதி[5] சேர் சடைமுடி யண்ணல் ஆலவா
யாவதும் இதுவே. 3

கணங்களாய் வரினுந் தமியராய் வரினும்[1] அடியவர்
தங்களைக்கண்டால்
குணங்கொடு பணியுங் குலச்சிறை குலாவுங் கோபுரஞ்
சூழ்மணிக்கோயில்
மணங்கமழ் கொன்றை வாளரா மதியம் வன்னிவண்
கூவிள மாலை[2]
அணங்கு[3] வீற்றிருந்த சடைமுடி யண்ணல் ஆலவா
யாவதுமிதுவே. 4

---

3. [1]செம்பவழம். [2]சேல்மீன்போற் பிறழுங்கண். [3]அழகமைந்த முத்து. [4]ஊமத்த மலர். [5]பிறைமதி.

4. [1]அடியார்கள், கூட்டமாய் வந்தாலும் அன்றித் தனித்து வந்தாலும் என்றது, அடியார்களின் பெருக்கம் சுருக்கம் கருதித் தம் வழிபாட்டு முறையை மாற்றிக்கொள்ளாத இயல்புடையார் எனக் குலச்சிறையாரது திருத்தொண்டின் திறம் விளக்கியவாறும்.
[2]வில்வ மாலை. [3]ஈண்டுக் கங்கையை யுணர்த்தி நின்றது.

செய்யதா மரைமேல் அன்னமே யனைய சேயிழை
திருநுதற்செல்வி
பையர வல்குற் பாண்டி மாதேவி நாடொறும்
பணிந்தினி தேத்த
வெய்யமேற் சூலம் பாசம்அங் குசமான் விரிகதிர்
மழுவுடன் தரித்த
ஐயனார் உமையோ டின்புறு கின்றஆலவா
யாவதும் இதுவே. 5

நலமில ராக நலமதுண் டாக நாடவர் நாடறி கின்ற
குலமில ராகக் குலமதுண் டாகத் தவம்பணி
குலச்சிறை பரவும்
கலைமலி கரத்தன் மூவிலை வேலன் கரியுரி
மூடிய கண்டன்
அலைமலி புனல்சேர் சடைமுடி யண்ணல் ஆலவா
யாவதும் இதுவே. 6

---

6. இறைவன் அடியார்களானார் பயனில் செயல்களால் பொலிவற்றவ ராயினும், அன்றிப் பயனுடைய நற்செயல்களால் பொலிவுபெற்றா ராயினும், நாட்டு மக்களால் அறிந்து பாராட்டப்பெறும் நற்குடிப் பிறப்பு இல்லாதவராயினும், அன்றி அஃதுடையராயினும், இவ்வுலகியல் வேறுபாடு எதனையும் நோக்காது சிவனடியார் யாவராயினும் அவர் களைப் பணிதலே தவமெனக் கொண்டார் அமைச்சராகிய குலச்சிறை நாயனார் என்பது, முன்னிரண்டடிகளின் பொருளாகும். இவ் வழிபாட்டு முறையை "எவரேனுந் தாமாக விலாடத்திட்ட திருநீறுங் கண்டிகையுங் கண்டாலுள்கி, உவராதே யவரவரைக் கண்டபோதே யுகந்தடிமைத் திறம்நினைந்தங் குவந்து நோக்கி, இவர்தேவர் அவர்தேவர் என்று சொல்லி யிரண்டாட்டாதொழிந்து ஈசன் திறமே பேணிக், கவராதே தொழும் அடியார் நெஞ்சினுள்ளே கன்றாப்பூர் நடுதறியைக் காணலாமே" என வருந் திருத்தாண்டகத்தா னுணரலாம்.

உ

திருச்சிற்றம்பலம்

## திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரப் பதிகங்கள்

# நான்காந் திருமுறை

---

### *திருக்கெடில வட வீரட்டானம் - பண் - காந்தாரம்.

சுண்ணவெண் சந்தனச் சாந்துஞ் சுடர்த்திங்கட் சூளா மணியும்[1]
வண்ணவுரிவை[2] யுடையும் வளரும் பவள நிறமும்
அண்ணலரண்முரணேறு[3] மகலம் வளாய வரவுந்[4]
திண்ணன் கெடிலப் புனலுமுடையா ரொருவர் தமர்[5]நாம்
அஞ்சுவ தியாதொன்றுமில்லை யஞ்ச வருவதுமில்லை[6]. 1

பலபலகாமத்த ராகிப் பதைத் தெழுவார் மனத்துள்ளே
கலமலக் கிட்டுத்[1] திரியுங் கணபதி யென்னுங் களிறும்
வலமேந்திரண்டு சுடரும் வான்கயிலாய மலையும்
நலமார் கெடிலப் புனலு முடையா ரொருவர் தவர்நாம்
அஞ்சுவ தியாதொன்றுமில்லை யஞ்ச வருவதுமில்லை. 5

---

* இப்பதிகம் சமணர்கள் ஏவிய கொலையானை அஞ்சி யகலும்படி ஓதி யருளியது.

1. [1] முடிமணி. [2] தோல்.
[3] தலைமையும் காவல் வன்மையும் உடைய எருது.
[4] மார்பினைச் சூழ்ந்து விளங்கும் பாம்பு. [5] சுற்றத்தார்.
[6] இறைவன் சுற்றத்தாரெனப்பெறும் அடியார்களாகிய நம்மால் அஞ்சத் தகுவதொரு பொருளும் இல்லை. நாம் அஞ்சும் வண்ணம் நம்மை யடைந்து வருத்தும் இடையூறும் இல்லையென்பது கருத்து.

5. [1] கல மலக்கிடுதல்—உழக்குதல்.

நரம்பெழு கைகள் பிடித்து நங்கை நடுங்க மலையை
யுரங்க ளெல்லாங் கொண்டெடுத்தான்[1] ஒன்பதுமொன் றுமலற[2]
வரங்கள் கொடுத்தருள் செய்வான் வளர்பொழில் வீரட்டஞ் சூழ்ந்து
நிரம்பு கெடிலப் புனலு முடையா ரொருவர் தமர்நாம்
அஞ்சுவதி யாதொன் றுமில்லை யஞ்ச வருவதுமில்லை. 10

## திருக்கழிப்பாலை - பண் - காந்தாரம்.

வனபவள வாய்திறந்து வானவர்க்குந் தானவனே யென்கின்றாளாற்
சினபவளத் திண்டோண் மேற் சேர்ந்திலங்கு வெண்ணீற்ற னென்கின்றாளால்
அனபவள மேகலையோ டப்பாலைக் கப்பாலா னென்கின்றாளாற்
கனபவளஞ் சிந்துங் கழிப்பாலைச் சேர்வானைக் கண்டாள்கொல்லோ. 1

பிறந்திளைய திங்களெம் பெம்மான் முடிமேல தென்கின்றாளால்
நிறங்கிளருங் குங்குமத்தின் மேனியவனிறமே[1] யென்கின்றாளால்
மறங்கிளர் வேற்கண்ணாள் மணிசேர் மிடற்றவனே யென்கின்றாளாற்
கறங்கோத[2] மல்குங் கழிப்பாலைச் சேர்வானைக் கண்டாள்கொல்லோ. 3

---

10. [1] இராவணன். [2] பத்து வாய்களாலும் கதற.

1. 'கழிப்பாலை யிறைவனைக் காமுற்று வருந்திய தலைவியின் இயல்பை யெண்ணி நற்றாயிரங்குதல்' என்னுந் துறைப்பொருள் அமைந்தது இத்திருப்பதிகமாகும்.

3. [1] அவன் மேனி கிளரும் நிறம் குங்குமத்தின் நிறமே எனப் பிரித்துக் கூட்டுக.
[2] கறங்கு ஓதம்—ஆரவாரித்துப் பரவும் அலைகள்.

பழியிலான் புகழுடையன் பால்நீற்றன்[1] ஆனேற்றன்
என்கின்றாளால்
விழியுலாம் பெருந்தடங்கண்[2] ணிரண்டல்ல மூன்றுளவே
யென்கின்றாளாற்
சுழியுலாம் வருகங்கை தோய்ந்த சடையவனே
யென்கின்றாளாற்
கழியுலாஞ் சூழ்ந்த கழிப்பாலைச் சேர்வானைக்
கண்டாள்கொல்லோ. 5

**திருவேகம்பம் - பண் - காந்தாரம்**

கரவாடும் வன்னெஞ்சர்[1]க் கரியானைக் கரவார்பால்
விரவாடும்[2] பெருமானை விடையேறும் வித்தகனை
யரவாடச் சடைதாழ வங்கையினி லனலேந்தி
யிரவாடும் பெருமானை[3] யென்மனத்தே வைத்தேனே. 1

தேனோக்குங் கிளிமழலை[1]யுமை கேள்வன் செழும்பவளந்
தானோக்குந் திருமேனி தழலுருவாஞ் சங்கரனை
வானோக்கும் வளர்மதிசேர் சடையானை வானோர்க்கும்
ஏனோர்க்கும் பெருமானை யென்மனத்தே வைத்தேனே 2

---

5. [1] பால்போலும் வெள்ளிய திருநீற்றினை யணிந்தவன்.
[2] விழித்துப் பார்த்தலிற் பயின்ற பெருமை மிக்க அகன்ற கண்கள்.

1. [1] வஞ்சனையிற் பயிலும் ஈரமற்ற உளமுடையோர்.
[2] கலந்து விளையாடும்; விரவி ஆடும் எனப் பிரித்துப் பொருள் கொள்க.
[3] இராப்பொழுதின்கண் ஐந்தொழிலாடல் செய்யவல்ல இறைவன்.

2. [1] தேன் நோக்கும் மழலை, கிளிமழலை எனத் தனித்தனி கூட்டுக.
நோக்கும் என்பது உவம உருபு.

கைப்போது மலர்[1] தூவிக் காதலித்து வானோர்கள்
முப்போது[2] முடிசாய்த்துத் தொழ நின்ற முதல்வனை
யப்போது மலர்தூவி[3] யைம்புலனு மகத்தடக்கி
யெப்போது மினியானை யென்மனத்தே வைத்தேனே. 3

அடுத்தானை யுரித்தானை[1] யருச்சுனற்குப் பாசுபதங்
கொடுத்தானைக் குலவரையே சிலையாகக்[2] கூரம்பு
தொடுத்தானைப் புரமெரியச்[3] சுனைமல்கு கயிலாயம்
எடுத்தானைத் தடுத்தானை[4] யென்மனத்தே வைத்தேனே 10

### நமச்சிவாயத் திருப்பதிகம் - பண் - காந்தார பஞ்சமம்

சொற்றுணை வேதியன் சோதி வானவன்
பொற்றுணைத் திருந்தடி பொருந்தக் கைதொழக்
கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்
நற்றுணை யாவது நமச்சி வாயவே. 1

---

3. [1] போதுமலர்—அலரும் பருவத்து மலர்.
[2] காலை நண்பகல் மாலை யென்ற மூன்று பொழுதிலும்.
[3] அப்பு ஓதும் மலர் தூவி எனப் பிரித்து, நீருடன் நூல்களிற் கூறிய நறுமலர்களைக்கொண்டு அருச்சித்து எனப் பொருள் கொள்க. அப்பு—நீர்.

10. [1] அடுத்து ஆனை யுரித்தான்—எதிரே சென்று ஆனையைக் கொன்று அதன் தோலை யுரித்துப் போர்த்தான்.
[2] மேரு மலையே வில்லாக. [3] புரம் எரியக் கூரம்பு தொடுத்தானை என இயைக்க.
[4] திருக்கைலாயமலையைப் பறித்தெடுத்த இராவணனைத் தன் திருவடிப் பெருவிரலொன்றினால் ஊன்றி யடக்கிய சிவபெருமானை.

1. சமணர்கள் திருநாவுக்கரசடிகளைக் கல்லொடு பிணித்துக் கடலிற் றள்ளியபோது இறைவனது திருவைந்தெழுத்தையே துணையாகக் கொண்டு திருநாவுக்கரசரால் ஓதி யருளப்பெற்றதாதலின் நமச்சிவாயத் திருப்பதிகமென இப்பதிகம் வழங்கப் பெறுகின்றது. "கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும் நற்றுணையாவது நமச்சிவாயவே" எனவரும் இப்பாடற் றொடரால் இத் திருப்பதிகம் பாடப்பெற்ற செவ்வி இனிது விளங்குதல் காண்க.

பூவினுக் கருங்கலம்[1] பொங்கு தாமரை
ஆ[2]வினுக் கருங்கல மரனஞ் சாடுதல்[3]
கோ[4]வினுக் கருங்கலங் கோட்டமில்லது[5]
நாவினுக் கருங்கல நமச்சி வாயவே.[6] 2

விண்ணுற வடுக்கிய விறகின் வெவ்வழல்
உண்ணிய புகி[1]லவை[2] யொன்றுமில்லையாம்
பண்ணிய வுலகினிற் பயின்ற பாவத்தை
நண்ணிநின் றறுப்பது நமச்சி வாயவே. 3

இடுக்கண்பட் டிருக்கினு மிரந்தி யாரையும்
விடுக்கிற் பிராணென்று வினவுவோ மல்லோம்
அடுக்கற்கீழ்க் கிடக்கினு மருளி னுழுற்ற
நடுக்கத்தைக் கெடுப்பது நமச்சி வாயவே 4

---

2. [1]அருங்கலம்—பெறுதற்கு அரிய அணிகலன். [2]ஆ—பசு.
[3]அஞ்சு—பஞ்ச கௌவியம். [4]கோ—அரசன்
[5]ஒருபாற் கோடாத செங்கோன்மை.
[6]மாந்தர் நாவினுக்கு அணிகலனாகத் திகழும் நன்மொழி திருவைந் தெழுத்தே யென்றவாறு.

3. [1]உண்ணத் தொடங்கில். [2]அவை—அவ்விறகுகள்.
வானளாவ அடுக்கிய விறகுக் குவியலில் வெவ்விய தீச்சுடர் பற்றிய நிலையில் அவ்விறகனைத்தும் ஒன்றுமின்றி நீறுயழிதல் போல, உலகில் முன்னர்ச் செய்து அநுபவித்தற்கமைந்த தீவினைக ளெல்லாவற்றையும் பற்றி யழிப்பது திருவைந்தெழுத்தே யென்பது கருத்து. இப்பாட்டு எடுத்துக்காட்டுவமை.

4. பெரிய இடையூறுகளிற் சிக்குண்டு வருந்தும் அல்லற்காலமாயினும் முழுமுதற் கடவுளல்லாத ஏனையோரை எங்கள் துயர் நீக்க எம்பால் விடுத்தால், யாங்கள் அவர்களை எம்பெருமானேயென்று போற்றி ஒரு பொருளைக் கேட்டுப்பெறும் எளிமையுடையோமல்லோம். மலையின் கீழ்க் கிடந்து யாம் வருந்தினும் எம்பால் வைத்த அருளால் எங்களது நடுக்கத்தை அறவே கெடுக்கும் வன்மையுடையது திருவைந்தெழுத்தாம் என்பது பொருள்.

வெந்த நீறருங்கலம் விரதிகட் கெலாம்[1]
அந்தணர்க்[2] கருங்கல மருமறை யாறங்கந்
திங்களுக் கருங்கலந் திகழு நீண்முடி[3]
நங்களுக் கருங்கல நமச்சிவாயவே. 5

சலமிலன்[1] சங்கரன்[2] சார்ந்தவர்க் கல்லால்
நலமில[3] னாடொறு நல்கு வானலன்[4]
குலமில ராகினுங் குலத்திற் கேற்பதோர்
நலமிகக் கொடுப்பது நமச்சிவாயவே.[5] 6

---

5. [1]விரதிகள்—மாவிரதர் எனப்படும் சைவசமயத் தாபதர்கள். அவர்கட்கு வெந்த நீறு அருங்கலம் என முடிக்க.

[2]அந்தணர் — வேதத்தின் அந்தமாகிய உபநிடதங்களை மேற்கொண்டொழுகும் அருளாளர்.

[3]திகழும் நீண்முடி யென்றது இறைவனது திருமுடியை.

6. [1]கோட்டமுடையானல்லன். [2]இன்பத்தைத் தருபவன்.

[3]இறைவன் தன்னை மெய்யன்பினாற் சார்ந்தார்க்கல்லது ஏனையோர்க்கு நலந்தருவானல்லன்.

[4]சார்ந்தார்க்கு மேன்மேலும் நலங்களை நல்கியருளுவான்; எனினும் சார்ந்தோர் சாராதோர் என்பதுபற்றி நடுநிலை திறம்புவானுமல்லன் என்பதனைச் சலமிலன் என்பதனால் முன்னரே குறிப்பிட்டமை காண்க.

[5]இறைவனைச் சார்தற்கேற்ற தொண்டர் குலத் தொடர்பை முன்னர்ப் பெற்றிலராயினும் அவ்வுயர் குலத்துக் கேற்பதாகிய பெருநலத்தினை நிறையக் கொடுப்பது திருவைந்தெழுத்தாம் என்றவாறு. எனவே இறையடித்தொண்டு பூணுதற்கேற்ற சிறப்பை யளிப்பது திருவைந்தெழுத்துபதேசம் என்பது கருத்து.

"நின்ற தபோதனியாரும் நின்மலன் பேரருள் நினைந்து, சென்று திருவீரட்டம் புகுவதற்குத் திருக்கயிலைக், குன்றுடையார் திருநீற்றை யஞ்செழுத்தோதிக் கொடுத்தார்" (திருநாவுக்கரசர் புராணம் செய்யுள் 66) எனவரும் திருத்தொண்டர் புராணத் தொடரும் இவ்வுண்மையை வலியுறுத்துதல் காண்க.

வீடினு ருலகினில் விழுமிய தொண்டர்கள்
கூடினு ரந்நெறி[1] கூடச் சென்றலும்[2]
ஓடினேன்[3] ஓடிச் சென்றுருவங் காண்டலும்[4]
நாடினேன்[5] நாடிற்று நமச்சிவாயவே[6]. 7

இல்லக விளக்கது விருள் கெடுப்பது[1]
சொல்லக விளக்கது சோதி யுள்ளது[2]
பல்லக விளக்கது பலருங் காண்பது[3]
நல்லக விளக்கது நமச்சிவாயவே[4]. 8

---

7. [1] அந்நெறி—வீட்டுநெறி. [2] சென்றலும்—செல்லவும்.

[3] ஓடினேன்—யானும் பின் சென்றேன்.

[4] ஓடித் தொடர்ந்து அவ்வழியின் இயல்பினை யறிந்ததும்.

[5] அதனை யடைதற்குச் சாதனமாகிய திருவைந்தெழுத்தினை விரும்பி நின்றுராய்ந்தேன்.

[6] அந்நிலையில் அவ்வைந்தெழுத்தே அருளால் என்னை நாடி யுய்யக் கொண்டது.

8. [1] மனைக்கண் உள்ள விளக்கு புறவிருளைக் கெடுப்பது.

[2] சொன்லின்கட் காணப்படும் விளக்கணி பொருட்டெளிவாகிய ஒளியைத் தருவது.

[3] பலவிடங்களிலும் ஒருபெற்றித்தாக ஒளிரும் ஞாயிற்று விளக்கம் பலரும் தம் கண்களாற் பொருள்களைக் காணுதற்கேற்ற கருவியாய் விளங்குவது.

[4] அவ்வாறே உள்ளத்திருளைக் கெடுத்துப் பொருள் விளக்கந் தந்து உயிரறிவை உடனின்று ஒளிரச்செய்யும் மனவிளக்காய் விளங்குவது திருவைந்தெழுத்தென்றவாறு.

விளக்கது என்பதன்கண் அது பகுதிப்பொருள் விகுதி. இவ்வாறன்றி அடிதோறும் 'விளக்கது' என்பதனைக் குறிப்பு வினை முற்றாக்கிப் பின் வரும் கெடுப்பது, சோதியுள்ளது, காண்பது என்பனவற்றை முறையே கெடுப்பதாந் தன்மை, ஒளியுடைமை, காண்பதற்கேற்ற தன்மை எனப் பொருள்கொண்டு பெயராக்கி முடித்தலும் உண்டு.

முன்னெறி யாகிய முதல்வன் முக்கணன்
தன்னெறியே சரணாதல் திண்ணமே
யந்நெறியே சென்றங் கடைந்தவர்க் கெலாம்
நன்னெறி யாவது நமச்சி வாயவே. 9

மாப்பிணை தழுவிய மாதோர் பாகத்தன்[1]
பூப்பிணை திருந்தடி[2] பொருந்தக் கைதொழ[3]
நாப்பிணை தழுவிய நமச்சிய வாயப்பத்
தேத்தவல் லார்தமக் கிடுக்க ணில்லையே.[4] 10

---

9. கருதத்தக்க சமயங்கள் பலவுந் தானேயாகிய முதல்வனும் முக்கட் செல்வனது திருவருள் நெறியே எவ்வுயிர்க்கும் பாதுகாவலாதல் உறுதியாம். அவ்வருள் நெறியே யொழுகிச் சார்ந்தாரனைவர்க்கும் நல்ல சாதனமாய் நின்று பயனளிப்பது திருவைந்தெழுத்தாம் என்பது இத் திருப்பாட்டின் பொருளாகும்.

10. [1] மாப்பிணை தழுவிய மாது—பெருமை மிக்க பெண்மானின் மருண்ட நோக்கத்தையுடைய உமையம்மையார்.

[2] வழிபாட்டின்கண் அருச்சித்த மலர்கள் செறிந்து விளங்கும் தூய திருவடி.

[3] உளம் பொருந்தக் கைகூப்பி வணங்குதல் வேண்டி.

[4] நாவினைப் பற்றுக் கோடாகக் கொண்டமைந்த நமச்சிவாயத் திருப்பதிகமாகிய இதனை இடைவிடாது ஏத்த வல்லார்க்கு எவ்வகை யிடையூறும் வருதலில்லை யென்பதாம்.

திருந்தடி பொருந்துதலாகிய உள்ளத்தின் செயற்கும், கைதொழுதலாகிய மெய்யின் செயற்கும் இன்றியமையாததாய் இடையே யமைவது திருவைந்தெழுத்தோதுதலாகிய நாவின் செயல என்பார் “ நாப்பிணை தழுவிய நமச்சிவாயப் பத்து ’ எனச் சிறப்பித்தருளினார்.

## திருப்பழனம்—பண்—பழந்தக்க ராகம்

சொன்மாலை பயில்கின்ற குயிலினங்காள் சொல்லீரே
பன்மாலை வரிவண்டு பண்மிழற்றும் பழனத்தான்
முன்மாலை நகுதிங்கள்முகிழ்[1] விளங்கு முடிச்சென்னிப்[2]
பொன்மாலை மார்பனென் புதுநலமுண் டிகழ்வானோ. 1

மண்பொருந்தி வாழ்பவர்[1]க்கு மாதீர்த்த வேதியர்[2]க்கும்
விண்பொருந்து தேவர்க்கும் வீடுபேறாய் நின்றானைப்
பண்பொருந்த விசைபாடும் பழனஞ்சே ரப்பனையென்
கண்பொருந்தும் போழ்தத்தும்[3] கைவிட நான்
கடவேனே. 5

வஞ்சித்தென் வளைகவர்ந்தான் வாரானே யாயிடினும்
பஞ்சிக்காற் சிறகன்னம் பரந்தார்க்கும் பழனத்தான்[1]
அஞ்சிப்போய்க் கலிமெலிய வழலோம்பும் அப்பூதி
குஞ்சிப்பூவாய் நின்ற சேவடியாய் கோடியையே.[2] 10

---

1\. திருப்பழனத்து இறைவனைக் காமுற்ற தலைவியொருத்தியின் கூற்றாக அமைந்தது இத்திருப்பதிகமாகும்.

[1]இரவின் முதற்பகுதியாகிய மாலைக்காலத்தே விளங்கும் திங்களின் அரும்பிய தோற்றமுடைய பிறை.

[2]முடிச்சென்னி—ஒருபொருளிருசொல்.

5\. [1]மண்பொருந்தி வாழ்பவர்—வையத்து வாழ்வாங்கு வாழும் இல்லறத்தார்.

[2]மாதீர்த்த வேதியர்—பெருமை மிக்க தீர்த்தத்துறைபடியும் துறவோராகிய வேதியர்.

[5]கண்பொருந்து போழ்தத்தும்-உறங்கும்பொழுதும். அத்துச்சாரியை.

10\. [1]என்னை வஞ்சித்து யான் தன் பிரிவினால் இளைக்கும்படி என் கைவளைகளைக் கவர்ந்துசென்ற என் ஆருயிர்த் தலைவன், என் உள்ளம் மகிழ என் பால் வாரானாயினும், பஞ்சினையொத்த மெத்தென்ற கால்களையும் சிறகினையுமுடைய அன்னங்கள் பரவி ஆரவாரிக்கும் வளமார்ந்த திருப்பழனம் என்னும் ஊரின்கண் எழுந்தருளியுள்ளான். அவன் வாரானாயினும் யானே அவ்வூர்க்குச்சென்று அப்பெருமானைக் கண்டு மகிழ்வேன் என்பது தலைவியின் உட்கோள்.

**தசபுராணம் - பண் - பழம்பஞ்சுரம்.**

பருவரை யொன்றுசுற்றி யரவங்கை விட்ட விமையோ
ரிரிந்து[1] பயமாய்த்
திருநெடுமால் நிறத்தை யடுவான் விசும்பு சுடுவா
னெழுந்த விசைபோய்ப்
பெருகிட மற்றிதற்கோர் பிதிகார[2]மொன்றை யருளாய்
பிரானே யெனலும்
அருள்கொடு மாவிடத்தை யெரியாம லுண்ட[3]
வவெண்டரண்ட ரரசே. 1

---

[2]இனி அக்கருத்துடன் திருப்பழனத்தை யடைந்த தலைவி பழனத் தலைவனை எதிர்முகமாக்கிக் கூறும் வேண்டுகோள் பின்னைய அடிகளில் அமைந்துள்ளது. பாவங்கள் அஞ்சி யகன்று அழியும் வண்ணம் வேள்வி யியற்றும் மேதகவுடைய அப்பூதியடிகளது திருமுடியின் கண்ணே யணியப்பெற்ற தாமரை மலராக விளங்கும் செம்மையான திருவடிகளையுடைய பெருமானே எளியேனை ஏற்றுக்கொள்வாயாக என்பது அவ்வேண்டுகோள். கலி அஞ்சிப்போய் மெலிய அழலோம்பும் அப்பூதி என இயைக்க. இனி 'கொடியையே' எனப் பாடங்கொள்ளின் 'இறைவனே நீ என்னை யருளாமையாற் பெரிதும் கொடுமையுடையவன் ஆயினை' எனத்தலைவி கூறியதாகப் பொருள் கூறுக.

1. சிவனது பழைமை குறித்த பத்து வரலாறுகளுள் நஞ்சுண்ட வரலாறு இத்திருப்பாடலிற் பேசப்படுகிறது.

[1]இரிந்து—ஓடி, [2]பிதிகாரம்—பரிகாரமாகிய மாற்று.

[3]உலக வுயிர்கள் நஞ்சினால் வெதும்பா திருத்தல் வேண்டித் தானே உண்ட அப்பெரியோன் எரியாமல்—வெதும்பாமல்

காலமு நாள்களூழி படையாமுனேக வுருவாகி
மூவருருவிற்
சாலவுமாகி மிக்க சமயங்களாறி
னுருவாகி நின்றதழலோன்[1]
ஞாலமு மேலை விண்ணோ டுலகேழுமுண்டு குறளா[2]யோ
ராலி னிலைமேற்
பாலனு மாயவற்[3]கோர் பரமாய மூர்த்தியவனும் நமக்கோர்
சரணே. 3

கடுகியதேர் செலாது கயிலாயமீது கருதேலுன்
வீரமொழிநீ
முடுகுவதன்று தன்ம[1] மெனநின்று பாகன் மொழிவானை
நன்று முனியா[2]
விடுவிடு[3]வென்று சென்று விரைவுற் றரக்கன் வரையுற்
றெடுக்க முடிதோள்
நெடுநெடு[4]விற்று வீழவிர லுற்ற பாதநினைவுற்ற
தென்றன் மனனே[5]. 11

---

3. [1]இறைவன் காலவரம்பினைக் கடந்து நிற்போன், எல்லாச் சமயங்கட்குந் தலைவன் என்பன முன்னிரண்டடிகளிற் குறிக்கப்பட்டன.

[2]குறளாய்—குறுகிய வடிவினனாகி. [3]பாலனும் ஆயவன்—திருமால்

11. [1]இராவணனுக்குத் தேர்ப்பாகன் கூறிய அறவுரை. கயிலாயமீது கடுகிய தேர் செலாது. உன் வீரம் கருதல் ஒழி, நீ முடுகுவது தன்மம் அன்று என மாறிக் கூட்டுக. முடுகுதல்—விரைந்து செலுத்துதல்

[2]நன்று முனியா—பெரிதும் சினந்து. நன்று என்பது பெரிதென்னும் பொருள்பட வந்த உரிச்சொல்.

[3]விடுவிடு என்பது தேர்ப்பாகனை நோக்கி இராவணன் கூறிய விரைவு மொழியாகும்.

[4]ஒலிக்குறிப்பு.

[5]என்றன் மனம் விரலுற்ற பாதம் நினைவுற்றது எனக் கூட்டுக.

## * பாவநாசத் திருப்பதிகம் - பண் - பழம்பஞ்சுரம்

பற்றற்றார்சேர் பழம்பதியைப் பாசூர் நிலாய பவளத்தைச்
சிற்றம்பலத்தெந் திகழ்கனியைத் தீண்டற்கரிய
திருவுருவை
வெற்றியூரில் விரிசுடரை விமலர்கோனைத் திரைசூழ்ந்த
ஒற்றியூரெம் உத்தமனை யுள்ளத்துள்ளே வைத்தேனே. 1

முந்தித்தானே முளைத்தானை[1] மூரி[2]வெள்ளே றூர்ந்தானை
யந்திச் செவ்வான் படி[3]யானை யரக்க[4]னாற்ற லழித்தானைச்
சிந்தை வெள்ளப் புனலாட்டிச் செஞ்சோன்மாலை யடிசேர்த்தி
யெந்தை பெம்மா னென்னெம்மா னென்பார்
பாவநாசமே. 11

---

*இறைவன் பெருமைகளை யிடைவிடாது ஓதுவார் பாவம் ஒழியும் வண்ணம் திருநாவுக்கரசர் பாடியருளுதலின் பாவநாசத் திருப்பதிகம் என இத்திருப்பதிகம் வழங்கப்பெறுகின்றது. "எந்தை பெம்மான் என்னெம்மான் என்பார் பாவம் நாசமே" என வரும் இப் பதிகத்து இறுதிப் பாடற்றொடரால் இப்பெயர்க் காரணம் உணர்த்தப்பெறுதல் காண்க.

11. [1]'முளைத்தானை யெல்லார்க்கு முன்னே தோன்றி' என்ற திருத்தாண்டகத் தொடர் ஈண்டு ஒப்பநோக்கத் தகுவது.

[2]மூரி — வன்மை. [3]படி — நிறம். [4]அரக்கன் — இராவணன்.

**திருவாரூர் - பண் - சீகாமரம்.**

காண்டலே கருத்தா நினைத்திருந்தேன் மனம்புகுந்தாய் கழலடி
பூண்டு கொண்டொழிந்தேன் புறம் போயினாலறையோ[1]
வீண்டுமாடங்க ணீண்டமாளிகை மேலெழுகொடி வானிளம்மதி
தீண்டி வந்துலவுந் திருவாரு ரம்மானே. 1

பூங்கழல் தொழுதும் பரவியும் புண்ணியா புனிதாவுன் பொற்கழல்
ஈங்கிருக்கப் பெற்றேன் என்ன குறையுடையேன்[1]
ஓங்கு தெங்கிலையார் கமுகிள வாழை மாவொடு மாதுளம்பல
தீங்கனி சிதறுந் திருவாரு ரம்மானே. 4

---

1. [1] நின்னைக் காணுதலையே குறிக்கோளாகக்கொண்டு நினைந்திருந்தேன். அந்நினைவின் வழி நீ என் மனத்தைக் கோயிலாகக்கொண்டு எழுந்தருளினாய். நின் திருவடிகளையே பற்றுக்கோடாகக்கொண்டு பாசப் பிணிப்பினின்றும் அறவே நீங்கினேன். என் மனத்தைவிட்டு நீ புறமே போவாயானால் யான் தரியேன். நினக்கு அடைக்கலமென முறையிடுகின்றேன். என நாவுக்கரசர் திருவாரூர்ப் பெருமானைப் போற்றிய திறம் ஓர்க, புறம் போயினால் தரியேன் என ஒரு சொல் வருவிக்க. அறையோ என்பது உயர்ந்தோர்பால் பரிந்து வேண்டும் முறையீட்டொலியாகும்.

4. [1] ஒரு சிறு குறையும் உடையே னல்லேன் என்பது கருத்து. குறை—முடிக்கவேண்டும் காரியம். "பயக்குறையில்லைத் தாம் வாழு நாளே" (புறம்—188) என்பது ஒப்பு நோக்கத் தக்கது.

பிறத்தலும் பிறந்தாற் பிணிப்பட வாய்ந்த சைந்துடலம்
புகுந்துநின்
றிறக்குமாறுள தே[1] யிழித்தேன் பிறப்பினை நான்
அறத்தையே புரிந்த மனத்தனாய் ஆர்வச் செற்றக்
குரோத நீக்கியுன்
திறத்தனா யொழிந்தேன்[2] திருவாரூ ரம்மானே. 8

நாடினார் கமலம் மலரய[1]னோடி ரணியன் ஆகங் கீண்டவன்[2]
நாடிக்காண மாட்டாத் தழலாய நம்பானைப்[3]
பாடுவார் பணிவார் பல்லாண்டிசை கூறுபத்தர்கள்
சித்தத்துள்புக்குத்
தேடிக்கண்டு கொண்டேன் திருவாரூரம்மானே. 10

---

8\. [1] உடலம் புகுந்து பிறத்தலும் பிறந்தால் பிணிப்பட உடலம் ஆய்ந்து அசைந்து நின்று இறக்குமாறும் உளதே என இயைத்து, ஐம்பூதக் கூட்டாவாகிய உடலிற் புகுந்து பிறத்தலும் அங்ஙனம் பிறந்த பின்னர் நோய் பற்றுதல் காரணமாக உடம்பு சுருங்கித் தளர்ந்து அதனை விட்டு இறக்கும் நிலையும் ஒருங்கமைந்துளதாதலின் இப்பிறவியை யிழிவுடையதென வெறுத்தேன் எனப் பொருள் கொள்க. இறக்கு மாறும் என உம்மை வருவித்துரைக்க. ‘உளதே’ என்னும் வினைக்கு இப்பிறப்பு என்பதனை எழுவாயாகக் கொள்க.

[2] நின் திருவருட்டிறத்தே சார்ந்து நின்று எனைய பற்றுக்களை விட்டொழிந்தேன்.

10\. [1] அயன்—பிரமன். [2]. இரணியன் ஆகம் கீண்டவன்—திருமால். இவ்விருவருந் தேடிக்காண வியலாத தீவண்ணனாகிய சிவபெருமானை அன்புடைத் தொண்டர்களின் உள்ளத்துட் புகுந்து தேடிக் கண்டு கொண்டேன் என்பது பொருள். “திருமாலொடு நான்முகனுந் தேடித் தேடொணாத் தேவனை யென்னுள்ளே தேடிக் கண்டுகொண்டேன்” எனவரும் அடிகள் அநுபவமொழி யீண்டு ஒப்பு நோக்கத் தக்கது. [3] நம்பன் நம்பான் என நீண்டது.

### *திருவாரூர்த் திருவாதிரைத் திருப்பதிகம் - பண் - குறிஞ்சி

முத்து விதானம்[1] மணிப்பொற் கவரி[2] முறையாலே
பத்தர்க ளோடு பாவையர் சூழப் பலிப்பின்னே
வித்தகக் கோல வெண்டலை மாலை விரதிகள்[3]
அத்த னாரூ ராதிரை நாளால் அதுவண்ணம்[4]. 1

நணியார்[1] சேயார்[2] நல்லார் தீயார் நாடோறும்
பிணிதான் தீரும் என்று பிறங்கிக் கிடப்பாரும்
மணியே பொன்னே மைந்தா மணாளா வென்பார்கட்
கணியா னாரூர் ஆதிரை நாளால் அதுவண்ணம். 2

துன்பம் நும்மைத் தொழாத நாள்கள் என்பாரும்
இன்பம் நும்மை யேத்து நாள்கள் என்பாரும்
நும்பின் எம்மை நுழையப் பணியே யென்பாரும்
அன்ப னாரூர் ஆதிரை நாளால் அதுவண்ணம். 9

---

* திருவாரூர்த் திருவாதிரை விழாவைக் கண்டு மகிழ்ந்து திருப்புகலூரை யடைந்த திருநாவுக்கரசர், தம்மை யெதிர்கொண்டு போற்றிய திருஞான சம்பந்தப்பிள்ளையார் வேண்டுகோட்கிணங்கித், திருவாதிரைத் திருவிழாவில் திருவாரூர் வீதிவிடங்கப் பெருமான், அடியார் சூழ்ந்து போற்றத் திருவுலாப் போந்த சிறப்பினை இத்திருப்பதிகத்தால் திருவாய் மலர்ந்தருளினமையின் இது திருவாதிரைத் திருப்பதிகம் என வழங்கப் பெறுகின்றது.

1. [1] விதானம்—மேற்கட்டி. [2] கவரி—சாமரை.
[3] விரதிகள்—மாவிரத சமயத்தார்; சைவரில் ஒரு சாரார்.
[4] ஆதிரை நாளின் வண்ணம் அதுவெனச் சொன்முடிபு கொள்க.

2. [1] அண்மையிலிருப்பவர். [2] தூரதேயத்தினர்.

9. நும்மைத் தொழாத நாள்கள் துன்பமாம் என்பாரும், நும்மை ஏத்தும் நாள்கள் இன்பமாம் என்பாரும் ஆக, அடியார் பலர் குழுமியது ஆதிரை நாளின் சிறப்பென்றவாறு.

பாரூர் பௌவத் தானைப் பத்தர் பணிந்தேத்தச்
சீரூர் பாட லாடலறாத செம்மாப்பார்ந்[1]
தோரூ ரொழியா துலக மெங்கு மெடுத்தேத்தும்
ஆரூ ரன்ற னாதிரை நாளா லதுவண்ணம். 10

### திருவதிகை - வீரட்டானம் - திருநேரிசை

நம்பனே யெங்கள் கோவே நாதனே ஆதிமூர்த்தி
பங்கனே[1] பரமயோகி யென்றென்றே பரவிநாளும்
செம்பொனே பவளக்குன்றே திகழ்மலர்ப்
பாதங்காண்பான்
அன்பனே யலந்துபோனேன்[2] அதிகை வீரட்டனீரே. 1

அஞ்சினால்[1] இயற்றப்பட்ட ஆக்கைபெற் றதனுள்வாழும்
அஞ்சினால்[2] அடர்க்கப்பட்டிங் குழிதரு மாதனேனை[3]
யஞ்சினால்[4] உய்க்கும் வண்ணங் காட்டினாய்க்
கச்சந்தீர்ந்தேன்
அஞ்சினாற் பொலிந்த சென்னி[5] யதிகை வீரட்டனீரே. 5

---

10. [1] செம்மாப்பு—உவகையொடு கலந்து தோற்றும் பெருமிதம். ஆர்ந்து—நிறையப்பெற்று.

1. [1] பங்கன்—உமையொருபாகத்தன்.
[3] அலந்துபோனேன்—நெடிது வருந்தினேன்.
போதல்—நெடுமை.

5. [1] அஞ்சு—ஐம்பூதம், [2] அதனுள் வாழும் அஞ்சு என்றது உடம்பின்கண் அமைந்த ஐம்பொறிகளை. [3] ஆதனேனை—குருடனாகிய எளியேனை.
[4] ஐந்தினால்—திருவைந்தெழுத்தினால்.
[5] அஞ்சினாற் பொலிந்த சென்னி யென்றது, பொலிவு பெற்று விளங்கும் இறைவனுடைய ஐந்து திருமுகங்களையும். அஞ்சு—ஐந்து, போலி.

## திருவையாறு - திருநேரிசை

கங்கையைச் சடையுள் வைத்தார் கதிர்ப்பொறி
யரவும் வைத்தார்
திங்களைத் திகழ வைத்தார் திசை திசை தொழவும்
வைத்தார்
மங்கையைப் பாகம் வைத்தார் மான்மறி[1] மழுவும்
வைத்தார்
அங்கையுள் அனலும் வைத்தார் ஐயன்ஐ யாறனாரே. 1

இரப்பவர்க் கீயவைத்தார் ஈபவர்க் கருளும் வைத்தார்
கரப்பவர் தங்கட்கெல்லாம் கடுநரகங்கள் வைத்தார்
பரப்புநீர் கங்கைதன்னைப் படர்சடைப் பாகம்வைத்தார்
அரக்கனுக் கருளும் வைத்தார் ஐயன்ஐ யாறனாரே. 10

---

1, [1] மான்மறியும் என உம்மை விரித்துரைக்க.

10. இத்திருப்பாடலில் ஈதலின் நன்மையையும் ஈயாது மறைத்தலின் தீமையையும் இறைவன் திருவருளுடன் இயைபுபெறக் கூறிய திறம் ஓர்க.

### திருஒற்றியூர் - திருநேரிசை

ஓம்பினேன் கூட்டை வாளா வுள்ளத் தோர்கொடுமை
வைத்துக்[1]
காம்பிலா மூழை[2]போலக் கருதிற்றே முகக்க மாட்டேன்[3]
பாம்பின்வாய்த் தேரைபோலப் பலபல நினைக்கின்றேனை[4]
யோம்பிநீ யுய்யக்கொள்ளாய் ஒற்றியூ ருடைய கோவே. 1
மனமெனுந் தோணிபற்றி மதியெனுங் கோலை[1]யூன்றிச்
சினமெனுஞ் சரக்கை[2]யேற்றிச் செறிகட லோடும்போது
மத[3]னெனும் பாறைதாக்கி மறியும்போ தறியவொண்ணா
துனையுனு முணர்வை நல்காய் ஒற்றியூ ருடைய கோவே. 2

### திருவிராமேச்சரம் - திருநேரிசை

பாசமுங் கழிக்ககில்லா[1] அரக்கரைப் படுத்து[2]த்தக்க
வாசமிக் கலர்கள்[3]கொண்டு மதியினான் மால்[4]செய் கோயில்
நேசமிக் கன்பினாலே நினைமின்நீர் நின்றுநாளுந்
தேசமிக் கான்இருந்த திருவிரா மேச்சு ரமே, 1

---

1. [1] உள்ளத்து ஓர் கொடுமைவைத்துக் கூட்டை வாளா ஓம்பினேன் என இயைத்துரைக்க. கூடு—உடம்பு. வாளா ஓம்பினேன்—ஒரு பயனுமின்றி வீணே பாதுகாத்தேன்.
[2] காம்பு செறிக்கப்பெறாத அகப்பை.
[3] காம்பில்லாத அகப்பை குழம்பு முதலியவற்றை முகத்தற்கு ஏற்புடையதாகாமைபோல யானும் எத்தகைய பயனையும் கருதியவாறு அடைதற்குரிய வாய்ப்புடையேனல்லேன் என்பது கருத்து.
[4] பாம்பின் வாயிலகப்பட்ட தேரை நிறைவேறாதவற்றை எண்ணினாற்போல யானும் ஆகாத காரியங்களை எண்ணியழிகின்றேன் என்பதாம்.

2. [1] கோல்—ஓடக்கோல். [2] சரக்கு—பண்டம்.
[3] மதன்—காமவுணர்வு. இப்பாடல் உருவக அணி.

1. [1] பாசத்தொடர்பினை நீக்குதற்குரிய ஆற்றலில்லாத.
[2] படுத்து—கொன்று.
[3] வாசம் மிக்க அலர்கள், பெயரெச்சத்து அகரம் தொக்கது.
[4] மால்—திருமால் அவதாரமாகிய இராமபிரான்,
இராமன் எடுத்த திருக்கோயில் ஆதலின் இராமேச்சரம் எனப் பெயர் பெற்றது.

கோடிமா தவங்கள் செய்து குன்றினார்[1] தம்மை யெல்லாம்
வீடவே[2] சக்கரத்தா லெறிந்து பின்னன்பு கொண்டு
தேடிமால் செய்தகோயில் திருவிரா மேச்சரத்தை
நாடிவாழ் நெஞ்சமேநீ நன்னெறி யாகுமன்றே. 9

### திருநனிபள்ளி - திருநேரிசை

பண்ணினார் பாட லாகிப் பழத்தினி லிரத மாகிக்
கண்ணினார் பார்வை யாகிக் கருத்தொடு கற்ப மாகி
யெண்ணினார் எண்ண மாகி யேழுல கனைத்து மாகி
நண்ணினார் வினைகள் தீர்ப்பார் நனிபள்ளி யடிக ளாரே. 4

துஞ்சிருள் காலை மாலை தொடர்ச்சியை மறந்தி ராதே
யஞ்செழுத் தோதி னாளும் அரனடிக் கன்ப தாகும்
வஞ்சனைப் பாற்சோ றாக்கி வழக்கிலா அமணர் தந்த
நஞ்சமு தாக்கு வித்தார் நனிபள்ளி யடிக ளாரே. 5

---

9. [1] குன்றினார்—பிறன்மனை விழைதல் முதலிய தீமை மேற்கொண்டு ஒழுக்கத்திற்குறைந்தார்.
"குன்றினனையாருங்குன்றுவர் குன்றுவ
குன்றியனையசெயின்" என்பது பொதுமறை., குன்றுதல்—குறைதல்.
[2] வீட—இறக்க.

5. திருநாவுக்கரசர்க்குப் பாலில் நஞ்சுகலந்து சமணர் ஊட்டியபொழுது அரசர் அந்நஞ்சினையே அமுதாக உட்கொண்டு இறைவன் திருவருளால் உய்ந்தனர் என்பதனை இத்திருப்பாடல் அகச்சான்றாய் நின்று விளக்குதல் காண்க.

## தனித் திருநேரிசை

கள்ளனேன் கள்ளத் தொண்டாய்க் காலத்தைக்
கழித்துப் போக்கித்
தெள்ளியே னாகி நின்று தேடினேன் நாடிக் கண்டேன்
உள்குவார் உள்கிற்றெல்லாம் உடனிருந் தறிதி[1]யென்று
வெள்கினேன்[2] வெள்கி நானும் விலாவிறச்
சிரித்திட் டேனே[3]. 3

உடம்பெனும் மனையகத்துள் உள்ளமே தகளி[1]யாக
மடம்படும் உணர்நெய்[2]யட்டி[3] யுயிரெனுந் திரிமயக்கி
இடம்படு ஞானத் தீயால்[4] எரிகொள விருந்து நோக்கிற்[5]
கடம்பமர் காளை[6]தாதை[7] கழலடி காண லாமே. 4

அங்கத்தை மண்ணுக் காக்கி[1] யார்வத்தை யுனக்கே தந்து
பங்கத்தைப்[2] போக மாற்றிப் பாவித்தேன் பரமா நின்னைச்
சங்கொத்த மேனிச் செல்வா[3]சாதல்நாள் நாயேன் உன்னை
யெங்குற்றாய் என்ற போதா விங்குற்றே
னென்[4]கண்டாயே. 8

---

3. [1] நினைப்பார் நினைக்கும் எண்ணங்களையெல்லாம் உயிர்க்குயிராய் உடனிருந்து அறிகின்றாய்.
[2] வெள்கினேன்—நாணினேன்.
[3] விலாவொடியச் சிரித்தேன். இறைவனது நீக்கமற நிறைந்த இயல் பினையுணராத பேதைமையே இந் நகைச்சுவைக்குப் பொருளாய் நிற்றலின் இது தனகட்டோன்றிய பேதைமைபற்றி யெழுந்த நகையாகும்.

4. [1] அகல். [2] அறியாமையை நீக்கவல்ல உயிரறிவாகிய நெய்.
[3] அட்டி—நிறைத்து. தம்மிடத்தே திருவருளாற் றோன்றுகின்ற மெய்யுணர்வாகிய தீ. [5] இருந்து நோக்குதல்—உயிர்ப்பினை யடக்கி ஒருமை நிலையிலிருந்து உள்ளத்தால் நோக்குதல்.
[6] முருகன். [7] தந்தை; என்றது சிவபெருமானை.

8. [1] உடம்பினை மண்ணின்கண் மாய்ந்தொழியும் வண்ணம் வெறுத்து. அங்கம்—உடம்பு. [2] பங்கம்—குற்றம்.
[3] திருநீறணிந்த திருமேனிக்கு நிறத்தால் சங்கு உவமையாயிற்று.
[4] நீ எங்குள்ளாய் என்று நான் தேடும்பொழுதாக நான் இங்குள்ளேன் என எனக்கு அறிவித்தருள்வாயாக. என்—என்று கூறுவாயாக. கண்டாய், அசை.

மெய்ம்மையாம் உழவைச் செய்து விருப்பெனும்
வித்தை வித்திப்
பொய்ம்மையாங் களையை வாங்கிப் பொறையெனும்
நீரைப் பாய்ச்சித்
தம்மையும் நோக்கிக் கண்டு தகவெனும் வேலி யிட்டுச்
செம்மை[1]யுள் நிற்ப ராகிற் சிவகதி விளையு மன்றே. 12

காயமே[1] கோயி லாகக் கடிமனம்[2] அடிமை யாக
வாய்மையே தூய்மை யாக[3] மனமணி யிலிங்க மாக
நேயமே நெய்யும் பாலா நிறையநீர் அமைய ஆட்டிப்[3]
பூசனை யீசனார்க்குப் போற்றவி[4]க் காட்டி னோமே[5]. 14

விளக்கினார்[1] பெற்ற இன்பம் மெழுக்கினாற் பதிற்றி யாகும்[2]
துளக்கில்நன் மலர்[3]தொடுத்தால் தூயவிண் ணேற லாகும்
விளக்கிட் டார் பேறு சொல்லின் மெய்ந்நெறி ஞான மாகும்
அளப்பில கீதஞ் சொன்னார்க் கடிகள் தாம்
அருளுமாறே[4]. 23

---

12. இத்திருப்பாடலில் சிவப்பயிர் விளைத்தற்குத் தொண்டவழவாகிய திருநாவுக்கரசர் அருளிய உழவுமுறை நினைந்து மேற்கொள்ளத்தக்கது.
[1] செம்மை—நடுவுநிலைமை.

14. [1] காயம்—உடம்பு.
[2] கடிமனம்—தீயவை யுட்புகாது காக்கப்பெற்ற உள்ளம். [3] நேயமே நெய்யும் பாலுமா அமைய நிறைய நீராட்டி எனக் கொண்டு கூட்டுக.
[4] போற்று அவி—தற்போதம் நீங்கி அருச்சித்துப் போற்றுதலொன்றே இறைவற்குத் திருவமுதா மென்பது கருத்து. [5] காட்டுதல்—அறிவித்தல். நிவேதனம் என்பதற்கும் இதுவே பொருள்.

23. [1] திருவலகிடுவோர். [2] பத்துமடங்கு மிகுதியாகும்.
[3] கெடாத நன்மலர். [4] அளவில்லாத இசைப்பாடல்களாற் போற்றியவர்க்கு நல்குதற்குரிய பரிசிற்பொருள் இறைவரேயன்றிப் பிறிதொன்றன்று என்பதாம். கீதம் சொன்னார்க்கு அடிகள்தாம் அருளுமாறு அளப்பில என முடிப்பினும் அமையும்.

புள்ளுவர் ஐவர் கள்வர்[1] புனத்திடைப் புகுந்து நின்று
துள்ளுவர் சூறைகொள்வர் தூநெறி விளைய வொட்டார்
முள்ளுடை யவர்கள் தம்மை முக்கணான் பாத நீழல்
உள்ளிடை மறைந்துநின் றங் குணர்வினால் எய்யலாமே. 25

### கோயில் : திருவிருத்தம்

ஒன்றி யிருந்து நினைமின்கள் உந்தமக் கூனமில்லைக்
கன்றிய காலனைக் காலாற் கடிந்தான் அடியவற்காச்
சென்று தொழுமின்கள் தில்லையுட் சிற்றம் பலத்துநட்டம்
என்றுவந் தாயென்னும் எம்பெரு மான்றன்
திருக்குறிப்பே. 2

---

25. [1] புள்ளுவர்—வேடர். பொறிகள் ஐந்தையும் ஐவர் என்றார். உயிர்கள் பெறும் நலங்களையெல்லாம் இடைநின்று தடுத்துப் பறித்தலாற் கள்வர் என்றார். "ஐம்புலவேடரின் அயர்ந்தனை" எனவரும் சிவஞானபோத நூற்பா இங்கு ஒப்புநோக்குதற்குரியது.
[2] இப்பாடலின் பின்னிரண்டடிகளால் பொறியடக்கமாகிய தவத்திற்கு உபாயங் கூறுதல் காண்க.

2. அடியவற்கா(க)க் கன்றியகாலனைக் காலாற்கடிந்தானது நட்டத்தைத் தில்லையுட் சிற்றம்பலத்துச் சென்றுதொழுமின்கள் (அந்நிலையில்) என்று வந்தாய் என்னும் எம்பெருமான் தன் திருக்குறிப்பை (உள்ளம்) ஒன்றி யிருந்து நினைமின்கள். (அங்ஙனம் நினைவீராயின்) உந்தமக்கு ஊன மில்லையாம் என இயைத்துப் பொருள்கொள்க. அடியவன் என்றது மார்க்கண்டேயனை. ஊனம்—குறை.

குனித்த புருவ[1]முங் கொவ்வைச்செவ் வாயிற்
குமிண்சிரிப்பும்[2]
பனித்த சடை[3]யும் பவளம்போன் மேனியிற்
பால்வெண் ணீறும்
இனித்த முடைய எடுத்தபொற் பாதமும்[4]
காணப்பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவதே யிந்த மாநிலத்தே. 4

வாய்த்தது நந்தமக் கீதோர் பிறவி மதித்திடுமின்
பார்த்தற்குப் பாசு பதமருள் செய்தவன் பத்தருள்ளீர்
கோத்தன்று முப்புரந் தீவளைத் தான்தில்லை யம்பலத்துக்
கூத்தனுக் காட்பட்டி ருப்பதன் றோநந்தங்
கூழைமையே[1]. 5

---

4. வளைந்த புருவம். [2] அரும்பிய புன்முறுவல்.
[3] ஈர்ஞ்சடை. [4] தூங்கியதிருவடி.
கூத்தப்பிரானது திருக்கோலத்தைக் காணும்பேறு வாய்த்தால் அறிஞர்களால் சுமையென்று வெறுக்கத்தக்க இப்பிறவியும் விரும்பி யேற்றுக் கொள்ளப்பெறும் சிறப்புடையதாகும் என்பது கருத்து.

5. பத்தருள்ளீர் நந்தமக்கு ஈது ஓர் பிறவி (எதிர்பாராத வகையில் வந்து) வாய்த்தது. இதனை மிகச் சிறந்ததாக எண்ணி மதித்திடுமின் என்க.
[1] அடித்தொண்டு.

## திருப்பாதிரிப்புலியூர் - திருவிருத்தம்

ஈன்றாளு மாயெனக் கெந்தையு மாயுடன் தோன்றினராய்
மூன்றா யுலகம் படைத்துகந் தான் மனத் துள்ளிருக்க
ஏன்றான்[1] இமையவர்க் கன்பன் திருப்பாதிரிப்புலியூர்த்
தோன்றாத் துணையா யிருந்தனன் தன்னடி
யோங்களுக்கே. 1

விடையான் விரும்பி யென்னுள்ளத் திருந்தான்
இனிநமக்கிங்
கடையா அவலம் அருவினை சாரா நமனையஞ்சோம்
புடையார் கமலத் தயன்போல் பவர்பா திரிப்புலியூர்
உடையான் அடியார் அடியடி யோங்கட் கரியதுண்டே. 3

கருவாய்க் கிடந்துன் கழலே நினையுங் கருத்துடையேன்
உருவாய்த் தெரிந்துன்றன் நாமம் பயின்றேன்
உனதருளால்
திருவாய் பொலியச் சிவாய நமவென்று நீறணிந்தேன்
தருவாய் சிவகதி நீபா திரிப்புலி யூரரனே. 6

---

1. திருவைந்தெழுத்தினையே புணையாகக்கொண்டு கடலிலிருந்து திருப்பாதிரிப்புலியூரிற் கரையேறியுய்ந்த திருநாவுக்கரசர், தமக்குத் தோன்றாத் துணையாய் விளங்கிய திருப்பாதிரிப்புலியூர்ப்பெருமானை உளங்கனிந்து போற்றிய திருப்பதிகம் இதுவாகும். [1] ஏற்றுக்கொண்டருளினான்.

3. [1] இறைவனடியார்க்கு அடித்தொண்டுபட்ட எம்மனோர்க்கு செய்தற்கரியது எதுவுமில்லை. எல்லாம் எளிதின் இயல்வனவே என்பது கருத்து.

6. இத்திருப்பாடலில் உள்ளங்கசிந்து ஓதும் முறையில் திருவைந்தெழுத்தின் உருஅமைந்திருத்தல் காண்க.

புழுவாய்ப் பிறக்கினும் புண்ணியா வுன்னடி யென்மனத்தே
வழுவா திருக்க வரந்தர வேண்டுமிவ் வையகத்தே
தொழுவார்க் கிரங்கி யிருந்தருள் செய்பா திரிப்புலியூர்ச்
செழுநீர்ப் புனற்கங்கை செஞ்சடை மேல்வைத்த
தீவண்ணனே. 8

## திருவேகம்பம் - திருவிருத்தம்

ஓதுவித் தாய்முன் அறவுரை காட்டி அமணரொடே[1]
காதுவித்தாய்[2] கட்டநோய் பிணிதீர்த்தாய்[3] கலந்தருளிப்
போதுவித்தாய்[4] நின் பணிபிழைக் கிற்புளி யம்வளாரால்
மோதுவிப் பாய்உகப் பாய்முனி வாய்கச்சி யேகம்பனே. 1

கருவுற்ற நாள்முத லாகவுன் பாதமே காண்பதற்கு
உருகிற்றெ னுள்ளமும் நானுங் கிடந்தலந்
தெய்த் தொழிந்தேன்
திருவொற்றி யூரா திருவால வாயா திருவாரூரா
ஒருபற்றி லாமையுங் கண்டிரங்காய் கச்சி யேகம்பனே. 6

---

1. [1] இளமைப் பருவத்தில் சமணர்கள் கூறும் அறவுரைகளில் தம்முள்ளத்தை யீடுபடுத்தி அவரொடு பழகச்செய்தது இறைவன் திருவருளே யென்பது கருத்து. [2] கடிய சூலை நோயினால் என்னை வருத்தினாய். [3] சூலை நோயினைத் தீர்த்தருளினாய். [4] என்னுயிரோடு ஒற்றித்துக் கலந்து நின்று நின் திருவருள் நெறியில் எம்மைப் புகச்செய்தாய்.

6. [1] அலந்து—வருந்தி, எய்த்து—இளைத்து.

## திருவின்னம்பர் - திருவிருத்தம்

மன்னு மலைமகள் கையால் வருடின மாமறைகள்
சொன்ன துறைதொறுந் தூப்பொரு ளாயின[1] தூக்கமலத்
தன்ன வடிவின அன்புடைத் தொண்டர்க் கமுதருத்தி
இன்னல் களைவன இன்னம்ப ரான்[2]றன் இணையடியே. 1

போற்றுந் தகையன பொல்லா முயலகன் கோபப்புன்மை
யாற்றுந் தகையன வாறு சமயத் தவரவரைத்
தேற்றுந் தகையன தேறிய தொண்டரைச் செந்நெறிக்கே
ஏற்றுந் தகையன[1] வின்னம்ப ரான்றன் இணையடியே. 7

## திருப்புகலூர் - திருவிருத்தம்

தன்னைச் சரணென்று தாளடைந்தேன் றன்னடி யடையப்
புன்னைப் பொழிற்புக லூரண்ணல் செய்வன
கேண்மின்களோ
என்னைப் பிறப்பறுத் [1]தென்வினை கட்டறுத் தேழ்நரகத்
தென்னைக் கிடக்க லொட்டான்[2] சிவலோகத்
திருத்திடுமே. 1

---

1. இறைவன் திருவருளாகிய திருவடிச் சிறப்பினை விளக்குந் திருப்பதிகம்.
[1] தூப்பொருள்—பற்றுக்கோடாய் நின்று உதவும் பொருள்.
தூ—பற்றுக்கோடு.
[2] இன்னம்பரான்—திரு இன்னம்பர் என்னும் பதியில் எழுந்தருளிய இறைவன்.

7. [1] பல்வகைச் சமயங்களிலும் நின்றொழுகி உள்ளந் தெளிவடையப்பெற்ற மெய்யடியார்களைச் செந்நெறி யெனப்பெறும் வீட்டு நிலையில் இசைவிப்பது இறைவன் திருவருளே யென்பதாம்.

1. [1] என்னைப் பிறப்பறுத்து—என்னைப்பற்றிய பிறவி நோயையகற்றி.
[2] கிடக்கல் ஒட்டான்—கிடத்தற்கு உளம்பொருந்தான்.

பொன்னை வகுத்தன்ன மேனியனே புணர் மென்முலையாள்
தன்னை வகுத்தன்ன பாகத்தனே தமியேற் கிரங்காய்
புன்னை மலர்த்தலை வண்டுறங்கும் புகலூ ரரசே
என்னை வகுத்திலை யேலிடும் பைக்கிடம் யாதுசொல்லே[1]. 2

**திருத்தூங்கானைமாடம் - திருவிருத்தம்**

பொன்னார் திருவடிக் கொன்றுண்டு விண்ணப்பம் போற்றிசெய்யும்
என்னாவி காப்பதற் கிச்சையுண் டேலிருங் கூற்றகல
மின்னாரு மூவிலைச் சூலமென் மேற்பொறி மேவுகொண்டல்
துன்னார் கடந்தை[1]யுள் தூங்கானை மாடச்[2] சுடர்க்கொழுந்தே. 1

கடவுந் திகிரி கடவா தொழியக் கயிலை யுற்றான்
படவுந் திருவிர லொன்றுவைத் தாய்பனி மால் வரைபோல்
இடபம் பொறித் தென்னை யேன்று கொள்ளா யிருஞ் சோலைதிங்கள்
தடவுங் கடந்தையுள் தூங்கானை மாடத்தெந் தத்துவனே. 10

---

2. [1] யானொருவனே இடும்பைகட்கெல்லாம் கொள்கலமாகக்கிடந்து வருந்துகின்றேன் என்பதாம்.

10. சமண சமயத் தொடர்புடைய உடலுடன் உயிர் வாழப்பொருந்து திருநாவுக்கரசர், தம்மை யாட்கொண்டு தூய்மை செய்தற்குரிய அடையாளமாக இறைவனது இலச்சினைகளாகிய சூலப்பொறி இடபப்பொறி யென்பவற்றைத் தம் உடலிற் பொறித்தருளும்படி திருத்தூங்கானை மாடத்து இறைவனை இத்திருப் பாடல்களால் வேண்டிக்கொள்கின்றார். [1] பெண்ணாகடம் கடந்தையென மரூஉவாய் நின்றது. [2] ஒரு யானை தூங்குவது போன்ற அமைப்பில் பெண்ணாகடத்திலுள்ள திருக்கோயில் அமைக்கப்பட்டமையின் அது தூங்கானை மாடமென வழங்கப்பெற்றது.

# ஐந்தாந் திருமுறை

## கோவில் - திருக்குறுந்தொகை

அன்னம் பாலிக்குந்[1] தில்லைச் சிற்றம்பலம்
பொன்னம்[2] பாலிக்கு மேலுமிப் பூமிசை
யென்னன் பாலிக்குமாறு[3] கண்டின்புற
இன்னம் பாலிக்கு மோவிப் பிறவியே. 1

அல்லல்[1] லென்செயும் அருவினை[2] யென்செயும்
தொல்லை வல்வினைத் தொந்தந்[3]தா னென்செயுந்
தில்லை மாநகர்ச் சிற்றம் பலவனார்க்
கெல்லை யில்லதோ ரடிமைபூண் டேனுக்கே. 4

ஊனில் ஆவி யுயிர்க்கும் பொழுதெலாம்
நான் நிலாவி யிருப்ப னென் னாதனைத்[1]
தேன் நிலாவிய சிற்றம் பலவனார்
வான் நிலாவி யிருக்கவும் வைப்பரே. 5

---

1. தில்லைச்சிற்றம்பலம் தன்னை வணங்குவார்க்கு நல்லுணவாகிய அன்னம் பாலிக்கும். இவ்வுலகிற் பொன்னும் தரும். இத்தகைய அருள் நிலையத்தை மேலும் மேலும் என் அன்பு மிகுந்து பொங்கும் வண்ணம் கண்டு மகிழ்தற்குரிய வாய்ப்பினை இப்பிறவி இன்னும் மேன்மேலும் நல்குமோ? அக்காட்சியினையே பெரிதும் விரும்புகின்றேன் என்பது கருத்து.

[1] பாலிக்கும்—நிறையத்தரும். [2] பொன்—பொன்னம் என அம்சாரியை பெற்றது. [3] ஆவிக்குமாறு—மிகுந்து சுரக்கும் வண்ணம்.

4. [1] அல்லல்—நிகழ்காலத்திலுளவாகும் நுகர்வினைத் துன்பங்கள்.
[2] அருவினை—எதிர் காலத்தில் உளவாகும் துன்பங்கள். [3] தொல்லை வல்வினைத் தொந்தம்—பழைய வல்வினைத் தொடர்பு. மூவகைக் கன்மங்களும் கடவுள் வழிபாட்டால் பொன்றக் கெடுதல் கூறியவாறு.

5. [1] உடலில் பிராணவாயுவாகிய மூச்சு இயங்குந்தோறும் யான் எம்பிரானைக் கூடி நிற்பேன் என்றது, அப்பெருமான் என்னுயிர்ப்பிற் பிரிவின்றி நிற்கின்றான் என விளக்கியவாறும்,

## திருவீழிமிழலை - திருக்குறுந்தொகை

என்பொ னேயிமை யோர்தொழு பைங்கழல்
நன்பொ னேநலந் தீங்கறி வொன்றிலேன்
செம்பொ னேதிரு வீழி மிழலையுள்
அன்ப னேயடி யேனைக் குறிக்கொளே[1].

கண்ணி னாற் களி கூரக்கை யாற்றொழு
தெண்ணு மாறறி யாதிளைப் பேன்றனை
விண்ணு ளார்தொழும் வீழி மிழலையுள்
அண்ண லேயடி யேனைக் குறிக்கொளே. 2

ஞால மேவிசும் பேநலந் தீமையே
காலமே[1] கருத் தேகருத் தாற்றொழுஞ்
சீல மேதிரு வீழி மிழலையுட்
கோல மேயடி யேனைக் குறிக்கொளே. 3

---

1. [1] குறிக்கொள்—கருத்துடன் பாதுகாத்தருள்க.
2. இளைப்பேன்றனை, அடியேனைக் குறிக்கொள் எனக்கூட்டுக.
3. [1] "ஞாலமே விசும்பே யிவைவந்து போங் காலமே" என்னுந் திருவாசகப் பகுதி இங்கு ஒப்புநோக்குதற் குரியது.

## திருவிடைமருதூர் - திருக்குறுந்தொகை

பாச மொன்றில ராய்ப்பல பத்தர்கள்
வாச நாண்மலர் கொண்டடி வைகலும்
ஈசன் எம்பெரு மானிடை மருதினிற்
பூசம் நாம்புகு தும்புன லாடவே[1]. 1
இம்மை[1] வானவர் செல்வம் விளைத்திடும்
அம்மை[2]யேற் பிற வித்துயர் நீத்திடும்
எம்மை யாளும் இடைமரு தன்கழல்
செம்மையே தொழுவார் வினை சிந்துமே. 4
கனியி னுங்கட்டி பட்ட கரும்பினும்
பனிம லர்க்குழற் பாவைநல் லாரினுந்
தனிமுடி கவித் தாளு மரசினும்
இனியன் தன்னடைந் தார்க்கிடை மருதனே. 10

---

1. [1] கி. பி. ஏழாம் நூற்றாண்டில் பூசநாளில் தீர்த்தவிழா இடைமருதிற் கொண்டாடப் பெற்றதென்பதும், திருநாவுக்கரசர் அவ்விழாவிற் கலந்துகொண்டனரென்பதும் 'பூசம் நாம் புகுதும் புனலாட' என நாவுக்கரசர் கூறுமாற்றால் புலனாம்.

4. [1] இப்பிறப்பு. [2] வரும்பிறப்பு.

10. நுகருங்கால் விதை தோல் முதலிய ஒதுக்கப்படுபொருளுடைய கனியினும் முழுதும் இனிமைதரும் வெல்லக்கட்டி சிறப்புடையதாம், நாவென்னும் பொறியொன்றற்கேயுரிய அக்கட்டியினும் கண்டு கேட்டு உண்டு உயிர்த்து உற்று அறியும் ஐம்புல வின்பமும் ஒருங்குடைய பாவை நல்லார் மிக இனியராவர். அவ்வைம்புல நுகர்ச்சிதானும் அரசன் காவலானன்றி மக்களால் அமைதியுற நுகரப்பெறாமையின் அவற்றை நுகர்வித்து அமைதியளிக்கும் முடிவேந்தன் பாவை நல்லாரினும் மிக இனியனாவன். மன்னன் தன்னால் ஆளப்படும் குடிமக்களுக்கன்றி ஏனைய மன்னுயிர்கட்கும் ஒப்ப நலஞ்செய்ய இயலாமையின் அங்ஙனம் வேண்டுதல் வேண்டாமையின்றி யாண்டும் எவ்வுயிர்க்கும் ஒருபெற்றித் தாகத் திருவருள் சுரக்கும் இறைவன், மலர்தலை யுலகிற்கு உயிரெனச் சிறந்த மன்னனினும் மிகமிக இனியனாவன். அரசன் அறக்காவலினும் இறைவன் அருட்காவல் என்றும் இன்றியமையாததாய் முன்னிற்கு மியல்புடையதென்பதனை இத்திருப்பாடல் இனிது விளக்குதல் உணர்ந்து மகிழ்தற்பாலது. இறைவன் உயிர்க்குயிராய் நின்று இனிமை தருதல் பற்றியே 'என்னினும் இனியான்' என அரசர் மற்றொரு பாடலிலும் போற்றி மகிழ்வர்.

## திருக்கடம்பூர் - திருக்குறுந்தொகை.

தளருங் கோளர வத்தொடு தண்மதி
வளருங் கோல வளர்சடை யார்க்கிடங்
கிளரும் பேரிசைக் கின்னரம் பாட்டறாக்
களருங் கார்க்கடம் பூர்க்கரக் கோயிலே[1]. 1

குணங்கள் சொல்லியுங் குற்றங்கள் பேசியும்
வணங்கி வாழ்த்துவ ரன்புடை யாரெலாம்
வணங்கி வான்மலர் கொண்டடி வைகலும்
கணங்கள்[1] போற்றிசைக் குங்கரக் கோயிலே. 6

நங்க டம்பனைப்[1] பெற்றவள் பங்கினன்
தென்க டம்பைத்[2] திருக்கரக் கோயிலான்
தன்க டன்னடி யேனையுந் தாங்குதல்
என்க டன்பணி செய்து கிடப்பதே. 9

---

1. [1] கடம்பூர்-ஊர்ப்பெயர். கரக்கோயில்-கோயிற்பெயர். தேர்போன்றமைந்த திருக்கோயில் கரக்கோயில் எனப்படும். சக்கரக்கோயில் என்பது கரக்கோயில் என முதற்குறையாய் வழங்குவதாயிற்று.

6. [1] கணங்கள்-சிவகணங்கள்.

9. [1] கடம்பமரத்தினைத் தான் எழுந்தருளுந் தெய்வ மரமாகவும் அதன் மலர்களைத் தான் அணியும் மாலையாகவும் கொண்டருளுதல்கருதி முருகற்குக் கடம்பன் என்னுந்திருப்பெயரும் உரியதாயிற்று. தமிழ் நாட்டிற்கேயுரிய தெய்வமாதல்பற்றி 'நம் கடம்பன்' என்றார்.

[2] கடம்பை-கடம்பூர் என்பதன் மரூஉ.
இறைவன் என்பால் வைத்த அருள், அப்பெருமான் அடியேனைப் பாதுகாத்தற்கும், யான் அவன்பாற்கொண்ட அன்பு, யான் பணி செய்தற்கும் காரணங்களாம் என்பது கருத்து.

## திருக்கச்சியேகம்பம் - திருக்குறுந்தொகை.

பண்டு செய்த பழவினை யின்பயன்
கண்டுங் கண்டுங் களித்தி காண்[1] நெஞ்சமே
வண்டு லாமலர்ச் செஞ்சடை யேகம்பன்
தொண்டனாய்த் திரியாய் துயர் தீரவே. 1

மருந்தி னோடுநற் சுற்றமு மக்களும்
பொருந்தி நின்றெனக் காயவெம் புண்ணியன்
கருந்தடங் கண்ணி னாளுமை கைதொழ
இருந்தவன்[1] கச்சி யேகம்பத் தெந்தையே. 5

பண்ணி லோசை பழத்தினி லின்சுவை
பெண்ணொ டாணென்று பேசற் கரியவன்
வண்ண மில்லி வடிவு வேறாயவன்
கண்ணி லுண்மணி கச்சியே கம்பனே. 8

---

1. [1] நுகர்ந்தும் நுகர்ந்தும் அதனையுணராது மகிழ்கின்றாய். ஈண்டுக் காணுதல் அநுபவித்தல் என்னும் பொருளது.

5. கருந்தடங்கண்ணினாள் உமை கைதொழ இருந்த வரலாற்றினைத் திருக்குறிப்புத் தொண்டர் புராணத்தால் உணர்க.

8. இத்திருப்பாடல் இறைவன் உலகெலாமாகி, வேறாய் உடனுமாய் நின்ற மூவகை நிலையினையும் உணர்த்தி நிற்றல் காண்க.

**திருமாற்பேறு - திருக்குறுந்தொகை.**

ஏது மொன்று மறிவில ராயினும்
ஓதி யஞ்செழுத் தும்முணர் வார்கட்குப்
பேத மின்றி யவரவ ருள்ளத்தே
மாதுந் தாமு மகிழ்வர்[1] மாற்பேறரே. 1

சாத்தி ரம்பல பேசுஞ் சழக்கர்காள்
கோத்தி ரமுங்[1] குலமுங்கொண்[2] டென்செய்வீர்
பாத்திரஞ்[3] சிவ மென்று பணிதிரேல்
மாத்திரைக்குள்[4] அருளு மாற்பேறரே. 3

ஈட்டு மாநிதி சால விழக்கினும்
வீட்டுங் காலன்[1] விரைய வழைக்கினுங்
காட்டின் மாநட மாடுவாய் காவெனில்
வாட்டந் தீர்க்கவும் வல்லர் மாற்பேறரே. 6

---

1. [1] அடியார் வேறு இறைவன் வேறு என்னும் வேற்றுமையின்றி அடியார்கள் உடனாய்ப் பிரிவறநின்று அவர்கள் உள்ளத்தே அம்மையப்பராக வமர்ந்து மகிழ்வளிப்பர் என்றவாறும். "அடியேன் நடுவுள் இருவீரும் இருப்பதானால்" என்பது திருவாசகம்.

3. [1] கோத்திரம்—குடிவரவு.

[2] குலம்—இனச்சிறப்பு
இவ்விரண்டானும் பயனின்றென்பதாம்.

[3] பாத்திரம்—நம்மையேற்றுக்கோடற்குரிய ஆதாரப்பொருள்.

[4] மாத்திரை—ஒரு கணப்பொழுது.

6. [1] எல்லாவுயிர்களையுங் கொல்லவல்ல கூற்றுவன்.

## திருநீலக்குடி - திருக்குறுந்தொகை.

வைத்த மாடு மனைவியு மக்கள்நீர்
செத்த போது செறியார்[1] பிறிவதே
நித்த நீலக் குடியர னைந்நினை
சித்த மாகிற் சிவகதி சேர்திரே. 1

கல்லி னோடெனைப் பூட்டி யமண்கையர்
ஒல்லை நீர்புக நூக்கவென் வாக்கினால்
நெல்லு நீள்வயல் நீலக் குடியரன்
நல்ல நாம நவிற்றியுய்ந் தேனன்றே. 7

அழகியோ மிளையோ மெனு மாசையால்
ஒழுகி[1] யாவி யுடல்விடு முன்னமே
நிழல தார்பொழில் நீலக்குடியரன்
கழல்கொள் சேவடி கைதொழு துய்ம்மினே. 8

---

1. [1] அணுகார்.

7. அமணர் சூழ்ச்சியாற் கடலில் தள்ளப்பெற்ற திருநாவுக்கரசர் இறைவனருளால் அஞ்செழுத்தின் புணைபிடித்துக் கரையேறியுய்ந்த வரலாற்றினை விளக்கும் அகச்சான்றாக இத்திருப்பாடல் அமைந்துள்ளது.

8. [1] காமநெறியிற் சென்று.

## திருச்சேறை - திருக்குறுந்தொகை,

பூரியாவரும்[1] புண்ணியம் பொய் கெடும்
கூரி தாய வறிவுகை கூடிடும்
சீரியார் பயில் சேறையுட் செந்நெறி
நாரி பாகன்றன்[2] நாம நவிலவே. 1

தப்பி வானந் தரணிகம் பிக்கிலென்[1]
ஒப்பில் வேந்த ரொருங்குடன் சீறிலென்
செப்பமாஞ் சேறைச் செந்நெறி[2] மேவிய
அப்ப னருளர் அஞ்சுவ தென்னுக்கே. 6

குலங்கள்[1] என்செய்வ குற்றங்கள்[2] என்செய்வ
துலங்கி நீநின்று சோர்ந்திடல் நெஞ்சமே
இலங்கு சேறையிற் செந்நெறி மேவிய
அலங்க னருளர் அஞ்சுவ தென்னுக்கே. 8

---

1\. [1] நிரம்பவுளதாம்.

[2] உமையொருபாகன். அவனது திருநாமம் நவிலுதலால் புண்ணியம் பூரியாவரும், பொய்கெடும், கூரிதாகிய அறிவு கைகூடிடும் என்பதாம்.

6\. [1] வானவீதியினின்றும் தவறி நிலம் நடுக்கமுறுதலாய பூகம்பத்தால் எமக்கு வரும் இடையூறென்னை? வானம் தப்பித் தரணிகம்பக்கில் என் எனமாறுக. கம்பித்தல்—நடுங்குதல்.

[2] செந்நெறி—திருச்சேறையிலுள்ள கோயிலின் பெயர்.

8\. [1] இனத்தின் சிறப்பு முறைகள்.

[2] அச்சிறப்பிற்றீர்தலால் உளதாகும் தாழ்வாகிய குற்றங்கள். இவ்வுயர்வும் தாழ்வும் மக்களது எதிர்கால வாழ்விற்கு ஒரு சிறிதும் பயன்படா ஆதலின் அச்சிறப்புமுறை கருதி உளமகிழ்ச்சியால் விளக்கம் பெற்று இறுமாந்து நிற்றலும், அவற்றின் தாழ்வு கருதி மனஞ்சோர்வடைந்து துன்புறுதலும் இறைவனது திருவருள் நோக்கிற்குச் சிறிதும் பொருந்துவன அல்ல என்பார் துலங்கி நீ நின்று சோர்ந்திடல் நெஞ்சமே என நெஞ்சிற்கு அறிவுறுத்தாராயிற்று. நெஞ்சமே நீ குலங்களால் துலங்கி நின்று குற்றங்களாற் சோர்ந்திடல் என நிரல்நிறையாகப்பொருள் கொள்க.

## தனித்திருக்குறுந்தொகை 2.

மாசில் வீணையு மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈச னெந்தை யிணையடி நீழலே. 1

நமச்சி வாயவே ஞானமுங் கல்வியும்
நமச்சி வாயவே நானறி விச்சையும்[1]
நமச்சி வாயவே நாநவின் றேத்துமே
நமச்சி வாயவே நன்னெறி காட்டுமே 2

வாழ்த்த வாயும் நினைக்க மடநெஞ்சும்
தாழ்த்தச் சென்னியும் தந்த தலைவனைச்
சூழ்த்த மாமலர்[1] தூவித் துதியாதே
வீழ்த்த வாவினை யேனெடுங் காலமே. 7

---

1. இத்திருப்பதிகம் திருநாவுக்கரசரைச் சமணர்கள் நீற்றறையிலிட்ட பொழுது திருவாய்மலர்ந்தருளப்பெற்றதென்பர்.

2. [1] விச்சை—வித்தை.

7. [1] வண்டுகள் நெருங்கிச் சூழ்தற்கிடனாய சிறந்த நறுமலர்கள். சூழ்ந்த சூழ்த்தவெனத் திரிந்து நின்றது.

நெக்கு நெக்கு நினைபவர்[1] நெஞ்சுளே
புக்குநிற்கும் பொன்னார் சடைப் புண்ணியன்
பொக்க மிக்கவர்[2] பூவுநீருங் கண்டு
நக்குநிற்பர்[3] அவர் தமை நாணியே. 9

விறகிற் றீயினன் பாலிற்படு நெய்போல்
மறைய நின்றுளன் மாமணிச் சோதியான்
உறவு கோல்நட் டுணர்வு கயிற்றினால்
முறுக வாங்கிக் கடைய[1] முன்னிற்குமே. 10

**தனித்திருக்குறுந்தொகை 3.**

மலையே வந்து விழினும் மனிதர்காள்
நிலையி னின்று கலங்கப் பெறுதிரேல்
தலை யணிய வீசன் றமர்களைக்
கொலைசெய் யானைதான் கொன்றிடு கிற்குமே. 5

---

9. [1] உருகியுருகி அன்பினால் நினையும் மெய்யடியார்கள்.

[2] வஞ்சனையால் மிக்க கீழோர்.

[3] நகைத்து நிற்பர். எள்ளல் பொருளாகத்தோன்றிய நகை.

10. மந்த தரத்தினர்க்கு இறைவன் விறகின்கண் தீயும் பாலில் நெய்யும் போல மறைவு நிலையில் நின்றருளுவன். உறவுகோல்—ஆண்டான் அடிமைத் தொடர்பாகிய கடையுங் கோல். உணர்வுகயிறு—மெய்யுணர்வாகிய கடைகயிறு.

[1] இத்தொடர் விறகினைக் கடைந்து தீயைப் பெறுதற்கும் பாலைக் கடைந்து நெய்யைப் பெறுதற்கும் பொருந்தும் வண்ணம் அமைந்துளது.

5. இத்திருப்பாடலில் கொலைசெய்யானை தான் கொன்றிடுகிற்குமே எனவினவியது, மேல் “ உடையாரொருவர்தமர் நாம் அஞ்சுவது யாதொன்றுமில்லை அஞ்சவருவதுமில்லை ” யெனப் போற்றிக் கொலை யானையை விலக்கியுய்ந்த அநுபவத்தைக் கருதிய குறிப்புடையதாம்.

கற்றுக் கொள்வன வாயுள நாவுள
இட்டுக்கொள்வன[1] பூவுள நீருள
கற்றைச் செஞ்சடை யானுளன் நாமுளோம்
எற்றுக் கோநம னால்முனி வுண்பதே. 6

மனிதர் காளிங்கே வம்மொன்று சொல்லுகேன்
கனிதந்தாற் கனி யுண்ணவும் வல்லிரே
புனிதன் பொற்கழ லீசனெ னுங்கனி
இனிது சாலவும் ஏசற் றவர்கட்கே. 7

## இலிங்கபுராணத் திருக்குறுந்தொகை.

புக்க ணைந்து புரிந்தல ரிட்டிலர்
நக்க ணைந்து நறுமலர் கொய்திலர்
சொக்க ணைந்த[1] சுடரொளி வண்ணனை
மிக்குக்[2] காணலுற் றாரங் கிருவரே. 1

செங்க ணானும்[1] பிரம னுந் தம்முளே
எங்குந் தேடித் திரிந்தவர் காண்கிலார்
இங்குற் றேனென் றிலிங்கத்தே தோன்றினான்
பொங்கு செஞ்சடைப் புண்ணிய மூர்த்தியே. 11

---

6. [1] அருச்சித்தற்கு மேற்கொள்ளத்தகுவனவாகிய சாதனங்கள்.

1. [1] சொக்கு—பேரழகு.
[2] மிக்கு—தற்போதம் மிகுந்து.

11. [1] செங்கணான்—செந்தாமரை போலும் சிவந்த கண்களையுடைய திருமால்.

### சித்தத்தொகைத் திருக்குறுந்தொகை.

சிந்திப் பார்மனத் தான்சிவன் செஞ்சுடர்
அந்தி வானிறத் தானணி யார்மதி
முந்திச் சூடிய முக்கண்ணி னுனடி
வந்திப் பாரவர்[1] வானுல காள்வரே. 1

அண்ட மாரிரு ளூடுக டந்தும்பர்
உண்டு போலுமோ ரொண்சுட ரச்சுடர்
கண்டிங் காரறி வாரறி வாரெலாம்
வெண்டிங் கட்கண்ணி வேதிய னென்பரே 2

### பாவநாசத் திருக்குறுந்தொகை.

பாவ மும்பழி[1] பற்றற வேண்டுவீர்
ஆவி லஞ்சுகந் தாடு மவன்கழல்
மேவ ராய்மிக[2] வும்மகிழ்ந் துள்குமின்
காவ லாளன் கலந்தருள் செய்யுமே. 1

---

1. [1] வந்திப்பார்—வழிபடுவார்.

2. இறைவன் உலகியற் பொருள்கட்கு அப்பாலாகி ஓங்கு ஒளியாய் நிற்குந் திறத்தை இத்திருப்பாடல் விளக்குகின்றது.

1. [1] பாவமும் பழியுமென உம்மை விரித்துரைக்க.
[2] மேவராய்—விருப்புடையராய்.

கங்கை யாடிலென் காவிரி யாடிலென்
கொங்கு[1] தண்கும ரித்துறை யாடிலென்
ஓங்கு[2] மாகட லோதநீ ராடிலென்
எங்கு மீசனெ னாதவர்க் கில்லையே. 2

வேத மோதிலென் வேள்விகள் செய்கிலென்
நீதி நூல்பல நித்தல்[1] பயிற்றிலென்
ஓதி யங்கமோ ராறு முணரிலென்
ஈச னையுள்கு வார்க்கன்றி யில்லையே. 4

கூட வேடத்த ராகிக் குழுவி லென்[1]
வாடி யூனை வருத்தித் திரியிலென்
ஆடல் வேடத்தன் அம்பலக் கூத்தனைப்
பாட லாளர்க்கல் லாற்பய னில்லையே. 7

---

2. [1] கொங்கு—நறுமணம்.

[2] ஓங்கும்—ஓங்குமென்பதன் குறுக்கம்.

4. [1] நித்தல்—நாடோறும்.

7. [1] குழுவில் என்-குழுமியதனாற் பயனென்னை?

# ஆறாந் திருமுறை

## * கோயில் பெரியதிருத்தாண்டகம்.

அரியானை யந்தணர்தஞ் சிந்தையானை
யருமறையி னகத்தானை யணுவை யார்க்குந்
தெரியாத தத்துவனைத் தேனைப் பாலைத்
திகழொளியைத் தேவர்கடங் கோனை மற்றைக்
கரியானை நான்முகனைக் கனலைக் காற்றைக்
கனைகடலைக் குலவரையைக் கலந்து நின்ற
பெரியானைப் பெரும்பற்றப் புலியூ ரானைப்
பேசாத நாளெல்லாம் பிறவா நாளே. 1

அருந்துணையை யடியார்தம் அல்லல் தீர்க்கும்
அருமருந்தை யகன்ஞாலத் தகத்துட் டோன்றி
வருந்துணையுஞ் சுற்றமும் பற்றும் விட்டு
வான்புலன்க ளகத்தடக்கி மடவா ரோடும்
பொருந்தணைமேல் வரும்பயனைப் போக மாற்றிப்
பொதுநீக்கித் தனைநினைய வல்லோர்க் கென்றும்[1]
பெருந்துணையைப் பெரும்பற்றப் புலியூ ரானைப்
பேசாத நாளெல்லாம் பிறவா நாளே. 5

---

* தில்லைத் திருக்கோயி லொன்றினையே வேறு அடைமொழியின்றிக் கோயில் என வழங்குதல் மரபு.

5. [1] பொதுநீக்கித் தனைநினைய வல்லோர்—தெய்வம் என்னும் பொது வகையிலன்றித் தனிமுதல்வன் எனுஞ் சிறப்பு முறையிற் சிவனொருவனையே நினையவல்ல மெய்யடியார்கள்.

வரும்பயனை யெழுநரம்பி னோசையானை
வரைசிலையா[1] வானவர்கள் முயன்றவாளி
யரும்பயஞ்செ யவுணர்புர மெரியக்கோத்த[2]
வம்மானை யலைகடனஞ் சயின்றான்[3] றன்னைச்
சுரும்பமருங் குழன்மடவார் கடைக்கணோக்கிற்
றுளங்காத சிந்தையராய்த் துறந்தோருள்ளப்
பெரும்பயனைப் பெரும்பற்றப் புலியூரானைப்
பேசாத நாளெல்லாம் பிறவாநாளே. 7

**திருப்பூவணம் - திருத்தாண்டகம்.**

வடிவேறு திரிசூலந் தோன்றுந் தோன்றும்
வளர்சடைமே லிளமதியந் தோன்றுந் தோன்றுங்
கடியேறு கமழ்கொன்றைக் கண்ணி தோன்றுங்
காதில் வெண்குழைதோடு கலந்து தோன்றும்
இடியேறு களிற்றுரிவைப் போர்வை தோன்றும்
எழில்திகழுந் திருமுடியு மிலங்கித் தோன்றும்
பொடியேறு திருமேனி பொலிந்து தோன்றும்
பொழிறிகழும் பூவணத்தெம் புனிதனார்க்கே. 1

---

7. [1] மலையே வில்லாக.

[2] கோத்த—எய்த.

[3] அயின்றான்—உண்டான்.

[4] இறைவனது பொருள்சேர் புகழை நாவினிக்கப் பேசாத நாட்களெல்லாம் தம் கருத்தினை மொழியான் விளக்குதற்குரிய சொற்றிறம் பெற்ற மக்கட் பிறப்பின் பயனை நல்காத வீணாட்களாம் என்பது கருத்து.

1. திருநாவுக்கரசர் திருப்பூவணத்தை யடைந்தபோது இறைவன் நேரே தோன்றிக் காட்சியளிக்கக் கண்டு பாடிய திருப்பதிகம் இதுவாகும். இதன்கண் இறைவன் திருவுருவ அடையாளங்கள் தம் கண்முன்னர்த் தோன்றிய இயல்பினை நாவரசர் குறிப்பிடுதல் காணலாம்.

ஆரொருவ ருள்குவா ருள்ளத் துள்ளே
யவ்வுருவாய் நிற்கின்ற வருளுந்தோன்றும்[1]
வாருருவப் பூண்முலைநன் மங்கை தன்னை
மகிழ்ந்தொருபால் வைத்துகந்த வடிவுந் [தோன்றும்
நீருருவக் கடலிலங்கை யரக்கர்கோனை
நெறுநெறென வடர்த்திட்ட நிலையுந்தோன்றும்
போருருவக் கூற்றுதைத்த பொற்புத்தோன்றும்
பொழில்திகழும் பூவணத்தெம் புனித [னார்க்கே. 11

## திருமறைக்காடு - திருத்தாண்டகம்.

தூண்டு சுடரனைய சோதி கண்டாய்
தொல்லமரர் சூளா மணிதான் கண்டாய்
காண்டற் கரிய கடவுள் கண்டாய்
கருதுவார்க் காற்ற வெளியான் கண்டாய்[1]
வேண்டுவார் வேண்டுவதே யீவான் கண்டாய்
மெய்ந்நெறி கண்டாய் விரத மெல்லா
மாண்ட மனத்தார்[2] மனத்தான் கண்டாய்
மறைக்காட் டுறையு மணாளன் றானே. 1

---

11. [1] மக்கள் எந்நாட்டவராயினும் எந்தச் சமயத்தவராயினும் அவரவர்கள் தங்களால் வணங்கப்படும் முழுமுதற் பொருளென எந்தத் திருவுருவத்தைத் தியானிக்கின்றார்களோ அந்தந்த வுருவில் சமயங்கடந்த தனி முதல்வனாகிய சிவன் தோன்றி நின்றருளுவன் என்பதாம்.

1. [1] ஆற்றவெளியான்—மிகவும் வெளிப்பட்டருள்பவன்.

[2] எல்ல விரதங்களாலும் நன்மாண்புபெற்ற உள்ளமுடைய பெரியோர்கள்.

கள்ளி முதுகாட்டி லாடி கண்டாய்
காலனையுங் காலாற் கடந்தான் கண்டாய்
புள்ளி யுழைமானின் றோலான் கண்டாய்
புலியுரிசே ராடைப் புனிதன் கண்டாய்
வெள்ளி மிளிர்பிறைமேற் சூடி கண்டாய்
வெண்ணீற்றான் கண்டாய்நஞ் செந்தின்மேய
வள்ளி மணாளற்குத்[1] தாதை கண்டாய்
மறைக்காட் டுறையு மணாளன்றானே. 4

அம்மை பயக்கு மமிர்து கண்டா
யந்தேன்றெளி கண்டா யாக்கஞ் செய்தி
டிம்மை பயக்கு மிறைவன் கண்டா
யென்னெஞ்சே யுன்னி லினியான் கண்டாய்
மெய்ம்மையே ஞான விளக்குக் கண்டாய்
வெண்காடன் கண்டாய் வினைகள் போக
மம்மறுக்கு மருந்து[1] கண்டாய்
மறைக்காட் டுறையு மணாளன்றானே. 8

---

4. [1] நம் செந்தில்மேய வள்ளி மணாளன் என்றது நம் கடம்பன் என்றாற் போலும் உரிமைத் தொடர்பினது.

8. [1] இறைவன் ஞானப் பொருளாய் நின்று உயிர்களின் உள்ளத்து மயக்கத்தை நீக்கியருளுதலால் 'மம்மர் அறுக்கு மருந்து' எனப் போற்றினர். மம்மர்—மயக்கம்.

### திருவாரூர் - திருத்தாண்டகம்.

உயிரா வணமிருந் துற்று நோக்கி
யுள்ளக் கிழியி னுரு வெழுதி
உயிரா வணஞ்செய்திட் டுன்கைத் தந்தால்[1]
உணரப் படுவாரோ டொட்டி வாழ்தி
அயிராவண[2] மேறா தானே றேறி
யமரர்நா டாளாதே யாரூ ராண்ட
அயிரா வணமேயென் னம்மானே நின்
அருட் கண்ணால் நோக்காதா ரல்லாதாரே.[1] 1

முன்ன மவனுடைய நாமங் கேட்டாள்
மூர்த்தி யவனிருக்கும் வண்ணங் கேட்டாள்
பின்னை யவனுடைய வாரூர் கேட்டாள்
பெயர்த்து மவனுக்கே பிச்சி யானாள்
அன்னையையு மத்தனையு மன்றே நீத்தாள்
அகன்றா ளகலிடத்தா ராசாரத்தைத்
தன்னை மறந்தாள் தன்னாமங் கெட்டாள்
தலைப்பட்டாள் நங்கை தலைவன் தாளே. 7

### திருவாரூர் - திருத்தாண்டகம்.

இடர்கெடுமா றெண்ணுதியேல் நெஞ்சே நீவா
ஈண்டொளிசேர் கங்கைச் சடையா யென்றுஞ்
சுடரொளியா யுள் விளங்கு சோதீ யென்றுந்
தூநீறு சேர்ந்திலங்கு தோளா வென்றுங்
கடல்விடம துண்டிருண்ட கண்டா வென்றுங்
கலைமா னறியேந்து கையா வென்றும்
அடல்விடையா யாரமுதே யாதீ யென்றும்
ஆரூரா வென்றென்றே யலறா நில்லே. 1

1. [1] உயிர்ப்பின்றி ஒரு நிலையிலிருந்து கருதிநோக்கித் தம் உள்ளமாகிய திரையில் இறைவன் திருவுருவை யெழுதிப் போற்றித் தம் முயிரையே அப்பெருமான்பால் விற்றற்குரிய விலையாவணமாக ஒப்படைத்தால். [2] அயிராவணம்—வெள்ளையானை. [3] நின் திருவருள்நோக்கம் பெறாதவர்கள் அறமுடையாரல்லர்.

7. இறைவனைத் தலைவனாகவும் ஆன்மாவைத் தலைவியாகவும் உருவகஞ் செய்து அகப்பொருட்டுறையமையப்பாடிய திருப்பாடல்.

நிலைபெறுமா றெண்ணுதியேல் நெஞ்சே நீவா
நித்தலுமெம் பிரானுடைய கோயில் புக்குப்
புலர்வதன்முன்[1] அலகிட்டு மெழுக்கு மிட்டுப்
பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்து பாடித்
தலையாரக் கும்பிட்டுக் கூத்து மாடிச்
சங்கரா சயபோற்றி[2] போற்றி யென்றும்
அலைபுனல்சேர் செஞ்சடையெம் மாதீ யென்றும்
ஆரூரா வென்றென்றே யலறா நில்லே. 3

பற்றிநின்ற பாவங்கள் பாற்ற வேண்டிற்[1]
பரகதிக்குச் செல்வதொரு பரிசு வேண்டிற்
சுற்றிநின்ற சூழ்வினைகள் வீழ்க்க வேண்டிற்
சொல்லுகேன் கேள்நெஞ்சே துஞ்சா வண்ணம்
உற்றவரு முறுதுணையு நீயே யென்றும்
உன்னையலா லொருதெய்வ முள்கே னென்றும்
புற்றரவக் கச்சார்த்த புனிதா வென்றும்
பொழிலாரூ ராவென்றே போற்றா நில்லே. 7

**திருவையாறு - திருத்தாண்டகம்.**

ஓசை[1] யொலியெலா[2] மானாய் நீயே
யுலகுக் கொருவனாய் நின்றாய் நீயே
வாச மலரெலா மானாய் நீயே
மலையான் மருகனாய் நின்றாய் நீயே
பேசப் பெரிது மினியாய் நீயே
பிரானா யடியென்மேல் வைத்தாய் நீயே
தேச விளக்கெலா மானாய் நீயே[3]
திருவையா றகலாத செம்பொற் சோதி. 1

---

3. [1] பொழுது விடிவதற்குமுன் வைகறையிலே. [2] சய—வெல்க.

7. [1] பாற்றவேண்டில்—அறவே நீக்கவிரும்பினால்.

1. [1] ஓசை—எழுத்தியல் தழுவா ஆர்ப்பரவம்.
[2] ஒலி—பொருள் தரும் எழுத்தொலி வடிவம்.
[3] ஞாயிறு திங்கள் விண்மீன் முதலாக உலகத்துக் காணப்படும் பொருள்களி லெல்லாம் உடனாய் நின்று விளக்கர்தருவோன் இறைவன் ஆதலின் இவ்வாறு போற்றினார்.

உற்றிருந்த வுணர்வெலா மானாய் நீயே
யுற்றவர்க்கோர் சுற்றமாய் நின்றாய் நீயே
கற்றிருந்த கலைஞான மானாய் நீயே
கற்றவர்க்கோர் கற்பகமாய் நின்றாய் நீயே
பெற்றிருந்த தாயவளி னல்லாய் நீயே[1]
பிரானா யடியென்மேல் வைத்தாய் நீயே
செற்றிருந்த திருநீல கண்டன் நீயே
திருவையா றகலாத செம்பொற் சோதீ. 6

எல்லா வுலகமு மானாய் நீயே
யேகம்ப மேவி யிருந்தாய் நீயே
நல்லாரை நன்மை யறிவாய் நீயே
ஞானச் சுடர்விளக்காய் நின்றாய் நீயே
பொல்லா வினைக ளறுப்பாய் நீயே
புகழ்ச்சே வடியென்மேல் வைத்தாய் நீயே
செல்வாய செல்வந்[1] தருவாய் நீயே
திருவையா றகலாத செம்பொற் சோதீ. 7

**திருவீழிமிழலை - திருத்தாண்டகம்.**

கண்ணவன்காண் கண்ணொளிசேர் காட்சி யான்காண்
கந்திருவம் பாட்டிசையிற் காட்டு கின்ற
பண்ணவன்காண் பண்ணவற்றின் றிறலா னான்காண்
பழமாகிச் சுவையாகிப் பயக்கின் றான்காண்
மண்ணவன்காண் தீயவன்கா ணீரா னான் காண்
வந்தலைக்கு மாருதன்காண் மழைமே கஞ்சேர்
விண்ணவன்காண் விண்ணவர்க்கு மேலா னான்காண்
விண்ணிழிதண் வீழி மிழலை யானே. 1

---

6. [1] "பானினைந்தூட்டுந் தாயினுஞ் சாலப்பரிந்துநீ பாவியேனுடைய
ஊனினையுருக்கி யுள்ளொளி பெருக்கி யுலப்பிலா வானந்தமாய
தேனினைச் சொரிந்து புறம்புறந் திரிந்த செல்வமே"
எனவரும் திருவாசகம் ஈண்டு நினைவு கூரத்தக்கது.

7. [1] செல்வாய செல்வம்—என்றும் யாவரும் ஏற்றுக்கொள்ளுமாறு
வழங்கும் நன்மதிப்பிற்குறையாத திருவருட் செல்வம்.

ஆலைப் படுகரும்பின் சாறு போல
அண்ணிக்கு மஞ்செழுத்தி னுமைத் தான்காண்
சீல முடையடியார் சிந்தை யான்காண்
திரிபுரமூன் றெரிபடுத்த சிலையி னான்காண்
பாலினொடு தயிர்நறுநெய் யாடி னான்காண்
பண்டரங்க வேடன்[1] காண் பலிதேர் வான்காண்
வேலைவிட முண்ட மிடற்றி னான்காண்
விண்ணிழிதண் வீழி மிழலை யானே. 2

மெய்த்தவன்காண் மெய்த்தவத்தி னிற்பார்க் கெல்லாம்
விருப்பிலா விருப்புமன வினையார்க் கென்றும்
பொய்த்தவன்காண் புத்தன் மறவா தோடி
யெறிசல்லி புதுமலர்க ளாக்கி னான்காண்[1]
உய்த்தவன்கா ணுயர்கதிக்கே யுள்கினாரை
புலகனைத்து மொளித்தளித்திட் டுய்யச் செய்யும்
வித்தகன்காண் வித்தகர்தாம் விரும்பி யேத்தும்
விண்ணிழிதண் வீழி மிழலை யானே. 8

## திருப்புள்ளிருக்குவேளூர் — திருத்தாண்டகம்.

பத்திமையாற் பணிந்தடியேன் றன்னைப் பன்னாட்
பாமாலை பாடப் பயில்வித் தானை
யெத்தேவு மேத்து மிறைவன் றன்னை
யெம்மானை யென்னுள்ளத் துள்ளே யூறும்
அத்தேனை யமுதத்தை யாவின் பாலை
அண்ணிக்குந் தீங்கரும்பை யரனை யாகிப்
புத்தேளைப் புள்ளிருக்கு வேளூ[1] ரானைப்
போற்றாதே யாற்றநாள் போக்கி னேனே. 3

---

2. [1] பண்டரங்கவேடன்—பாண்டரங்க மென்னுங் கூத்துக் கோலமுடையான். வேலை—கடல்.

8. [1] புத்தன் என்றது சாக்கிய நாயனாரை. அவரால் எறியப்பட்ட சல்லிக் கற்கள் இறைவற்கு மெல்லிய மலர்களான வரலாற்றைப் பெரிய புராணத்தாலறிக.

3. [1] புள்ளிருக்குவேளூர்—இக்காலத்து வைத்தீசுவரன் கோயிலென வழங்கப்பெறும் திருப்பதி.

இருளாய வுள்ளத்தி னிருளை நீக்கி[1]
இடர்பாவங் கெடுத்தேழை யேனை யுய்யத்
தெருளாத[2] சிந்தைதனைத் தெருட்டித்[3] தன்போற்
சிவலோக நெறியறியச் சிந்தை தந்த
அருளானை யாதிமா தவத்து ளானை
ஆறங்க நால்வேதத் தப்பால் நின்ற
பொருளானைப் புள்ளிருக்கு வேளூ ரானைப்
போற்றாதே யாற்றநாள் போக்கி னேனே. 4

பேரா யிரம்பரவி வானோ ரேத்தும்
பெம்மானைப் பிரிவிலா வடியார்க் கென்றும்
வாராத செல்வம் வருவிப் பானை
மந்திரமுந் தந்திரமு மருந்து மாகித்
தீராநோய் தீர்த்தருள வல்லான் [1]றன்னைத்
திரிபுரங்கள் தீயெழத்தின் சிலைகைக் கொண்ட
போரானைப் புள்ளிருக்கு வேளூ ரானைப்
போற்றாதே யாற்றநாள் போக்கி னேனே. 8

**திருக்கன்றாப்பூர் - திருத்தாண்டகம்.**

மாதினையோர் கூறுகந்தாய் மறைகொள் நாவா
மதிசூடீ வானவர்கள் தங்கட் கெல்லாம்
நாதனே யென்றென்று பரவி நாளும்
நைந்துருகி வஞ்சகமற் றன்பு கூர்ந்து
வாதனை[1]யான் முப்பொழுதும் பூநீர் கொண்டு
வைகல் மறவாது வாழ்த்தி யேத்திக்
காதன்மையாற் றொழுமடியார் நெஞ்சி னுள்ளே
கன்றாப்பூர் நடுதறியைக் காண லாமே. 1

---

4. [1] ஆணவ இருளை யகற்றி. [2] தெளியாத. [3] தெளிவித்து.

8. [1] இத்திருமுறைத் தொடர்ப்பொருள் கருதியே வினை தீர்த்தான் என்னுந் திருப்பெயர் அவ்வூரிறைவற்கு வழங்கப்பெறுகின்றது.

1. [1] வாசனை வாதனை யெனத்திரிந்து நின்றது.

எவரேனுந் தாமாக விலாடத் திட்ட[1]
திருநீறுஞ் சாதனமுங் கண்டா லுள்கி
உவராதே[2] யவரவரைக் கண்ட போது
உகந்தடிமைத் திறநினைந்தங் குவந்து நோக்கி
இவர்தேவ ரவர்தேவ ரென்று சொல்லி
இரண்டாட்டா தொழிந்தீசன் றிறமே பேணிக்
கவராதே தொழுமடியார் நெஞ்சி னுள்ளே
கன்றாப்பூர் நடுதறியைக் காணலாமே. 3

## திருச்செங்காட்டங்குடி - திருத்தாண்டகம்.

பெருந்தகையைப் பெறற்கரிய மாணிக் கத்தைப்
பேணிநினைந் தெழுவார்தம் மனத்தே மன்னி
இருந்தமணி விளக்கதனை நின்ற பூமேல்
எழுந்தருளி யிருந்தானை[1] யொண்டோள் வீசி
அருந்திறன்மா நடமாடு மம்மான் றன்னை
யங்கனகச் சுடர்க்குன்றை யன்றா லின்கீழ்த்
திருந்துமறைப் பொருள்நால்வர்க் கருள்செய் தானைச்
செங்காட்டங் குடியதனிற் கண்டே னானே. 1

---

3. இறைவனடியார்களை வழிபடும் முறையினை இத்திருப்பாடல் விளக்குகின்றது. [1] இலாடம்—நெற்றி. [2] அருவருப்பின்றி.

இவர் அடியார் அவன் இறைவன் என அடியார்களையும் இறைவனையும் வேறுபடக் கருதாமல் அவர்களை இறைவனாகவே தொழுது வணங்கும் அடியார்கள் உள்ளத்திலே இறைவனைக் காணலாம் என்பது பொருள்.

1. [1] அடியார்களது நிலைபெற்ற உள்ளத்தாமரையில் எழுந்தருளியிருப்பவன். "மலர்மிசை யேகினான்" (குறள் 3) எனவும் "ஞானப் புகலுடையோர் தம் உள்ளப் புண்டரிகத்துள்ளிருக்கும் புராணர்" (சம்பந்தர்) எனவும் சான்றோர் கூறுதல் காண்க.

உருகுமனத் தடியவர்கட் கூறுந் தேனை
யும்பர்மணி முடிக்கணியை யுண்மை நின்ற
பெருகுநிலக் குறியாள ரறிவு தன்னைப்
பேணியவந் தணர்க்குமறைப் பொருளைப்
முருகுவிரி[1] நறுமலர்மே லயற்கு மாற்கு [பின்னும்
முழுமுதலை மெய்த்தவத்தோர் துணையை வாய்த்த
திருகுகுழ லுமைநங்கை பங்கன் றன்னைச்
செங்காட்டங் குடியதனிற் கண்டே னானே. 3

கந்தமலர்க் கொன்றையணி சடையான் றன்னைக்
கதிர்விடுமா மணிபிறங்கு கனகச் சோதிச்
சந்தமலர்த் தெரிவையொரு பாகத் தானைச்
சராசரநற் றாயானை நாயேன் முன்னைப்
பந்தமறுத் தாளாக்கிப் பணிகொண் டாங்கே
பன்னியநூற் றமிழ்மாலை பாடு வித்தென்
சிந்தைமயக் கறுத்ததிரு வருளி னானைச்
செங்காட்டங் குடியதனிற் கண்டே னானே. 4

## திருவெறும்பியூர் - திருத்தாண்டகம்.

பன்னியசெந் தமிழறியேன் கவியேன் மாட்டேன்
எண்ணோடு பண்ணிறைந்த கலைக ளாய
தன்னையுந்தன் றிறத்தறியாப் பொறியி லேனைத்
தன்றிறமு மறிவித்து நெறியுங் காட்டி
அன்னையயு மத்தனையும் போல வன்பாய்
அடைந்தேனைத் தொடர்ந்தென்னை யாளாக்
[கொண்ட
தென்னெறும்பி யூர்மலைமேல் மாணிக் கத்தைச்
செழுஞ்சுடரைச் சென்றடையப் பெற்றே
[னானே. 1

---

3. [1] மணம் விரிந்த.

4. [1] சரம் அசரம் ஆகிய இருதிற உயிர்களுக்கும் பெற்ற தாய் போன்று அருள் வழங்குபவன். சரம்—இயங்கியற் பொருள். அசரம்—நிலையியற் பொருள்.

4. [1] இறைவன் தம்மைப் பணிகொண்ட திறத்தை இத்திருப்பாடல்களால் அரசர் உருகிப் போற்றுகின்றார்,

## நின்ற திருத்தாண்டகம்.

இருநிலனாய்த் தீயாகி நீரு மாகி
இயமான னாயெறியுங் காற்று மாகி
அருநிலைய திங்களாய் ஞாயி றாகி
ஆகாச மாயட்ட மூர்த்தி யாகிப்
பெருநலமுங் குற்றமும் பெண்ணு மாணும்
பிறருருவுந் தம்முருவுந் தாமே யாகி
நெருநலையா யின்றாகி நாளை யாகி
நிமிர்புன் சடையடிகள் நின்ற வாறே.

## தனித் திருத்தாண்டகம்.

அப்பனீ யம்மைநீ யைய னுநீ
அன்புடைய மாமனு மாமியுநீ
ஒப்புடைய மாதரும்[1] ஒண்பொருளு நீ
ஒருகுலமுஞ் சுற்றமும் ஓரூரு நீ
துய்ப்பனவும்[2] உய்ப்பனவுந் தோற்று வாய்நீ
துணையாயென் னெஞ்சந் துறப்பிப்பாய் நீ
இப்பொன்னீ யிம்மணிநீ யிம்முத்து நீ
இறைவனீ யேறூர்ந்த செல்வன் நீயே.

---

1. இறைவன் உலகெலாமாகி நின்ற இயல்பினை விளக்கி நிற்றலின் இது நின்ற திருத்தாண்டகம் என வழங்கப்பெறுகின்றது.

1. [1] ஒப்புடைய மாதர் — பிறப்பு, வயது, நிறை, திரு, அருள் முதலியவற்றால் ஒத்த மனைவியர்.

[2] துய்ப்பன — நுகர்தற்குரியன. உய்ப்பன—கொண்டுசெலுத்துதற்குரிய வாழ்க்கைச் சாதனங்கள்.

வெம்பவரு கிற்பதன்று கூற்ற நம்மேல்
வெய்ய வினைப்பகையும் பைய நையும்[1]
எம்பரிவு தீர்ந்தோம் இடுக்க ணில்லோம்
எங்கெழிலென் ஞாயி றெளியோ மல்லோம்[2]
அம்பவளச் செஞ்சடைமே லாறு சூடி
அனலாடி யானஞ்சு மாட்டு கந்த
செம்பவள வண்ணர்செங் குன்ற வண்ணர்
செவ்வான வண்ணரென் சிந்தை யாரே. 2

ஆட்டுவித்தா லாரொருவ ராடா தாரே
அடக்குவித்தா லாரொருவ ரடங்கா தாரே
ஓட்டுவித்தா லாரொருவ ரோடா தாரே
உருகுவித்தா லாரொருவ ருருகா தாரே
பாட்டுவித்தா லாரொருவர் பாடா தாரே
பணிவித்தா லாரொருவர் பணியா தாரே
காட்டுவித்தா லாரொருவர் காணா தாரே
காண்பாரார் கண்ணுதலாய்க் காட்டாக் காலே. 3

நற்பதத்தார் நற்பதமே ஞான மூர்த்தி
நலஞ்சுடரே நால்வேதத் தப்பால் நின்ற
சொற்பதத்தார் சொற்பதமுங் கடந்து நின்ற
சொலற்கரிய சூழலாய் இதுவுன் றன்மை
நிற்பதொத்து நிலையிலா நெஞ்சந் தன்னுள்
நிலாவாத புலாலுடம்பே புகுந்து நின்ற
கற்பகமே யானுன்னை விடுவே னல்லேன்
கனகமா மணிநிறத்தெங் கடவு ளானே. 4

---

2. 1 வினைப்பகையும் மெல்லக் கெடும்.

2 "எங்கெழிலென் ஞாயி றெமக்கேலோ ரெம்பாவாய்" என்னுந் திருவாசகம் ஈண்டு ஒப்புநோக்கத் தக்கது.

3. இறைவன் உயிர்க்குயிராய் நின்று காட்டும் உபகாரம் இத்திருப் பாடலால் விளக்கப்பெறுகின்றது.

4. 1 சொலற்கரிய சூழலாய் என இறைவனை அழைத்தமை மாற்ற மனங்கழிய நின்ற இறைவனது இயல்பினைக் குறிப்பதாகும்.

திருக்கோயி லில்லாத திருவி லூருந்
திருவெண்ணீ றணியாத திருவி லூரும்
பருக்கோடிப் பத்திமையாற் பாடா ஊரும்
பாங்கினொடு பலதளிக ளில்லா ஊரும்
விருப்போடு வெண்சங்க மூதா ஊரும்
விதானமும் வெண்கொடியு மில்லா ஊரும்
அருப்போடு மலர்[1] பறித்திட் டுண்ணா ஊரும்
அவையெல்லா மூரல்ல வடவி காடே. 5

திருநாம மஞ்செழுத்துஞ் செப்பா ராகில்
தீவண்ணர் திறமொருகாற் பேசா ராகில்
ஒருகாலுந் திருக்கோயில் சூழா ராகில்
உண்பதன்முன் மலர்பறித்திட் டுண்ணா ராகில்
அருநோய்கள் கெடவெண்ணீ றணியா ராகில்
அளியற்றார்[2] பிறந்தவா றேதோ வென்னில்
பெருநோய்கள் மிகநலியப் பெயர்த்துஞ் செத்துப்
பிறப்பதற்கே தொழிலாகி யிறக்கின் றாரே. 6

நின்னாவார் பிறரன்றி நீயே யானாய்
நினைப்பார்கள் மனத்துக்கோர் வித்து மானாய்
மன்னானாய்[1] மன்னவர்க்கோ ரமுத மானாய்
மறைநான்கு மானாயா றங்க மானாய்
பொன்னானாய் மணியானாய் போக மானாய்
பூமிமேற் புகழ்தக்க பொருளே யுன்னை
என்னானா யென்னானா யென்னி னல்லால்
ஏழையே னென்சொல்லி யேத்து கேனே. 7

---

5. [1] அரும்போடு என்பது அருப்போடு என எதுகை நோக்கித் திரிந்தது.

6. [1] சூழ்தல் — வலம் வருதல்.

[2] அளியற்றார் — பாதுகாவலற்றார்.

7. [1] மன்னானாய் — நிலைபேறானாய்.

அத்தாவுன் னடியேனை யன்பா லார்த்தாய்
அருணோக்கிற் றீர்த்தநீ ராட்டிக் கொண்டாய்[1]
எத்தனையு மரியநீ யெளியை ஆனாய்
எனையாண்டு கொண்டிரங்கி ஏன்று கொண்டாய்
பித்தனேன் பேதையேன் பேயேன் நாயேன்
பிழைத்தனக ளெத்தனையும் பொறுத்தா யன்றே
இத்தனையும் எம்பரமோ[2] ஐய வையோ
எம்பெருமான் திருக்கருணை இருந்த வாறே. 8

குலம்பொல்லேன் குணம்பொல்லேன் குறியும்
[பொல்லேன்
குற்றமே பெரிதுடையேன் கோல மாய
நலம்பொல்லேன் நான்பொல்லேன் ஞானி யல்லேன்
நல்லாரோ டிசைந்திலேன் நடுவே நின்ற
விலங்கல்லேன் விலங்கல்லா தொழிந்தே னல்லேன்[1]
வெறுப்பனவும் மிகப்பெரிதும் பேச வல்லேன்
இலம்பொல்லேன் இரப்பதே ஈய மாட்டேன்
என்செய்வான் தோன்றினே னேழை யேனே. 9

சங்கநிதி பதுமநிதி இரண்டும் தந்து
தரணியொடு வானாளத் தருவ ரேனும்
மங்குவார் அவர்செல்வம் மதிப்போம் அல்லோம்
மாதேவர்க் கேகாந்தர்[1] அல்ல ராகில்
அங்கமெலாங் குறைந்தழுகு தொழுநோ யராய்
ஆவுரித்துத் தின்றுழலும் புலைய ரேனும்
கங்கைவார் சடைக்கரந்தார்க் கன்ப ராகில்
அவர்கண்டீர் நாம்வணங்கும் கடவு ளாரே. 10

---

8. [1] திருவருள் நோக்கமாகிய தீக்கையால் தூய்மை செய்து நன்னீராட்டி ஏற்றுக்கொண்டருளினாய்.

[2] எம்பரமோ — எம்மளவோ.

9. [1] உடலமைப்பால் விலங்கினை யொத்தே னல்லேன். ஆயினும் உணர்வு முதலியவற்றால் விலங்கினின்றும் வேறுபட்டே னல்லேன் என்பது கருத்து.

10. [1] ஏகாந்தர் — அன்பொருமை யுடையோர்.

## திருப்புகலூர் – திருத்தாண்டகம்.

எண்ணுகே னென்சொல்லி யெண்ணு கேனோ
　　எம்பெருமான் திருவடியே எண்ணி னல்லாற்
கண்ணிலேன் மற்றோர் களைக[1] ணில்லேன்
　　கழலடியே கைதொழுது காணி னல்லால்
ஒண்ணுளே[2] யொன்பது வாசல் வைத்தாய்
　　ஒக்க வடைக்கும்போ துணர மாட்டேன்
புண்ணியா வுன்னடிக்கே போது கின்றேன்
　　பூம் புகலூர் மேவிய புண்ணியனே.

அங்கமே பூண்டா யனலா டினாய்
　　ஆதிரையா[1] யால்நிழலா யானே றூர்ந்தாய்
பங்கமொன் றில்லாத படர்சடை யினாய்
　　பாம்பொடு திங்கள் பகைதீர்த் தாண்டாய்
சங்கை[2]யொன் றின்றியே[3] தேவர் வேண்டச்
　　சமுத்திரத்தி னஞ்சுண்டு சாவா மூவாச்
சிங்கமே யுன்னடிக்கே போது கின்றேன்
　　திருப்புகலூர் மேவிய தேவ தேவே. 2

---

1. [1] களைகண் — பற்றுக்கோடு.
   [2] ஒண்ணுளே — உடம்பொன்றினுள்ளே; ஒன்றுளே யென்பது ஒண்ணுளேயென எதுகை நோக்கித் திரிந்தது; உலகியல் வழக்குமாம்.

2. [1] திருவாதிரை நாளுக்கு உரியவன் என்னும் பொருளில் ஆதிரையான் என்றசொல் சிவனைக் குறிக்கும்.
   [2] சங்கை — நாணம் என்னும் பொருளில் வழங்கும் உலகியற்சொல்.
   [3] ஒன்றின்றி — சிறிதுமில்லாமல்.

ஒருவனையு மல்லா துணரா துள்ளம்
உணர்ச்சித் தடுமாற்றத் துள்ளே நின்ற
இருவரையு மூவரையு மென்மே லேவி[1]
இல்லாத தரவறுத்தாய்க் கில்லே னேலக்
கருவரைசூழ் கான லிலங்கை வேந்தன்
கடுந்தேர்[2]மீ தோடாமைக் காலாற் செற்ற
பொருவரையா யுன்னடிக்கே போது கின்றேன்[3]
பூம் புகலூர் மேவிய புண்ணியனே.

---

[1] இருவரையும் மூவரையும் — பொறிகளாகிய ஐவரையும்.

[2] கடுந்தேர் — விரைந்து செல்லும் தேர்.

[3] திருப்புகலூரையடைந்த திருநாவுக்கரசடிகளார் நின்றதிருத்தாண்டகம், தனித் திருத்தாண்டகம், ஆருயிர்த் திருவிருத்தம் முதலிய எண்ணிறந்த தமிழ் மாலைகளைப் பாடியருளிச் சித்தநிலை திரியாது திருத்தொண்டி லீடுபட்டு அந்தக்கரணங்க ளொடுங்கப்பெற்றவராய்த் "தன்னுடைய சரணான தமியேனைப் புகலூர்ப் பெருமான் தன் திருவடியிற் சேர்த்துக்கொள்வான்" என்னுந் தெளிவெய்தி நண்ணரிய சிவானந்த ஞானவடிவேயாகி அண்ணலார் சேவடிக்கீழ் அமரும் நிலையில் இத் திருப்பதிகத்தைத் திருவாய்மலர்ந்தருளினா ரென்பது வரலாறு. இதன்கண் ஒவ்வொரு பாடலின் ஈற்றிலும் "உன்னடிக்கே போதுகின்றேன்" என அரசர் குறிப்பிட்டுப் போற்றுதலால் இச்செய்தி புலனாதல் காண்க.

திருச்சிற்றம்பலம்.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரப் பதிகங்கள்.

# ஏழாந் திருமுறை.

## திருநெல்வாயில் திருஅரத்துறை - பண் - இந்தளம்.

கல்வாயகி லுங்கதிர் மாமணியுங்
கலந்துந்திவ ருந்நிவ[1] வின்கரைமேல்
நெல்வாயி லரத்துறை நீடுறையுந்
நில[2]வெண்மதி சூடிய நின்மலனே
நல்வாயில்செய் தார்நடந் தாருடுத்தார்
நரைத்தாரிறந் தாரென்று நானிலத்திற்
சொல்லாய்க்கழி கின்றத றிந்தடியேன்
தொடர்ந்தேனுய்யப் போவதோர் சூழல்
[சொல்லே. 1

கரிமாமிள கு[1]ம்மிகு வன்மரமு
மிகவுந்திவ ருந்நிவ வின்கரைமேல்
நெறிவார்குழ லாரவர் காணநடஞ்செய்
நெல்வாயி லரத்துறை நின்மலனே
வறிதே[2] நிலை யாதவிம் மண்ணுலகின்
நரனுக வகுத்தனை நானிலையேன்
பொறிவாயிலிவ் வைந்தினையு மவியப்
பொருது[3]ன்னடி யேபுகுஞ் சூழல்சொல்லே. 2

---

1. [1] நிவா நிவவு என்றாயிற்று. நிவா—வட வெள்ளாறு அவ்வாற்றின் கரைமேலுள்ளது திருநெல்வாயிலென்னும் ஊராகும். அரத்துறை என்பது கோயிற் பெயர்.
[2] நிலா நில எனக் குறுகியது; செய்யுளாதலின்.

2. [1] கறி — மிளகு; கறிமாமிளகு ஒருபொருளிருசொல்.
[2] வறிது — சிறிது. 'வறிது சிறிதாகும்' (தொல், உரி சய)
[3] 'பொறிவாயி லைந்தவித்தான்' (திருக்குறள்- சா) என்னும் பொருளுரையினைக் கருதியது.

புற்றுடர வம்மரை யார்த்துகந்தாய்
புனிதாபொரு வெள்விடை யூர்தியினாய்
எற்றேயொரு கண்ணில னின்னையல்லால்
நெல்வாயி லரத்துறை நின்மலனே[1]
மற்றேலொரு பற்றில னெம்பெருமான்
வண்டார்குழ லாள்மங்கை பங்கினனே
அற்றார்பிற விக்கட னீந்தியேறி
யடியே னுய்யப் போவதோர் சூழல்[2] சொல்லே. 3

கோடுயர் கோங்கலர் வேங்கையலர்
மிகவுந்திவ ருந்திவ வின்கரைமேல்
நீடுயர் சோலைநெல் வாயிலரத்
துறைநின்மல னேநினை வார்மனத்தாய்
ஓடு புனற்கரை யாமிளமை
யுறங்கிவிழித் தாலொக்கு மிப்பிறவி[1]
வாடி யிருந்து வருந்தல்செய்யா
தடியே னுய்யப் போவதோர் சூழல்சொல்லே. 4

---

3. [1] நெல்வாயி லரத்துறை நின்மலனே நின்னையல்லால் ஒரு கண்ணிலன். காலம் கொன்னே கழிந்தது கருதி எற்றே என இரங்கியதாகக் கொள்க. "எற்றென் கிளவி யிறந்த பொருட்டே" (தொல், உரி.)

[2] "பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார் இறைவனடி சேராதார்" என்னுந் திருக்குறள் ஈண்டு நினைவு கூரத் தக்கது.

4. [1] 'உறங்குவது போலுஞ் சாக்கா டுறங்கி விழிப்பது போலும் பிறப்பு' என்னுந் திருக்குறட் பகுதி அவ்வாறே இத்திருப்பாடலில் எடுத்தாளப் பெறுதல் நோக்குக.

நீருரு நெடுவயல் சூழ்புறவின்
நெல்வாயி லரத்துறை நின்மலனைத்
தேரூர்நெடு வீதிநன் மாடமலி
தென்னாவலர் கோனடித் தொண்டனணி
யாரூர னுரைத்தன நற்றமிழின்
மிகுமாலையொர் பத்திவை கற்றுவல்லார்
காரூர்களி வண்டறை யானைமன்ன
ரவராகியொர் விண்முழு தாள்பவரே. 10

## திருவோணகாந்தன்றளி - பண் - இந்தளம்.

நெய்யும்பாலுந் தயிருங்கொண்டு
நித்தல்பூசனை செய்யலுற்றார்
கையிலொன்றுங் காண[1]மில்லைக்
கழலடிதொழு துய்யினல்லால்
ஐவர்[2]கொண்டிங் காட்டவாடி
யாழ்குழிப்பட் டழுந்துவேற்கு
உய்யுமாறென் றருளிச்செய்யீர்
ஓணகாந்தன்[3] றளியுளீரே 1

---

10. [1] புறவு—முல்லை நிலம்.

1. [1] காணம்—பொன். [2] ஐவர்—ஐம்பொறிகள்.

[3] ஓணகாந்தன் — திருவோண நாளுக்குரிய திருமால். அவரால் வழிபடப் பெறுந்திருக்கோயிலாதலின் ஓணகாந்தன் தளி யெனப் பட்டது. தளி—கோயில்

வாரமாகித்[1] திருவடிக்குப்
பணிசெய்தொண்டர் பெறுவதென்னே
யாரம்பாம்பு வாழ்வதாரூர்
ஒற்றியூ ரேலும்மதன்று[2]
தாரமாகக் கங்கையாளைச்
சடையில்வைத்த வடிகேளுந்தம்
ஊருங்காடு வுடையுந்தோலே
யோணகாந்தன் றளியுளீரே. 9

**திருக்கச்சி யனேகதங் காவதம் - பண் - இந்தளம்.**

தேனெய்புரிந்துழல் செஞ்சடையெம்பெரு
மானதிடந்திக ழைங்கணையக்
கோனையெரித்தெரி யாடி[1]யிடங்குல
வானதிடங்குறை யாமறையாம்
மானையிடத்ததொர் கையனிடம்மத
மாறுபடப்பொழி யும்மலைபோல்
யானையுரித்தபி ரானதிடங்கலிக்
கச்சி[2]யனேகதங் காவதமே[3] 1

கொடிகளிடைக்குயில் கூவுமிடம்மயி
லாலுமிடம்மழு வாளுடைய
கடி[1]கொள்புனற்சடை கொண்டநுதற்கறைக்
கண்டனிடம்பிறைத் துண்டமுடிச்
செடிகொள்வினைப்பகை தீருமிடந்திரு
வாகுமிடந்திரு மார்பகலத்
தடிகளிடம்மழல் வண்ணனிடங்கலிக்
கச்சியனேகதங் காவதமே. 3

---

9. [1] வாரம்—அன்பு.

[2] ஒற்றியூர் என்னும் ஊர்ப்பெயர் பிறர்க்கு ஒற்றியாக (அடைமானமாக) வைத்த ஊர் என்னுங் காரணப் பெயராகவும் கருதப்படுதலின் ''ஒற்றியூரேல் உம்மதன்று'' என நயம்படக் கூறியருளினர். ''அடிகேள் உம்மை ஒற்றிவைத்திங் குண்ணலாமோ'' என்பது நோக்குக.

1. [1] விளங்குகின்ற ஐந்து மலரம்புகளையுடைய அம் மன்மதனை விழித்தெரித்துத் தீயினகண் ஆடினேன்.

[2] கலிக்கச்சி—ஆரவாரமிக்க காஞ்சிநகர்.

[3] அனேகதங்காவதம் என்பது அங்குள்ள திருக்கோயிலின் பெயர்.

3. [1] கடி—காவல்.

## திருநாட்டியத்தான்குடி - பண் - தக்கராகம்.

பூணா ணாவதோ ரரவம்[1] கண் டஞ்சேன்
புறங்காட் டாடல்கண் டிகழேன்
பேணீ ராகிலும் பெருமையை யுணர்வேன்
பிறவே ணாகிலு மறவேன்[2]
காணீ ராகிலுங் காண்பனென் மனத்தாற்
கருதீ ராகிலுங் கருதி
நாணே லும்மடி பாடுதலொழியேன்
நாட்டியத்தான்குடி நம்பீ. 1

கூடா மன்னரைக் கூட்டத்து வென்ற
கொடிறன்[1] கோட்புலி சென்னி
நாடார்[2] தொல்புகழ் நாட்டியத் தான்குடி
நம்பியை நாளு மறவாச்
சேடார் பூங்குழற் சிங்கடி யப்பன்[3]
திருவா ரூர னுரைத்த
பாடீ ராகிலும் பாடுமின் றொண்டீர்
பாடநும் பாவம் பற்றறுமே. 10

1. [1] பூண் நாண் ஆவதோர் அரவம் எனப்பிரித்து அணிகலனாகவும் நாண் ஆகவும் விளங்குகின்ற பாம்பு எனப் பொருள் கொள்க.

[2] அடிக்கடி மாறி மாறிப் பிறவியை யடைந்தேனாயினும் நின்னை மறக்க மாட்டேன் என்பது பொருள். இங்குவந்த 'பிறவேன்' என்னுஞ் சொல் 'பிறக்கமாட்டேன்' என்னும் எதிர்மறைவினைபோற் காணப் படினும் இடம்நோக்கிப் பிறவியின்கணுளனேன், எனப் பொருள் கொள்ளப்பட்டது. "பிறவினோடிறவுமானான்" என்புழிப் பிறவு என்னுஞ் சொல் பிறப்பு என்னும் பொருளில் வழங்குகின்றது. அச் சொல்லினடியாகவே பிறப்பின்கண்ணுள்ளேன் ஆயினும் என்னும் பொருளிற் 'பிறவேன் ஆயினும்' என்னுந்தொடரும் வந்துளது.

10. [1] போர்க்களத்துத்தான் மேற்கொண்ட வீரச்செயலைக் குறடுபோல் நெகிழவிடாத தறுகணாளன்; என்றது கோட்புலி நாயனாரை.

[2] சென்னிநாடு—சோழநாடு, அதன்கணுள்ளது கோட்புலியார்க்குரிய நாட்டியத்தான்குடி என்னும் ஊராகும்.

[3] கோட்புலி நாயனார் தாம் பெற்ற புதல்வியராகிய சிங்கடி வனப்பகை என்னும் இருபெண்களையும் அடிமையாக ஏற்றருளும்படி சுந்தர மூர்த்தி சுவாமிகளை வேண்டியபொழுது சுந்தரர் இவ்விருவரும் "என் மக்களாவர்" என மக்கண் முறைமையிற் பாராட்டி ஏற்றுக் கொண்டார் ஆதலின் அத்தொடர்பு குறித்து "நாட்டியத்தான்குடி நம்பியை நாளும் மறவாச் சிங்கடியப்பன்" எனத் தம்மைக் கூறிக் கொள்கின்றார். இவ்வாறே தம் பாடலில் 'வனப்பகையப்பன்' எனவும் கூறிக்கொள்வர்.

**திருக்கலயநல்லூர் - பண் - தக்கராகம்.**

செருமேவு சலந்தரனைப் பிளந்தசுட ராழி
செங்கண்மலர் பங்கயமாச் சிறந்தானுக் கருளி[1]
இருண்மேவு மந்தகன்மேற்[2] றிரிசூலம் பாய்ச்சி
யிந்திரனைத் தோண்முரித்த[3] விறையவனூர் வினவிற்
பெருமேதை மறையொலியும்[4] பேரிமுழ வொலியும்
பிள்ளையினந் துள்ளிவிளை யாட்டொலியும்பெருகக்
கருமேதி புனன்மண்டக் கயன்மண்டக் கமலங்
களிவண்டின் கணமிரியுங் கலயநல்லூர் காணே. 1

தண்புனலும் வெண்மதியுந் தாங்கியசெஞ் சடையன்
தாமரையோன் றலைகலனாக்[1] காமரமுன்[2] பாடி
உண்பலிகொண் டுழல்பரம னுறையுமூர் நிறைநீ
ரொழுகுபுன லரிசிலின்றென்[3] கலயநல்லூரதனை
நண்புடைய நன்சடைய னிசைஞானிசிறுவன்
நாவலர்கோ னாரூர னாவினயந் துரைசெய்
பண்பயிலும் பத்துமிவை பத்திசெய்து நித்தம்
பாடவல்லா ரல்லலொடு பாவமிலர் தாமே. 2

---

1. [1] போர்வலிமிக்க சலந்தராசுரனைக் கொன்ற சக்கரப் படையைத் தன் கண்ணினைத் தாமரை மலராகக்கொண்டு வழிபட்ட திருமாலுக்கு இறைவன் அருளினர் என்பதாம்.

   [2] கருமை நிறமுடைய அந்தகாசுரன்.

   [3] இந்திரனைத் தோள்நெரித்த செயல் தக்க யாகத்தில் நிகழ்ந்ததாகும்.

   [4] பேறிவினை வளர்க்கும் வேதம்.

2. [1] பிரம கபாலம் [2] இசைப்பாடல். [3] அரிசில்—அரிசிலாறு.

### திருவேகம்பந்திருமேற்றளி - பண் - நட்டராகம்.

நொந்தா வொண்சுடரே[1] நுனையே நி[2] னைந்திருந்தேன்
வந்தாய் போயறியாய் மனமேபு குந்துநின்ற
சிந்தா யெந்தைபிரான் றிருமேற்ற ளியுறையும்[3]
எந்தா யுன்னையல்லா லினியேத்த மாட்டேனே. 1

ஆட்டான் பட்டமையா[1] லடியார்க்குத் தொண்டுபட்டுக்
கேட்டேன் கேட்பதெல்லாம் பிறவாமை
[கேட்டொழிந்தேன்[2]
சேட்டார்[3] மாளிகைசூழ் திருமேற்ற ளியுறையும்
மாட்டே[4] யுன்னையல்லால் மகிழ்ந்தேத்த மாட்டேனே. 2

---

1. [1] நொந்தா—அவியாத. நொந்தாச்சுடர் ஒண்சுடர் எனத் தனித்தனி கூட்டுக.

[2] நின்னையே; நின் நுன் எனத்திரிந்தது.

[3] மேற்றளி—மேலைத்திசையிலமைந்தகோயில்; இங்கே திருமேற்றளி யென்றது காஞ்சீபுரத்திலுள்ள கச்சிமேற்றளியினை.

2. [1] (இறைவனுக்கு) ஆட்பட்டமையால்; தான்—அசை.

[2] பிறவாவகை கேட்டொழிந்தேன். பா. வே. உயிர்கள் தொன்று தொட்டுப் பிறப்புப் பிணி மூப்பு இறப்புக்களால் துன்பமுற்று வருகின்றமையினை உணர்ந்த மெய்யுணர்வினர் தாம் விழைந்து வேண்டுவது பெரும் பேரின்பத்திற்குக் காரணமாகிய பிறவாமை யொன்றேயாதலின் இறைவனிடம் இம்மை மறுமைச் செல்வங்களாக முன்னர் வேண்டியனவெல்லாம் பின்னர்ப் பெறுவனவற்றை நோக்கக் குறையுடையனவாதலின் இப்பிறவாமையொன்றே மேலும் நிரப்ப வேண்டாத நிறைவுடையதென்பார் "கேட்டேன் கேட்பதெல்லாம் பிறவாமை கேட்டொழிந்தேன்" எனக் கூறியருளினர். இத்தொடரில் 'வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை' என்ற திருக்குறளை ஆரூரர் எடுத்தாளுதல் காண்க.

[3] சேடு ஆர் சேட்டார் என ஒற்றிரட்டியது. பெருமை நிறைந்த என்பது பொருள்.

[4] மாடு—'செல்வம் நானுடை மாடெனவே நன்மை தரும் பரனை' என வருவது காண்க. மட்டே என்பது செய்யுளாதலின் மாட்டேயென நீண்டது. மட்டு—தேன். திருமேற்றளிமாட்டேயுறையும் நின்னை யல்லால் எனக்கூட்டினும் ஆம்.

### திருமழபாடி - பண் - நட்டராகம்.

பொன்னார் மேனியனே புலித்தோலை யரைக்கசைத்து[1]
மின்னார் செஞ்சடைமேல் மிளிர்கொன்றை யணிந்தவனே
மன்னே மாமணியே மழபாடியுள் மாணிக்கமே
அன்னே[2] யுன்னையல்லா லினியாரை நினைக்கேனே. 1

கண்ணா யேழுலகுங் கருத்தாய அருத்தமுமாய்ப்
பண்ணா ரின்தமிழாய்ப்[1] பரமாய பரஞ்சுடரே
மண்ணார் பூம்பொழில்சூழ் மழபாடியுள் மாணிக்கமே
அண்ணா நின்னையல்லா லினியாரை நினைக்கேனே. 5

### திருக்கருப்பறியலூர் - பண் - நட்டராகம்.

சிம்மாந்து[1] சிம்புளித்துச்[2] சிந்தையினில் வைத்துகந்து
திறம்பா வண்ணங்
கைம்மாவி னுரிவை[3]போர்த் துமைவெருவக்[4] கண்டானைக்
கருப்பறிய லூர்க்
கொய்ம்மாவின் மலர்ச்சோலைக் குயில்பாட மயிலாடுங்
கொகுடிக் கோயில்[5]
எம்மானை மனத்தினால் நினைந்தபோ தவர்நமக்
கினிய வாறே. 1

---

1. [1] புலித்தோலை அரையிற்கட்டி.
[2] அன்னாய்—தாயே. அன்னை என்னும் ஐகார வீறு விளியேற்றது.

5. [1] இத்தொடரில் இறைவனை இசைநிறைந்த தமிழுருவானான் என ஆரூரர் போற்றுதல் காண்க.

1. [1] செம்மாந்து.
[2] சிம்புளித்தல்—கண்ணை மூடிக்கொள்ளுதல்.
[3] ஒருகையுடைய விலங்காகிய யானையின்தோல்.
[4] வெருவ—அஞ்ச.
[5] கொகுடி—முல்லையில் ஒருவகை. இக்கொடி சூழ்ந்து விளங்கினமை பற்றி இத்திருக்கோயில் கொகுடிக் கோயில் என வழங்கப்பெறும். உமைவெருவக் கண்டானை, கொகுடிக்கோயில் எம்மானை, சிம்மாந்து சிம்புளித்துத் திறம்பா வண்ணம் சிந்தையினில் வைத்துகந்து மனத்தினால் நினைந்தபோது அவர் நமக்கு இனியவாறு என்னே என முடிக்க.

கலைமலிந்த தென்புலவர்[1] கற்றோர்தம் மிடர்தீர்க்குங்
கருப்பறிய லூர்க்
குலைமலிந்த கோட்டெங்கு[2] மட்டொழுகும் பூஞ்சோலைக்
கொகுடிக் கோயில்
இலைமலிந்த[3] மழுவாளை மனத்தினா லன்புசெய்
தின்ப மெய்தி
மலைமலிந்த தோளூரன் வனப்பகையப் பன்னுரைத்த
வண்டமிழ்களே. 11

**திருப்புகலூர் - பண் - கொல்லி.**

தம்மையேபுகழ்ந் திச்சைபேசினுஞ்
சார்வினுந்தொண்டர் தருகிலாப்
பொய்ம்மை யாளரைப் பாடாதே[1]யெந்தை
புகலூர்பாடுமின் புலவீர்காள்
இம்மையேதருஞ் சோறுங்கூறையு[2]
மேத்தலாமிடர் கெடலுமாம்
அம்மையே[3]சிவ லோகமாள்வதற்
கியாதுமையுற வில்லையே. 1

---

11. [1] கலைகள் நிரம்பப்பெற்ற தென்றமிழ் வல்லபுலவர்.

[2] கோள்தெங்கு—காய்களையுடைய தென்னை.

[3] இலைமலிந்தமழு—இலையின் வடிவுபோன்றமைந்த மழுப்படை 'இலைமலிந்த வேல்' எனவருந் திருத்தொண்டத்தொகைத் தொடர் ஈண்டு ஒப்புநோக்கத்தக்கது.

1. [1] தம்மையே புகழ்ந்து இச்சைபேசினுஞ் சார்வினுந் தருகிலாப் பொய்ம்மையாளர் எனவும் தொண்டர்க்கு (ஒரு பொருளையுந்) தருகிலாப் பொய்ம்மையாளர் எனவுந் தனித்தனி இயைத்துரைக்க. தொண்டர்க்கு என்னும் நான்காம் வேற்றுமை யுருபு செய்யுள் விகாரத் தாற்றொக்கது.

[2] இம்மையே சோறும் கூறையும் தரும் எனமுடிக்க. இம்மை—இப்பிறவி. கூறை—உடை.

[3] அம்மை—வருபிறப்பு.

மிடுக்கிலாதானை[1] வீமனேவிறல்
விசயனேவில்லுக் கிவனென்று
கொடுக்கிலாதானைப் பாரியேயென்று
கூறினுங்[2]கொடுப் பாரிலை
பொடிக்[3]கொள்மேனியெம் புண்ணியன்புக
ழூரைப்பாடுமின் புலவீர்காள்
அடுக்குமேலம ருலகமாள்வதற்
கியாதுமையுற வில்லையே. 2

**திருவாரூர் - பண் - கொல்லி.**

குருகுபா யக்கொழுங் கரும்புக ணெரிந்தசா
றருகுபா யும்வய லந்தண ரூரரைப்
பருகுமா றும்பணிந் தேத்துமா றுந்நினைந்
துருகுமா றும்மிவை யுணர்த்தவல் லீர்களே. 1

---

2. [1] மிடுக்கு—வலிமை.

[2] ஓரறிவுயிராகிய முல்லைக்கொடி படர்தற்குக் கொழு கொம்பில்லாது வாடியது கண்டு வருந்தி உளங்கனிந்து தனது ஒப்பற்ற பெருந் தேரை நல்கிய பெரியோன் தன்னலங் கருதாது மன்னுயிர் புரக்கும் வள்ளல் பாரியாதலின் அவனொருவனே ஏனையோர்க்கு உவமையாக எடுத்துரைக்கும் உயர்வுடையோன் என்பார், "பாரியே யென்று கூறினும்" என அவனைச் சிறப்பித்தருளினர்.

[3] பொடி—திருநீறு.

1. அந்தணரூரர்—அழகிய தண்ணளியையுடைய ஆரூரிறைவர். ஆரூரிறைவர்மேற் காதல் கொண்ட தலைவி யொருத்தி தன் ஆற்றாமை மிகுதலால் குருகு முதலியவற்றை நோக்கி அப்பெருமான்பால் தூது சென்றுவர வேண்டுமென வேண்டியிரங்குவதாக இப்பதிகம் அமைந்துள்ளது.

பறக்குமெங் கிள்ளைகாள்[1] பாடுமெம் பூவைகாள்[2]
அறக்கணென் னத்தகு மடிகளா[3] ரூராரை
மறக்ககில் லாமையும் வினைகணில் லாமையும்
உறக்கமில் லாமையு முணர்த்தவல் லீர்களே. 2

**திருக்கச்சூராலக்கோயில் - கொல்லிக்கௌவாணம்.**

முதுவாயோரி[1] கதறமுதுகாட்
டெரிகொண்டாடல் முயல்வானே
மதுவார்கொன்றைப் புதுவீசூடும்[2]
மலையான்மகடன் மணவாளா
கதுவாய்த்தலையிற்[3] பலிநீகொள்ளக்
கண்டாலடியார் கவலாரே
அதுவேயாமா றிதுவோகச்சூர்
ஆலக்கோயி லம்மானே. 1

---

2. [1] கிள்ளை—கிளி; திரி சொல்.

[2] பூவை—நாகணவாய்ப் பறவை.

[3] இறைவன் அறத்திற்குப் பற்றுக்கோடாய் நின்று கண்போன்று உதவுதலால் 'அறக்கண் என்னத்தகும் அடிகள்' என்றார். இறைவனது திருவருளை நம்பி ஏற்றுக்கொண்டோரே அறங்கொண்டோராவர் என்பதனை "நின் குணமெதிர் கொண்டோர் அறங் கொண்டோர்" எனவரும் பரிபாடற்றொடரால் அறியலாம்.

1. [1] ஓரி—நரி.

[2] புதுவீ—புதுப்பூ.

[3] கதுவாய்த்தலை—உடைந்து குறைவுபட்ட வாயினையுடைய தலை; அஃதாவது பிரமகபாலம்.

பொய்யேயுன்னைப் புகழ்வார்புகழ்ந்தா
லதுவும்பொருளாக் கொள்வானே[1]
மெய்யேயெங்கள் பெருமானுன்னை
நினைவாரவுரை நினைகண்டாய்
மையார்தடங்கண் மடந்தைபங்கா
கங்கார்மதியஞ் சடைவைத்த
ஐயாசெய்யாய் வெளியாய்கச்சூர்
ஆலக்கோயி லம்மானே. 7

**திருவாரூர் - பண் - பழம்பஞ்சுரம்.**

பத்திமையு மடிமையை[1]யுங் கைவிடுவான் பாவியேன்
பொத்தினநோ[2] யதுவிதனைப் பொருளறிந்தேன் போய்த்தொழுவேன்
முத்தினைமா மணிதன்னை வயிரத்தை மூர்க்கனேன்
எத்தனைநாள் பிரிந்திருக்கே னென்னாரூ ரிறைவனையே. 1

ஏழிசையா யிசைப்பயனா யின்னமுதா யென்னுடைய
தோழனுமா[1] யான்செய்யுந் துரிசுகளுக் குடனாகி[2]
மாழையொண்கண் பரவையைத்தந் தாண்டானை[3] மதியில்லா
வேழையேன் பிரிந்திருக்கே னென்னாரூ ரிறைவனையே. 10

---

7. [1] இறைவன்பால் உண்மையன் பின்றிச் சிலர் உலகினரை யேமாற்ற எண்ணித் தாம் மெய்யன்புடையார்போல் வெறுஞ் சொல்லளவில் இறைவனைப் புகழ்வாராயினும் இறைவன் அவரது வெறுஞ்சொல்லையும் உணர்ச்சிமிக்க போற்றுதலாகக் கொண்டு அவர் தம் மனத்தைத் திருத்தியருளுமியல்பினன் என்பதனை இத்தொடர் கொண்டு தெளிக.

1. [1] பத்திமை—அன்புநெறி. அடிமை—அன்பின்வழிப்பட்டதொண்டு.
[2] பொத்தின நோய்—உடலை மூடிய பிணி.

10. [1] என்னுடைய தோழனுமாய் என்றது "தோழமையாகவுனக்கு நம்மைத் தந்தனம்" என ஆரூரிறைவர் அருளியவாறு தம்பிரான் றோழராகிய சிறப்பினை.
[2] துரிசு—குற்றம்.
[3] மாவடுவகிரை யொத்த கண்ணினையுடைய பரவைநாச்சியாரைத் திருமணம் புரிவித்து ஆட்கொண்ட திருவாரூர்ப் பெருமானை. மாழை—மாவடு.

### திருக்கழுமலம் - பண் - தக்கேசி.

சாதலும் பிறத்தலுந் தவிர்த்தெனை வகுத்துத்
தன்னருள் தந்தவெந் தலைவனை[1] மலையின்
மாதினை மதித்தங்கோர் பால்கொண்ட மணியை
வருபுனல் சடையிடை வைத்தவெம் மானை
யேதிலென் மனத்துக்கோ ரிரும்புண்ட நீரை[2]
யெண்வகை யொருவனை[3] யெங்கள்பி ரானைக்
காதில்வெண் குழையனைக் கடல்கொள மிதந்த
கழுமல வளநகர்க் கண்டுகொண் டேனே. 1

மற்றொரு துணையினி மறுமைக்குங் காணேன்[1]
வருந்தலுற் றேன்மற வாவரம் பெற்றேன்
சுற்றிய சுற்றமுந் துணையென்று கருதேன்
துணையென்று நான்தொழப் பட்டவொண் சுடரை
முத்தியும் ஞானமும் வானவ ரறியா
முறைமுறை பலபல நெறிகளுங் காட்டிக்
கற்பனை கற்பித்த கடவுளை[2] யடியேன்
கழுமல வளநகர்க் கண்டுகொண் டேனே. 2

---

1. [1] இவ்வொரு பிறவியிலேயே பிறப்பிறப்பில்லாப் பெருநெறியாகிய வீட்டினைத் தலைப்படத் தமக்கு நெறிமுறை வகுத்துத் திருவருள் செய்தான் என்பார், 'சாதலும் பிறத்தலும் தவிர்த்து எனை வகுத்துத் தன்னருள் தந்த எம் தலைவனை' என இறைவனைப் போற்றினர்.

[2] இறைவன் பாசக் கூட்டத்தி னீங்கித் தனியாய் நின்ற என் மனத்துச் சோகம்பாவனையாற் புகுந்து மீட்டற்கரிய நிலையில் பிரிப்பின்றி உடனுறைன் என்பார். "ஏதிலன் மனத்துக்கோர் இரும்புண்ட நீரை" எனக் குறிப்பிட்டருளினர். தீயிற் பழுக்கக் காய்ச்சிய இரும்பின் கணணே தெளிக்கப்பட்டுச் சுவறிய நீர் பின் பிரித்தெடுத்தற்குரிய தல்லாதவாறு ஒன்றும் என்பதைக் "காணப்பேரெயில் கருங்கைக் கொல்லன் செந்தீ மாட்டிய இரும்புண் நீரினும் மீட்டற் கரிதென" என வரும் புறப்பாட்டடிகளாற் புலனும்.

[3] அட்டமூர்த்தமாய் நின்ற ஒருவன் என்பது பொருள்.

2. [1] இனி மறுமைக்கு மற்றொரு துணையுங் காணேன் என உம்மையைப் பிரித்துக் கூட்டுக.

[2] ஈண்டுக் கற்பனையென்றது மெய்யுணர்வின் உபதேசத்தையேயாம். "அருங்கற்பனை கற்பித்தாண்டாய்" எனத் திருவாதவூரடிகள் கூறுதல் காண்க,

## திருக்கோலக்கா - பண் - தக்கேசி.

புற்றில் வாளர வார்த்தபி ரானைப்
பூத நாதனைப் பாதமே தொழுவார்
பற்று வான்றுணை யெனக்கெளி வந்த
பாவ நாசனை மேவரி யானை
முற்ற லார்[1] திரி புரமொரு மூன்றும்
பொன்ற[2] வென்றி வரையரி யம்பாக்
கொற்ற வில்லங்கை யேந்திய கோனைக்
கோலக் காவினிற் கண்டுகொண் டேனே. 1

நாளு மின்னிசை யாற்றமிழ் பரப்பு
ஞான சம்பந்த னுக்குல கவர்முன்
தாள மீந்தவன் பாடலுக் கிரங்குந்
தன்மை யாளனை[1] யென்மனக் கருத்தை
ஆளும் பூதங்கள் பாட நின் றாடும்
அங்க ணன்றனை யெண்கண[2] மிறைஞ்சுங்
கோளி லிப்பெருங் கோயிலுள் ளானைக்
கோலக் காவினிற் கண்டுகொண் டேனே. 8

1. [1] முற்றலார்—பகைவர். [2] பொன்ற—அழிய.

2. [1] நாடோறும் தமக்கு இறைவன் அருளிய இனிய தெய்வ இசையால் செந்தமிழ் மொழியைப் பரப்பிவருந் தொண்டுபூண்ட திருஞான சம்பந்தப் பிள்ளையார் திருக்கோலக் காவினையடைந்து 'மடையில் வாளை' யெனத் தொடங்குந் திருப்பதிகத்தைத் தம் மலரினும் மெல்லிய கைகளினால் தாளமிட்டுப் பாடியபோது, திருக்கோலக்காவில் எழுந்தருளிய இறைவன், பிள்ளையார் கைகள் வருந்தாவண்ணம் திருவைந்தெழுத்தெழுதிய செம்பொற் றாளத்தினை அங்குள்ள மக்களனைவரும் காணக் கொடுத்தருளி ஆளுடைய பிள்ளையாரது திருப்பதிகப் பாடல்கேட்டு மகிழ்ந்தார் என்பது வரலாறு. இவ்வரலாற்றை இத் திருப்பாடலில் சுந்தரர் மனமுருகிப் போற்றுதல் காண்க.

[8] எண்கணம்—பதினெண்கணம்; தெரிந்த பொருள்களின் தொகை யெண்களில் பேரெண்களாகிய முழுமையையுள்ளடக்கிச் சிற்றெண் களாகிய எச்சத்தைமட்டும் வெளிப்படக் கூறுதல் உலகியல் மரபு. இவ்வாறன்றி எண்கணம் என்பதற்கு மதிக்கத்தக்க சிவகணங்கள் எனக்கூறினும் ஆம்.

### திருவானைக்கா - பண் - காந்தாரம்.

மறைக ளாயின நான்கு மற்றுள பொருள்களு மெல்லாந்
துறையுந் தோத்திரத் திறையுந் தொன்மையு நன்மையு
[மாய[1]
வறையும் பூம்புன லானைக் காவுடை யாதியை[2] நாளும்
இறைவ னென்றடி சேர்வா ரெம்மையு மாளுடை யாரே. 1

தார மாகிய பொன்னித் தண்டுறை யாடி விழுத்து
நீரி னின்றடி போற்றி நின்மலா கொள்ளென வாங்கே
ஆரங் கொண்டவெம் மானைக் காவுடை யாதியை[1] நாளும்
ஈச முள்ளவர்[2] நாளு மெம்மையு மாளுடை யாரே. 7

1. [1] ஆயவென்பதனை நான்கும், பொருள்களும், துறையும், இறையும், தொன்மையும் என்பனவற்றுடன் தனித்தனி கூட்டுக.

[2] ஆய ஆதி, ஆனைக்காவுடை ஆதி எனத் தனித்தனி முடிக்க. ஆதி—தலைவன்.

7. [1] உறையூரைத் தலைநகராகக் கொண்டு ஆண்ட சோழனொருவன் நன் மணி மாலையொன்றினை யணிந்துகொண்டு காவிரியில் நீராடுங்கால் அவன் மூழ்கிய நிலையில் அவனணிந்த மணிமாலை வெள்ளத்தால் மோதப்பெற்றுக் கழன்று நீரொடு சென்றதென்பதும் அதுகண்ட சோழன் இறைவனை வணங்கி இத்தகைய பெறுதற்கரிய மாலையை எங்ஙனமாயினும் நீ ஏற்றருளவேண்டும் என வேண்டிய நிலையில் அம் மாலை திருவானைக்காவில் காவிரித்துறையில் இறைவன் திருமஞ்சனத் துக்கெனக் கொண்டுவரப்பட்ட திருமஞ்சனக் குடத்துட் புகுந்து ஆனைக்கா இறைவனை நீராட்டும்போது அப்பெருமான் திரு மேனிக்கு அணிகலனாகியதென்பதும் வரலாறு. இவ்வரலாறு இத் திருப்பாடலிற் கூறப்பட்டமை யுணர்க.

**திருவையாறு - பண் - காந்தார பஞ்சமம்.**

பரவும் பரிசொன் றறியேனான்
பண்டே யும்மைப் பயிலாதேன்
இரவும் பகலு நினைந்தாலும்
எய்த நினைய மாட்டேனான்
காவி லருவி கமுகுண்ணத்
தெங்கங் குலைக்கீழ்க் கருப்பாலை[1]
அரவந் திரைக்கா விரிக்கோட்டத்
தையா றுடைய வடிகளோ. 1

கூடி யடியா ரிருந்தாலுங்
குணமொன் றில்லீர்[1] குறிப்பில்லீர்
ஊடி யிருந்து முணர்கிலேன்
உம்மைத் தொண்ட னூரனேன்
தேடி யெங்குங் காண்கிலேன்
திருவா ரூரே சிந்திப்பன்
ஆடுந் திரைக்கா விரிக்கோட்டத்
தையா றுடைய வடிகளோ 11

1. சேரமான் பெருமானுடன் சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருவையாற்றை வணங்க வந்தபோது காவிரியிற் பெருவெள்ளம் வர அதனைக் கடந்து செல்லமுடியாத நிலையில் தென் கரையில் நின்ற ஆரூரர் ஐயாற்றிறைனை அன்பினால் அழைத்துப் பாடிய திருப்பதிகம். இதனைப் பாடியவுடன் காவிரியாறு வெள்ளம் விலகி இவர்கள் செல்ல வழி கொடுத்தது என்பது வரலாறு.

[1] கரும்பு ஆலை கருப்பாலை எனத்திரிந்து நின்றது.

11. [1] தனக்கென ஒரு குணமுமின்றித் தன்னியல்பில் நிற்போன் இறைவனாகலின் 'குணமொன்றில்லீர்' என அப்பெருமானைக் குறிப்பிட்டனர்.

## திருப்பருப்பதம் - பண் - நட்டபாடை.

மானும்மறை யினமும்மயி லினமுங்கலந் தெங்குந்
தாமேமிக மேய்ந்துதடஞ் சுனைநீர்களைப்[1] பருகிப்
பூமாமர முரிஞ்சிப்[2]பொழி லூடேசென்று புக்குத்
தேமாம்பொழி னீழற்றுயில் சீபர்ப்பத மலையே.[3] 1

மையார்தடங் கண்ணண்மட மொழியாள்புனங் காக்கச்
செவ்வேதிரிந் தாயோவெனப் போகாவிட விளிந்து
கைபாவிய கவணான்மணி யெறியவிரிந் தோடிச்
செவ்வாயின கிளிபாடிடுஞ் சீபர்ப்பத மலையே. 4

1. நீர்கள் என்பது காலத்தொடுபட்ட வழக்குச்சொல். மானும் மறை யினமும் மயிலினமும் எழுவாய். கலந்து மேய்ந்து பருகி உரிஞ்சிச் சென்றுபுக்கு என ஒன்றையொன்று தொடர்ந்து வரும் எச்சங்களைத் துயில் என்னும் முதனிலையோடு முடிக்க.

4. [1] மை தீட்டிய அகன்ற கண்ணினையும் இளமை மிக்க மழலை மொழி யினையுமுடைய தலைவியொருத்தி தினைப்புனங் காத்தற்பொருட்டுப் புனத்தில் நெடுகச்சென்று ஆயோ என்னும் ஓசையால் கதிர் உண்ணுத படி பறவைகளை விலக்கவும் அங்கு கதிர் கவர வந்த செவ்வாய்ப் பசுங்கிளிகள் தலைவியின் குரலைத் தம்மினத்தைச் சேர்ந்த வேறொரு கிளியின் குரலெனக் கருதி அப்புனத்தைவிட்டுப் போகாது தங்கின வாக தலைவி அதுகண்டு சினந்து தன் கையிற் பொருந்திய கவணால் மணிகளைக் கற்களாகக்கொண்டு வீசியபோது அக் கிளிகளெல்லாம் விரைந்து ஓடி ஒருபுறம் பாடி மகிழ்தற்கேற்ற வளமுடையது திருப் பருப்பதம் என்னும் இம்மலையாகும் என்பது பொருள்.

விளிந்து—சினந்து. இத்திருப்பாடலில் "குருவியோப்பியுங் கிளி கடிந்தும் குன்றத்துச் சென்றுவைகி" என இளங்கோவடிகள் கூறிய குறிப்புப் பொருள் நன்கு விளக்கம் பெறுதல் காண்க.

### திருவாரூர் - பண் - புறநீர்மை.

அந்தியு நண்பகலு மஞ்சு பதஞ்[1]சொல்லி
முந்திியெ ழும்பழைய வல்வினை மூடாமுன்
சிந்தைப ராமரியாத்[2] தென்றிரு வாரூர்புக்
கெந்தைபி ரானாரை யென்றுகொ லெய்துவதே. 1

ஆறொளி நீர்நிலந்தீத் தாழ்வளி யாகாசம்
வானுயர் வெங்கதிரோன் வண்டமிழ் வல்லவர்கள்
ஏழிசை யேழ்நரம்பி னோசையை யாரூர்புக்
கேழுல காளியைநா னென்றுகொ லெய்துவதே.[1] 6

### திருப்பனையூர் - பண் - சீகாமரம்.

மாட மாளிகை கோபு ரத்தொடு
மண்டபம்வள ரும்வளர் பொழில்
பாடல்வண் டறையும் பழனத்திருப்பனையூர்த்
தோடு பெய்தொரு காதி னிற்குழை
தூங்கத்[1] தொண்டர்கள் துள்ளிப்பாடநின்
றாடு மாறு வல்லா ரவரே யழகியரே 1

---

1. [1] அஞ்சுபதம்—திருவைந்தெழுத்து; இத்திருமந்திரத்துள் ஒவ்வோ ரெழுத்தும் குறிப்பினால் வெவ்வேறு சிறப்புப் பொருளுணர நின்றமையின் எழுத்தென்னாது பதம் என்றார்.

[2] பராமரியா—ஆதரித்து விரும்பி.

6. [1] இறைவன் அட்ட மூர்த்தமாய் விளங்கும் தன் பொதுநிலையே யன்றி வளமிக்க தமிழ்ப்புலமையில் வல்ல புலவர்களாகவும் அவர்களால் வளர்க்கப்பெற்ற எழிசையான்மிக்க யாழின் இனிய இசையாகவும் விளங்கும் சிறப்புநிலையும் ஒருங்குடையான் என்பதனை இத் திருப் பாடல் விளக்குதல் காண்க.

1. பெண்ணொரு பாதியனாகிய பெருமான் இடக்காதில் மகளிர் அணிகலனாகிய தோடும் வலக்காதில் ஆடவரணிகலனாகிய குண்டலமும் அணிந்த திருவுருவமுடையான் என்பது இத்தொடராற் புலனாகும்.

[1] தூங்க—அசைய.

வஞ்சி நுண்ணிடை மங்கை பங்கினர்[1]
    மாதவர் வளரும் வளர்பொழிற்
பஞ்சின் மெல்லடியார்பயிலுந் திருப்பனையூர்
வஞ்சி யும்வளர் நாவ லூரன்
    வனப்பகையவ ளப்பன்[2] வன்றொண்டன்
செஞ்சொற் கேட்கப்பா ரவரே யழகியரே. 10

**திருவெண்பாக்கம் - பண் - சீகாமரம்;**

பிழையுளன பொறுத்திடுவ ரென்றடியேன் பிழைத்தக்காற்
பழியதனைப் பாராதே படலமென்கண் மறைப்பித்தாய்[1]
குழைவிரவு வடிகாதா கோயிலுளா யேயென்ன
உழையுடையா னுள்ளிருந்து வுளோம்போகீ ரென்றானே[2]. 1

---

10. [1] கொடிபோலும் நுண்ணிய இடையினையுடைய உமாதேவியாரை ஒரு பாகத்தே கொண்ட இறைவர். அவருக்குரிய திருப்பனையூர் என இயைத்துரைக்க.

1. சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருவொற்றியூர்த் திருக்கோயில் மகிழடியில் சங்கிலியார்க்கு நின்னைப் பிரியேன் எனச் சபதம் செய்து கொடுத்து அவரைத் திருமணம் புணர்ந்து இன்புறுநாளில், திருவாரூர்ப் பெருமானை வணங்கவேண்டும் என்னும் ஆர்வம் மீதூர்தலால் சங்கிலியார்க்குச் சொல்லாது அவர்க்குத் தாம் செய்து கொடுத்த சபதத்திற்கு மாறாக ஒற்றியூரை விட்டுப் புறப்பட்டார். அதனால் இரண்டு கண்களும் மறைந்து குருடாகிய நிலையிற் பெரிதும் வருந்தி இறைவனைப் பாடி வடதிருமுல்லை வாயிலையும் வணங்கித் திருவெண்பாக்கத்திற்கு வந்தார். அவ்வூர்ப் பெருமானை வணங்கி நின்று யான் வருந்த நீர் மகிழ்வுடன் இத்திருக்கோயிலினுள் உள்ளீரோ என வினவினார். அது கேட்ட இறைவனும் 'உளோம் போகீர்' எனக் கூறி ஊன்று கோலொன்று கொடுத்தருளினார். அப்போது பாடியருளப்பெற்ற திருப்பதிகம் இதுவென்பது இத்தொடரால் தெளிவுறுதல் அறிக.

[1] என் கண் படலம் மறைப்பித்தாய் என இயைத்துரைக்க. படலம் — கண்ணொளியை மறைக்கும் நேத்திரப் படலமென்னும் நோய்.

பொன்னவிலுங் கொன்றையினய் போய்மகிழ்க்கீ
[ழிருவென்று
சொன்னவினைக் காணமே சூளுறவு மகிழ்க்கீழே,
யென்னவல்ல பெருமானே[1] யிங்கிருந்தா யோவென்ன
ஒன்னலரைக் கண்டாற்போ லுளோம்போகீ ரென்றானே. 9

**கோயில் - பண் - குறிஞ்சி.**

மடித்தாடு மடிமைக்க ணன்றியே மனனேநீ
வாழு நாளுந்
தடுத்தாட்டித் தருமனார் தமர்[1] செக்கி லிடும்போது
தடுத்தாட் கொள்வான்
கடுத்தாடுங் கரதலத்திற் றமருகமு[2] மெரியகலுங்
கரிய பாம்பும்
பிடித்தாடிப் புலியூர்ச்சிற் றம்பலத்தெம் பெருமானைப்
பெற்றா மன்றே. 1

---

9. தம்மைப்பிரியாமைக்கு ஒரு சபதத்தை ஆரூரர் செய்து கொடுக்க வேண்டுமென ஒற்றியூரிறைவரைக்கொண்டு சங்கிலியார் வற்புறுத்திய பொழுது, ஆரூரர் சங்கிலியுடன் யான் சபதஞ்செய்ய வரும்போது கோயிலை விட்டுத் தங்குமிடம் மகிழமரத்தடியிற் கொள்ளவேண்டும் என இறைவனைத் தனியே வேண்டினரென்பதையும், அதற்குடன் பட்ட இறைவர் மீண்டும் சங்கிலியாரையடைந்து "ஆரூரன் நம் முன்னிலையிற் கோயிலிற் சபதம் செய்தற்கு உடன் படாது மகிழ மரத்தடியில் செய்யச் சொல்லி நீ ஏற்றுக்கொள்க" எனச் சங்கிலியார்க்கு அறிவுறுத்தினர் என்பதையும் சுந்தரர் இத் தொடரால் வருந்தி வெளியிடுதல் காண்க. இச் செயல் இறைவனது செம்மை நிலையை வெளிப்படுத்தல் அறியத்தக்கது.

1. [1] தருமனார்தமர்—இயமன் சுற்றத்தாராகிய ஏவலர்.
[2] தமருகம்—உடுக்கை.

பாரூரு மரவல்கு லுமைநங்கை யவள்பங்கன்
பைங்க ணேற்றன்
ஊரூரன் றருமனார் தமர்செக்கி லிடும்போது
தடுத்தாட் கொள்வான்
ஆரூரன் றம்பிரா னாரூரன் மீகொங்கி
லணிகாஞ் சிவாய்ப்
பேரூர் பெருமானைப் புலியூர்ச்சிற் றம்பலத்தே
பெற்றா மன்றே [1] 10

**திருவாரூர் - பண் - செந்துருத்தி.**

மீளா வடிமை யுமக்கே யாளாய்ப்
பிறரை வேண்டாதே
மூளாத் தீப்போ லுள்ளே கனன்று[1]
முகத்தான் மிகவாடி
ஆளா யிருக்கு மடியார் தங்க
ளல்லல் சொன்னக்கால்
வாளாங் கிருப்பீர்[2] திருவா ரூரீர்
வாழ்ந்து போதீரே. 1

---

10. [1] மீகொங்கு என்பது கொங்கு நாட்டின் மேற் பகுதியாகும். காஞ்சியென்பது அந்நாட்டில் ஓடும் நொய்யலாறாகும். அதன் துறையிலமைந்தது பேரூராதலின் அது காஞ்சிவாய்ப் பேரூர் என வழங்கப் பெறும். அவ்வூரில் தாம் முன்னர்க்கண்ட கூத்தப்பெருமான் கோலத்தைத் தில்லைச் சிற்றம்பலத்திற் கண்டு மகிழ்ந்ததாக இத் திருப்பாடலில் சுந்தரர் குறிப்பிட்டமை சிந்திக்கத்தக்கது.

1. காஞ்சியில் இடக்கண் பெற்றுத் திருவாரூரையடைந்து சுந்தரர் மற்றொரு கண்ணாகிய வலக்கண்ணையுந் தந்தருளும்படித் திருவாரூரிறைவனை வேண்டிப் பாடப்பெற்றது இத்திருப்பதிகமாகும்.

[1] கனன்று—கொதிப்புமிகுந்து

[2] வாளாங்கு இருப்பீர்—கருத்தின்றிச சும்மாவிருக்கின்றீர்.

விற்றுக் கொள்வீ ரொற்றி யல்லேன்[1]
விரும்பி யாட்பட்டேன்
குற்ற மொன்றுஞ் செய்த தில்லைக்
கொத்தை யாக்கினீர்[2]
எற்றுக் கடிகே ளென்கண் கொண்டீர்
நீரே பழிபட்டீர்
மற்றைக் கண்தான் தாரா தொழிந்தால்
வாழ்ந்து போதீரே. 2

**திருநனிபள்ளி - பண் - பஞ்சமம்.**

ஆதிய னாதிரையன் னயன் மாலறி தற்கரிய
சோதியன் சொற்பொருளாய்ச் சுருங் காமறை நான்கினையும்
ஓதிய னும்பர்தங்கோ னுல கத்தினு ளெவ்வுயிர்க்கும்
நாதிய[1] னம்பெருமா னண்ணு மூர்நனி பள்ளியதே. 1

---

2. [1] ஒற்றியல்லேன்—அடைமானப் பொருளல்லேன்; முழுவதும் விற்பதற்குரிய விலைத்தீட்டுப் பொருளாகவே நும்மிடம் ஒப்படைக்கப் பெற்றேன் என்பது கருத்து. ஆகவே நீவிர் விரும்பிய வண்ணம் விற்றுக் கொள்வீர் என வேண்டினாராயிற்று. ஒருவன்பால் ஒற்றி வைத்த பொருள் விற்பதற்குரிமையுடையதன்றென்பதும் விலைத்தீட்டாகச் சாசனஞ்செய்து ஒப்படைக்கப்பட்ட பொருளே விற்பதற்குரியதென்பதும் அம்முறையில் 'ஆவணஞ் செய்தென்னையாளுங் கொண்டார்' என ஆரூரே கூறிக்கொள்ளுதலால் அவர் இறைவனால் விற்றுக்கொள்ளுதற்குரிய முற்றுரிமைப் பொருளேயாவ ரென்பதும் நன்கு புலனாம். 2. கொத்தை — குருடு.

1. [1] எவ்வுயிர்க்கும் நாதியன்—எல்லாவுயிர்க்கும் பற்றுக்கோடாகிய உறவினனாக விளங்குபவன். ஞாதியன் நாதியன் எனத்திரிந்தது.

ஏன மருப்பினொடு மெழிலார்மையும் பூண்டுகந்து
வான மதிலரண மலை யேசிலை யாவளைத்தான்[1]
ஊனமில் காழிதன்னு ளுயர் ஞானசம் பந்தர்க்கன்று
ஞான மருள் புரிந்தா னண்ணு மூர்நனி பள்ளியதே.[2] 9

காலமு நாழிகையுந் நனி பள்ளிமனத்தி னுள்கிக்
கோலம தாயவனைக் குளிர் நாவல வூரன் சொன்ன
மாலை மதித்துரைப்பார் மண் மறந்துவா னோருலகிற்
சாலநல் லின்பமெய்தித் தவ லோகத்தி ருப்பவரே 10

---

9. [1] வளைத்தான் என்பது எய்தான் என்னும் பொருளது. வான மதில் அரணம் எய்தான் என முடிக்க.

[2] சீகாழிப்பதியில் மூவாட்டைப் பருவத்தினராய ஆளுடைய பிள்ளையார் அம்மே அப்பா என அழைத்து அழுதருளியபோது, இறைவன் அம்மையாருடன் விடைமேற்றோன்றிப் பொற்கிண்ணத்து எண்ணரிய சிவஞானத்து இன்னமுதங் குழைத்து உண் அடிசில் என ஊட்டியருளிய செய்தியினை இத்திருப்பாடல் விளங்கவுரைத்தல் நினைக்கத் தக்கது.

10. உள்கி—நினைந்து. நல்லின்பம் சால எய்தி—நல்ல இன்பத்தினை நிரம்பப்பெற்று.

திருவாதவூரடிகள் திருவாய்மலர்ந்தருளிய

திருவாசகம் - திருக்கோவையார்

# எட்டாந் திருமுறை.

---

## *திருச்சதகம் - மெய்யுணர்தல்.

கொள்ளேன் புரந்தரன் மாலயன் வாழ்வு[1] குடிகெடினும்
நள்ளேன் நினதடி யாரொ டல்லாவர[2] கம்புகினும்
எள்ளேன் றிருவரு ளாலே யிருக்கப் பெறினிறைவா[3]
உள்ளேன் பிறதெய்வ முன்னையல் லாதெங்க[4] ளுத்தமனே 2

---

* நூறு செய்யுட்களாலாகிய திருப்பாடற்றொகை. சதகம்—நூறு.

2. இந்திரன் திருமால் நான்முகன் என்போர் பதவிகளை ஒருபொருளாக மதியேன்.

[2] எனது குடும்பத்தொடர்ச்சி அடியோடழிதல் நேருமாயினும் அதனை நிலை நிறுத்தல் வேண்டி நின்னுடைய அடியார்களோடன்றிப் பிறரோடு நட்புக்கொள்ளமாட்டேன்.

[3] நினது திருவருளாலே செலுத்தப்பெற்று நின்னை நினைத்திருக்கும் வாய்ப்பு நேருமானால் நரகம் புகுந்தாலும் அதனையிகழமாட்டேன்.

[4] முழுமுதற்கடவுளும் எங்கள் பெரியோனும் ஆகிய உன்னையல்லாது பிறிதொரு தெய்வமிருப்பதாக ஒரு சிறிதுங் கருதமாட்டேன். கொள்ளுதல்-பொருளாக மதித்தல். நள்ளுதல்-நட்புச் செய்தல். எள்ளுதல்-இகழ்தல். உள்ளுதல்-கருதுதல்.

தவமே புரிந்திலன் தண்மல ரிட்டு[1]முட் டா[2]திறைஞ்சேன்
அவமே[3] பிறந்த அருவினை யேனுனக் கன்பருள்ளாஞ்
சிவமே பெறுந்திரு[4] வெய்திற்றி லேனின் றிருவடிக்காம்
பவமே யருளுகண் டாயடி யேற்[5]கெம் பரம்பரனே.

**அறிவுறுத்தல்.**

வானாகி மண்ணாகி வளி[1]யாகி ஒளி[2]யாகி
ஊனாகி[3] யுயிராகி யுண்மையுமா யின்மையுமாய்க்
கோனாகி[4] யானெனதென் றவரவரைக் கூத்தாட்டு
வானாகி நின்றாயை யென்சொல்லி வாழ்த்துவனே

---

5. [1] தண்மலர் இட்டு - குளிர்ந்த மலர் தூவி.

[2] முட்டாது - குறைவின்றி.

[3] ஒரு பயனுமின்றி, வீணாக.

[4] உனக்கு அன்பருள்ளாம் திரு, சிவமேபெறுந் திரு என ஈரிடத்தும் இயைத்துரைக்க.

[5] நின்னுடைய திருவடிக்கு அடிமை செய்தற்கேற்ற பிறவியையே அடியேனுக்கு மேலும் மேலும் அருள்வாயாக. திருவடிக்காம்பவம் என்றது மனிதப் பிறவியை. இவ்வுண்மை

குனித்த புருவமுங் கொவ்வைச் செவ்வாயிற் குமிண்சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போல் மேனியிற் பால்வெண்ணீறும்
இனித்த முடைய எடுத்தபொற் பாதமுங் காணப்பெற்றால்
மனிதப் பிறவியும் வேண்டுவதே யிந்த மாநிலத்தே

எனவரும் திருநாவுக்கரசர் வாய்மொழியால் இனிது புலனாதல் காண்க.

15. [1] வளி-காற்று.

[2] ஒளி-ஞாயிறு திங்கள் தீ முதலிய ஒளியுடைப் பொருள்கள். வானாகி மண்ணாகி என ஐம் பூதங்களில் முதலும் ஈறும் கூறவே இவற்றிடைப் பட்ட நீரும் குறிப்பாற் புலப்படுதல் அறிக.

[3] ஊன்-உடம்பு.

[4] இறைவன் மேற்கூறியவாறு எண்பேருருவினனாகக் கலந்து உலகெலாமாகி நிற்றலால் உண்மையுமாய் என்றார்; அங்ஙனம் உலகியற் பொருள்களோடு தான் ஒற்றித்து நிற்பினும் அவற்றின் தன்மை தனக்கு எய்தலின்றித் தான் எல்லாப் பொருட்கும் அப்பாற்பட்ட தூயோனாய்ப் புலப்படாது நிற்றலால் இன்மையுமாய் என்றார்; யான் எனது என்னும் இருவகைப்பற்றுக்களாலும் ஆரவாரித்துக் களிக்கும் உயிர்களோடு உடனாகி நின்று வினைப்பயன்களை நுகரும்படி செய்கின்றான் என்பார் 'யான் எனதென்று அவரவரைக் கூத்தாட்டுவானாகி' என்றார். இங்ஙனம் உலகெலாமாகி வேறாய் உடனுமாய் நின்று உயிர்களைப் புரக்குந் தலைவன் இவ்வொருவனே யென்பார் கோனாகி என்றார். கோன்-தலைவன்.

வாழ்த்துவதும் வானவர்கள் தாம்வாழ்வான் மனநின்பால்
தாழ்த்துவதுந் தாமுயர்ந்து தம்மையெல்லாந்
[தொழவேண்டிச்
சூழ்த்துமது கரமுரலுந் தாரோயை[1] நாயடியேன்
பாழ்த்தபிறப் பறுத்திடுவான் யானுமுன்னைப் பரவுவனே. 16

**திருச்சதகம் - சுட்டறுத்தல்.**

சிந்தனைநின் றனக்காக்கி நாயி னேன்றன்
கண்ணிணைநின் றிருப்பாதப் போது[1]க் காக்கி
வந்தனை[2]யு மம்மலர்க்கே யாக்கி வாக்குன்
மணிவார்த்தைக் காக்கி[3]யைம் புலன்களார
வந்தனை[4]யாட் கொண்டுள்ளே புகுந்த விச்சை
மாலமுதப் பெருங்கடலே மலையே[5] யுன்னைத்
தந்தனை[6]செந் தாமரைக்கா டனைய மேனித்
தனிச்சுடரே யிரண்டுமிலித் தனிய னேற்கே[7] 26

---

15. [6] சொல் நிகழ்ச்சிக்கு நிலைக்களனாகிய தன்மை முன்னிலை படர்க்கை என்னும் இடவரம்பின்றி எல்லாமாய் நிற்கும் நின்னை எங்ஙனம் வாழ்த்துவேன் என்பது குறிப்பு.

16 [1] மதுகரம் சூழ்ந்து முரலுந் தாரோயை-வண்டுகள் சூழ்ந்து தேனையுண்டு ஆரவாரிக்கும் மாலையை யணிந்த நின்னை. வண்டுகள் மலரிலுள்ள தேனை விரும்பி மாலையைச் சூழ்ந்து ஒலித்தல் போல வானவர்கள் நீண்டவாழ்நாள் பெரும்பதவி முதலிய பயன்கருதி நின்னை வழிபடுகின்றார்கள். எனது பயனற்ற பிறவித் தொடர்பை யறுத்திடுதற் பொருட்டே யானும் உன்னைப் பரவிப் போற்றுவேனாயினேன் என்பது இத்திருப்பாடலின் கருத்தாகும். வானவர் முதலியோர்க்கு மேன்மேலும் அவர்கள் விரும்பிய பொருள்களைக் கொடுத்து அருள் புரிதலினும் என்போன்றாரால் துன்பமென வெறுக்கப்படும் பிறவித் தொடர்ச்சியை அறுத்தருளுதல் முதற்கண் செய்தற்குரிய நின் கடமையாகும் என இறைவனைத் திருவாதவூரடிகள் குறிப்பால் வேண்டுதல் காண்க. சூழ்ந்து என்பது சூழ்த்து எனத் திரிந்தது.

26. [1] திருவடிமலர்கள்.

[2] வந்தனை—வணக்கம்.

[3] வாக்கு உன் மணி வார்த்தைக்கு ஆக்கி—எனது சொல்லினை நினது மாணிக்கம் போலும் ஞானவொளி மிகுந்த நற்புகழுக்கே யுரியதாக்கி. மணிவார்த்தை-மாணிக்கவாசகம்.

தேவர்கோ[1] அறியாத தேவ தேவன்
செழும்பொழில்கள்[2] பயந்து[3]காத் தழிக்கு மற்றை
மூவர்[4]கோ னாய்நின்ற முதல்வன் மூர்த்தி
மூதாதை[5] மாதாளும் பாகத் தெந்தை
யாவர்கோ[6] னென்னையும்வந் தாண்டு கொண்டான்
யாமார்க்குங் குடியல்லோம் யாது மஞ்சோம்[7]
மேவினோம் அவனடியா ரடியா ரோடும்
மேன்மேலுங் குடைந்தாடி[8] யாடுவோமே. 30

---

26. [4] என்னுடைய ஐம்பொறிகளும் நின்னையே நுகர்ந்து மகிழும்படி உருவத் திருமேனிகொண்டு எழுந்தருளி வந்தாய்; என்றது இறைவன் குருவடிவங்கொண்டு திருப்பெருந்துறையில் தமக்கு அருள் செய்த திறத்தைக் குறித்தவாறும்.

[5] விச்சை—ஞானம். ஞானவாரமுதமாகிய பெருங்கடல். மாலமுதப் பெருமலையே யெனவும் இயைத்துரைக்க.

[6] பேரின்பப் பெரும்பொருளாகிய நின்னையே எளியேற்குத் தந்து உதவினை. "தன்னைத் தந்த என்னாரமுதை" யெனப் பின்னரும் அடிகள் கூறியருள்வர்.

[7] இருதிறமுங்கெட்ட தனியனேன்; என்றது என்னுடைய மனம் பொறிகளை நின்க்கே உரிமையாக்குந் திறமும் என்னுயிரை யுனக்கே யுரியதாக்குந் திறமும் ஆகிய இரண்டும் அமையப்பெறாத எளியேன் என்றவாறும். இவ்விரு திறமும் இயல்பில் வாய்க்கப்பெறாத எனது எளிமை நிலைக்கிரங்கிய நீ அவ்விரு செயல்களையும் மேற்கொண்டு எளிவந்து என்னை யாண்டருளினை யென்பது குறிப்பு. இனி, 'இரண்டுமிலி' யென்பதற்குக், கேடும் ஆக்கமுங் கெட்ட வென்றும், இருவினையுங் கெட்ட வென்றும், இம்மை மறுமைப் பயன் இரண்டு மில்லாத வென்றும் உரை கூறுவதும் உண்டு. 'இரண்டுங்கெட்டான்' என்னும் உலக வழக்கு நோக்குக.

30. [1] தேவர்கட்குத் தலைவனாகிய இந்திரன்.

[2] பொழில்கள்—உலகங்கள்.

[3] பயந்து—படைத்து.

[4] அயன் அரி அரன் என்னும் மும்மூர்த்திகள்.

[5] பாட்டன்.

[6] எல்லார்க்குந் தலைவன்.

[7] யாவர்க்கும் மேலாம் அளவிலாச் சீருடையானாகிய இறைவனே யாவர்க்கும் கீழாம் எளியேனையும் தானே வந்து ஆட்கொண்டருளினன். ஆதலால் அவன் சுற்றத்தார்களாகிய யாங்கள் அவ் இறைவனல்லாத பிறர் எவர்க்கும் அடிமைப்பட்டு வாழமாட்டோம். எத்தகைய இடையூறுகட்கும் உள்ளந் திடுக்குற்று அஞ்சுவோமல்லோம் என்பது கருத்து. திருநாவுக்கரசரருளிய 'நாமார்க்குங் குடியல்லோம் நமனை யஞ்சோம்' எனத் தொடங்கும் மறுமாற்றத் திருத்தாண்டகம் இவண் கருதத்தகுவதாம்.

### திருச்சதகம் - கைம்மாறு கொடுத்தல்.

இருகை யானையை யொத்திருந்[1] தென்னுளக்
கருவை யான்கண்டி லேன்[2] கண்ட தெவ்வமே[3]
வருக வென்று பணித்தனை[4] வானுளோர்க்
கொருவனே கிற்றிலேன்[5] கிற்ப னுண்ணவே.[6] 41

### திருச்சதகம் - ஆனந்தபரவசம்.

விச்சுக் கேடு பொய்க்காகா தென்றிங் கெனைவைத்தாய்[1]
இச்சைக் கானா ரெல்லாரும் வந்துன் றாள்சேர்ந்தார்
அச்சத் தாலே யாழ்ந்திடு கின்றே னாரூரெம்
பிச்சைத் தேவா என்னான் செய்கேன் பேசாயே. 81

---

41\. 1 இரண்டு கைகளையுடைய யானையொன்று உலகத்திருக்குமாயின் அதனைப்போன்று இருந்து; என்றது இல்பொருளுவமை. உயிர்களின் செயல் வளர்ச்சிக்குக் கருவியாவது கையாகும். யானைக்கமைந்த துதிக்கை செயல் செய்தற்கேயன்றி மரங்களிலுள்ள தழை மூங்கில் முதலியவற்றை உணவாகப் பற்றிக்கோடற்குந் தண்ணீர் பருகுதற்குமே பெரும்பாலும் பயன்படுகிறது. யானைக்குக் கையொன்றே. தொழில் வளர்ச்சிக்குரிய இருகை சுமந்து வாழ்பவனாகிய யானோ அவற்றை நின் திருப்பணிகளைச் செய்தற்குக் கருவியாகக் கொள்ளாமல் யானையினது கை பெரும்பாலும் உண்டற்கே யாளப்படுவது போன்று எனக்குரிய உணவுகளைத் திரட்டிக் கொடுத்தலொன்றுக்கே பயன்படுத்திக்கொண்டு வேறொரு தொழிலுமின்றிச் சும்மாவிருக்கின்றேன். எனக்கு உவமை தேடவேண்டுமானால் இரண்டு கையுடைய யானையொன்று உலகத்துப் புதிதாகப் படைக்கப் பெறவேண்டும் எனக் குறிப்பாற் புலப்படுத்தினமை தெளிக.

2 என்னுள்ளமாகிய இடத்திற் கருக்கொண்டு தோன்றிய கடவுளாகிய நின்னைக்கண்டு மகிழ்தற்குரிய அன்பு வழிபாட்டில் ஈடுபட்டேனல்லேன்.

3 யான் எனது முயற்சியாற் கண்டு அனுபவித்ததெல்லாம் துன்பமொன்றேயாம்.

4 என்னை வருக என்று அன்பாலழைத்தனை.

5 அங்ஙனம் நீ அருளால் வெளிப்பட்டு அழைக்கவும் நின் திருவருளின்பத்தை நுகர்தற்பொருட்டு நின்னையடையும் ஆற்றல் பெற்றேனல்லேன். கிற்றிலேன்-ஆற்றலற்றேன்.

6 உலகியல் நுகர்ச்சிகளை நுகர்ந்தமைதலில் மட்டும் திறம்பெற்றிருக்கின்றேன். உண்ணவேகிற்பன் என இயைக்க. கிற்பன்-ஆற்றலுடையேன்.

81\. 1 பொய்க்கு விச்சுக்கேடு ஆகாது என்று இங்கு எனை வைத்தாய்—பொய்யாகிய மூலத்திற்கு உலகத்தில் மீண்டும் முளைத்தற்குரிய விதை அறவேயில்லாது கெடுதல் கூடாதென்று கருதிப் பொய்க்குக் காரணனாகிய என்னை இவ்வுலகத்தே இருக்கவைத்தாய்.

## திருச்சதகம் - ஆனந்தாதீதம்.

மையி லங்குநற் கண்ணி பங்கனே
வந்தெ னைப்பணி கொண்ட பின்மழக்
கையி லங்குபொற் கிண்ணம்[1] மென்றலால்
அரியை யென்றுனைக் கருது கின்றிலேன்[2]
மெய்யி லங்குவெண் ணீற்று மேனியாய்
மெய்ம்மை யன்பருன் மெய்ம்மை மேவினார்
பொய்யி லங்கெனைப்[3] புகுத விட்டுநீ
போவ தோசொலாய் பொருத்த மாவதே. 92

## * நீத்தல் விண்ணப்பம்.

கடையவ னேனைக் கருணையி னாற்கலந் தாண்டு கொண்ட
விடையவ னேவிட் டிடுதிகண் டாய்[1]விறல் வேங்கையின் [தோல்
உடையவ னே[2]மன் னுமுத்தர கோசமங் கைக்கரசே
சடையவ னேதளர்ந் தேனெம்பி ரானென்னைத் தாங்கிக் [கொள்ளே. 1

இருதலைக் கொள்ளியி னுள்ளெறும் பொத்து[1] நினைப் [பிரிந்த
விரிதலை யேனை விடுதிகண் டாய்வியன் மூவுலகுக்
கொருதலை வாமன் னுமுத்தர கோசமங் கைக்கரசே
பொருதலை மூவிலை வேல்வல னேந்திப்[2] பொலிபவனே. 9

---

92. [1] குழந்தை கையிலுள்ள பொற்கிண்ணம். மழ-குழந்தை.

[2] குழந்தை தன் கையிலுள்ள பொற்கிண்ணத்தின் அழகு முதலிய நலனகளைக் கருதி அதன் அருமையினையுணரும் அறிவு வளம் வாய்க்கப் பெறாமைபோல யானும் நினது அருமையை யுணரும் உணர்வு வளம் பெறாதவனாகவுள்ளேன்.

[3] பொய்மைக் குணம் விளங்கித் தோன்றுதற்கு நிலைக்களமாகவுள்ள என்னை.

* உலகப்பற்று விடுதற்கு இறைவனை வேண்டுதல்.

1. [1] கை விட்டிடுவாயோ என அஞ்சி வினவிய குறிப்புடையது. இவ்வொறன்றி என்னைப் பாசத்தினின்றும் நீக்கியருள்க எனப் பொருள் கூறலுமுண்டு

9. [1] மூங்கில் முதலிய உட்டுளையுடை கோலின் இருபுறமும் தீப்பற்றியெரிய அக்கொள்ளிக்கட்டையின் உள் துளையிலே அகப்பட்டுக்கொண்டு மீள வழியறியாது வருந்தும் எறும்புபோலத் துயருற்று.

[2] வெற்றியுண்டாக ஏந்தி.

### *திருவெம்பாவை.

பைங்குவளைக் கார்மலராற் செங்கமலப் பைம்போதால்
அங்கங் குருகினத்தாற் பின்னும் அரவத்தால்
தங்கண் மலங்கழுவு வார்வந்து சார்தலினால்
எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்றிசைந்த
பொங்கு மடு[1]விற் புகப்பாய்ந்து பாய்ந்துநஞ்
சங்கஞ் சிலம்பச்[2] சிலம்பு கலந்தார்ப்பக்
கொங்கைகள் பொங்கக் குடையும் புனல்பொங்கப்
பங்கயப் பூம்புனல்[3]பாய்ந் தாடேலோ ரெம்பாவாய். 13

---

* திருவெம்பாவை என்பது, விளையாடும் பருவத்து இளமகளிர் மார்கழித் திங்கள் வைகறைப் பொழுதில் ஒருவரை யொருவர் துயிலெழுப்பி 'எம் பாவை போல்வாளே' என அன்பால் அழைத்து நீராடும் நிலையிற் பாடும் இசைப்பாடல் வகையாகும். கவிச் சக்கரவர்த்தியாகிய ஒட்டக்கூத்தர் தாம் பாடிய இராசராச சோழனுலாவில்
"செறிந்தகுழல்—
எம்பாவை யெங்கொல்லிப் பாவை யெனப்பாடும்
அம்பாவை பாடும் படியறிவாள்" என இப்பாடல் வகையைக் குறிப்பிடுதல் காண்க.

13. [1] நீர் மிகுந்த பொய்கையானது, ஒருபக்கம் பசிய கருங்குவளை மலர்களையும் மற்றொருபக்கம் செந்தாமரைப் புது மலர்களையும் தன்னகத்துக் கொண்டிருத்தலால் நீல நிறமுடைய உமையம்மையாராகிய எம்பெருமாட்டியும் செம்மேனிப் பேராளனாகிய சிவபெருமானும் ஒருங்கமைந்த தெய்வக் காட்சியை நிறத்தாற் புலப்படுத்தியும், ஒருபக்கம் குருகினங்களையும் மற்றொருபக்கம் ஒன்றோடொன்று பின்னிய அரவத்தினையும் தன்கண் கொண்டிருத்தலால் வெள்வளையணிந்த அம்மையின் திருமேனியழகையும் அரவணிந்த அப்பனது திருமேனியழகையும் முறையே உறுப்பால் தோற்றுவித்தும், தன்கண் மூழ்குவாரது அழுக்கினை நீக்கித் தூய்மை செய்தலால் தம்மைச் சார்ந்தார் தம் மும்மலங்களையும் நீக்கியருளும் அம்மையப்பராகிய அவ்விருவரின் திருவருளைத் தொழிலால் இனிது புலனாக்கியும் திகழ்வது கருதி, 'எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்றிசைந்த பொங்குமடு' என அதனைத் திருவாதவூரடிகள் சிறப்பித்தருளின ரென்க. அங்கம் - இடம், மேனி. குருகு என்பது பொய்கைக்கேற்றி யுரைக்குமிடத்து நாரை முதலிய பறவைகளையும் உமாதேவியார்க்கு உரிமையாகக் கொள்ளுமிடத்து வெள்வளைகளையும் சிலேடையாற் குறித்துநின்றது. அவ்வாறே அரவம் என்பதும் ஆரவாரம், பாம்பு என்னும் இரு பொருளில் வழங்குதல் அறிக. பைங்குவளைக் கார்மலரால், அங்கம் குருகினத்தால் எங்கள் பிராட்டியும், செங்கமலப் பைம்போதாற், பின்னும் அரவத்தால் எங்கோனும் போன்றிசைந்தமடு என நிரல் நிறையாற் பொருள் கூறுக. தங்கண் மலங்கழுவுவார் வந்து சார்தலினால் என்னும் ஏதுவை அம்மையப்பர் இருவர்க்கும் பொதுப்படக் கொள்க. மடுவானது நிறத்தாலும் உறுப்பாலும் தொழிலாலும் எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்றிசைந்தது என உவமை கூறுதலால் இஃது ஏது வுவமையின்பாற்படும்.

உங்கையிற் பிள்ளை யுனக்கே யடைக்கல[1]மென்
றங்கப் பழஞ்சொற்[2] புதுக்குமெம் அச்சத்தால்
எங்கள் பெருமா னுனக்கொன் றுரைப்போங்கேள்
எங்கொங்கை நின்னன்ப ரல்லார்தோள் சேரற்க
எங்கை யுனக்கல்லா தெப்பணியுஞ் செய்யற்க
கங்குல் பகலெங்கண் மற்றொன்றுங் காணற்க
இங்கிப் பரிசே யெமக்கெங்கோ னல்குதியேல்
எங்கெழிலென் ஞாயி[1]றெமக்கேலோ ரெம்பாவாய். 19

---

13. [2] சங்கம் சிலம்ப—வளைகள் ஒலிப்ப.

[3] பங்கயப் பூம்புனல்—தாமரை மலர்களையுடைய பொலிவுபெற்ற நீர்நிலை.

19. [1] 'உங் கையிற் பிள்ளை யுனக்கே யடைக்கலம்' என்பது தமிழ்நாட்டும் பழமொழி. "இவ்விளங்குழந்தை நின்னொடு பொருந்தாத பகைமையுடைய பிள்ளையாயினும் இது நின் கையிற் கிடைக்கப் பெற்றமையால் இதனை யடைக்கலப் பொருளாகக் கொண்டு இதற்கு வரும் இடையூறுகளை நீக்கிப் பாதுகாத்தல் நினது கடமையாகும்" என அயலாரொருவரை அச்சத்துடன் வேண்டிக்கொள்ளும் பொருளில் இப்பழமொழி வழங்குவதாகும். சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் என்பான் தன் பகைவனாகிய மலையமான் குழந்தைகளை யானையின் காலால் இடரச்செய்ய முயன்றகாலத்துக் கோவூர் கிழார் என்னும் புலவர் பெருமான் 46-ஆம் புறப்பாட்டைப் பாடி அவ்விளங் குழந்தைகளைப் பாதுகாத்த வரலாறு இப் பழமொழிப் பொருளுடன் ஒப்புநோக்கத் தகுவதாம். தாயொருத்தி தன் கையிலுள்ள பிள்ளையைத் தானே காத்துக் கொள்வாளாதலின், உன் பிள்ளை உனக்கே யடைக்கலமென்று அவளிடம் பிறர் வேண்டிக்கோடல் மிகை. தாயினும் சாலப் பரிந்தருளும் இறைவன்பால் தம்மைத் தீங்கு நேராதவாறு நல்வாழ்க்கையில் வாழச் செய்தல் வேண்டும் என அச்சத்துடன் வேண்டிநிற்கும் இச்செயல், மேற்கூறிய பழமொழியின் பொருளைப் புதுப்பிக்குஞ் செயலாயிற்றென்பார் 'அங்கு அப் பழஞ்சொற் புதுக்கும்' என்றார்.

திருமணக்காலத்து மணமகனிடம் மணமகளை வாழ்க்கைப் படுத்துங்கால் உன் மனைவியாகிய இவளை எக்காலத்தும் பாதுகாப்பாயாக என அடைக்கலங் கூறிக் கொடுத்தல் வழக்கம். 'உங்கையிற் பிள்ளை உனக்கே அடைக்கலம்' என்னும் இப் பழஞ்சொல்லைப் புதுப்பிக்கும் நிலையில் எங்கள் வாழ்க்கையில் திருமணம் செய்யும் நிலையேற்பட்டால் எங்கள் பெருமானாகிய நின்பால் அன்புடையவர்களே எங்கள் கணவராக அமைதல் வேண்டும் என இளமகளிர் இறைவனை வேண்டிக் கொள்வதாகப் பொருள் கூறுதலும் பொருந்தும்.

### * திருவம்மானை.

விண்ணாளுந் தேவர்க்கு மேலாய வேதியனை
மண்ணாளு மன்னவர்க்கு மாண்பாகி நின்றானைத்
தண்ணார் தமிழளிக்குந் தண்பாண்டி நாட்டானைப்[1]
பெண்ணாளும் பாகனைப் பேணு பெருந்துறையிற்
கண்ணார் கழல்காட்டி நாயேனை யாட்கொண்ட
அண்ணா மலையானைப் பாடுதுங்கா ணம்மானாய். 10

கையார் வளைசிலம்பக் காதார் குழையாட
மையார் குழல் புரளத் தேன்பாய வண்டொலிப்பச்
செய்யானை[1] வெண்ணீ றணிந்தானைச் சேர்ந்தறியாக்
கையானை[2] யெங்குஞ் செறிந்தானை யன்பர்க்கு
மெய்யானை யல்லாதார்க் கல்லாத வேதியனை
ஐயா றமர்ந்தானைப் பாடுதுங்கா ணம்மானாய். 13

---

* இளமகளிர் அம்மனைக்காய் விளையாடுங்கால் இசையுடன் பாடி மகிழ்தற் கேற்றவாறு அமைந்த அம்மானை வரியென்னும் இசைப்பாட்டாகும். (சிலப்-நோக்குக) கழல், பந்து, அம்மானை முதலிய இள மகளிர் விளையாடல்களில் தேவபாணி யெனப்படுந் தெய்வ விசைப்பாடல்கள் பாடப்பெறும் வழக்கமுண்டென்பதனை "மனைகள் தொறும் இறைவனது தன்மை பாடிக், கருந்தடங்கண்ணார் கழல்பந்து அம்மானைப் பாட்டயருங் கழுமலமே" என்ற தொடரால் ஆளுடைய பிள்ளையார் குறிப்பிடுதல் காண்க.

10. [1] தலை இடை கடையென முச்சங்கமிரீஇத் தமிழ் வளர்த்தவர் பாண்டியராகலானும் 'சோமன் வழி வந்த பாண்டியர் நின், நாட்டுடைத்து நல்ல தமிழ்' எனப் பிறருங் கூறுவராகலானுந் "தண்ணார் தமிழளிக்குந் தண் பாண்டி நாட்டானை" யென்றார். தண்ணார் தமிழ்-தன்னைப் பயில்வாருள்ளத்து அன்பென்னும் ஈரமுடைமையை யுளதாக்கும் மேன்மை வாய்ந்த தமிழ்மொழி. அளிக்கும் என்னும் பெயரெச்சத்தைப் பாண்டி நாட்டுடன் முடிக்காமல் பாண்டி நாட்டான் என ஆலவாயிறைவனொடு முடித்து, உயர்மதிற் கூடலின் ஒண்டீந் தமிழாராய்ந்து பொருள் நூலருளிப் போற்றிய அருள் நிகழ்ச்சியை யீண்டுக் குறித்ததாகவுங் கொள்ளலாம்.

13. [1] செய்யான்—சிவந்த திருமேனியுடையான்.

[2] சேர்ந்தறியாக் கையான்—வணக்கத்தின் பொருட்டு ஒன்றாகச் சேர்த்துக் குவித்தறியாத கைகளையுடையான்; என்றது தன்னால் கை குவித்து வணங்கப்பெறுவார் யாருமின்றித் தானே எல்லாத் தெய்வங்கட்குந் தனி முதல்வனாக விளங்குவோன் என்பது கருத்து.

## திருப்பொற்சுண்ணம்

முத்துநற் றாமம்பூ மாலைதூக்கி
முளைக்குடந் தூபநற் றீபம்வைமின்
சத்தியுஞ் சோமியும்[1] பார்மகளும்
நாமக ளோடுபல் லாண்டிசைமின்
சித்தியுங் கௌரியும் பார்ப்பதியுங்
கங்கையும் வந்து கவரிகொண்மின்
அத்தனை யாறனம் மானைப்பாடி
யாடப்பொற் சுண்ண மிடித்துநாமே. 1

'தொழத்தகுந் தேவர் தொழப்படுவானை' என்பது காண்க. நடனஞ் செய்யும்போது தெய்வங்களைப் பற்றிப் புலப்படுத்தும் அவிநயமுறைகளைச் சொல்லுமிடத்து, நான்முகன் திருமால் முதலிய தேவர்களைக் குறிப்பிடுங்கால் அவரவர்க்குரிய ஆயுத விளக்க அவிநயங்களால் தெரிவிக்கும்படியும், சிவபெருமானொருவனைமட்டுந் தலைமேற் கைகள் கூப்பி வணங்கும் வணக்க முத்திரையால் தெரிவிக்கும்படியும் பொது நூலாகிய பரதசாத்திரம் கூறுவதும் இங்கு நினைவு கூரத் தகுவதாம்.

* இளமகளிர் நறுமணப் பொடிகளை இடிக்கும்போது இசையுடன் பாடி மகிழ்தற் கேற்றவாறு அமைந்த வரிப்பாட்டு. இதனைச் சிலப்பதிகாரத்து அமைந்த வள்ளைப்பாட்டுடன் ஒப்புநோக்குக.

குளிக்குங்கால் பூசி நீராடுதற்கேற்ற நறுமணப்பொடியாகிய சுண்ணம் அமைக்குந் தொழில் இளமகளிராற் செய்யப்படுவதென்பதனை இத் தொழிற்றிறம்பற்றி சுரமஞ்சரியும் குணமாலையும் மாறுகொண்டு போந்த செயலால் அறியலாம். (சீவக-குணமாலையிலம்பகம்) இங்கு இடிக்கப்பெறும் சுண்ணம் இறைவன் திருமஞ்சனத்திற் குரியதென்பதனை "உமையாள் கொழுநற் கேய்ந்தபொற் சுண்ணம் இடித்து நாமே" எனவரும் இப்பதிகத் தொடரால் உணரலாம்.

1. [1] சோமி—திருமகள். இடித்தும் நாமே எனப்பிரித்து நாம் இடித்தும் எனக்கூட்டுக. இடித்தும்-இடிப்போம்; தும்மீற்றுத்தன்மைப் பன்மைவினை.

### * திருக்கோத்தும்பி.

கண்ணப்ப னொப்பதோ ரன்பின்மை கண்டபின்
என்னப்ப னென்னொப்பி லென்னையுமாட் கொண்டருளி
வண்ணப் பணித்[1]தென்னை வாவென்ற வான்கருணைச்
சுண்ணப்பொன் னீற்றற்கே சென்றூதாய் கோத்தும்பீ. 4

### * திருத்தெள்ளேணம்.

அரிக்கும் பிரமற்கும் அல்லாத தேவர்கட்குந்
தெரிக்கும் படித்தன்றி நின்றசிவம் வந்துநம்மை
உருக்கும் பணிகொள்ளு மென்பதுகேட் டுலகமெல்லாஞ்
சிரிக்குந் திறம்பாடித் தெள்ளேணங் கொட்டாமோ. 3

### * திருச்சாழல்.

தென்பா லுகந்தாடுந் தில்லைச்சிற் றம்பலவன்
பெண்பா லுகந்தான் பெரும்பித்தன் காணேடீ
பெண்பா லுகந்திலனேற் பேதா யிருநிலத்தோர்
விண்பா லியோகெய்தி வீடுவர்[1]காண் சாழலோ 9

---

* கோத்தும்பி, தெள்ளேணம், சாழல், பூவல்லி, தோணோக்கம் என்பன தமிழ்நாட்டு இளமகளிர் விளையாடல்களாம். இவற்றினியல்பினை இதுபோது தெளிய அறிந்துகொள்ள இயலவில்லை.

4. [1] அன்பின் முதிர்ந்த எல்லைக்கு எடுத்துக் காட்டாவார் கண்ணப்ப நாயனாரே என்னும் உண்மையை இப்பாடலில் அடிகள் போற்றும் முறை படித்து இன்புறற்குரியது.

9. [1] காமநுகர்ச்சி யில்லாத இறைவன் இங்ஙனம் உமையம்மையாராகிய பெண்ணை ஒரு பாகத்திற் கொண்டது, உயிர்களெல்லாம் ஆணும் பெணணுமாய்க்கூடி அன்பினை வளர்த்து உலகில் இல்வாழ்க்கை நிகழ்த்தலின் இன்றியமையாமை கருதியே என்பது இத்திருப்பாடலின் கருத்தாகும். “ஒருமுகம், குறவர் மடமகள் கொடிபோல் நுசுப்பின், மடவரல் வள்ளியொடு நகையமர்ந்தன்றே” எனவருந் திருமுருகாற்றுப்படை யடிகளுக்குச் சிறப்புரை யெழுதிய நச்சினார்க்கினியர், ‘காமநுகர்ச்சியில்லாத இறைவன் இங்ஙனம் நகையமர்ந்தான் உலகில் இல்வாழ்க்கை நடத்தற்கென் றுணர்க. அது தென்பாலுகந் தாடுந் தில்லைச் சிற்றம்பலவன் என்பதனுள், பெண்பா லுகந்திலனேற் பேதாய் இருநிலத்தோர், விண்பாலியோகெய்தி வீடுவர்காண் சாழலோ என்பதனாலுணர்க” என இத்திருப்பாடற் பொருளை யினிது விளக்கினமை உளங்கொளத்தக்கதாம்.

### திருப்பூவல்லி.

இணையார் திருவடி யென்றலைமேல் வைத்தலுமே
துணையான சுற்றங்க ளத்தனையுந் துறந்தொழிந்தேன்
அணையார் புனற்றில்லை யம்பலத்தே யாடுகின்ற
புணையாளன்[1] சீர்பாடிப் பூவல்லி கொய்யாமோ. 1

### திருத்தோணோக்கம்.

பொருட்பற்றிச் செய்கின்ற பூசனைகள்[1] போல்விளங்கச்
செருப்புற்ற சீரடி வாய்கலச மூனமுதம்
விருப்புற்று[2] வேடனார் சேடறிய[3] மெய்குளிர்ந்தங்
கருட்பெற்று நின்றவா தோணோக்க மாடாமோ. 3

ஏழைத் தொழும்பனேன் எத்தனையோ காலமெல்லாம்
பாழுக் கிறைத்தேன் பரம்பரனைப் பணியாதே
ஊழிமுதற் சிந்தாத நன்மணி[1]வந் தென்பிறவித்
தாழைப்[2] பறித்தவா தோணோக்க மாடாமோ. 13

---

1. [1] புணையாளன்—பிறவியாகிய கடலை நீந்துதற்குத் தெப்பமாய் நின்று உதவுபவன். புணை-தெப்பம்.

3. [1] ஆகமங்களில் வழிபாட்டிற்கென்று விதிக்கப்பட்ட பொருள்களையும் விதிகளையும் துணையாகக்கொண்டு செய்யும் வழிபாடுகள்.

[2] அவ்வழிபாடுகள் உலக மக்களாற் பாராட்டப்பெற்று விளங்குதல் போலக் கண்ணப்பருடைய செருப்பணிந்த பாதம், வாயின்கண் கொண்ட நீர், புலாலுணவு என்பனவும் வழிபாட்டிற்குரிய மதிப்புடைய பூவும் திருமஞ்சனமும் திருவமுதுமாக முறையே விளங்கும் வண்ணம் இறைவன் அவற்றின்பால் விருப்பங்கொண்டனர் என்பது கருத்து. கண்ணப்ப நாயனார் புராணம் 157-முதல் 162-வரையுள்ள செய்யுட்கள் இங்கு நினைவுகூரத் தகுவன. பொருட்பற்றிச் செய்கின்ற பூசனைகள்போல் செருப்புற்ற சீரடி வாய்கலசம் ஊனமுதம் விளங்க விருப்புற்று எனக்கூட்டுக.

[3] வேடனார்—கண்ணப்பர். சேடு-அன்பின் பெருமை.

13. [1] அழியாத நல்ல மாணிக்கம்; என்றது இறைவனை.

[2] என் பிறவித் தாழைப் பறித்தவா—என்னை யகப்படுத்திய பிறவியென்னும் பொதியறைக்குரிய தாழ்ப்பாளை அடியோடு பறித்தழித்த திறம்; என்றது என்னைப் பிறவியினின்றும் விலக்கிய திருவருட் செயல் என்னே என வியந்து கூறியவாறும்.

## திருப்பொன்னூசல்.

சீரார் பவளங்கால் முத்தங்[1] கயிறாக
ஏராரும் பொற்பலகை யேறி யினிதமர்ந்து
நாரா யணனறியா நாண்மலர்த்தாள் நாயடியேற்
கூராகத் தந்தருளு[2] முத்தரகோச மங்கை
ஆரா வமுதி னருட்டா ளிணைபாடிப்
போரார்வேற் கண்மடவீர் பொன்னூச லாடாமோ. 1

## அன்னைப்பத்து.

வேத மொழியர்வெண் ணீற்றர்செம் மேனியர்
நாதப் பறையின[1] ரன்னே யென்னும்
நாதப் பறையினர் நான்முகன் மாலுக்கு
நாதரிந் நாதனு ரன்னே யென்னும். 1

---

1. [1] முத்தம் என்றது முத்து மாலையை.

[2] திருமாலறியாத அன்றலர்ந்த மலர்போலுந் திருவடியிணையே நாயேன் இன்புற்று வாழும் ஊராக அமைய அடியேற்கருளினான் இறைவன் என்றது, அவன் திருவடியே வீடுபேறாயிருக்கும் என்னுங் கருத்தினுலாம். இதனைத் "தென்னன் பெருந்துறையான் ......... தாட்டாமரை காட்டித் தன் கருணைத் தேன்காட்டி" என அடிகள் முன்னுங் கூறுதல் அறிக "சேவடி படருஞ் செம்மல் உள்ளமொடு, நலம்புரி கொள்கைப் புலம்பிரிந் துறையும் செலவு" (திருமுரு-62 63) என நக்கீரனர் கூறுதல் இங்கு ஒப்புநோக்கத் தக்கதாம்.

1. சிவபெருமானைக் கண்டு காதல் கொண்ட பெண்ணொருத்தி தன் அன்னையை நோக்கிக் கூறுவதாகக் கொண்டுகூறுவது இத்திருப் பதிகமாகும்.

[1] நாதப் பறையினர்—நாதத்துவத்தையே தமக்குரிய தசாங்கத்துள் ஒன்றாகிய முரசாகக் கொண்டவர்.

"இன்பால் மொழிக்கிள்ளாய் எங்கள் பெருந்துறைக்கோன்
முன்பால் முழங்கும் முரசியம்பாய்—அன்பாற்
பிறவிப் பகைகலங்கப் பேரின்பத் தோங்கும்
பருமிக்க நாதப் பறை" என இதனைத் திருத்தசாங்கத்துள்

அடிகள் விளக்கியருளுதல் காண்க.

## * குயிற்பத்து.

கீத[1] மினிய குயிலே கேட்டியே லெங்கள் பெருமான்
பாத மிரண்டும் வினவிற் பாதாள மேழினுக் கப்பாற்
சோதி மணிமுடி சொல்லிற் சொல்லிறந்து நின்ற
[தொன்மை[2]
ஆதி குணமொன்று மில்லான்[3] அந்தமிலான் வரக்
[கூவாய். 1

ஏர்தரு மேழுலகேத்த எவ்வுருவுந் தன்னுருவாய்
ஆர்கலி[1] சூழ்தென் னிலங்கை யழகமர் வண்டோதரிக்குப்[2]
பேரரு ளின்ப மளித்த பெருந்துறை மேயபிரானைச்
சீரிய வாயாற் குயிலே தென்பாண்டி நாடனைக்[3] கூவாய். 2

தேன்பழச் சோலை பயிலுஞ் சிறுகுயி லேயிது கேள்நீ
வான்பழித் திம்மண் புகுந்து மனிதரை யாட்கொண்ட
[வள்ளல்[1]
ஊன்பழித் துள்ளம் புகுந்தென் னுணர்வது வாய
[வொருத்தன்
மான்பழித் தாண்டமென் னேக்கி[2] மணாளனை நீவரக்
[கூவாய். 4

---

* இறைவனைக் கூவியழைக்கும்படி குயிலை நோக்கி வேண்டுவதாக இத் திருப்பதிகம் அமைந்தமையால் இது குயிற்பத்து என்னும் பெயர்த் தாயிற்று.

1\. [1] கீதம்—இசை.

[2] சொல்லிறந்து நின்ற தொன்மை—சொல்லின் எல்லையைக் கடந்து நின்ற தொலைவு.

[3] ஆதியில்லான், குணம் ஒன்றும் இல்லான், எனத் தனித்தனி கூட்டுக. ஆதி-தோற்றம், அந்தம்-ஈறு. இவை முறையே பிறப்பு இறப்பு என்பவற்றைக் குறித்து நின்றன.

2\. [1] கடல்.

[2] வண்டோதரி—இராவணன் மனைவி; சிவனடித் தொண்டு பூண்ட பெருமாட்டியார்.

[3] சிவபெருமானைத் தென்பாண்டி நாடன் என்றது, தென்னவன் மகளா ராகிய அங்கயற்கண்ணம்மையை மணந்து தென்னாடாண்ட சிறப் புடை வரலாறு கருதியதாம்.

4\. [1] மேல் நிலையில் நின்று இன்பநுகர்ச்சியொன்றே விரும்பிய வானவரைப் பொருட்படுத்தாது இன்பமுந் துன்பமுமொருங்கே நுகரும் எளியோ ராகிய மக்களையே எளிவந்தாண்டருளும் அருட்குணமுடையோன் ஆதலின் வள்ளல் என்றார்.

## திருப்பள்ளியெழுச்சி.

புவனியிற் போய்ப்பிற வாமையில் நாள்நாம்
போக்குகின் றேமவ மேயிந்தப் பூமி
சிவனுய்யக் கொள்கின்ற வாறென்று[1] நோக்கித்
திருப்பெருந் துறையுறைவாய் திருமாலாம்
அவன்விருப் பெய்தவு மலரவ னாசைப்
படவுநின் னலர்ந்தமெய்க் கருணையு நீயும்
அவனியிற் புகுந்தெமை யாட்கொள்ள வல்லாய்[2]
ஆரமு தேபள்ளி யெழுந்தரு ளாயே. 10

---

[2] மானையும் தனது பேரழகாற் கீழ்ப்படுத்தித் தனது எழிலைக் கருணை யினால் அதற்கும் அருளி ஆட்கொண்ட மென்மை வாய்ந்த நோக்கினை யுடைய உமையம்மையார்.

10. [1] இந்தப் பூமி சிவன் உய்யக்கொள்கின்ற ஆறு, புவனியில் நாம் போய்ப் பிறவாமையின் அவமே நாள்போக்குகின்றோம்—இந்த நில வுலகம் சிவபெருமான் உயிர்களையாட்கொண்டு உய்விக்கும் பொது நெறியாயமைந்தது. அங்ஙனமாகவும் இத்தகைய சிறப்புடைய பூமியிற்போய்ச் சிவனடித்தொண்டுபூண்டு நாம் மக்களாய்ப் பிறவாத படியால் பயனற்றவர்களாய் நின்று வீணாக நாளைக்கழிக்கின்றோம்.

[2] எனத் திருமாலும் நான்முகனும் இவ்வுலகிற் பிறத்தலைப் பெரிதும் விரும்பும் வண்ணம் பெருமானாகிய நீ இவ்வுலகத்திற் புகுந்து அருட் டிரு மேனி கொண்டு அடியோமையாண்டருளினாய்.
புவனி, அவனி, பூமி என மும்முறை இந்நிலவுலகத்தைக் குறிப் பிட்டமை காண்க. ஆறு-வழி.

## கோயில் மூத்ததிருப்பதிகம்.

உடையா ளுன்ற னடுவிருக்கும்
உடையாள் நடுவுள் நீயிருத்தி
அடியே னடுவு ளிருவீரும்
இருப்ப தாஞ லடியேனுன்
அடியார் நடுவு ளிருக்கும்
அருளைப்புரியாய் பொன்னம் பலத்தெம்
முடியா முதலே யென்கருத்து
முடியும் வண்ண முன்னின்றே. 1

சிரிப்பார் களிப்பார் தேனிப்பார்[1]
திரண்டு திரண்டுன் திருவார்த்தை
விரிப்பார் கேட்பார் மெச்சுவார்
வெவ்வே றிருந்துன் திருநாமந்
தரிப்பார்[2] பொன்னம் பலத்தாடுந்
தலைவா வென்பா ரவர்முன்னே
நரிப்பாய்[3] நாயே னிருப்பேனோ
நம்பி[4] யினித்தா னல்காயே. 9

---

1. பொன்னம்பலத்து எம் முடியாமுதலே உன்றன் நடுவுள் உடையாள் இருக்கும், உடையாள் நடுவுள் நீ யிருத்தி அடியேன் நடுவுள் இருவீரும் இருப்பதாஞல் என் கருத்து முடியும் வண்ணம் முன்னின்று, அடியேன் உன் அடியார் நடுவுள் இருக்கும் அருளைப் புரியாய் எனக் கூட்டுக. உடையாள்-எம்மை ஆளுடைய அம்மையாகிய உமாதேவியார். நடு-நெஞ்சம். முடியாமுதல்-ஈறிலாத முழுமுதற் பொருள். இருத்தி-இருக்கின்ருய். நடுவிருத்தல் என்பது ஈண்டு இறைவன் உயிர்க்குயிராய் நின்றருளும் அத்துவிதக்கலப்பை யுணர்த்திநின்றது.

9. [1] தேனிப்பார்-நினது திருவருளின்பத்தால் உள்ளம் அள்ளூறப் பெறுவார்கள். அள்ளூறுதல், இன்பத்தால் நெக்கெறிதல். "அன்பொடு தன்னையஞ்செழுத்தின் சொற்பதத்துள்வைத்து உள்ளம் அள்ளூறுந் தொண்டர்" என வருதல் காண்க. தேனித்தல் என்பது தேன் என்னும் பெயரடியாகப் பிறந்த வினைச்சொல். அன்றி இதனைத் தியானம் என்னும் வட சொல்லடியாகப் பிறந்ததெனக்கொண்டு தேனிப்பார்-தியானிப்பார் எனப் பொருள் கூறுவதுமுண்டு; இவற்றுள் நல்லது தேர்ந்து கொள்க.

### அடைக்கலப்பத்து.

வழங்குகின் றாய்க்குன் னருளா
ரமுதத்தை வாரிக்கொண்டு
விழுங்குகின் றேன்விக்கினேன்
வினையேனென் விதியின்மையால்
தழங்கருந் தேனன்ன தண்ணீர்
பருகத்தந் துய்யக் கொள்ளாய்
அழுங்குகின் றேனுடையா யடியே
னுன் னடைக் கலமே. 10

### அதிசயப்பத்து.

எண்ணி லேன்றிரு நாமவஞ்
செழுத்துமென் னேழைமை யதனாலே
நண்ணி லேன்கலை ஞானிகள்
தம்மொடு நல்வினை நயவாதே
மண்ணி லேபிறந் திறந்துமண்
ணாவதற் கொருப்படு கின்றேனை
அண்ண லாண்டுதன் னடியாரிற்
கூட்டிய அதிசயங் கண்டாமே. 6

---

2 நின் பெயர்களைத் தம் நாவினால் இடைவிடாது மெல்லெனவுரைப்பார்கள்.

3 இகழ்ச்சிக்கு உரியவனாய். நரிப்பு-இகழ்ச்சி.

4 நம்பி-ஒப்புயர்வற்ற தலைவன். அண்மைவிளி.

10. வழங்குகின்றாய்க்கு—வழங்குகின்ற உன்பொருட்டு.

உற்ற ஆக்கையி னுறுபொருள்[1]
நறுமல ரெழுதரு நாற்றம்போற்
பற்ற லாவதோர் நிலைபிலாப்
பரம்பொரு[2] ளெப்பொருள் பாராதே
பெற்ற வாபெற்ற பயனது
நுகர்ந்திடும் பித்தர்சொற் றெளியாமே
அத்த னுண்டுதன் னடியரிற்
கூட்டிய அதிசயங் கண்டாமே. 9

---

9. [1] உயிர்கட்குப் பொருந்திய உடம்பினகத்தே எழுந்தருளியுள்ள மெய்ப் பொருள்; என்றது இறைவனை. "உடம்புளே யுத்தமன் கோயில் கொண்டா னென், றுடம்பினையானிருந்தோம்புகின்றேனே" என வருந் திருமூலர் வாய்மொழி ஒப்புநோக்கத்தக்கது.

[2] நல்ல மலரின் உள்ளிருந்து தோற்றும் நறுமணம்போலத் தான் உல குயிர்களின் அகத்தே கலந்து தோற்றினும் ஐம்புலனாற் பற்றப் படுவ தொரு சார்பில்லாத மேலாகிய பொருள்; என்றது ஒரு பற்றுமற்று அருவாய்த் தானே நிற்குந் தத்துவங் கடந்த பொருள் எனக் கந்தழி யாகிய இறைவன் இயல்பினைக் குறிப்பிட்டபடியாம்.

"கந்தழியாவது ஒரு பற்றும் அற்று அருவாய்த் தானே நிற்கும் தத்துவங்கடந்தபொருள்; அது 'சார்பினுற்றோன்றாது தானருவா யெப்பொருட்கும், சார்பெனநின் றெஞ்ஞான்று மின்பந்தகைத் தரோ, வாய்மொழியான் மெய்யான் மனத்தான் அறிவிறந்த, தூய்மையதா மைதீர் சுடர்' என்பதாம். இதனை 'உற்றவாக்கை யினுறு பொருள் நறுமலரெழுதரு நாற்றம்போற், பற்றலாவதோர் நிலையிலாப் பரம்பொருள்' என அதனை யுணர்ந்தோர் கூறியவாற்று னுணர்க" எனத் திருமுருகாற்றுப் படையுரையகத்து ஆசிரியர் நச்சி னார்க்கினியர் இத்திருவாசகப் பொருளை விளக்குதல் காண்க.

**புணர்ச்சிப்பத்து**

அல்லிக்[1] கமலத் தயனு மாலும்
அல்லா தவரு மமரர் கோனுஞ்
சொல்லிப் பரவு நாமத் தானைச்
சொல்லும் பொருளு மிறந்த சுடரை[2]
நெல்லிக் கனியைத்[3] தேனைப் பாலை
நிறையின் னமுதை யமுதின் சுவையைப்
புல்லிப் புணர்வ தென்று கொல்லோவென்
பொல்லா மணியைப் புணர்ந்தே. 4

**வாழாப்பத்து**

பாரொடு விண்ணாய்ப் பரந்தஎம் பரனே
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
சீரொடு பொலிவாய் சிவபுரத் தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
யாரொடு நோகே னார்க்கெடுத் துரைக்கேன்
ஆண்டநீ யருளிலை யானால்
வார்கடல்[1] லுலகில் வாழ்கிலேன் கண்டாய்
வருகவென் றருள்புரி யாயே. 1

---

4. [1] அல்லி - அகவிதழ்.
[2] மாற்றம் மனம் என்பவற்றைக் கடந்து விளங்கும் பேரொளிப்பொருள்.
[3] ஔவையுண்ட நெல்லிக்கனியைப் போன்று சாதல்நீக்கிப் பேரின்பம் அருள்வான் என்பது தோன்ற 'நெல்லிக்கனியை' எனச் சிறப்பித்தார்.

1. [1] வார்கடல் - நீட்சியும் நெடுமையுமுடைய கடல்.

## அருட்பத்து.

சோதியே[1] சுடரே[2] சூழொளி விளக்கே[3]
சுரிகுழற் பணைமுலை மடந்தை
பாதியே பரனே பால்கொள்வெண் ணீற்றாய்
பங்கயத் தயனுமா லறியா[4]
நீதியே செல்வத் திருப்பெருந் துறையில்
நிறைமலர்க் குருந்தமே வியசீர்
ஆதியே யடியேன் ஆதரித் தழைத்தால்
அதெந்துவே[5] யென்றரு ளாயே. 1

## திருக்கழுக்குன்றப்பதிகம்.

பிட்டு நேர்பட[1] மண்சுமந்த
பெருந்துறைப்பெரும் பித்தனே
சட்ட நேர்பட வந்திலாத
சழக்கனே[2] னுனைச் சார்ந்திலேன்
சிட்டனேசிவ லோகனேசிறு
நாயினுங் கடையாய வெங்
கட்டனேனையு மாட்கொள் வான்வந்து
காட்டினாய் கழுக்குன்றிலே. 2

---

1. [1] சோதியென்றது, அன்பினால் இடைவிடாது நினைக்கும் மெய்யடியார்களின் உள்ளத்தே புலனாகும் ஒளியுருவினை.

[2] சுடர் என்றது, தீயின் புறத்தே விளங்கித் தோன்றும் ஒளிவடிவாதல் குறித்து நின்றது.

[3] சூழொளி விளக்கென்றது, ஞாயிறு திங்கள் விண்மீன் முதலாக இவ்வுலகின் புறத்தே சூழ்ந்து தோற்றும் ஒளியுடைப் பொருள்களிற் கலந்து நின்றமை குறித்தது. (பெரிய. ஞான. 835, 836)

[4] அயனும் என்றதற்கேற்ப மாலும் என உம்மை வருவித்துரைக்க.

[5] அதெந்துவே—அங்ஙனம் அழைப்பது எதன் பொருட்டு. எந்துவே என்பது எதற்காக என்னும் வினாப்பொருள் தரும் திசைச்சொல்.

2. [1] பிட்டுணவு தனக்கு எளிதிற் கிடைக்கும் வண்ணம்; பிட்டினை இசைந்துகொள்ள, பிட்டுக்குச் சமமாக எனினும் பொருந்தும்.

[2] செம்மை நெறியில் நின் திருப்பணியிற் பொருந்தி நின் அருள்வழி யொழுகாத குற்றமுடையேன். 'சட்ட' என்பது செப்பம் என்னும் பொருள் தருவதாகிய அகரவீற் றிடைச் சொல். அது சட்டம் என மகரவீறாய்ப் பொது மக்கள் வழக்கில் மருவி வழங்கும். (சிவஞான பாடியம் சூ. 9 அதி. 2ல் இச்சொல்லினியல்பு விளக்கப்பட்டது). செம்மை யென்னும் பொருளுடைய இத்தமிழ்ச் சொல்லே இக்காலத்தில் நீதி வரம்பைக் குறித்தும் வழங்குவதாயிற்று.

## கண்டபத்து.

உருத்தெரியாக் காலத்தே யுள்புகுந்தென் னுளமன்னிக்
கருத்திருத்தி யூன்புக்குக்[1] கருணையினு லாண்டுகொண்ட
திருத்துருத்தி மேயானைத் தித்திக்குஞ் சிவபதத்தை
அருத்தியினுல்[2] நாயடியேன் அணிகொள்தில்லை
கண்டேனே. 3

## குழைத்தபத்து.

வேண்டத் தக்க தறிவோய்நீ[1]
வேண்ட முழுதுந் தருவோய்நீ
வேண்டு மயன்மாற் கரியோய்நீ
வேண்டி யென்னைப் பணிகொண்டாய்
வேண்டி நீயா தருள்செய்தாய்
யானு மதுவே வேண்டினல்லால்
வேண்டும் பரிசொன் றுண்டென்னில்
அதுவு முன்றன் விருப்பன்றே.[2] 6

---

3. [1] வினவுதெரியாத இளம் பருவத்திலேயே என் அறிவிற் புகுந்து என் உள்ளத்தில் நிலை பெற்று இறைவனுகிய தன்னைப்பற்றிய எண்ணத்தை என் உளத்தில் நிலைபெற இருத்தி என் உடம்பினையே தனக்குரிய திருக்கோயிலாகக் கொண்டு புகுந்து.

[2] அருத்தி—ஆசை.

6. [1] யான் நின்பால் வேண்டத்தகுவது இதுவென்பதனை என்னினும் முந்த அறிபவன் உயிர்க்குயிராகிய நீயே என்பது கருத்து.

[2] நீ எதனை விரும்பி அருள் செய்தாயோ அதனையே யானும் விரும்புவதல்லாமல் நானே நின்னை வேண்டிப் பெறுவதொன்றி நக்குமானுல் அதுவும் உன்னுடைய விருப்பத்தின்படி நிகழ்வதல்லவா?

அன்றே யென்றன் ஆவியும்
உடலும் உடைமை யெல்லாமும்
குன்றே யனையாய் என்னையாட்
கொண்ட போதே கொண்டிலையோ
இன்றோ ரிடையூ றெனக்குண்டோ
எண்டோள் முக்கண் எம்மானே
நன்றே செய்வாய் பிழைசெய்வாய்
நானோ இதற்கு நாயகமே. 7

## உயிருண்ணிப்பத்து.

பற்றாங்கவை யற்றீர்பற்றும் பற்றாங்கது பற்றி
நற்றாங்கதி யடைவோமெனிற் கெடுவீரோடி வம்மின்
தெற்றார்சடை முடியான்மன்னு திருப்பெருந்துறை யிறைசீர்
கற்றாங்கவன் கழல்பேணின ரொடுங்கூடுமின் கலந்தே. 5

---

7. நன்று என்பது, ஆவி உடல் உடைமை என்பவற்றுக்கு நன்மை பயக்குஞ் செயலை. பிழையென்றது அவற்றிற்குத் தீங்கு பயப்பதனை. என்னுடைய உயிர் உடல் பொருள் யாவும் உன்னுடைமை யாதலால் அவற்றுக்குளவாம் நலந் தீங்குகளைக் கண்காணிக்குந் தலைமை என்னைச் சார்ந்ததன்று என்பது கருத்து.

5. பற்றும் பற்று ஆங்கு அதுபற்றி பற்று ஆங்கு அவை அற்றீர்—கடைப் பிடித்தற்குரிய பற்றுக்கோடாகிய இறைவனது அருள்நெறியைப் பற்றிநின்று யான் எனது என்னும் பற்றுக்களை அறவேயொழித்த துறவிகளே, நல்லதாகிய வீட்டு நெறியினை நம்முடைய தனித்த முயற்சியினாலேயே நாமடைவோம் எனக் கருதுவீராயின், நும்முடைய அறிவிச்சை செயல்கள் புறத்தே உலகியலிற் சேறலுண்மையால் மீண்டும் மலவாதனையால் தாக்கப்பட்டுக் கெடுவீராவீர். ஆதலின் அவ்விடர் நிலையினின்றும் பிழைத்து ஓடிவாருங்கள். ஒனறோ டொன்று பிணங்கிப் பின்னிய சடை முடியானும் நிலைபெற்ற திருப் பெருந்துறையில் எழுந்தருளிய பெருமானும் ஆகிய இறைவனது மெய்ப்புகழைக் கற்றுக் கற்ற அவ்வாறே அப்பெருமான் திருவடி யைத் தழுவின உள்ளமுடைய மெய்யடியார்களோடு அன்பினால் உளங் கலந்து கூடி வழிபடுமின் என்பதாம்.

இவ்வழிபாடு மலவாதனை சிறிதுந் தாக்காது சிவானந்தம் மேன்மேல் வளரச்செய்யுஞ் சாதகமாதலால் இன்றியமையாது மேற்கொள்ளற் பாலதென்பதனை அடிகள் அறிவுறுத்தி யருளினாராயிற்று. இத்திரு வாசகத்தான் அறிவுறுத்தப்பெறும் வழிபாட்டு முறையினை ஆசிரியர் மெய்கண்ட தேவதம்பிரானார் தமது சிவஞானபோதப் பன்னிரண் டாஞ் சூத்திரத்து விளக்கியருளினமை இங்கு ஒப்பு நோக்கத்தகு வதாம். இத்திருவாசகத்தின் முதலடியில்

''பற்றுக பற்றற்றான் பற்றினை யப்பற்றைப், பற்றுகபற்று விடற்கு''
என்னுந் திருக்குறட் பொருளை அடிகள் குறிப்பிட்டருளுதல் காண்க.

## அச்சப்பத்து.

புற்றில்வா ளரவும்[1] அஞ்சேன்
பொய்யர்தம் மெய்யும் அஞ்சேன்
கற்றைவார் சடையெம் அண்ணல்
கண்ணுதல் பாத நண்ணி
மற்றுமோர் தெய்வந் தன்னை
யுண்டென நினைந்தெம் பெம்மாற்
கற்றிலா தவரைக் கண்டால்
அம்மநாம் அஞ்சு மாறே. 1

---

1. வாளரவு—ஒளியையுடைய பாம்பு. கொடிய பாம்பிற்கும் தீமை பயக்கும் பொய்யர் கூற்றுக்கும் ஒரு சிறிதும் அஞ்சோம், கண்ணுதலாகிய முழு முதற் பொருளின் திருவடிகளையடைந்து அம் முதற் பொருளுக்கு வேறாகப் பிறிதொரு தெய்வம் இருப்பதாக் கவர்த்த சிந்தனையுடையராகி எம்பெருமானுக்கு இரண்டற்ற ஒருமை நிலையில் வழிபடுதலில்லாதவரைக் கண்டால் ஐயோ நாம் அஞ்சும் வகையை என் சொல்லுவோம் என்பது இப்பாடலின் பொருளாகும்.

கொடிய பாம்பும் பொய்யர் கூறும் வஞ்சனை மொழியும் ஆகிய இவற்றுக்கு அஞ்சவேண்டியது சந்தர்ப்பம் வாய்த்தவிடத்து இவைதுன்பத்திற்கு ஏதுவாம் என்பது பற்றியேயாம். ஒன்றே குலனும் ஒருவனே தேவனும் என்னும் உறைப்புடைய சிவபத்தியில்லாதார் இவ்வாறன்றி வாய்ப்பில்லாதவிடத்தும் வாய்ப்பினையுண்டாக்கிக்கொண்டு பல வழியாலும் தம்மோடொப்ப ஏனையோரையும் விபரீதவுணர்விற் செலுத்தியே விடுவராகலான் அவரை அக்கொடியவற்றினும் அஞ்சி விட்டொழிதலே அறிவுடைமைக்குச் சால்பாகும் என அடிகள் குறிப்பான் அறிவுறுத்தருளினாராயிற்று.

## திருப்பாண்டிப்பதிகம்.

காலமுண் டாகவே காதல்செய் துய்மின்[1] கருதரிய
ஞாலமுண் டாெைடு நான்முகன் வானவர் நண்ணரிய
ஆல[2]முண் டானெங்கள் பாண்டிப் பிரான்றன் னடியவர்க்கு
மூலபண் டாரம்[3] வழங்குகின் றுன்வந்து முந்துமினே. 5

## திருவேசறவு.

நானேயோ தவஞ்செய்தேன் சிவாயநம[1] வெனப்பெற்றேன்
தேனுயின் னமுதமுமாய்த் தித்திக்குஞ் சிவபெருமான்
தானேவந் தெனதுள்ளம் புகுந்தடியேற் கருள்செய்தான்
ஊனுரு முயிர்வாழ்க்கை யொறுத்தன்றே வெறுத்திடவே[2]. 10

---

5. [1] காலம்பெற இறைவன்பால் அன்புசெய்து உய்யுங்கள்; இளம்பருவத்திலேயே இறைவன்பாற் காதல் செய்தவர், அப்பெருமான் வழங்கியருளும் மூல பண்டாரமாகிய பேரருளின்பத்தை இவ்வுலகிலேயே நெடுங்காலம் நுகர்ந்தின்புறுவராதலின் 'கால முண்டாகவே காதல் செய்துய்மின்' என அடிகள் அறிவுறுத்தருளினர். 'வேண்டினுண் டாகத் துறக்க துறந்தபின், ஈண்டியற் பால பல' (342) என்னுந் திருக்குறளும் அதற்குப் பரிமேலழகர் கூறிய உரைவிளக்கமும் இங்குக் கருதற்குரியனவாம்.

[2] ஆலம்—கடலிற்றேன்றிய நஞ்சு.

[3] மூலபண்டாரம்—மேன்மேலும் வளர்ச்சியடைதற்குரிய கருவூலத்துப் பழம்பெருஞ் செல்வம்; என்றது இறைவனது திருவருட் செல்வத்தினை. 'அருட்செல்வஞ் செல்வத்துட் செல்வம்' என்ருர் தெய்வப் புலவரும். (குறள்—241)

10. [1] சூக்கும ஐந்தெழுத்து; வீடளிப்பது.

[2] ஊனுரும் உயிர் வாழ்க்கை ஒறுத்து அன்றே வெறுத்திட அடியேற்கு அருள்செய்தான் எனக் கூட்டுக.

### திருப்புலம்பல்.

உற்றாரை யான்வேண்டேன்
　　ஊர்வேண்டேன் பேர்வேண்டேன்
கற்றாரை யான்வேண்டேன்[1]
　　கற்பனவும் இனியமையும்[2]
குற்றாலத் தமர்ந்துறையுங்
　　கூத்தாவுன் குரைகழற்கே
கற்றா[3]வின் மனம்போலக்
　　கசிந்துருக வேண்டுவனே　　3

### சென்னிப்பத்து.

தேவ தேவன்மெய்ச் சேவகன்
　　தென்பெ ருந்துறை நாயகன்
மூவ ராலும் அறியொணாமுத
　　லாய வானந்த மூர்த்தியான்[1]
யாவ ராயினும் அன்பரன்றி
　　யறியொணா மலர்ச் சோதியான்
தூய மாமலர்ச் சேவடிக்கணஞ்
　　சென்னி மன்னிச் சுடருமே.　　1

---

3. [1] ஈண்டுக் கற்றாரென்றது பாசஞான பசுஞானமாகிய நூல்களைக் கற்ற அளவிலேயே அமைந்த நூலறிவினரை. 'நூலறிவு பேசி நுழைவிலா தார் திரிக' என்பது அம்மையார் வாய்மொழி.

[2] கலைக்கெலாம் பொருளாகி நின்றானும் அங்ஙனங் கற்றகல்வியினும் இனியானும் ஆகிய வாலறிவனது நற்றாளைத் தலைப்பட்ட மெய்யுணர்வினார்க்கு மேலும் உலகியலிற் புகுத்தும் குறையுடைய நூற்பயிற்சி வேண்டுவதின்றாம் என்பது அடிகள் கருத்து.

[3] கற்றா—கன்று ஆ; கன்றினை யீன்ற நிலையிலுள்ள தாய்ப்பசு.

1. [1] அயன் அரி அரன் என்னும் மும்மூர்த்திகளாலும் இன்ன தன்மையனென அறியவொண்ணாத முழுமுதற் பொருளாய இன்பவுருவினன்.

### எண்ணப்பதிகம்.

பாருரு வாய பிறப்பற வேண்டும்
பத்திமை யும்பெற வேண்டும்[1]
சீருரு வாய சிவபெரு மானே
செங்கமல மலர் போலும்
ஆருரு வாயவென் னாரமு தேயுன்
அடியவர் தொகை நடுவே
ஓருரு வாயநின் திருவருள் காட்டி
என்னையும் உய்யக்கொண் டருளே. 1

### ஆனந்தமாலை.

என்னா லறியாப் பதந்தந்தாய்
யான தறியாதே கெட்டேன்
உன்னா லொன்றுங் குறைவில்லை
உடையா யடிமைக் காரென்பேன்[1]
பன்னா ளுன்னைப் பணிந்தேத்தும்
பழைய அடிய ரொடுங்கூடா
தென்னா யகமே பிற்பட்டிங்
கிருந்தேன் நோய்க்கு விருந்தாயே[2]. 2

---

1. [1] அழியுந் தன்மைத்தாய நிலவுலகத்தில் பல்வேறு உருவாய் உடம்பெடுப்பதாகிய பிறப்பு ஒழியவேண்டும், அங்ஙனம் இப்பிறவி ஒழிதற்கு முன் இதுகாறும் எடுத்த பிறவிகளின் பயனாய் நின் திருவடிக்கண் யான் மேற்கொள்ள வேண்டிய அன்புரிமையாகிய பத்திமையும் பெறுதல் வேண்டும் என அடிகள் வேண்டிய நுட்பமுணர்க.

2. [1] என் சிற்றறிவினால் இன்னதன்மைத்தென்று அறிந்துகொள்ள முடியாத அத்துணைப் பெருமையுடைய திருவருளை நீ அடியேனுக்குத் தந்தருளினை. யானோ அதன் சிறப்பினை யறிந்து பாதுகாவாது வெறுவியனாய்க் கெட்டேன். 'தன்கடன் அடியேனையுந் தாங்குதல்' என்றபடி கடனறிந்தருளிய உன்னால் யாதொரு குறையுமில்லை. 'எல்லாமுடைய பெருமானாகிய நின் திருவடித்தொண்டுக்கு இவன் யார், என்ன தகுதியுடையான்' எனப் பிறரெல்லாம் சொல்லுதற் குரியேனாயினேன் என இரங்கியவாறு.

[2] நோய்க்கு விருந்தாயே இருந்தேன்-பிணியாகிய விலங்கிற்கு என் உடல் விருந்துணவாக அமையவே இதுகாறும் உயிரோடிருக்கின்றேன்.

சீல[1] மின்றி நோன்பின்றிச்[2]
செறிவே[3] யின்றி அறிவின்றித்
தோலின் பாவைக் கூத்தாட்டாய்ச்
சுழன்று விழுந்து கிடப்பேனை[4]
மாலுங் காட்டி வழிகாட்டி
வாரா உலக நெறியேறக்
கோலம் காட்டி ஆண்டானைக்
கொடியேன் என்றோ கூடுவதே. 3

## அச்சோப்பதிகம்.

முத்திநெறி அறியாத மூர்க்கரொடு முயல்வேனைப்
பத்திநெறி[1] அறிவித்துப் பழவினைகள் பாறும்வண்ணம்[2]
சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கி எனையாண்ட
அத்தனெனக் கருளியவா றார்பெறுவார் அச்சோவே[3]. 1

---

3. [1] சீலம்—ஒழுக்கம். [2] நோன்பு—தவம். [3] செறிவு—அடக்கம். [4] தோலாற் பாவை செய்து ஆட்டும் தோற்பாவைக் கூத்தில் அப் பாவைகள் தமக்கென்று உணர்வுஞ் செயலுமின்றிச் சுழன்று விழுதல் போல எனக்கென உணர்வுஞ் செயலுமின்றி இவ்வுலகியலில் அலமருகின்றேன். உணர்வில்லாத என்னைச் சூழ்ந்துள்ள மயக்கத்தையும் காட்டி, மீண்டு வாராவுலகாகிய வீட்டு நெறியிற் சென்று யான் பொருந்தும் வண்ணம் தனது ஆசிரியத் திருமேனியையுங்காட்டி என்னை யாட்கொண்டருளிய பெருமானைக் கொடியேன் கூடுவது என்றோ?

1. [1] அன்புநெறி. [2] அற்றொழியும்படி. [3] அச்சோ-வியப்பினைக் குறிக்கும் சொல்.

# திருக்கோவையார்.

‡ **இயற்கைப்புணர்ச்சி - *புணர்ச்சிதுணிதல்.**

கோவ்வைச் செவ்வாய்க் கொடியிடைப் பேதையைத்
தெய்வப் புணர்ச்சி செம்மல் துணிந்தது.

ஏழுடை யான்பொழில் எட்டுடை
யான்புயம்[1] என்னை முன்னாள்
ஊழுடை யான்[2]புலி யூரன்ன
பொன்[3]னிவ் வுயர்பொழில்வாய்ச்
சூழுடை யாயத்தை நீக்கும்
விதிதுணை யாமனனே
யாழுடை யார்மணங் காண்
அணங் காய்வந் தகப்பட்டதே[4]. 7

---

‡ தமக்கு ஒப்பாரும் மிக்காரும் இல்லாத தலைமகனும் தலைமகளும் ஒரு சோலையிடத்து எதிர்ப்பட்டுத் தெய்வம் நடுநின்று கூட்டுதலால் ஒத்த அன்பினராகிய அவ்விருவரும் தம்முள் தாமே கூடுங் கூட்டம் இயற்கைப் புணர்ச்சி யெனப்படும். *இது தலைவன் கூற்று.

7. [1] பொழில் ஏழுடையான், புயம் எட்டுடையான் என இயைத்துரைக்க. பொழில்-உலகம். புயம்-தோள்.

[2] முன் என்னை ஆள் ஊழ் உடையான் - எனக்கு ஆட்படுந் தன்மை உண்டாவதற்கு முன்னமே என்னையாளும் முறைமையை யுடையான். ஊழ்-முறைமை.

[3] அவனது புலியூரையொக்கும் பொன்னனையாள்; என்றது தலைவியை.

[4] பண்டை விதியையே துணையாகக் கொண்டு கந்தருவர் மணம் ஒரு பெண்வடிவு கொண்டு எனக்கு எய்திற்று என்பது தலைவன் உட்கோள். யாழுடையார் மணம் - கந்தருவர் மணம்.

### இயற்கைப்புணர்ச்சி - †இடமணித்துக்கூறி வற்புறுத்தல்.

மடவரலை வற்புறுத்தி-யிடமணித்தென் றவனியம்பியது.

வருங்குன்ற[1] மொன்றுரித் தோன்
தில்லை யம்பல வன்மலயத்
திருங்குன்ற வாண ரிளங்கொடி
யேயிட ரெய்த லெம்மூர்ப்
பருங்குன்ற மாளிகை நுண்கள
பத்தொளி பாய நும்மூர்க்
கருங்குன்றம் வெண்ணிறக் கஞ்சுக
மேய்க்குங் கனங் குழையே[2]. 15

### பாங்கற்கூட்டம் - *உயிரென வியத்தல்.

வெறியுறு பொழிலின் வியன்போதும்பரின்
நெறியுறு குழலி நிலைமை கண்டது.

நேயத்த தாய்நென்ன லென்னைப்
புணர்ந்து நெஞ்சம்நெகப்போய்
ஆயத்த தாயமிழ் தாயணங்
காயர னம்பலம்போற்
றேயத்த தாயென்றன் சிந்தைய
தாய்த்தெரி யிற்பெரிது
மாயத்த தாகி யிதோவந்து
நின்றதென் மன்னுயிரே. 39

---

† தன் பிரிவுக்கு ஆற்றுளாகிய தலைமகளுக்குத் தலைவன் தன் ஊரின் அணிமை கூறி வற்புறுத்தாநிற்றல்.

15. [1] வருங்குன்றம்—இயங்கும் மலை; என்றது மலைபோலும் யானையைக் குறித்து நின்றது.

[2] எம் ஊரிடத்துப் பெரிய குன்றத்தையொத்த மாளிகையில் தீற்றிய நுண்ணிதாகிய வெண் சாந்தின் ஒளி பரவி நும்மூர்க்கண் உண்டாகிய கரியமலை வெள்ளைச் சட்டையிட்டதனை ஒத்துக் காணப்படும். கஞ்சுகம்-சட்டை.

39. * முன்னை நாளில் தலைவியைக்கண்டு மகிழ்ந்த தலைவன் பிற்றைநாளில் அச்சோலையை யடைந்து அங்குத் தனனெதிர்ப்பட்ட தலைவியைக் கண்டு தன்னுயிரே அவ்வடிவுகொண்டு வந்தது என வியந்து கூறாநிற்றல்.

நென்னல் நேயத்தாய் என்னைப் புணர்ந்து எனக் கூட்டுக. நென்னல்-நேற்று. நேயம்-அன்பு. தேயம்-ஒளி; வடமொழிச் சிதைவென்பர் பேராசிரியர்.

**§ நாணநாட்டம் - பிறைதொழுகென்றல்.**

பிறைதொழு கென்று பேதை மாதரை
நறுநுதற் பாங்கி நாண நாட்டியது,

மைவார் கருங்கண்ணி[1] செங்கரங்
கூப்பு மறந்து மற்றப்
பொய்வா னவரிற் புகாதுதன்
பொற்கழற் கேயடியேன்
உய்வான் புகவொளிர் தில்லைநின்
றோன்[2] சடைமேலதொத்துச்
செவ்வா னடைந்த பசுங்கதிர்
வெள்ளைச் சிறுபிறைக்கே. 67

---

67. § களவொழுக்கத்தின்கண் தலைவன் தலைவி இருவர் நினைவும் ஐயமறத் துணிந்த தோழி, பிறைத்திங்களைத் தலைவிக்குக் காட்டித் தான் தொழுதுநின்று "நீயும் தொழுதுகாண்" என்று கூறித் தலைமகளது புணர்ச்சிநினைவறியாநிற்றல். அதுகேட்ட தலைமகள் தான் இயற்கைப்புணர்ச்சியிற் கண்டு மகிழ்ந்த தலைவனையன்றிப் பிறிது தெய்வந்தொழாக் கற்புக்கடம் பூண்டாளாதலின் திங்களைத் தொழாது நிற்பாள். அதுகண்டு தோழி அவளது ஒழுகலாற்றினை யுணர்ந்து கொள்ளுதல் இக்கூற்றின் பயனாகும். இது தோழிகூற்று.

1 விளி.

2 மறந்தும் அப்பொய்வானவரில் புகாது தன் பொன் கழற்கே அடியேன் உய்வான்புக ஒளிர்தில்லை நின்றோன்-மறந்தும் பொய்மையையுடைய அத்தேவர்களிடத்தே புகாதே தன்னுடைய திருவடிகளிலேயே அடியேன் உய்யவேண்டிப் புக விளங்குந் தில்லைக்கண் கட்புலனாய்நின்றவன்; என்றது எனக்குப் பொறியுணர்வல்லது அவனை உணர்தற்குரிய மெய்யுணர்வில்லாமையால் என் கண்களுந் திருமேனி காட்டி என்னை வசஞ்செய்து தன்பால் ஈர்த்துங்கொண்டான் என அடிகள் நயம்பெறக் கூறியவாறும். இறைவனது செஞ்சடை செவ்வானத்திற்கு உவமை. மைவார் கருங்கண்ணி வெள்ளைச் சிறுபிறைக்குச் செங்கரங் கூப்பு எனக் கொண்டுகூட்டிப் பொருள் கூறுக.

## * நடுங்கநாட்டம்.

நுடங்கிடைப் பாங்கி நடுங்க நாடியது.

ஆவா இருவர் அறியா அடி தில்லை யம்பலத்து
மூவா யிரவர் வணங்க நின்றோனை[1] யுன்னாரின் முன்னித்
தீவா யுழுவை கிழித்த தந்தோ[2] சிறிதே பிழைப்பித்
தாவா மணிவேல் பணிகொண்ட வாறின்றொ
[ராண்டைகையே[3]. 72

---

* தோழி தலைமகளின் உட்குறிப்பினை அவளே யுணர்த்த அறியும் விருப்பினால் அவளையணுகிநின்று 'இப்புனத்து ஒரு புலி ஒருவனை எதிர்ப்பட்டது' எனக்கூறித் தலைமகள் ஒரு சிறிது நடுங்கிப் பின் தெளியும்வண்ணம் அவள் ஒழுகலாற்றினை ஆராய்தல்.

72. [1] இருவர் அறியா அடி மூவாயிரவர் வணங்கத் தில்லையம்பலத்து நின்றோனை—அயனும் அரியும் ஆகிய இருவர் அறியாத தன் திருவடிகளை மூவாயிரம் அந்தணர் கண்டு வணங்கத் தில்லையம்பலத்து எளிவந்து நின்ற இறைவனை. அயனும் அரியும் தில்லையம்பலத்திற் சென்று அப்பெருமானை வணங்கும்முறையறிந்திலரே யென அவர்பால் வைத்த அருட்குறிப்பால் அடிகள் ஆவா! என உளம் நெகிழ்ந்தனர்.

[2] தீவாய் உழுவை கிழித்தது என்பது, தன் கொடியவாயைப் புலி திறந்தது எனவும், புலியினது தீய வாயை வேறொன்று கிழித்தது எனவும் புலியினது தீய வாய் வேறொன்றனைக் கிழித்தது எனவும் கவர்படு பொருள்களைத் தரும்படி தோழி கூறிய மொழியர்கும்.

[3] இங்ஙனம் தான் கூறத் தலைமகள் நாடி நடுங்காநிற்கக்கண்ட தோழி 'ஆடவரிற் சிறந்தானோர் தலைவன் இன்று அதனைச் சிறிதே தப்புவித்துத் தன் கையிலேந்திய மணியையுடைய வேற்படையைப் பணிகொண்ட திறம் என்னே' என வியந்துகூறுமுகத்தால் தலைமகள் கொண்ட நடுக்கத்தினை உடனே தீர்த்தனள்.

**குறைநயப்புக்கூறல் - வஞ்சித்துரைத்தல்.**

நெஞ்ச நெகிழ்வகை வஞ்சித் திவையிவை
செஞ்சடை யோன்புகழ் வஞ்சிக் குரைத்தது.

புரங்கடந் தானடி காண்பான் புவிவிண்டு புக்கறியா
திரங்கிடெந் தாயென் றிரப்பத்தன் னீரடிக் கென்னிரண்டு
கரங்கடந் தானொன்று காட்டமற் றொன்கதுங் காட்டிடென்று
வரங்கிடந் தான்றில்லை யம்பல முன்றிலம் மாயவனே. 86

**சேட்படை - † கண்ணயந் துரைத்தல்.**

கண்ணிணை பிறழ்வன-வண்ண முரைத்தது.

ஈசற்கு யான்வைத்த வன்பினகன்று
அவன் வாங்கியவென்
பாசத்திற் காரென் றவன்தில்லை
மின்ஒளி போன்றவன்தோள்
பூசத் திருநீ றெனவெளுத்
தாங்கவன் பூங்கழல்யாம்
பேசத் திருவார்த்தை யிற்பெரு
நீளம் பெருங்கண்களே. 109

---

86. வஞ்சித்துரைத்தல் — மறுமொழியை வெளிப்படையாகக் கூறாது வேறொன்றாகக் கூறுதல். இறைவன் அருளால் ஒரு திருவடியைக் கண்டு மற்றொரு திருவடியையுங் காட்டியருள்க எனத் திருமால் வரங் கிடந்தான் என்று கூறுமுகத்தால் முன்னர்ப் பாங்கற்கூட்டம் பெற்ற தலைமகன் பின்னர்த் தோழியாகிய நின்னுதவியாற் பெறும் கூட்டம் காரணமாக நின்னிடத்து வந்து இரந்து குறையுறுகின்றான் எனத் தலைவி தோழிக்கு மறுமொழியாகக் கூறியவாறும். புரங்கடந் தான் — திரிபுரங்களை வென்ற இறைவன். புவி விண்டு — நிலத்தைப் பிளந்துகொண்டு. 'புக்கறியாது எந்தாய் இரங்கிடு என்றுரைப்ப' எனப் பிரித்துப் பொருள் கூறுக.

109. † தலைவன் தலைமகள் கண்களின் இயல்பினை விரும்பி யுரைத்தல்.

வெண்மை, கருமை, செம்மை, அகலம், நீளம், ஒளி யென்பன தலைமகள் கண்களின் இயல்புகளாம். இவையனைத்திற்கும் ஈசனொடு தொடர்புபட்ட பொருள்களை உவமையாக்கிச் சிறப்பிக்கும் நிலையில் இத்திருக்கோவை யமைந்தமை காண்க. 'அவன்தோள் பூசு அத்திரு நீறு என வெளுத்து' என இறைவனுடைய பவள மலைபோலுந் திருத் தோளிற் பூசிய திருநீற்றை யுவமை கூறியவதனால் மேலே தோன்றும் வெண்மை நிறத்தோடு அதற் குள்ளீடாய்க் கலந்து தோன்றும் செம்மை நிறத்தையும் கண்களின் செவ்வரிக்கு உவமை கூறினமை யுணர்க.

## இரவுக்குறி - ‡ நின்று நெஞ்சுடைதல்.

**பாங்கி விலக்கப் பருவரை நாடன்-நீங்கி விலங்காது நெஞ்சுடைந்தது.**

மாற்றே னெனவந்த காலனை
  யோலமிட வடர்த்த[1]
கோற்றேன்[2] குளிர்தில்லைக் கூத்தன்
  கொடுங்குன்றி னீள்குடுமி
மேற்றேன் விரும்பு முடவனைப்
  போல[3] மெலியுநெஞ்சே
ஆற்றேன் அரிய அரிவைக்கு
  நீவைத்த அன்பினுக்கே. 150

---

‡ தோழி வழியருமை கூறி இரவுக்குறியை மறுத்துரைப்பக் கேட்ட தலைமகன், 'எய்துதற்கரிய தலைவியை விரும்பி நீ இவ்வாறு மெலிதற்கு யான் ஆற்றேன்' எனக்கூறித் தனது இறந்து பாடுதோன்ற நின்று தன் மனமுடைந்து வருந்துதல்.

150. [1] ஒருவரானும் மாற்றப்படேன் என்று மார்க்கண்டனது உயிரைக் கவர வந்த கூற்றுவனை அவன் ஓலமிட்டு அலறும்படி உதைத்து அடக்கிய.

[2] கொம்புத்தேன்; என்றது தில்லைக் கூத்தனாகிய இறைவனை. சுவை மிகுதியுடைமையால் கோற்றேன் என்றார். "நினைத்தொறுங் காண்டொறும் பேசுந்தொறும் எப்போதும், அனைத்தெலும்பு உள்நெக ஆனந்தத்தேன் சொரியுங் குனிப்புடையான்" (திருக்கோத்தும்பி-3) என அடிகள் இச்சுவை மிகுதியை விளக்கியருளுதல் காண்க.

[3] கொடுங்குன்றின் நீள்குடுமிமேல் தேன்விரும்பும் முடவனைப்போல- கொடுங்குன்று என்னும் மலையினது உச்சியிலுள்ள தேனை விரும்பும் முடவன் அதனைப் பெறுதற்கு ஆற்றலின்றி வருந்துதல்போல.

கடைச்சங்க நாளில் பாரி வள்ளலுக் குரியதாகிய பறம்பு மலையே திருமுறையாசிரியர் காலத்தில் கொடுங்குன்று என்னும் பெயருடன் வழங்கியதாகத் தெரிகிறது. இம்மலை இக்காலத்தில் பிரான்மலை என்னும் பெயருடன் வழங்குகின்றது. குடுமி-சிகரம்.

### இரவுக்குறி - *அலரறிவுறுத்தல்.

அலைவே லண்ணல் மனமகி ழருள்பலரா லறியப் பட்ட தென்றது.

அலரா யிரந்தந்து வந்தித்து
மாலாயிரங் கரத்தால்
அலரார் கழல்வழி பாடுசெய்
தாற்[1]கள வில்லொளிகள்
அலரா விருக்கும் படைகொடுத்தோன்[2]
தில்லையா னருள்போன்
றலராய் விளைகின்ற தம்பல்கைம்
மிக்கைய மெய்யருளே[3]. 180

---

* களவொழுக்கத்து இரவுக்குறியில் வந்தொழுகாநின்ற தலைவனைத் தோழி எதிர்ப்பட்டு 'நின் அருளாய இவ்வொழுக்கம் எங்களுக்குப் பழியையுண்டாக்குகின்றது. இனி நீ இவ்வாறு ஒழுகாது தவிர்தல் வேண்டும்' என ஊரார் கூறும் பழிமொழியைத் தலைவனுக்கு அறிவுறுத்தி அவனது வரவினை விலக்குதல்.

180. [1] மால் அலர் ஆயிரந்தந்து வந்தித்து ஆயிரங் கரத்தால் அலர் ஆர் கழல் வழிபாடுசெய்தாற்கு — ஆயிரந் தாமரை மலர்களைக் கொண்டுசென்று அருச்சித்து வணங்கித் தன் ஆயிரங்கைகளாலும் இறைவனது மலர் போலுந் திருவடியை வழிபடுதலைச் செய்த திருமாலுக்கு;

அளவில்லாத ஒளிகள் விரியாநிற்கும் சக்கரப்படையைக் கொடுத்தருளியவன்.

[3] ஐய மெய்யருள் தில்லையான் அருள்போன்று அம்பல் கைம்மிக்கு அலராய்விளைகின்றது — தலைவ, நினது மெய்யாகிய அருள் தில்லைப் பெருமானது அருள்போல அம்பல் முதிர்ந்து அலராய் விளையாநின்றது.

அம்பல்—பரவாத களவு; ஊரார் தமக்குள் சொல்லால் வெளிப்படச் சொல்லாது கண்ணால் குறிப்பாகப் புலப்படுத்தி முகிழ்முகிழ்த்துச் சொல்வது. அம்பல்-விரியாத அரும்பு போல்வது.

அலர் — 'இன்னானோடு இன்னாளிடையது நட்பு' என்றாற்போலச் சொல்லால் வெளிப்படப் பரவும் பழிச்சொல். அலர்-விரிந்த பூப் போல்வது. இதுவே இவ்விரண்டற்கும் வேறுபாடு.

## *உடன்போக்கு - கற்புநலனுரைத்தல்

பொய்யோத்த விடை போக்குத்துணிய - வையத்திடை வழக்குரைத்தது.

தாயிற் சிறந்தன்று நாண்தைய லாருக்[1]கந் நாண்டகைசால்
வேயிற் சிறந்தமென் றோளிதிண் கற்பின் விழுமிதன்[2]றீங்
கோயிற்[3] சிறந்துசிற் றம்பலத் தாடுமெங் கூத்தப்பிரான்
வாயிற் சிறந்த மதியிற் சிறந்த மதிநுதலே. 204

---

* தலைமகன் தலைமகளைப் பெற்றோர் அறியாதபடி தன்னுடன் அழைத்துக்கொண்டு செல்லுதல்.

204. தோழி தலைமகளையடைந்து 'மகளிர்க்குப் பாதுகாக்கப்படுவனவற்றுள் நாண்போலச் சிறந்தது வேறொன்றுமில்லை; அத்தன்மைத்தாகிய நாணமும் கற்புப்போல அவ்வளவு சிறந்ததன்று' என உலகியல் கூறுவாள் போன்று கற்பின் நலங்கூறித் தலைவனொடு செல்லுதற்குத் தலைமகளை யுடன்படும்படி செய்தல்.

[1] தையலாருக்கு நாண் தாயிற்சிறந்தன்று — மகளிர்க்குப் பழிநீக்கிப் பாதுகாத்தலில் நாணம் தாய்போலச் சிறந்தது. [2] அந்நாண்திண் கற்பின் விழுமிதன்று — அத்தகைய நாணம் திண்ணிய கற்புப்போல அத்துணை மேன்மையுடையதன்று. [3] ஈங்கோயில் சிறந்து — திரு ஈங்கோய்மலையிற் பொலிவுபெற எழுந்தருளி. கூத்தப்பிரான் வாயிற் சிறந்த மதியிற் சிறந்த—கூத்தப்பிரானது வாயின்கண் வந்து சிறத்தற்குக் காரணமாகிய அறிவாற் சிறப்பையுடைய.

தாய் போல நாண் சிறத்தலும் நாணிலுங் கற்புச் சிறத்தலுமாகிய இவ்விரண்டும் கூத்தப்பிரான் வாயிற் சிறந்து தோன்றிய சிறந்த நூல்களிடத்துச் சிறப்பாக எடுத்துரைக்கப்பெற்ற பொருள்கள் என்பார், "கூத்தப்பிரான் வாயிற் சிறந்த மதியிற் சிறந்த" என்றாரென்றலும் பொருந்து மென்பர் பேராசிரியர்.

## உடன்போக்கு - புணர்ந்துடன் வருவோரைப் பொருந்தி வினவல்.

புணர்ந்துடன் வரும் புரவலனொருபால்
அணங்கமர்கோதையை யாராய்ந்தது.

மீண்டா ரெனவுவந் தேன்கண்டு நும்மையிம் மேதகவே
பூண்டா ரிருவர்முன் போயினரே[1]புலி யூரெனைநின்
றாண்டா னருவரை யாளியன் னானைக்கண் டேனயலே
தூண்டா விளக்கனை யாயென்னை யோவன்னை
சொல்லியதே[2] 244

---

244. உடன்போக்கில் தலைவனொடு சென்ற தன்மகளைத் தேடிச் சென்ற செவிலித்தாய், தன்மகளும் அவள் காதலனும் போலவே வழியில் எதிர்ப்பட்ட காதலர்களாகிய அயலார் இருவரைக்கண்டு, 'நும்மைக் கண்டு என்னால் தேடப்படுகின்ற என் மகளும் மருமகனும் மீண்டார்கள் என்று கருதி மகிழ்ந்தேன்; அதுகிடக்க இவ்வாறு நும்மையொத்த அன்பினராய இருவர் இவ்வழியே போகக் கண்டீரோ' என வினவுதல்.

[1] போயினரே — போயினரோ? இதுவரையும் செவிலி கூற்று.

[2] அங்ஙனம் புணர்ந்து உடன் வரும் காதலரிருவருள் தலைவன் கூறிய மறுமொழியிதுவாகும்.

'புலியூரின்கண் எழுந்தருளி ஒரு பொருளாக மதித்து என்னை ஆண்டவனது நெருங்குதற்கரிய மலையிலுள்ள சிங்கத்தையொப்பவனாகிய தலைவனை யான் கண்டேன்' எனச் செவிலியை நோக்கிச் சொல்லிய தலைவன், பின்னர்த் தன்பக்கத்தில் நின்ற தலைவியை நோக்கி, 'தூண்டாவிளக்கினையொப்பாய் அத்தலைவனுக்கு அயலாக அன்னை சொல்லியது யாது? அதனை அவட்குச் சொல்லுவாயாக' எனக் கூறுகின்றான். இக்கூற்று ஒருமைப்பின்னுடன் போந்த அத்தலைவனது உள்ளத்தின் நிறையைப் புலப்படுத்துவதாகும். ஆளி — சிங்கம்.

**உடன்போக்கு - உலகியல்புரைத்தல்.**

செவிலியது கவலைதீர - மன்னிய வுலகியல் முன்னியுரைத்தது.

சுரும்பிவர் சந்துந் தொடுகடல்
முத்தும்வெண் சங்குமெங்கும்
விரும்பினர் பாற்சென்று மெய்க்கணி
யாம்[1]வியன் கங்கையென்னும்
பெரும்புனல் சூடும் பிரான்சிவன்
சிற்றம் பலமனைய
கரும்பன மென்மொழி யாருமந்
நீர்மையர் காணுநர்க்கே.[2] 248

---

248. தன் மகளைத்தேடி வருந்திய செவிலிக்கு வழியிடைக்கண்டோர் காத லிருவரது அன்பின் இயைபினை எடுத்துரைத்து மீளும்படி கூறவும் மீளாமல் வருந்திய நிலையில் அவர்கள் உலகத்தியல்பினை அவளுக்கு விளங்கக் கூறுதல்.

[1] நறுநாற்றத்தாற் சுரும்பு பரவித்தங்கும் சந்தனமும் தோட்கப்பட்ட கடலின் முத்தும், வெள்ளிய சங்கும் எத்தேயத்தும் தாம் பிறந்த இடங்கட்குப் பயன்படாது தம்மை விரும்பியணிவாரிடத்தே சென்று அவர்மெய்க்கு அணியாவனவாம். சுரும்பு—வண்டு. சந்து—சந்தனம்.

[2] கரும்புபோலும் மெல்லிய மொழியினையுடைய மகளிரும் காண்பார்க்கு அத்தன்மையரே; என்றது உலகியல்பை ஆராயுங்காலத்து நம்மு டைய மகளும் பயன்படும் பருவத்துத் தன்னை அன்பில் விரும்பிய கணவனது வாழ்க்கைக்குத் துணைசெய்வதன்றிப் பெற்று வளர்த்தோ ராய நம்மவர்க்கு ஒரு சிறிதும் தொடர்புடையாளல்லள் என உலக நடையினை அறிவுறுத்தவாறும்.

‘எறித்தரு கதிர்தாங்கி’ யெனத்தொடங்கும் பாலைக் கலியொடு இத் திருக்கோவை கருத்தால் ஒத்துவிளங்குதல் நோக்கி யுணரத்தக்கது.

**வரைவு முடுக்கம் - காலம்கூறி வரைவு கடாதல்.**

முந்திய பொருளைச் சிந்தையில்வைத்து
வரைதருகிளவியிற் றெரியவுரைத்தது.

மையார் கதலி வனத்து வருக்கைப் பழம்விழுதேன்
எய்யா தயின்றிள மந்திகள் சோரும் இருஞ்சிலம்பா[1]
மெய்யா வரியதெ னம்பலத்தான் மதியூர்கொள் வெற்பின்
மொய்யார் வளரிள வேங்கைபொன் மாலையின்
முன்னினவே 262

---

* தோழி தலைவனை நெருங்கித் தலைமகளை விரைந்து மணந்துகொள்ளும்படி தூண்டுதல்.

262. இருபொழுதும் தலைவன் வருதலை விலக்கினதோழி, தலைவனை நோக்கி, "மதி நிரம்பா நின்றது; இவ்வெற்பின்கண் வேங்கைகள் பூத்துப் பொன்மாலை போலத் தோன்றின, இனி வரைவொடு வந்து தலைவியை மணத்தற்குரிய காலம் இதுவே' எனக்கூறி மணந்து கொள்ள வினவுதல்.

[1] இருளார்ந்த வாழைத் தோட்டத்தின்கண் வருக்கைப் பலாப்பழம் கனிந்துவிழுதலால் உண்டாகிய தேனை இளைய மந்திகள் அறியாது உண்டு பின் மதுமயக்கத்தால் சோர்வடைந்து தங்கும் பெரியமலையையுடைய தலைவனே; என்றது நின்மலைக்கண் வாழும் விலங்குகளும் இத்தன்மைத்தாகிய தேனை எதிர்பாராது உண்டு இன்புறுகின்றன, அங்ஙனமாகவும் எதிர்பார்த்து விரும்பியவாறு நீ தலைமகளை மணந்து இன்புறுதல் நினக்கு அரிய செயலாகுமோ எனத் தலைவனைத் தோழி வினவினளாயிற்று.

மை — இருள். கதலி — வாழை. எய்யாது — அறியாது.

'கோழிலைவாழை' யெனத் தொடங்கும் அகப்பாடற் பொருள் ஈண்டு ஒப்பு நோக்கத் தக்கது.

### ஓதற்பிரிவு - கல்வி நலங்கூறல். *

கல்விக்ககல்வர் செல்வத்தவரெனச் - செறிகுழற் பாங்கிக் கறிவுறிவித்தது.

சீரள வில்லாத் திகழ்தரு கல்விச்செம் பொன்வரையின்
ஆரள வில்லா அளவு சென்றா[1]ரம் பலத்துணின்ற
ஓரள வில்லா வொருவ னிருங்கழ லுன்னினர்போல்
ஏரள வில்லா வளவின ராகுவர்[2] ஏந்திழையே. 308

---

308 * தலைவியை மணந்துகொண்ட பின்னர், உயர்ந்த நூல்களைச் சிறந்தோர்பால் ஓதி யுணர்தற் பொருட்டுப் பிரியக்கருதிய தலைமகன், தலைமகளுக்குத் தனது பிரிவைத் தெரிவிக்க வெண்ணிக் கல்வியால் உளதாம் நலங்களைத் தோழிக்குக் கூறுதல்.

1 நன்மைக்கு எல்லையில்லாத, விளங்குங்கல்வியாகிய மேருமலையினது மிக்க அளவில்லாத எல்லையையடைந்தவர்கள்.

2 நன்மைக்கு எல்லையில்லாத தன்மையராவர். தூய்மையும் பெருமையும் கலங்காமையும் உடைமையால் கல்வியை மேருமலையாகக் கூறினான் தலைவன். தான் கற்றதின் மேலுங் கற்க நினைக்கின்றானாதலின் கல்வியில் அளவில்லாத எல்லையை யடைந்தவர்களியல்பை இங்கு எடுத்துரைக்கின்றான்.

**பரத்தையிற்பிரிவு - ஊதியமெடுத்துரைத் தூடல்தீர்த்தல்.**

**இரும்பரிசி லேற்றவர்க்கருளி - விரும்பினர்மகிழ மேவுதலுரைத்தது.**

காரணி கற்பகங் கற்றவர் நற்றுணை பாணரொக்கல்
சீரணி சிந்தா மணியணி தில்லைச் சிவனடிக்குத்
தாரணி கொன்றையன் தக்கோர்தஞ் சங்க நிதிவிதிசேர்
ஊருணி யுற்றவர்க் கூரன்மற் றியாவர்க்கும் ஊதியமே. 400

---

400 தலைமகனாற் பெறும் பயனை எடுத்துக்காட்டித் தோழி தலைமகளை ஊடல் தணிவித்துத் தலைவனை எற்றுப் போற்றச்செய்தல்.

இப்பாடலில் நான்காம் அடியில் வந்த ஊரன் என்பதை எழுவாயாக்கி அப்பெயருடன் கார், கற்பகம் முதலாக ஊதியம் என்பது முடிய வுள்ள சொற்களைத் தனித்தனி பயனிலையாக்கிமுடிக்க.

வறிஞரானோர் தன்னைக் கேளாமலே கைம்மாறு கருதாது கொடுத்தல் பற்றித் தலைவனைக் கார் (மேகம்) எனச் சிறப்பித்தார். கேட்கக் கேட்க மேன்மேலும் கொடுத்தல் பற்றிக் கற்பகமென்றும், தனது நுண்ணிய கல்வியால் கற்றோர்க்கு உசாத்துணையாதல் பற்றி 'கற்றவர் நற்றுணை' யென்றும், இசையுணர்ந்து மகிழும் தேர்ச்சியும் இசையாளர்பால் நெருங்கிய அன்பும் உடைமைபற்றிப் 'பாணர் ஒக்கல்' என்றும் நினைத்தது கொடுத்தல் பற்றிச் சிந்தாமணி யென்றும், இடைவிடாது தில்லைப்பெருமான் திருவடிகளை முடிசாய்த் துவணங்குதல்பற்றி அப்பெருமான் திருவடிக்கணியும் கொன்றைமாலையென்றும், தகுதியுடையராயினர்க்கு அழியாத நிதியா யுதவுதல் கருதி 'சங்கநிதி' யென்றும், நண்பினர் பகைவர் என்னும் வேறுபாடின்றி ஊழ்வினைபோல் எல்லார்க்குந் தப்பாது முறை செய்தல்பற்றி 'விதி'யென்றும், தன்னையுற்றவர் எல்லார்க்கும் அணியனாய் நின்று அவர் வேண்டுவன தப்பாது முகந்துகொள்ள வாழ்தல்பற்றி 'ஊருணி' யென்றும், இங்ஙனம் வரைவின்றியாவர்க்கும் பயன் தருதல் கருதி 'யாவர்க்கும் ஊதியம்' என்றும் கூத்தர் முதலாயினோர் தலைவனைச் சிறப்பித்துப் போற்றுவாராயினர். ஒக்கல் — சுற்றம். ஈண்டு விதியென்றது பால்வரைதெய்வத்தை.

இப்பாட்டு ஐவகைத்திணைக்கும் உரியதாதலால் இது எல்லாத் திணைக்கும் 'பொதுவகைத்து' எனப்பெறும் என்பர் பேராசிரியர்.

# ஒன்பதாந் திருமுறை

## * திருவிசைப்பா – திருபல்லாண்டு

### திருமாளிகைத்தேவர்

### 1. கோயில் – பண் : பஞ்சமம்

தனதனற் றோழா[1] சங்கரா சூல
பாணியே தாணுவே[2] சிவனே
கனகநற் றூணே[3] கற்பகக் கொழுந்தே
கண்கள்மூன் றுடையதோர் கரும்பே[4]
அனகனே[5] குமர விநாயக சனக[6]
வம்பலத் தமரசே கரனே
உனகழ லிணையென் னெஞ்சினு ளினிதாத்
தொண்டனே னுகரு மா றுகரே. 7

---

* திருவிசைப்பாத் திருமுறையை அருளிச்செய்த ஆசிரியர்கள் திருமாளிகைத்தேவர், சேந்தனார், கருவூர்த்தேவர், பூந்துருத்திகாடநம்பி, கண்டராதித்தர், வேணாட்டடிகள், திருவாலியமுதனார், புருடோத்தம நம்பி, சேதிராயர் என இவ்வொன்பதின்பருமாவர்.

7 [1] குபேரனுக்குத் தோழமை அருளியவனே. தனதன்-செல்வத்திற்குத் தலைவனாகிய குபேரன். [2] தாணு-எக்காலத்தும் துளக்கமின்றி யிருப்பவன். [3] நல்கனகத்தூண்—நன்மையைத்தரும் பொற்றூண். [4] மூன்று கண்களையுடைய ஒப்பற்ற கரும்பே; கண்கள் மூன்று என்பது கரும்பினுக்குரியவாகக் கொள்ளுங்கால் மூன்று கணுக்கள் என்றும் இறைவனுக்குரியவாகக் கொள்ளுங்கால் மூன்று கண்கள் என்றும் பொருள்படும். [5] அனகன்—குற்றமற்றவன். [6] குமரன் விநாயகன் என்னும் இவ்விருவரையும் பெற்ற தந்தையே.

### 3. கோயில் - பண் : பஞ்சமம்

உறவாகிய யோகமும் போகமுமாய்
உயிராளி யென்னு[1]மென் பொன்[2]னொருநாட்
சிறவா தவர்புரஞ் செற்றகொற்றச்
சிலைகொண்டு பன்றிப்பின் சென்றுநின்ற
மறவா[3] வென்னும் மணிநீரருவி
மகேந்திர மாமலை மேலுறையுங்
குறவா[4] வென்னுங்குணக் குன்றேயென்னும்
குலாத்தில்லை யம்பலக் கூத்தனையே. 1

சேந்தனார்

### 1. திருவீழிமிழலை - பண் : பஞ்சமம்

ஏகநாயகனை[1] இமையவர்க் கரசை
யென்னுயிர்க் கமுதினை யெதிரில்[2]
போகநாயகனைப் புயல்வணற் கருளிப்
பொன்னெடுஞ் சிவிகையா வூர்ந்த
மேகநாயகனை[3] மிகுதிரு வீழி
மிழலைவிண் ணிழிசெழுங் கோயில்
யோகநாயகனை யன்றிமற் றொன்றும்
உண்டென வுணர்கிலேன் யானே. 1

---

3 இத்திருப்பதிகம் தில்லையம்பலத்து இறைவனைக் கண்டு காமுற்று வருந்திய தலைவியின் நிலைகருதி நற்றாயிரங்குந்துறையமையப் பாடப் பெற்றது.

[1] என் உயிரை ஆள்பவனே என்று கூறுவாள். [2] என்பொன்—என் மகள். [3] வீரனே. [4] குறவா—குறிஞ்சி நிலத்தலைவனே.
என்பொன் குலாத்தில்லையம்பலக் கூத்தனை நினைந்து உயிராளி யென்னும், மறவா என்னும், குறவா என்னும் குணக்குன்றே என்னும் என வினைவு முடிவு செய்க.

1 [1] ஏகநாயகன்—ஒருதனித் தலைவன். [2] எதிர்இல்—ஒப்பில்லாத. [3] மேகம் போலும் கரிய நிறத்தினனாகிய திருமாலுக்கு அருள்செய்து அத்திருமால் மேகமாய்வர அம்மேகத்தையே அழகிய சிவிகையாகக் கொண்டு எழுந்தருளி மேகால்லூர்தியன் ஆகிய செய்தி 'மேகால்லூர் தியர்' என்புழிக் கூறப்பட்டது.
புயல்வணன்—மேகவண்ணனாகிய திருமால்.

பாடலங் காரப் பரிசில்கா சருளிப்
பழுத்தசெந் தமிழ்மலர் சூடி
நீடலங் காரத் தெம்பெரு மக்கள்
நெஞ்சினுள் நிறைந்துநின் றானை[1]
வேடலங் காரக் கோலத்தி னமுதைத்[2]
திருவீழி மிழலையூ ராளுங்
கேடிலங் கீர்த்திக்[3] கனககற் பகத்தைக்
கெழுமுதற் கெவ்விடத் தேனே.[4] 12

---

12. [1] யாவரும் பாடி யுய்தற்கேற்ற சொற்பொருள் அணிகள் நிரம்பிய திருப்பதிகங்களைச் சிறப்பித்துப் போற்றுதற்குரிய பரிசிற்பொருளாகப் படிக்காசினை நாள்தோறும் அடியாரிருவர்க்கும் கொடுத்தருளி, அவர்கள் அன்பால் அணிந்த திருவருள் நலம் பழுத்த செந்தமிழ்ப் பாக்களாகிய மலர்மாலைகளைச் சூடி, நிலைபெற்ற அருளாகிய அணிகலம் பூண்ட திருநாவுக்கரசர், திருஞானசம்பந்தர் ஆகிய எம் பெருமக்கள் இருவாது நெஞ்சத்துள்ளும் நிறைந்து எழுந்தருளிய பெருமான்; என்றது திருவீழிமிழலையில் ஆளுடைய பிள்ளையாரும், ஆளுடைய அரசும் தங்கியிருந்த காலத்துப் பஞ்சமுண்டாக இறைவன் அவ்விருவர்க்கும் படிக்காசருளிய வரலாற்றைக் குறித்தவாறும்.

[2] அழகிய வேட்டுவக் கோலத்தையுடைய அமுதம்போல்வான்.

[3] கேடிலங்கீர்த்தி—அழியாப் பெரும்புகழ்; 'பொருள்சேர் புகழ்' என்றவாறு.

[4] கெழுமுதல்-அன்பாற் பொருந்துதல். எவ்விடத்தேன்-எத்தகைய உரிமைத் தொடர்புடையேன்?

### திருவாவடுதுறை - பண் : பஞ்சமம்

மானேர் கலைவளையுங் கவர்ந்துளங்
கொள்ளை கொள்ள வழக்குண்டே[1]
தேனே யமுதேயென் சித்தமே
சிவலோக நாயகச் செல்வமே
ஆனே யலம்பு புனற்பொன்னி
யணியா வடுதுறை யன்பர்தங்
கோனேநின் மெய்யடி யார்மனக்
கருத்தை முடித்திடுங் குன்றமே. 9

### திருவிடைக்கழி – பண் : பஞ்சமம்

மாலுலா மனந்தந் தென்கையிற் சங்கம்
வவ்விஞன்[1] மலைமகள் மதலை[2]
மேலுலாந் தேவர் குலமுழு தாளுங்
குமரவேள் வள்ளிதன் மணாளன்
சேலுலாங் கழனித் திருவிடைக் கழியிற்
றிருக்குரா நீழற்கீழ் நின்ற
வேலுலாந் தடக்கை வேந்தனென் சேந்தன்[3]
என்னுமென் மெல்லிய லிவளே. 1

---

9. திருவாவடுதுறை யிறைவனைக் காமுற்று வருந்திய தலைவியின் வருத்தத்தை நற்றாய் கூறி இரங்குதல்.

[1] மான்போலும் மருண்ட நோக்கத்தையுடைய என் மகளுடைய அழகிய மேகலையையும் வளையலையும் கவர்ந்துகொண்டு அவளது உள்ளத்தையும் கொள்ளை கொள்ளுதல், மெய்யடியார் மனக்கருத்தை முடித்திடுங் குன்றமாகிய எம்பெருமானுக்கு முறையாகுமோ? என்பதாம். ஆன் எய் அணி ஆவடுதுறை என்றும் அலம்பு புனற்பொன்னி அணி ஆவடுதுறை என்றும் தனித்தனி கூட்டுக. ஆன்-பசு. பசுவுடன் இவ்வூர்க்குள்ள தொடர்பு ஆவடுதுறை யென்னும் பெயரால் புலனாதல் அறிக. பொன்னி-காவிரியாறு.

1. திருவிடைக்கழி என்னுந் திருப்பதியில் எழுந்தருளிய முருகப்பெருமானைக்கண்டு காமுற்ற தலைவியின் நிலைக்கிரங்கிய நற்றாய் கூற்றாக அமைந்தது இத்திருப்பாடலாகும்.

[1] தன் அழகிலேயே இடைவிடாது உலவும் என் மனத்தில் மயக்கத்தைத் தந்து, என் கையிலுள்ள வளையல்களைத் தான் கவர்ந்துகொண்டான்;

[2] மலைமகளார் ஆகிய உமாதேவியார் ஈன்ற இளங் குழந்தை.

[3] சேந்தன்—முருகனது இயற்பெயர்.

### கருவூர்த்தேவர்

### கோயில் - பண் : புறநீர்மை

இவ்வரும் பிறவிப் பௌவநீர் நீந்தும்
ஏழையேற் கென்னுடன் பிறந்த
ஐவரும் பகையே யார்துணை யென்றால்
அஞ்சலென் றருள்செய்வான்[1] கோயில்
கைவரும் பழனங் குழைத்தசெஞ் சாலிக்
கடைசியர் களைதரு நீலஞ்
செய்வரம் பரும்பும்[2] பெரும்பற்றப் புலியூர்த்
திருவளர் திருச்சிற்றம் பலமே. 2

### திருக்களந்தை யாதித்தேச்சரம் - பண் : புறநீர்மை

பவளமே மகுடம்[1] பவளமே திருவாய்
பவளமே திருவுடம் பதனில்
தவளமே களபந் தவளமே புரிநூல்
தவளமே முறுவ[2]லா டரவந்
துவளுமே கலையுந் துகிலுமே யொருபால்[3]
துடியிடை யிடமருங் கொருத்தி
அவளுமே யாகில்[4] அவரிடங் களந்தை
அணிதிக ழாதித்தேச் சரமே.[5] 5

2\. [1] இத்தகைய கடத்தற்கரிய பிறவியாகிய பெருங்கடல்நீரிற் கிடந்து கரைகாணுது நீந்துகின்ற அறிவிலாதேனுகிய எளியேற்கு என்னுடன் தோன்றிய பொறிகளாகிய ஐவரும் நீங்காப் பகைவராய் மேன்மேலும் இடர் விளைக்கின்றனர். இந்நிலையில் எனக்குத் துணையாய் நின்று இக்கடலினின்றுங் கரையேற்றி யுய்விப்பார் இறைவா நின்னைத் தவிர வேறு யாருளர் என முறையிட்டால் அந்நிலையே தோன்றி நீ ஒரு சிறிதும் அஞ்சற்க எனக் திருவருள் செய்யும் பெருமான். அருள்செய்வான் கோயில் திருவளர் திருச்சிற்றம்பலம் என முடிக்க. பழனம்-மருத நிலம். செஞ்சாலி-செந்நெற்பயிர் கடைசியர்-உழவர் மகளிர். களைதரு நீலம்-களையாகப் பிடுங்கியிட்ட நீலோற்பல மலர். [2] செய்வரம்பு-வயல்வரப்பிலே.

5\. [1] திருமுடி. [2] தவளம்-வெண்மை. களபம்-உடலிற் பூசும் கலவைச் சாந்தம். முறுவல்-பல். [3] ஆடரவம் துவளும். மேகலையும் துகிலுமே ஒருபால் எனப் பிரித்துரைக்க. துவளும்-அசையும்.

[4] ஆகில்—இங்ஙனமாகக் காணப்படுவாரானல்;

[5] அவ்வியல்புடைய தலைவர் எழுந்தருளிய இடம் களந்தை ஆதித்தேச்சரம் எனத் துணிவாயாக என்பது கருத்து.

**திருக் கீழ்க்கோட்டூர் மணியம்பலம் - பண் : பஞ்சமம்**

தெள்ளுநீ றவனீ றென்னுடல் விரும்புஞ்
செவியவ னறிவுநூல் கேட்கும்
மெள்ளவே யவன்பேர் விளம்பும்வாய் கண்கள்
விமானமே நோக்கிவெவ் வுயிர்க்கும்
கிள்ளைபூம் பொதும்பிற் கொஞ்சிமாம் பொழிற்கே
கெழுவுகம் பலைசெய்கீழ்க் கோட்டூர்
வள்ளலே மணியம் பலத்துணின் றாடு
மைந்தனே யென்னுமென் மனனே. 4

**திருமுகத்தலை - பண் : பஞ்சமம்**

புவனநா யகனே யகவுயிர்க் கமுதே[1]
பூரணா[2] வாரணம்[3] பொழியும்
பவளவாய் மணியே பணிசெய்வார்க் கிரங்கும்
பசுபதீ பன்னகா பரணா[4]
அவனிஞா யிறுபோன் றருள்புரிந் தடியேன்
அகத்திலு முகத்தலை மூதூர்த்
தவளமா மணிப்பூங் கோயிலு மமர்ந்தாய்
தனியனே னனிமை நீங் குதற்கே.[5] 1

---

4. தெளிவாகிய திருநீற்றையணிந்த அப்பெருமானது திரு வெண்ணீற்றை யணிதற்கு என்னுடல்' விரும்பும்; செவி அவன் அறிவு நூல்களைக் கேட்டு மகிழும்; வாய் அவனது திருப்பெயரை மெல்லச் சொல்லி யின்புறும்; கண்கள் அவன் எழுந்தருளியுள்ள விமானத்தையே நோக்கி நின்று (அவன் தன் முன்னர் எழுந்தருளப் பெருமையால்) வெய்துயிர்க்கும்; என் மனம் வள்ளலே மைந்தனே என இடைவிடாது நினையா நிற்கும்.என்பதாம்.
மனம் இடைவிடாது அவனை நினையவே அதன் வாயிலாகிய ஐம் பொறிகளும் அப்பெருமான் திறத்திலேயே ஈடுபட்டன என்பது கருத்து. வெவ்வுயிர்க்கும் என்ற சொல்லாற்றலால் அப்பெருமானணிந்த திருவடையாள மாலையின் நறுமணத்தில் ஈடுபட்டு எக்கற்ற மூக்கினையும் ஒருவாற்றாற் குறிப்பிட்டமையுணர்க. பூம்பொதும்பு-பொலிவுபெற்ற சோலை. கெழுவு-பொருந்திய. கம்பலை-ஆரவாரம்.

1. [1] உயிர்களின் அகத்தே நின்று இனிக்கும் அமுதானவனே. [2] எப்பொருளினும் நீக்கமற நிறைந்தவனே. [3] ஆரணம்-வேதம். [4] பன்னகம்-பாம்பு. [5] உலகத்திற்குக் கண்ணாகிய ஞாயிற்றைப் போன்று எனக்கு அருள்செய்து தனியனேன் ஆகிய எளியேனது தனிமை வருத்தம் நீங்குதற் பொருட்டு அடியேன் உள்ளத்திலும் திருமுகத் தலையிலுள்ள பூங்கோயிலிலும் எழுந்தருளியிருக்கின்றாய் என்பதாம்.

**திரைலோக்கிய சுந்தரம் - பண் : காந்தாரம்**

அம்பளிங்கு பகலோன்பால் அடைப்பற்று யிவள்மனத்தின்
முன்பளிந்த காதலுநின் முகந்தோன்ற விளங்கிற்றால்[1]
வம்பளிந்த கனியே[2]யென் மருந்தேநல் வளர்முக்கட்
செம்பளிங்கே பொழிற்கோடைத் திரைலோக்கிய
சுந்தரனே.[3] 3

நீவாரா தொழிந்தாலு நின்பாலே விழுந்தேழை
கோவாத மணிமுத்துங் குவளைமலர் சொரிந்தனவால்[1]
ஆவாவென் றருள்புரியாய்[2] அமரர்கணந் தொழுதேத்துந்
தேவாதென் பொழிற்கோடைத் திரைலோக்கிய சுந்தரனே.5

---

3. இதுவும் 5-ம் பாடலும் இறைவனுகிய தலைவனையடைந்து தலைவியின் காதன்மிகுதியினைத் தோழி கூறினதுறையின்பாற்படுவனவாம்.

[1] அழகிய பளிங்குக்கல்லானது ஞாயிற்றொளியின்முன்னர்ச் சேர்க்கப் பெற்ற அந்நிலையிலேயே அதனகண் அதுகாறும் வெளிப்படாது மறைந்திருந்த தீ வெளிப்பட்டுப் புலனாதல்போன்று இதுகாறும் புலப்படாமல் இவள் உள்ளத்தில் முன்னமே முற்றி அளியப் பழுத்திருந்த காதலாகிய தீ நீ இத்தெருவே யெழுந்தருளி உலாப்போந்த அன்று நின் திருமுகமாகிய ஞாயிறு தோன்றிய அவ்வளவிலேயே உள்ளத்தினின்றும் புறத்தே வெளிப்பட்டு விளங்கியது என்பதாம்.

"சூரியகாந்தமாகிய பளிங்குக்கல்லில் முன்னமே தீயுண்டாயினும் அக்கல் ஞாயிற்றொளியின்முன்னர்ப்பட்டதும் அத்தீ வெளிப்பட்டு விளங்குதல்போல இத்தலைவியின் உள்ளத்தில் இறைவனுகிய நின்னைப் பற்றிய காதல் கருவிலேயே அமைந்து முதிர்ந்திருப்பினும் திருவுலா எழுந்தருளிய அன்று நின் திருமுகத்தைக் கண்ட அளவே அது பெருகி வெளிப்பட்டுச் 'சிறுகோட்டுப் பெரும்பழந் தூங்கியாங்கு இவள் உயிர் தவச்சிறிது காமமோ பெரிதே' என்றவாறேயாய் இவளுயிர்க்குத் தாங்காச் சுமையாயிற்று" எனத் தோழி இறைவனுக்கு அறிவுறுத்தி முறையிட்டபடியாம். இங்குப் பளிங்கு தலைவியின் உள்ளத்திற்கும், அதனகத்து என்றுமுள்ள தீ அவளுள்ளத்தில் நிலைபெற்ற காதலுக்கும், பளிங்கில் தீயைப் புலப்படச் செய்யும் ஞாயிறு உள்ளத்திற் காதலை வெளிப்படச் செய்யும் இறைவன் திருமுகத்திற்கும் முறையே உவமையாய்வந்தவாறு காண்க.

[2] வம்பளிந்த கனி—மணத்துடன் கனிந்து பழுத்த பழம்.

[3] கோடை என்பது ஊர்ப்பெயர். திரைலோக்கிய சுந்தரம் என்பது கோயிற்பெயர்.

5. [1] இறைவனுகிய நீ நினது அருண்முறையுணர்ந்து இவள்பால் எளிவந்து அருள்செய்யாய் ஆயினும் தனது அன்பின் திறத்தால் நின் திருவருட் பாங்கினையே விரும்பிய எங்கள் தலைவியாகிய இவளுடைய குவளைமலர்போலுங் கண்கள் நின் வருகையை நோக்கி நோக்கி ஒளியிழந்தமையே யன்றிக் கோக்கப்படாத அழகிய முத்துக்களை (கண்ணீரை) யும் சொரிந்தன. வீழ்ந்த விழுந்த என விகாரம்;

**கங்கைகொண்ட சோளேச்சரம் - பண் : பஞ்சமம்**

அற்புதத் தெய்வ மிதனின்மற் றுண்டே
அன்பொடு தன்னையஞ் செழுத்தின்
சொற்பதத் துள்வைத் துள்ளமள் ளூறுந்
தொண்டருக் கெண்டிசைக் கனகம்
பற்பதக் குவையும் பைம்பொன் மாளிகையும்
பவளவா யவர்பணை முலையும்
கற்பகப் பொழிலு முழுதுமாங் கங்கை
கொண்ட சோளேச் சரத்தானே 3

---

'புகழ்புரிந் தில்லி லோர்க்கு' (குறள் 59) என்றாற்போல விழுந்த என்னும் பெயரெச்சத்து அகரம் விகாரத்தால் தொக்கது. வீழ்ந்த எழை-விரும்பிய தலைவி. குவளைமலர் கோவாத மணிமுத்துஞ் சொரிந்தன எனக் கூட்டுக. முத்தும் என்ற உம்மையால் ஒளியிழத் தலும் பெற்றாம். [2] ஆவா என்பது இரக்கக்குறிப்பு.

3. கங்கைகொண்டசோளேச்சரத்தான் தன்னை அன்பொடு அஞ்செழுத் தின் சொற்பதத்து உள்வைத்து உள்ளம் அள்ளூறும் தொண்டருக்கு எண்திசைக் கனகம் பற்பதக் குவையும் பைம்பொன் மாளிகையும் பவளவாயவர் பணைமுலையும் கற்பகப்பொழிலும் முழுதும் ஆம் — கங்கைகொண்டசோழேச்சரம் என்னுந் திருக்கோயிலில் எழுந்தருளிய பெருமானாகிய தன்னை அன்பினால் திருவைந்தெழுத்தாகிய சொல்லி னிடத்து வைத்து ஓதி உள்ளம் இனிமையால் தேக்கெறியப்பெறும் அடியார்களுக்கு எண்திசையின்கண் உள்ள பொன் முதலிய பொரு ளும் அவைபற்றிய பல்வேறு பதவிகளின்தொகுதியும் பசும்பொன் னாற் செய்யப்பட்ட மாளிகைகளும் பவளம்போலும் சிவந்த வாயினை யுடைய மகளிரால்பெறும் போகநுகர்ச்சியும் கற்பகச்சோலையில் அரசுவீற்றிருக்கும் வானுலக ஆட்சியும் ஆகிய எல்லாப் பேறுகளும் நிரம்ப வுண்டாகும்.

இதனின் அற்புதத் தெய்வம் மற்று உண்டே — இங்ஙனம் பிறரால் முயன்றும் பெறுதற்கரிய இம்மை மறுமை யின்பங்களைத் தன்னை நினைத்து வாழ்த்திய அளவிலேயே அளித்தருளவல்ல இம்முழுமுதற் பொருளைவிட வியந்து போற்றுதற்குரிய பிறிதொரு தெய்வம் உளதோ? இல்லை என்றபடி.

தத்தையங் கனையார்[1] தங்கண்மேல் வைத்த
தயாவைநூ றாயிரங் கூறிட்
டத்திலங் கொருகூ றுன்கண்வைத் தவருக்
கமருல களிக்குநின் பெருமை[2]
பித்தனென் றொருகாற் பேசுவ ரேனும்
பிழைத்தவை பொறுத்தருள் செய்யுங்[3]
கைத்தல மடியேன் சென்னிமேல் வைத்த
கங்கைகொண்ட சோளேச் சரத்தானே[4] 8

---

8. [1] தத்தை அங்கனையார் — கிளிமொழி போலும் மழலையினைப் பேசும் மகளிர்.

[2] அம் மகளிர்பால் வைத்த காதலை நூறாயிரம் (இலக்ஷம்) பங்கு செய்து அவற்றுள் ஒரு பங்கினைத்தானும் உன்பால் வைத்த அன்பர்களுக்கு வானுலக இன்பத்தைக் கொடுக்கவல்லது நினது பெரிய திருவருள் என்பதாம். எல்லாவற்றிற்கும் ஆதாரமாய்த் தாங்கி நிற்கும் பெருமை யுடையது இறைவன் திருவருளாதலின் அது பெருமை எனப் பெற்றது.

[3] உன்னை ஒருகால் பித்தனென்று பேசுவரேனும் பிழைத்தவை பொறுத்து அருள் செய்யும் — உயிரினும் சிறந்த இறைவனாகிய நின்னை ஒருமுறை உலகியலில் இகழ்தற்குரிய சொல்லாய் வழங்கும் பித்தன் என்ற சொல்லாலேனும் உலகவர் நின்னைக்குறித்துப் பேசினாராயின் அவர்கள் அங்ஙனம் சொல்லுதற்குமுன் அவர் செய்து போந்த பிழைகளெல்லாவற்றையும் பொறுத்து ஆட்கொண்டருளுவதும் அத்திருவருளின் இயல்பென்பது கருத்து.

உன்னை ஒருகாற் பேசுவரேனும் பித்தனென்று பேசுவரேனும் எனத் தனித்தனி கூட்டிப் பொருள் கொள்க.

[4] கங்கைகொண்ட சோளேச்சரத்தானே என்பதனை விளியாக்கி முன் கூட்டிப்பொருள் கூறுக. 'அடியேன் சென்னிமேல் கைத்தலம் வைத்த' என்றது இறைவன் ஆசிரியத் திருமேனி கொண்டு தீக்கை செய்து தம்மை ஆட்கொண்டருளிய செயலை.

நின் பெருமை அமருலகு அளிக்கும், பிழைத்தவை பொறுத்தருள் செய்யும் எனத் தனித்தனிகூட்டி வினை முடிவு செய்க.

அளிக்கும், அருள் செய்யும் என்பவற்றை இவ்வாறு வினைமுற்றாகக் கொள்ளாமல் பெயரெச்சமாக்கி, முறையே நின் பெருமை என்பதனோடும் கங்கைகொண்ட சோளேச்சரத்தான் என்பதனோடும் இயைத்துப் பொருள் கூறுதலும் உண்டு.

### திருச்சாட்டியக்குடி - பண் : பஞ்சமம்.

பாந்தள்பூ ணாரம் பரிகலங் கபாலம்
பட்டவர்த் தனமெரு தன்பர்
வார்ந்தகண் ணருவி மஞ்சன சாலை
மலைமகள் மகிழ்பெருந் தேவி
சாந்தமுந் திருநீ றருமறை கீதஞ்
சடைமுடி சாட்டியக் குடியார்
ஏந்தெழி லிதயங் கோயின் மாளிகை
யேழிருக்கையி லிருந்த வீசனுக்கே. 2

### தஞ்சை யிராசராசேச்சரம்* - பண் : பஞ்சமம்

பன்னெடுங் காலம் பணிசெய்து பழையோர்
தாம்பலர் ஏம்பலித் திருக்க
என்னெடுங் கோயில் நெஞ்சுவீற் றிருந்த
எளிமையை யென்றுநான் மறக்கேன்[1]
மின்னெடும் புருவத் திளமயி லனையார்
விலங்கல்செய் நாடக சாலை[2]
யின்னடம் பயிலும் இஞ்சி[3] சூழ்
தஞ்சை யிராசராசேச்சரத் திவர்க்கே. 8

---

2. சாட்டியக்குடியார் எழிருக்கையில் இருந்த ஈசனுக்குப் பாம்பு பூணத் தக்க அணிகலனாகும், தலையோடு உண்கலனும், எருது பட்டத்து யானையாகும். அன்பரது அன்பினால் அருவிபோன்று இடையறாது வெளிப்பட்டொழுகும் கண்ணீர் திருமஞ்சன நீராகும், மலையரையன் மகளாகிய உமையம்மையார் விரும்பத்தக்க பெருந்தேவியாராவர். திருநீறு பூசத்தக்க மணப்பொடியாகும், அரியமறைகளே இடைவிடாது பாடும் இசைப்பாடலாகும், சடையே திருமுடியாகும், அழகு பொருந்திய அன்பர்களது திருவுள்ளமே கோயிலும் திருமாளிகையும் ஆகும் என்பது இத்திருவிசைப்பாவின் பொருளாகும்.

பாந்தள் — பாம்பு. பரிகலம் — உண்ணும் பாத்திரம். பட்டவர்த்தனம் — பட்டத்து யானை. சாந்தம் — மணப்பொருள். கீதம் — இசைப்பாடல்.

* தஞ்சையில் முதலாம் இராசராச சோழன் எடுத்த பெருவுடையார் கோயில்.

8. பின்னிரண்டடிகளையும் முன்னர்க் கூட்டிப் பொருள் கொள்க

[1] இராசராசேச்சரத்தில் எழுந்தருளிய இப்பெருமானுக்குப் பழையோர் பலர் நீண்ட காலமாகத் தொண்டு செய்து கண்டு மகிழவேண்டுமென ஆசையால் ஏக்கற்றிருக்கவும் ஒன்றும் அறியாத

**திருவிடைமருது - பண் : பஞ்சமம்**

எழிலையாழ் செய்கைப் பசுங்கலன் விசும்பி
னின்றுளி படநனைந் துருகி[1]
அழலையாழ் புருவம் புனலொடுங் கிடந்தாங்[2]
காதனேன் மாதரார் கலவித்
தொழிலையாழ் நெஞ்சம் இடர்படா வண்ணந்
தூங்கிருள் நடுநல்யா மத்தோர்
மழலையாழ் சிலம்ப வந்தகம் புகுந்தோன்[3]
மருவிடந் திருவிடை மருதே. 7

---

எளியேனது நெஞ்சத்தினையே பெருங்கோயிலாகக் கொண்டு எழுந்தருளியிருந்த அருமையிலெளிய அருட்டிறத்தை அடியேன் எக்காலத்தும் மறவாது போற்றுதற்குரியேன்.

எம்பலித்திருத்தல் — ஆசையால் எக்கற்றிருத்தல்

2 மலைபோலுயர்ந்து விளங்கும் நாடக அரங்கு.

3 மதில்.

7. 1 அழகின் கண்ணே ஆழ்ந்த செயற்றிறம் அமைந்த சுடப்படாத பசுமட்பாண்டமானது, வானத்தினின்று வீழும் மெல்லிய மழைத்துளி பட்ட அளவிலேயே நனைந்து கரைவதாகியும்.

2 அப்பாண்டம் அழலின்கண் ஆழ்ந்து கிடந்து சூளையிற் சுடப்பட்ட நிலையில் அதனது அழகிய வடிவம் தண்ணீரினுள்ளேயே நெடுங்காலங் கிடப்பினும் கரைந்து சிதையாதவாறுபோல. 3 பெண்டிரது முயக்கத்தில் ஆழ்ந்துகிடந்த அறிவிலியாகிய எளியேனது உரனில்லாத நெஞ்சமானது வானினது மென்துளிபோன்ற சிறிய துன்பங்கள் வந்த அளவிலேயே தன் நிலைகலங்கியழியும் நிலைமையதாயினும், தனது திருவருட் பெருந்தீயில் ஒடுங்கியாழ்தலால் நன்றாகப் பக்குவப்பட்டதாகிப் பின்னர் உலகியலில் எவ்வகை யிடர்களில் ஆழ்ந்து கிடப்பினும் தன்னிலை கலங்காத்தன்மையை யடையும்வண்ணம் இருள்செறிந்த நடுயாமத்தே மெல்லிய யாழோசை யியம்பவந்து என்னுள்ளத்தே குடிபுகுந்த பெருமான். அப்பெருமான் மருவும் இடம் திருவிடைமருது என்பதாம்.

அழலை ஆழ்பு — அழலின்கண் ஆழ்ந்து; உருபு மயக்கம்.

இத்திருப்பாடலில் உலகியற் பற்றுக்களாகிய நீரொடு விரவிய மென்மையுடைய உள்ளத்திற்குப் பசுமட்கலத்தையும், இறைவனது அருட் பெருந் தீயினைச் சார்ந்து பசையற்றுத் திணிந்த தன்மைத்தாகிய உரனுடை யுள்ளத்திற்குச் சுடப்பட்ட பாண்டத்தையும் உவமை கூறிய நயம் உணர்ந்து போற்றத்தக்கது.

பூந்துருத்தி நம்பிகாடநம்பி

கோயில் - பண் : சாளரபாணி

கடியார் கணம்புல்லர்[1] கண்ணப்ப ரென்றுன்
அடியார் அமருலகம் ஆளநீ யாளாதே
முடியாமுத் தீவேள்வி மூவா யிரவரொடுங்
குடிவாழ்க்கை கொண்டுநீ குலாவிக்கூத் தாடினையே. 2

அல்லியம் பூம்பழனத் தாமூர்[1] நா வுக்கரசைச்
செல்ல நெறிவகுத்த சேவகனே[2] தென்றில்லைக்
கொல்லை விடையேறிக் கூத்தா டரங்காகச்
செல்வம் நிறைந்தசிற் றம்பலமே சேர்ந்தனையே. 3

எம்பந்த வல்வினைநோய் தீர்த்திட் டெமையாளும்
சம்பந்தன்[1] காழியர்கோன் றன்னையுமாட் கொண்டருளி
அம்புந்து கண்ணாளுந்[2] தானு மணிதில்லைச்
செம்பொன்செ யம்பலமே சேர்ந்திருக்கை யாயிற்றே. 4

---

2. [1] விளக்கம் பொருந்திய கணம்புல்ல நாயனார்; இவர் கணம்புல் என்னும் ஒருவகைப்புல்லை விற்று அதனால் வந்த பொருளைக்கொண்டு தில்லைப் புலீச்சரத்தில் திருவிளக்கிட்டுப் பேறு பெற்றவராவர். கடி-விளக்கம்.

3. [1] அகவிதழ்களையுடைய மலர்கள் பொருந்திய வயல்களையுடைய திருவாமூர்; இது திருமுனைப்பாடி நாட்டைச் சேர்ந்தது. இவ் வூரிற் பிறந்தருளியவர் திருநாவுக்கரசர்.

[2] சேவகன்—வீரர்களிற் சிறந்தோன்.

4. [1] எம்முடைய பிறவித் தொடர்ச்சியினையும் அதற்கேதுவாய வல்வினை நோய்களையும் அடியோடொழித்து எங்களையாட்கொண்டருளிய திரு ஞானசம்பந்தப் பிள்ளையார்.

[2] அம்பினையொத்த கண்ணினையுடைய உமையம்மையார்.

களையா உடலோடு சேரமான் ஆரூரன்
விளையா மதமாறா வெள்ளானை மேல்கொள்ள[1]
முளையா மதி[2] சூடி மூவா யிரவரொடும்
அளையா[3] விளையாடும் அம்பலநின் ஆடரங்கே. 5

கண்டராதித்தர்

**கோயில் – பண் : பஞ்சமம்**

களிவா னுலகிற் கங்கை நங்கை
  காதலனே யருளென்று
ஒளிமால் முன்னே வரங் கிடக்க[1]
  உன்னடி யார்க்கருளுந்
தெளிவா ரமுதே தில்லை மல்கு
  செம்பொனி னம்பலத்துள்
ஒளிவான் சுடரே உன்னை நாயேன்
  உறுவதும் என்றுகொலோ. 5

---

5. [1] களையப்படாத மக்களுடம்போடு சேரமான் பெருமாள் நாயனாரும், நம்பியாரூரரும் புதிதாய்த் தோன்றாத மதம் நீங்காத வெள்ளானையின்மேல் ஊர்ந்து கயிலையையடைய. களையா உடலோடு செல்லுதல் இருவர்க்கும் பொது. வெள்ளானைமேல்கொள்ளுதல் நம்பியாரூரர்க்கே உரியது.

[2] முளை ஆம் மதி—பிறைமதி.

[3] அளையா—கலந்து.

5. [1] 'மகிழ்ச்சிக்குரிய வானுலகத்தவளாகிய கங்கையென்னும் நங்கையின் மணவாளனே அடியேற்கு அருள்செய்வாயாக' என வேண்டி ஒளி மிகுந்த திருமேனியையுடைய திருமால் நினது தில்லை அம்பலத்தின் முகப்பிலே வரங்கிடக்கவும்; என்றது, 'புரங்கடந்தான்' என்னும் திருச்சிற்றம்பலக் கோவைச் செய்யுளிற் கூறிய வரலாற்றை யுட்கொண்டு கூறியது.

வெங்கோல் வேந்தன் தென்னா
　　நாடும் ஈழமுங் கொண்டதிறற்
செங்கோற் சோழன் கோழி வேந்தன்
　　செம்பியன்[1] பொன்னணிந்த
அங்கோல் வளையார் பாடி யாடு
　　மணிதில்லை அம்பலத்துள்
எங்கோன் ஈசன் எம் இறையை
　　என்றுகொ லெய்துவதே. 8

வேணாட்டடிகள்

**கோயில் - பண் : புறநீர்மை**

துச்சான செய்திடினும் பொறுப்பரன்றே யாளுகப்பார்[1]
கைச்சாலுஞ் சிறுகதலி யிலைவேம்புங் கறிகொள்வார்[2]
எச்சார்வும் இல்லாமை நீயறிந்தும் எனதுபணி
நச்சாய்காண்[3] திருத்தில்லை நடம்பயிலும் நம்பானே. 1

---

8. [1] வெங்கோல் வேந்தனாகிய தென்னனது நாட்டையும் ஈழநாட்டையும் வென்றுகொண்ட வலிமிக்க செங்கோற்சோழன்; என்றது முதலாம் பராந்தகனை. செம்பியன் பொன்னணிந்த அணி தில்லையம்பலம் எனவும், அங்கோல் வளையார் பாடியாடும் அணிதில்லை யம்பலம் எனவுந் தனித்தனி கூட்டுக.

இத்திருவிசைப்பாப் பாடிய கண்டராதித்த தேவர் அப் பராந்தகன் புதல்வராதலின் அவ் வேந்தனது வெற்றியையும் திருத்தொண்டினையும் தெளிவித்துப் போற்றினரென்க.

1. [1] தன் பணியாளர்கள் இழிவான குற்றங்களைச் செய்தாலும் அவர் தம் அடிமையை விரும்பும் மேலோர் அவற்றைப் பொறுப்பரல்லவா?

[2] கசப்புடையதாயினும் வாழைப் பிஞ்சினையும் வேம்பின் தளிரையும் உலகத்தார் கறிக்கு உரியவாகப் பயன்படுத்திக் கொள்வார்கள்.

[3] நல்வினையும் நற்பண்பும் ஆகிய எவ்வகைப்பட்ட பற்றுக்கோடும் எனக்கில்லாமை நீ அறிந்து வைத்தும் நீ என்னை விரும்பாய்காண்.

துச்சான-இழிவான குற்றங்கள்; துச்சமான என்பதன் திரிபு. கைத்தாலும்-கைச்சாலும் எனப் போலியாய் வந்தது. நச்சுதல்-விரும்புதல். நம்பன் நம்பான் என நீண்டது.

படுமதமு மிடவயிறும் உடையகளி[1] றுடையபிரான்
அடியறிய வுணர்த்துவதும் அகத்தியனுக் கோத்தன்றே[2]
இடுவதுபுல் லோரெருதுக் கொன்றினுக்கு வையிடுதல்
நடுவிதுவோ[3] திருத்தில்லை நடம்பயிலும் நம்பானே. 6

திருவாலியமுதனர்

**கோயில் - பண் : நட்டராகம்**

அறிவு மிக்கநன் ஞணமு நிறைமையு மாசையு மிங்குள்ள
உறவும் பெற்றநற் றயொடு தந்தையு முடன்பிறந்
[தவரோடும்
பிறிய விட்டுனை அடைந்தனன் என்றுகொள் பெரும்பற்றப்
[புலியூரின்
மறைகள் நான்குங்கொண்டு அந்தணர் ஏத்தநன் மாநட
[மகிழ்வானே. 8

6. [1] ஒழுகும் மதத்தினையும் அகன்ற வயிற்றினையும் உடைய களிறு என்றது மூத்த பிள்ளையாரை.

[2] அக்களிற்றை மகவாகவுடைய சிவபெருமான், தன் திருவடியை யறிந்து அடைதற்பொருட்டு ஓதப்படும் நூல்களை உபதேசித்தருள்வது அறிவான் நிறைந்த அகத்திய முனிவர்க் கன்றோ; என் போன்ற சிற்றறிவினர்க்கின்று என்பது குறிப்பு. 'ஒத்து உணர்த்துவதும் அகத்தியனுக்கன்றே' என மாற்றிப் பொருள் கூறுக.

[3] ஓரெருதுக்குப் பசையுடைய புல்லை யுணவாக இடுதலும், மற்றோரெருதுக்குப் பசையற்ற வைக்கோலை யுணவாக இடுதலும் ஆகிய இச் செயல், நடுவுநிலையின்பாற் பட்ட செயலாகுமோ என இறைவனை வினவியதாகக் கொள்க. வை-வைக்கோல்.

8. இத்திருப்பாடல், இறைவனைக் காதலித்த தலைவி அத்தலைவன் முன்னின்று கூறும் கூற்ருக அமைந்துள்ளது.

அந்தணர் மறைகள் நான்கும் கொண்டு ஏத்தப் பெரும்பற்றப் புலியூரில் மாநடம் மகிழ்வானே! என் உணர்வும் என் உயிரினும் சிறந்த நல்ல நாணமும் முதலாயினவற்றை நீங்கவிட்டுத் தலைவனுகிய உன்னையே சார்பாக வந்தடைந்தேன். என்னை என்றுகொள்வாயாக என்பதாம். 'முன்ன மவனுடைய நாமங் கேட்டாள்' என்ற திருத்தாண்டகப் பொருள் ஈண்டு நினைத்தற்குரியது.

### கோயில் - பண் : இந்தளம்

அல்லாய்ப் பகலா யருவா யுருவா யாரா வமுதமாய்க்
கல்லா னிழலாய் கயிலை மலையாய் காண வரு[1]ளென்று
பல்லா யிரம்பேர் பதஞ்ச லிகள் பரவ வெளிப்பட்டுச்
செல்வா யமதிற்[2] றில்லைக் கருளித் தேவ னாடுமே. 1

அன்ன நடையா ரமுத மொழியா ரவர்கள் பயில்தில்லைத்
தென்னன் தமிழும் இசையும்[1] கலந்த சிற்றம் [பலந்தன்னுட்
பொன்னு மணியு நிரந்த தலத்துப்[2] புலித்தோல் [பியற்கிட்டு[3]
மின்னி னிடையா ளுமையாள் காண விகிர்த னாடுமே. 2

---

1. [1] இத்தொடர், பதஞ்சலி முனிவர் முதலாக இறைவனைப் பரவுவோர் வாய்மொழி.

   [2] செல்வாய் அம்மதில் தில்லைக்கு—மேகம் படிந்த அழகிய மதில்சூழ்ந்த தில்லையம்பலத்தின்கண். செல்-மேகம். செல்வாய் மதில் பாலே.

   ‘செல்வாய மதிற்றில்லை’ எனப் பாடங் கோடலே இப்பாடலின் சந்தத்திற்குப் பெரிதும் பொருந்துவதாகும்.

2. [1] என்றது இறைவன் உயர் மதிற்கூடலின் ஆய்ந்த ஒண் தீந்தமிழிசையினை.

   [2] பொன்னு மணியும் கலந்திழைத்த தில்லைச் சிற்றம்பலத்தின்கண்.

   [3] புலித்தோலைத் தோளின் மேலணிந்து. பியல்-பிடர்; ஈண்டு தோள் என்ற பொருளில் வழங்கியது.

புருடோத்தம நம்பி

**கோயில் – பண் : பஞ்சமம்**

அம்பலத் தருநட மாடவேயும்
யாதுகொல் விளைவதென் றஞ்சி நெஞ்சம்
உம்பர்கள் வன்பழி யாளர் முன்னே
யூட்டினர் நஞ்சையென் றேயுமுய்யேன்
வன்பல படையுடைப் பூதஞ்சூழ
வானவர் கணங்களை மாற்றி யாங்கே
என்பெரும் பயலைமை தீரும் வண்ணம்
எழுந்தருளாய் எங்கள் வீதியூடே. 3

---

3. இறைவனை விரும்பிய தலைவி யொருத்தியின் கூற்றாக அமைந்தது இச்செய்யுளாகும்.

பொருள்:—உம்பர்கள் வன்பழியாளர் முன்னே நஞ்சை யூட்டினர் என்றேயும்—தேவர்களாகிய வலிய பழிகாரர் முன்னொரு காலத்தே தலைவணங்கிய நின்னைப் பணிந்து வேண்டி நஞ்சினை உனக்கு ஊட்டினர் என்று நின் பழைய வரலாறு கூறுவார் சொல்லவும், அதுகேட்டு, யாதுகொல் விளைவது என்று நெஞ்சம் அஞ்சி—முன் நீயுட்கொண்ட நஞ்சினால் நின் திருமேனிக்கு என்ன தீங்கு நேருமோ என எண்ணி மனந் திடுக்கிட்டு, அம்பலத்து அரு நடம் ஆடவேயும் உய்யேன்—நீ தில்லையம்பலத்தின் கண்ணே ஐந்தொழில் நாடகம் ஆடுதலைக் கண்டு வைத்தும் உயிர்தாங்கும் ஆற்றலற்றவளாயினேன். ஆங்கே வானவர் கணங்களை மாற்றி — அவ்வம்பலத்தின் கண்ணே அடித் தொண்டு புரிவோமெனச் சூழ்ந்துகொண்டுள்ள நஞ்சூட்டும் பழிகாரராகிய தேவர் கூட்டங்களை நின் மருங்கினின்றும் உடனே அகற்றி விட்டு, வன்பல படையுடைப் பூதஞ்சூழ — அவர்களை அடியோடு நீக்கி யகற்றுதற்குரிய வலிய பல படைகளைத் தாங்கிய நின்பால் அன்புடைய பூதகணங்கள் நின்னைச் சூழ்ந்து பாதுகாத்துவர, எங்கள் வீதியூடு என் பெரும் பயலைமை தீரும் வண்ணம் எழுந்தருளாய்—எங்கள் தெருவழியே நினது பிரிவால் உண்டாகிய எனது பசலைநிறம் தீரும் வண்ணம் எழுந்தருள்வாயாக என்பதாம்.

பழி விளைக்கும் பகைவராயினும் ஒருவன் முன்னின்று நஞ்சினை உண்ணும்படி வேண்டார். தேவர்களோ தாம் உயர்ந்தவர் என்று சொல்லிக்கொண்டு, தாழ்ந்த கொடியோரும் செய்யவொண்ணாத நஞ்சூட்டுஞ் செயலைத் தம்மையாளும் இறைவன் திறத்தே நன்றி மறந்து செய்ய முற்பட்டார்களேயென இரங்குவாள் ‘உம்பர்கள் வன் பழி யாளர்’ என்றிகழ்ந்தாள் இந்நிகழ்ச்சியைக் கேட்ட அளவே உயிரற்றவளாயினேன் என்பாள் ‘ஊட்டினர் நஞ்சையென்றேயும் உய்யேன்’ என்றாள். அங்ஙனம் நஞ்சுண்ட தலைவனை என் கண்காண அம்பலத்தே யாடக் காண்கின்றேன் ஆயினும் அவன் முன்னுண்ட நஞ்சு ஏனைய நஞ்சுபோல இதுகாறும் அவன் திருமேனிக்கு வருத்தந் தாராதாயினும் ஒருகால் உள்ளேயிருந்து நாளடைவில் அவன் மேனிக்கு இடர் விளைத்தலுங் கூடுமோவென்று ஏங்கினேன் என்பாள்

### கோயில் - பண் : பஞ்சமம்.

வானவர்கள் வேண்ட வளர்நஞ்சை உண்டார்தாம்
ஊனமிலா என்கை ஒளிவளைகள் கொள்வாரோ
தேனல்வரி வண்டறையுந் தில்லைச்சிற் றம்பலவர்
நானமரோ வென்னாதே நாடகமே ஆடுவரே. 1

சேதிராயர்

### கோயில் - பண் : பஞ்சமம்

சேலுலாம் வயற் றில்லையு ளீருமைச்
சாலநா ளயன் சார்வதி னாலிவள்
வேலையார் விட முண்டுகந் தீரென்று
மால தாகுமென் வாணுதலே. 1

---

'அம்பலத் த நடம் ஆடவேயும் யாதுகொல் விளைவதென்று நெஞ்சமஞ்சி உய்யேன்' என்றாள். இங்ஙனம் அனபர்போல மறைந்துநின்று தீங்கு பயக்கும் பழிகாரராகிய வானவர் குழுவினர் இன்றும் தம் பெருமானைச் சூழ்ந்து போற்றி நிற்பதறிந்து வருந்தியவள், இறைவனை நோக்கி அத்தகைய தீயவினத்தவரை உடனே உன் பக்கலினின்றும் அப்புறப்படுத்தி அவரால் வரும் தீங்கினை யகற்றிப் பாதுகாக்கவல்ல அன்புடைத் தொண்டர்களாகிய பூத கூட்டங்கள் சூழ நின் பிரிவால் உளதாம் எனது பசலை வருத்தம் தீர எங்கள் வீதி வழியே எழுந்தருளாய் என அப்பெருமான் பாற்கொண்ட அன்பின் முதிர்வால் வேண்டிக்கொள்ளுகின்றாள். பயலைமை-பசலையால் உளதாம் மெலிவு.

1. இறைவன்பாற் காதல்கொண்ட தலைவி கூற்று.
"தனக்கு அயலாராகிய தேவர்கள் வேண்ட அவர்தம் வாழ்நாளை வளர்த்தற்பொருட்டு உண்டார்க்குத் தீங்குதரும் நஞ்சினையுண்ட என் தலைவர், தன்பாற் காதலில் ஒரு சிறிதும் குறைவுபடாத என் கை வளைகளைக் கவர்ந்து எனக்கு மெலிவினை யுண்டாக்குவராவரோ? இங்ஙனம் தம்மைச் சேராதார்க்கு வாழ்வும் சேர்ந்தார்க்கு மெலிவுந் தருதலால் தில்லைச் சிற்றம்பலவர் இவர் நமக்கு உறவினராவரோ என நான் தம்மைக் கருதாதவண்ணம் வஞ்சித்து நாடகமாடுகின்றார் இஃதென்னே" எனத் தலைவி உளங்கலங்கி மொழிந்ததாகப் பொருள் கூறுக. வளர்நஞ்சு—நஞ்சாந்தன்மையிற் பெருகி முற்றிய ஆலகால விடம்.

1. தலைவியின் வருத்தங் கண்டு உளங்கலங்கிய நற்றாய் கூற்று.
தில்லையில் வாழும் பெருமானே தாம் சால நாள் வாழ்தல் வேண்டுமென்று கருதிய அயன் முதலிய தேவர்கள் உம்மைச் சார்ந்து வேண்டியது கருதிக் கடலிடத்தே தோன்றிய நிறைந்த விடத்தை உண்டு மகிழ்ந்தீர் என்று சொல்லி என் வாணுதலாகிய இவள் நின்னைக்கருதி மயக்கத்தை யுடையவளாயினாள் என்பதாம். மால்-மயக்கம்.
இறைவனாகிய நினது பக்கத்தே அயன் சார்ந்திருத்தல் கருதி அவ்வாறே தானும் நினது மற்றொரு பக்கத்தை மருவி மகிழ்தல் வேண்டி மாலானாள் என நயம்படக் கூறியவாறுணர்க.

வாணு தற்கொடி மாலது வாய்மிக
நாண மற்றனள் நானறி யேனினி[1]
சேணு தற்பொலி தில்லையு ளீருமைக்
காணி லெய்ப்பிலள் காரிகையே. 2

சேந்தனுர் அருளிச்செய்த

**திருப்பல்லாண்டு** *

**கோயில் - பண் : பஞ்சமம்**

மன்னுக[1] தில்லை வளர்கநம்
பத்தர்கள் வஞ்சகர் போயகலப்
பொன்னின்செய் மண்டபத் துள்ளே
புகுந்து புவனியெல் லாம்விளங்க
அன்னநடை மடவா ளுமைகோன்
அடியோமுக் கருள் புரிந்து
பின்னைப்பிறவி யறுக்க நெறிதந்த
பித்தற்குப்[2] பல்லாண்டு கூறுதுமே. 1

---

2. [1] ஒளி பொருந்திய நெற்றியையுடைய என் மகள் மயக்கமுடையவளா கித் தன் உயிரினுஞ் சிறந்த நாணம் நீங்கப்பெற்ருள் ஆதலின் இனி அவள் நிலை யாதாகும் என்பதனை யானுணரேன். வானளவும் ஓங்கிய முகட்டினையுடைய தில்லையம்பலத்தே வாழ்பவரே உம்மை ஒருதர மேனும் காணப்பெறுவாளாயின் அழகிய என்மகள் மெலிவு நீங்கிப் பிழைப்பாள் என இறைவன்பால் நற்ருய் முறையிட்டபடியாம்.
சேண் நுதற் பொலிதில்லை—வானமுகடளவும் உயர்ந்து விளங்கும் தில்லையம்பலம்.

* நெடுங்காலம் வாழ்க என வாழ்த்தியற் பொருளாக வரும் இசைப் பாடல் 'பல்லாண்டு' எனப்படும்.
"பாடுவார் பணிவார் பல்லாண்டிசை கூறுபத்தர்கள் சித்தத்துள் [புக்குத்
தேடிக் கண்டுகொண்டேன் திருவாரூரம்மானே"
என்னும் ஆளுடைய அரசர் திருப்பாட்டில் இப்பல்லாண்டிசை குறிக்கப்பெறுதல் காண்க.

1. [1] நிலைபெறுக.
[2] பின்னுந் தொடர்ந்துவரும் பிறவித் தொடர்பை யறுத்தற்குரிய திரு வருள் நெறியினைக்காட்டியருளிய பித்தன் என்னும் எம்பெருமானுக்கு.

மிண்டு மனத்தவர் போமின்கள்
  மெய்யடியார்கள் விரைந்து வம்மின்
கொண்டுங் கொடுத்துங் குடிகுடி
  யீசர்க்காட் செய்மின் குழாம்புகுந்து
அண்டங் கடந்த பொருளள
  வில்லதோ ரானந்த வெள்ளப்பொருள்
பண்டு மின்றுமென்று முள்ளபொரு
  ளென்றே பல்லாண்டு கூறுதுமே. 2

சீருந் திருவும் பொலியச்
  சிவலோக நாயகன் சேவடிக்கீழ்
ஆரும் பெறாத அறிவுபெற்றேன்
  பெற்ற தார்பெறு வாருலகில்
ஊரு முலகுங் கழறவுழறி
  யுமைமண வாள னுக்காட்
பாரும் விசும்பு மறியும்
  பரிசுநாம் பல்லாண்டு கூறுதுமே.[2] 7

---

2. [1] தாழ்வெனும் தன்மையின்றிச் செருக்கித் திரியும் உள்ளத்தவர்.

[2] அண்டங்களெல்லாங் கடந்து அப்பாற்பட்டும் அளவைகட்கு அடங்கா இன்ப வெள்ளமாகியும் கால வரம்பின்றி என்றும் ஒரே தன்மைத்தாயுள்ள முழுமுதற் பொருளென்றே அதன் இயல்பினைச் சொல்லிப் பல்லாண்டிசை கூறுவோமாக என்பது பொருள்.

7. [1] மிக்க புகழும் பெருஞ் செல்வமும் விளங்கச் சிவலோக நாயகனாகிய இறைவனது திருவடிக்கீழ்த் தங்கிப் பிறர் யாரும் எளிதிற் பெறாத மெய்யுணர்வினைப் பெற்று மகிழ்ந்தேன். யான் பெற்ற இன்பத்தை உலகில் எளிதிற் பெற்றார் பிறர் யார்? எனத் தாம்பெற்ற திருவருளின்பத்தை வியந்து கூறியவாறு.

[2] உமையம்மையார்க்கு மணவாளனாகிய பெருமானுக்கு நாம் ஆட்பட்ட தன்மையை ஊரிலுள்ளாரும் உலகத்தவரும் பலவாறு பேச நாக்குளறி மண்ணவரும் விண்ணவரும் அறிந்து போற்றும் வண்ணம் பல்லாண் டிசை கூறுவோமாக.

# பத்தாந் திருமுறை.

திருமூல நாயனார் அருளிய

## திருமந்திரம்.

முன்னையொப் பாயுள்ள மூவர்க்கு[1] மூத்தவன்
தன்னையொப் பாயொன்றும் இல்லாத் தலைமகன்
அன்னை[2]யப்பா வெனில் அப்பனு மாயுளன்
பொன்னையொப் பாகின்ற போதகத் தானே. 7

தானே யிருநிலந் தாங்கி விண்ணாய் நிற்கும்
தானே சுடும்அங்கி ஞாயிறுந் திங்களும்
தானே மழைபொழி தையலுமாய் நிற்கும்[1]
தானே தடவரை தண்கட லாமே. 10

அப்பனை நந்தியை ஆரா அமுதினை[1]
ஒப்பிலி வள்ளலை ஊழி முதல்வனை[2]
எப்பரி சாயினும் ஏத்துமின் ஏத்தினால்
அப்பரி சீசன் அருள்பெற லாமே.[3] 36

---

7. [1] மூவர்க்கும் மூத்தவன்—நான்முகன் திருமால் உருத்திரன் ஆகிய மூவராலும் அறிதற்கரிய பழையோன்.

[2] தன்னை என்றும் பாடம்.

10. இத் திருப்பாடலில் இறைவன் உலகெலாம் ஆகி நிற்கும் இயல்பு குறிக்கப் பெற்றது.

[1] மழைபொழி தையல் என்றது, உயிர்களின் வழி நின்று அருள்புரியும் அம்மையாகிய சத்தியை.

36. [1] ஆராவமுது—உண்ணத் தெவிட்டாத அமுதம் போல்வான்.

[2] ஊழி முதல்வன்—உலகமும் உயிர்களும் நிலைதளர அழிவுசெய்யும் பேரூழிக் காலத்தும் தளராது நிற்கும் தனிப்பெருந் தலைவன்.

[3] எந்நிலையில் நின்று எந்தக் கோலத்துடன் வழிபட்டாலும் அவ்வந்நிலையில் அவ்வக் கோலத்துடன் வந்தருள்புரிவான் அப்பெருமான் என்பது கருத்து.

வாழ்த்தவல் லார்மனத் துள்ளுறு சோதியை[1]
தீர்த்தனை[2] அங்கே[3] திளைக்கின்ற தேவனை
ஏத்தியும் எம்பெரு மானென் றிறைஞ்சியும்
ஆத்தஞ்செய்[4] தீசன் அருள்பெற லாமே. 39

**யாக்கை நிலையாமை.**

காக்கை கவரிலென் கண்டார் பழிக்கிலென்
பாற்றுளி பெய்யிலென் பல்லோர் பழிச்சிலென்
தோற்பையுள் நின்று தொழிலறச் செய்தூட்டும்
கூத்தன் புறப்பட்டுப் போனஇக் கூட்டையே. 167

---

39. [1] தன்னை நிறைந்த அன்பினால் வாழ்த்தவல்ல மெய்யடியார்கள் உள்ளத்தே பொருந்திய சோதியாய்த் தோன்றும் திருவுருவமுடையோன்

[2] தீர்த்தன்—தூயோன்.

[3] அடியார்கள் உள்ளமாகிய கோயிலிலே.

[4] ஆத்தஞ்செய்து—விருப்பமாகிய ஆர்வத்தினைச் செலுத்தி.

167. தோற்பையுள் நின்று தொழிலறச் செய்து ஊட்டும் கூத்தன்—உடம்பினுள் நின்று இருவினைகளையும் மிகச்செய்து அவற்றின் பயனை உண்ணுகின்ற உயிர். ஊட்டும் என்பது தன்வினைப் பொருளில் வந்த பிறவினை. இவ்வுயிர் வெளியே புறப்பட்டுப் போன பின்னர்ப் பிணமாகிய வெறுங் கூட்டினைப் பால் தெளித்து உற்றார் பலரும் வழிபட்டு அடக்கஞ் செய்தலால் வரும் உயர்வு யாது? அவ்வாறன்றிப் பலரும் பிணமென்று பழிக்கும்படி காக்கை கவர அடக்கஞ் செய்யாது வெளியே எறிந்து விடுதலால் வரும் இழப்பு யாது? உயிர் போனபின் இவ்வுடம்பால் ஒரு பயனும் இல்லை என்பதாம். பழிச்சுதல்—வழிபட்டுப் போற்றுதல்.

"நார்த்தொடுத் தீர்க்கிலென் நன்றாய்ந் தடக்கிலென்
பார்த்துழிப் பெய்யிலென் பல்லோர் பழிக்கிலென்
தோற்பையு ணின்று தொழிலறச் செய்தூட்டும்
கூத்தன் புறப்பட்டக் கால்."

எனவரும் நாலடியார் பாடல் இத் திருமந்திரச் சொற்பொருளைத் தழுவி நிற்றல் அறிதற்குரியதாம்.

## செல்வம் நிலையாமை.

தேற்றத் தெளிமின் தெளிந்தீர் கலங்கன்மின்[1]
ஆற்றப் பெருக்கிற் கலக்கி மலக்காதே[2]
மாற்றிக் களைவீர் மறுத்துங்கள் செல்வத்தைக்[3]
கூற்றன் வருங்கால் குதிக்கலு மாமே.[4] 172

---

172. செல்வ நிலையாமை என்னும் பகுதியைச் சேர்ந்தது இப்பாடல்.

1 அறிஞர்கள் உண்மையினை யெடுத்துரைத்துத் தெளிவிக்க உள்ளந் தெளியப் பெறுமின்கள்; அங்ஙனம் உள்ளத்தெளிவு பெற்றீராகிய நீவிர் ஒருபோதும் மனங் கலங்கா திருப்பீராக.

2 ஆற்றில் வெள்ளம் பெருகிய நிலையில் அதன் நீர் தெளிவின்றிக் கலங்கியதுபோல உங்கள் மனத்தைக் கலக்கமுடையதாக்கிமயங்காமல்.

3 உங்கள் செல்வத்தை மறுத்து மாற்றிக் களைவீர்-உங்கள் செல்வத்தின் பாலுள்ள பற்றினை விலக்கி, அதனால் வரும் களிப்பினை அடியோடு மாற்றி, நில்லாத அப்பொருளை நிலையெனக் கொண்டதனால் உளதாகிய புல்லறி வாண்மையினைக் களைவீராக.

4 இங்ஙனம் செல்வத்தின் நிலையாமையினைத் தெளிந்து அதன்கட் பற்றின்றி ஒழுகுவீராயின் விலக்குதற்கரிய கூற்றுவனைக் கடந்து இறப்பின்றி வாழும் ஆற்றலையும் பெற்றவராவீர் என்பதாம்.

'கூற்றங் குதித்தலுங் கைகூடும்' (குறள்-269) என்னுந் திருவள்ளுவர் வாய்மொழி இவ்வடியுடன் ஒப்புநோக்கத் தகுவதாம்.

கிழக்கெழுந் தோடிய ஞாயிறு மேற்கே
விழக்கண்டுந் தேறார் விழியிலா மாந்தர்[1]
குழக்கன்று மூத்தெரு தாய்ச்சில நாளில்
விழக்கண்டுந் தேறார் வியனுல கோரே.[2] 177

கொலையே களவுகட் காமம்பொய் கூறல்
மலைவான பாதக மாமவை[1] நீக்கித்
தலையாஞ் சிவனடி[2] சார்ந்தின்பஞ் சார்ந்தோர்க்
கிலையாம் இவை[3] ஞானானந்தத் திருத்தலே.[4] 200

---

177. இளமை நிலையாமை யென்னும் பொருள் பற்றியது.

[1] கீழ்த்திசையிற் றோன்றி யோடிய இளங் கதிரவன் (ஒரு பொழுதுக்குள் முதுமைநிலை யடைந்து) மேற்குத் திசையில் வீழ்ந்து மறையக் கண்டும் கூர்த்த நோக்கம் இல்லாத மக்கள் அதன் இளமை நிலையாமையினைத் தெளியமாட்டா ராயினர்.

[2] தம் கண்காணப் பிறந்த பசுவின் இளங்கன்று பெரிய எருதாகி முதுமை நிலையடைந்து சில நாட்களில் இறந்துபோதலைப் பார்த்திருந்தும் அகன்ற இவ்வுலகத்தவர் இளமை நிலையாமையினை நன்கு தெளியப்பெறாராயினர். குழ என்னுஞ் சொல் இளமை யெனப் பொருள்படும். 'மழவும் குழவும் இளமைப் பொருள்' (உரி-14) என்பது தொல்காப்பியம்.

200. புலால் மறுத்தல் என்னும் தலைப்பில் அமைந்தது இத்திருப்பாடலாகும்.

[1] மயக்கமாகிய குற்றத்தினைத் தரும் ஐம்பெரும் பாதகங்களாகிய அவற்றை. ஊனுண்ணுதலாகிய தீய செயல், முன்செய்த கொலையான் வருதலின் அக்கொலையின் காரியமாகியும், பிறிதோருயிரின் உடலைச் சுவைபட உண்டவர் மனம் பின்னும் அவ்வுயிர்களைக் கொல்லத் தூண்டுதலின் அக்கொலைக்குக் காரணமாகியும் நிற்றல்பற்றி அதனைக் கொலையாகவே அடக்கினார் ஆசிரியர்.

[2] பிறவிப் பிணிக்கு மருந்தாய் நின்று வீடுபேறளிக்கவல்ல முதன்மையுடையன முழுமுதற் பொருளாகிய சிவபெருமான் திருவடிகளே யென்பார், 'தலையாஞ் சிவனடி' என அப்பெருமான் திருவடிகளைச் சேர்த்துறப்பித்துப் பாற்றுவாராயினர்.

கல்லா அரசனுங் காலனும் நேரொப்பர்
கல்லா அரசனிற் காலன் மிகநல்லன்
கல்லா அரசன் அறம்ஓரான் கொல்லென்பான்
நல்லாரைக் காலன் நணுகிநில் லானே. 238

வேடநெறி நில்லார் வேடம்பூண் டென்பயன்
வேடநெறி நிற்போர் வேடம்மெய் வேடமே
வேடநெறி நில்லார் தம்மை விறல்வேந்தன்
வேடநெறி செய்தால் வீடது வாகுமே. 240

---

200. [3] அவனடியைச் சேர்ந்த அடியார்களுக்கு இத்தீவினைகளான் வரும் பழி பாவங்கள் உளவாகா என்பதாம்.

[4] ஞானனந்தத் திருத்தலே ஆம் என வினை முடிவு செய்க.

238 முதல் 247 வரை யுள்ள செய்யுட்கள் இராசதோடம் (அரசன் அறிந்து விலக்கவேண்டிய குற்றங்கள்) என்னுந் தலைப்பில் அமைந்தன வாகும்.

238. அறிவு நூல்களைக் கற்று முறை செய்யாத அரசனும் உயிர்களை உடலினின்றும் நீக்குதலைச் செய்து தீமை செய்தோரைத் தண்டிக்கும் கூற்றுவனும் தொழிலால் ஒருதன்மையராவர். எனினும் கற்று முறைசெய்யாத அரசனைக் காட்டிலும் உயிர்களைக் காலமறிந்து கொண்டுபோகின்ற இயமன் பெரிதும் நன்மை யுடையவனுவன். எவ்வாறென்றால் அறநூல்களைக் கல்லாத அரசன் அறமுறை இது வென்று தான் உணராமையால் நல்லோர் தீயோர் என்னும் வேறுபாடின்றித் தன்மொழி நடவாத எல்லா மக்களையும் கொல்லும்படி கட்டளையிடுவான். ஆனல் காலனே அவ்வாறன்றித் தன்னுற் பிடிக்கப்பட்டவருள் தீயோரைத் தண்டத்தால் துன்புறுத்துவதன்றி ஒரு குற்றமும் செய்யாத நல்லோர்களை அணுகி ஒரு துன்பமும் செய்வானல்லன்.

240. தவ வேடத்தினை மேற்கொண்டு அதற்குரிய தவநெறியில் நில்லாது தவமல்லாத இழி தொழில்களைச் செய்து நிற்போர் அவ்வேடத்தாற் பெறும் பயன் யாது? சிறிதும் இல்லையென்பதாம். தாம் மேற்கொண்ட வேடத்திற்கேற்பத் தவநிலையில் நின்றொழுகுவாரது வேடமே உலக மக்களால் மதித்துப் போற்றும் பெருஞ் சிறப்புடையதாகும். தாம் மேற்கொண்ட தவநிலையில் நிலைபெற ஒழுகாதவர்களை வெற்றியாற் சிறந்த வேந்தன் அவர் கொண்ட தவநிலையில் தவறாது ஒழுகச் செய்வானுயின் அம்முறையே அவர்களுக்கு வீடு பேற்றினைத் தரும் நல்ல உபாயமாகும் என்பதாம்.

ஞான மிலாதார் சடைசிகை நூல்நண்ணி
ஞானிகள் போல நடிக்கின் றவர்தம்மை
ஞானிக ளாலே நரபதி சோதித்து
ஞானமுண் டாக்குதல் நலமாகும் நாட்டிற்கே. 242

தத்தஞ் சமயத் தகுதிநில் லாதாரை
அத்தன் சிவன்சொன்ன ஆகம நூல்நெறி
எத்தண்ட முஞ்செயும் அம்மையில்[1] இம்மைக்கே
மெய்த்தண்டஞ் செய்வதவ் வேந்தன் கடனே.[2] 247

---

242. மெய்யுணர்வு கைவரப் பெறாதார், விரிந்த சடையும் சிறிய குடுமியும் பூணநூலும் முதலாக அமைந்த வேடங்களைப் பெற்று மெய்யுணர்விற் சிறந்த ஞானிகளைப்போல வஞ்சனையால் நடித்துத் திரிவராயின் அத் தீயோர்களை உண்மை ஞானியர் ஆகிய பெரியோர்களைக் கொண்டு அரசன் ஆராய்ந்து வெளிப்படுத்தி உண்மை ஞானத்தை உலகிற் பரவச் செய்தல் நாட்டில் வாழ்வார் அனைவர்க்கும் நன்மை பயக்கும் நற்செயலாகும் என்பதாம்.

247. [1] எல்லார்க்குந் தலைவனாகிய சிவபெருமான் உலகிற் பல்வேறு கொள்கையினர்க்கும்உரியவாகத் தான் திருவாய்மலர்ந்த நளிய அருள் நூல்களின் வழியே தங்கள் தங்களுக்குரிய சமய ஒழுக்கங்களில் தகுதிபெற அடங்கியொழுகாது பிறர்க்கு இன்னல் செய்வோரை அடுத்த பிறவியில் எல்லாவகைக் கொடுந் தண்டங்களையுஞ் செய்து முறை செய்வான்.

[2] தங்களுக்குரிய நெறிமுறையில் நில்லாத அவர்களுக்கு இப் பிறவியிலேயே ஒறுத்தலாகிய தண்டனையைத் தந்து அவர்களைக் குற்றமற்றவராக்குவது நாட்டையாளும் அரசனது நீங்காக் கடமையாகும் என்பது பொருள். அம்மை—இனிமேல் வரும் பிறப்பு. இம்மை—இப்பிறப்பு.

ஆர்க்கும் இடுமின் அவரிவர் என்னன்மின்[1]
பாத்திருந் துண்மின்[2] பழம்பொருள் போற்றன்மின்[3]
வேட்கை யுடையீர் விரைந்தொல்லை உண்ணன்மின்[4]
காக்கை கரைந்துண் ணுங் காலம் அறிமினே.[5] 250

---

250. தானச் சிறப்பினை விளக்குவது இத்திருப்பாடலாகும்.

1 **அவர்** இவர் என்னன்மின் ஆர்க்கும் இடுமின்-அப்படிப்பட்டவர் இப்படிப்பட்டவர் என்று மக்களைப் பிறப்பினாலும் தொழிலினாலும் வேறு பல தன்மைகளானும் பிரித்து விலக்காது, இல்லையென்போர் யாவர்க்கும் வேண்டுவன கொடுத்து உதவுங்கள்.

2 இருந்து பாத்து உண்மின்-உங்களுக்குரிய மனையின்கண் இருந்து நமது முயற்சியான் வந்த உணவினை விருந்தினர்க்குப் பகுத்து இட்டு அவர்களுடன் உண்டு மகிழ்மின்.

3 நம் முன்னோர் தேடிய பழம்பொருளை நல்லறங்களுக்கு உரிமை செய்யாமல் நம்முடைய பொருளாகக் கொண்டு பேணிச் சோம்பியிராதீர்கள். "உள்ளது சிதைப்போர் உளரெனப் படார்" (குறுந்தொகை-283) எனச் சான்றோர் பிறரும் கூறுதல் காண்க.

4 உண்ணவேண்டும் வேட்கையுடைய நீங்கள் நம்மையொத்துப் பசித்து வரும் பிறருடைய பசி வருத்தத்தினை நோக்காது விரைந்து தனித்து உண்ணத் தொடங்காதீர்கள்.

5 இழிந்த பறவையாகிய காக்கையும் தனக்குக் கிடைத்த ஊண் சிறிதாயினும் தன்னினத்தைக் கூவியழைத்து உண்ணும் நற்செவ்வியினை யுணர்ந்து போற்றுங்கள் என்பதாம். ஒல்லை—விரைவு; ஒருபொருளிருசொல். கரைதல்—கூவியழைத்தல்.

யாவர்க்கு மாம்இறை வற்கொரு பச்சிலை[1]
யாவர்க்கு மாம்பசு வுக்கொரு வாயுறை[2]
யாவர்க்கு மாம்உண் ணும் போதொரு கைப்பிடி[3]
யாவர்க்கு மாம்பிறர்க் கின்னுரை தானே.[4] 251

---

252. அறஞ்செய்வான் திறம் என்னும் பகுதியைச் சார்ந்தது இத்திருப் பாட்டாகும். மக்கள் தம் மனத்தின்கண் ஒரு சிறிதும் குற்றமில்லா தவராக ஒழுகுதலே அறம் எனச் சிறப்பித் துரைக்கப்படுவதாகலின் அத்தகைய நல்லறத்தினை எல்லாரும் தமக்கு இயலுந் திறத்தால் எளிதின் மேற்கொண்டு செய்தல் இயலும் என்பதனை இத்திருப்பாட லில் திருமூலர் விளக்கியருள்கின்றார்.

1 எல்லாம் வல்ல இறைவனுக்கு எளிதிற் கிடைக்கக்கூடிய பச்சிலை யொன்றினை யிட்டுச் செய்யும் வழிபாடு உலகில் யாவராலும் எளிதின் மேற்கொள்ளுதற் குரியதேயாம்.

2 அவ்வாறே யுலகினர்க்குப் பால் சுரந்தூட்டும் அமைதியுடைய பாது காக்கத்தக்க பசுவினுக்கு ஒரு வாய்க்குப் போதுமான அறுகம் புல் லினை யளித்தல் எல்லாரும் செய்தற்குரிய எளிய செயலேயாம்.

3 தாம் உண்ணும்போது பிறர்க்கு ஒரு கைப்பிடி உணவினைக் கொடுத்து மகிழ்தல் அவ்வாறே யாவராலும் செய்தற்கெளிய அறமேயாகும்.

4 மேற்சொல்லிய எளிய அறங்களுள் எதனையும் மேற்கொள்ளத் தவறி னும் பிறரைக் கண்டபொழுதே இன்முகத்துடன் இன்சொற்களைக் கூறி மகிழ்தல் உலகத்து யாவராலும் தவறாது மேற்கொள்ளத்தக்க நல்லறமாம் என்பது பொருள்.

> 'அகனமர்ந் தீதலி னன்றே முகனமர்ந்
> தின்சொல னாகப் பெறின்.' (திருக்குறள் 92)

என இவ்வறத்தின் மேன்மையைத் தெய்வப் புலவர் தெளிவித்தல் காண்க.

அன்புஞ் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவ தாரும் அறிகிலார்
அன்பே சிவமாவ தாரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந் தாரே. 270

என்பே விறகா இறைச்சி அறுத்திட்டுப்
பொன்போற் கனலிற் பொரிய வறுப்பினும்
அன்போ டுருகி அகங்குழை வார்க்கன்றி
என்பொன் மணியினை எய்தவொண் ணாதே 272

---

270. 272 இவ்விரு செய்யுட்களும் 'அன்புடைமை'யை விளக்குவனவாம். உயிர்க்குணமாகிய அன்பு வேறு முழுமுதற் கடவுளாகிய சிவம் வேறு என இவ்விரண்டும் இரு வேறு தனிப்பொருள்கள் என்பார் அறிவிலாதார். உயிர்களின் நெஞ்சத்துப் பண்பாகிய அன்பே எல்லாராலுந் தொழப்படும் உயிர்க்குயிராகிய சிவ பரம்பொருளாம் என்னும் மெய்மையை உலகத்தார் யாவரும் அறிந்தாரல்லர். இவ்வுண்மையை எல்லாரும் அறியப்பெறின் அன்பாகிய சிவம்வேறு தாம்வேறு என்னும் வேற்றுமையின்றி அம் முழுமுதற்பொருளோடு இரண்டறக்கலந்து ஈறிலா வின்ப நிலையில் மகிழ்ந்திருப்பர் என்பது இத்திருப்பாடலின் பொருளாகும்.

272. பொன்போற் கனலில் இறைச்சி அறுத்து இட்டு என்பே விறகா பொரிய வறுப்பினும் என மொழி மாற்றிப் பொருள் கொள்க. பொன்னைப்போன்று மிக்க ஒளியுடையதாய்ச் சுடர்விட்டெரியும் தீயின்கண்ணே தம் உடம்பில் உள்ள தசையினை யறுத்துச் சொரிந்து தம் உடலின் எலும்பினையே விறகாக இட்டு நீர்ப்பசையற்றுப் பொரியும் வண்ணம் வறுத்து அவிப்பலியாகிய கொடிய தவங்களைச் செய்யினும் உயிர்கண்மேல் வைத்த அன்பினால் உள்ளங்குழைந்து தன்னை வழிபடும் அடியார்களால் அல்லது என் உயிரனைய பொல்லா மணியாகிய சிவபெருமானை அடைந்து இன்புறுதல் இயலாதென்பதாம்.

''நெய்யின்றி யாகம் முடியுமேல் நீடுபேர், ஐவகை யாகமு முந்தீபற, அன்பின்றி யாகுமென் றுந்தீபற'' (அவிரோத வுந்தியார் 85) என்பதற்கு உரையெழுதிய திருப்போரூர் சிதம்பர சுவாமிகள் ''யாதாமோரிடத்தாயினும் நெய்யின்றி யாகம் முடியுமாயின், கருமயாகம், தவயாகம், மந்திரயாகம், பாவனையாகம், ஞானயாகம் என்று இங்ஙனங் கூறிய ஐவகை யாகமும் அன்பின்றி ஒருவனுக்கு முடியும் என்றவாறு. இதனால் போக மோக்ஷத்திற்கெல்லாம் ஆதரமே (அன்பே) காரணமென்பதாயிற்று'' எனக்கருத்துரைத்து, அதற்குப் பிரமாணமாக மேல்வந்த 270, 272.ம் திருமந்திரப்பாடல்களை மேற்கோள்காட்டினமைஉணர்ந்து போற்றுதற்குரியதாம்.

நடுவுநின் றார்க்[1]கன்றி ஞானமும் இல்லை
நடுவுநின் றார்க்கு நரகமும் இல்லை
நடுவுநின் றார்நல்ல தேவரு மாவர்
நடுவுநின் றார்வழி நானும்நின் றேனே. 320

அப்பணி செஞ்சடை ஆதி புராதனன்[1]
முப்புரஞ் செற்றனன் என்பர்கள் மூடர்கள்[2]
முப்புர மாவது மும்மல காரியம்[3]
அப்புர மெய்தமை யாரறி வாரே.[4] 343

---

320. [1] நடுவுநின்றார்—பகைவர் நண்பர் அயலார் என்னும் மூன்று திறத்தார் கண்ணும் விருப்பு வெறுப்பின்றிச் செம்மை நெறியில் நிற்பவர்.

343. [1] கங்கை நீரினை யணிந்த சிவந்த சடையினையுடைய மிகப் பழையோனாகிய சிவன்.

[2] வானத்தே திரிந்து வருத்து மியல்புடைய முப்புரங்களையும் அழித்தான் என்பர் உண்மையுணராதார்.

[3] பிறவியிற் கட்டுப்பட்டுநிற்கும் உயிர்களின்முன் விரிந்து தோன்றும் ஆணவம், கன்மம், மாயை என்னும் இம் மும்மலங்களின் காரியங்களே இவ்வரலாற்றில் முப்புரம் எனக் குறிக்கப்பட்டனவாம்.

[4] அம் மும்மல காரியமாகிய முப்புரங்களையும் ஒளிமுன் இருள்போலத் தம் ஆற்றல் கெடும்படி இறைவன் அழித்த இயல்பினை அறியும் நுண்ணறிவுடையார் ஒருவருமிலர் என்பதாம். இவ்வடிக்கு இவ்வாறன்றி, "செம்பு, வெள்ளி, பொன் என்பவற்றாலாகிய மூன்று கோட்டைகளையும் இறைவன் அழித்த செயலை எதிரே கண்டறிவார் யார் ஒருவருமிலர். எனவே காலங்கடந்த முதல்வனுக்குக் காலத்தொடு பட்ட கதைகளால் வரும் பெருமை யெதுவுமில்லை யெனக் கூறி" அவ்வரலாற்றின் அடிப்படைக் கருத்தினை விளக்கியதாகவும் பொருள் கூறுதலுண்டு. அப்பு—நீர்.

சைவப் பெருமைத் தனிநாயகன் நந்தி[1]
உய்ய வகுத்த குருநெறி யொன்றுண்டு[2]
தெய்வச் சிவநெறி சன்மார்க்கம் சேர்ந்துய்ய
வையத்துள் ளார்க்கு வகுத்துரைத் தானே.[3] 1478

எல்லா உலகிற்கும் அப்பாலோன் இப்பாலாய்
நல்லார் உள்ளத்து மிக்கருள் நல்கலால்
எல்லாரும் உய்யக்கொண் டிங்கே யளித்தலாற்
சொல்லார்ந்த நற்குருச் சுத்த சிவமே. 1576

---

1478. சன்மார்க்கம் என்னும் பொருளை விளக்குவது இத்திருப்பாட்டாகும். சன்மார்க்கம்—மக்களனைவரும் தம்முள் ஒரு சிறிதும் வேற்றுமையின்றி அன்பினாற் கூடி யொழுகுதற்குரிய நல்லவழி.

[1] சிவபெருமான்.

[2] உலக மக்கள் அனைவரும் பிறவிக்கடலினின்றும் பிழைத்துக் கரையேறும் வண்ணம் ஆசிரியனாய் வந்து அருளிச்செய்த மேலான திருநெறியொன்று உளது.

[3] அதுவே தெய்வச் சிவநெறியெனவும், சன்மார்க்கம் எனவும் சொல்லப்பெறும். அந்நன்னெறிக்கண் ஒழுகி யுய்தி பெறும்பொருட்டு உலகினர்க்கு இத்தகைய நல்லறவழியினை இறைவன் வகுத்தருளினன் என்பதாம்.

1576. 'சிவகுரு தரிசனம்' என்னும் பொருளுடையது இச் செய்யுளாகும். உயிர்க்கு வீடுபேற்றினை யளிக்கவல்ல நல்லறிவு சரியை முதலிய தவங்களால் வருமென்பதும், அத்தகைய ஞானம் உபதேசித்தற்குரிய ஆசிரியனையின்றி நிகழாதென்பதும் அவ்வாறு உண்மை ஞானத்தினை யுள்ளவாறு உணர்த்துதல் உயிர்களின் உள்ளத்தே எழுந்தருளிய இறைவனால் அல்லது ஏனைய மக்கள் முதலியோரால் இயலாதென்பதும் கருதி உயிர்க்குயிராகியசிவனே குருவாய் வந்து அருள் புரிவன் என்பர் பெரியோர்.

இதன் பொருள்:— எல்லா வுலகங்கட்கும் அப்பாற்பட்டு விளங்கும் முழுமுதற் பொருளாகிய இறைவன் இவ்வுலகில் தன் இயல்பினைக் கேட்டுச் சிந்தித்துத் தெளிந்து முதிர்ந்தோர் ஆகிய நல்ல அடியார்களது உள்ளத்தின் கண்ணே ஏனைய விடங்களினும் மிகவும் வெளிப்பட்டு நின்று அருளும் இயல்பினன் ஆதலாலும் அவர்தம் வழியாக உலக மக்கள் எல்லாரையும் உய்விக்கத் திருவுளங்கொண்டு இவ்வுலகத்தே அருட்டிருமேனிகொண்டு பாதுகாக்கும் அருட்பண்பினன் ஆதலானும் போற்றி வழிபடுதற்கேற்ற புகழமைந்த நல்ல குருவாவான் சுத்த சிவமாகிய இறைவனொருவனே யென்பதாம்.

ஒடுங்கி நிலைபெற்ற உத்தமர்[1] உள்ளம்
நடுங்குவ தில்லை நமனுமங் கில்லை
இடும்பையும் இல்லை இராப்பகல் இல்லை[2]
படும்பயன் இல்லை பற்றுவிட் டோர்க்கே.[3] 1624

ஆற்றிற் கிடந்த முதலைகண் டஞ்சிப்போய்
ஈற்றுக் கரடிக் கெதிர்ப்பட்ட தன்னொக்கும்
நோற்றுத் தவஞ்செய்யார் நூலறி யாதவர்
சோற்றுக்கு நின்று சுழல்கின்ற வாறே. 1642

---

1624. தவத்தினைப் பற்றிக் கூறுவது இச் செய்யுளாகும்.

[1] அறிவு இச்சை செயல்கள் மூன்றும் புறத்தே செல்லாது ஒடுங்கப் பெற்று இறைவன் திருவடியிலேயே நிலைக்கப்பெற்ற மெய்த் தவத்தினராகிய அடியார்கள்.

[2] அவர்களுடைய உள்ளம் எக்காலத்தும் நடுக்கமடைவதில்லை. அதன் கண் நமனால் வரும் இறப்பைப்பற்றிய கலக்கமும் பிறதுன்பங்களுந் தோன்றுவதில்லை. நினைப்பு மறப்பென்பவையும் அவர் மனத்தின் கண் உண்டாதலில்லை.

[3] யானெனதென்னும் பற்றினை அறவேயகற்றிய தூயோராகிய அவர் கட்கு இவ்வுலகியலில் உண்டாகத்தக்க எவ்வகைப் பயனும் இல்லை யென்பதாம். "வானந்துளங்கிலென்" எனவருந்திருப்பாட்டு இவ்வெண்ணினைவு கூரத்தகுவதாம்.

1642. தவதூடணம் என்னும் தலைப்பின்கணுள்ளது இச்செய்யுளாகும். இதன் பின்னிரண்டடிகளையும் முன்னர்க் கூட்டிப் பொருள்கொள்க.

இதன் பொருள்:— மெய்ந்நூற் பொருளை அறிந்துகொள்ளாதார் பலர், தாம் மேற்கொண்ட தவநிலைக்கேற்பத் தமக்குற்ற நோய்களைப் பொறுத்துப் பிறவுயிர்க்குத் துன்பின்றித் தவத்தொழிலில் முயலாதவராய்த் தம் பசித்தீத் தணியப் பிறர் கொடுக்கும் எளிய வுணவின் பொருட்டு உலகியலிற்சுழன்று துன்புறுகின்றனர். இச்செயல், தான் இறங்கிக் கடத்தற்குரிய ஆற்றில் முதலையைக்கண்டு அஞ்சி நீங்கிய வொருவன், தனக்கு அரணாக அடையுமிடத்தில் இறுதியைத் தரும் கரடியை யெதிரே கண்டு வருந்திய செயலோடு ஒப்பதாகும் என்பதாம். ஈற்றுக்கரடி யென்பதற்கு குட்டியை யீன்ற நிலையில் பசித்துக்கிடக்கும் கரடி எனப் பொருள்கோடலும் பொருந்தும். ஈற்றுப்பசு என்னும் வழக்கு நோக்குக.

பிறவா நெறிதந்த பேரரு ளாளன்
மறவா அருள்தந்த மாதவன் நந்தி
அறவாழி யந்தணன்[1] ஆதி பராபரன்[2]
உறவாகி வந்தென் உளம்புகுந் தானே. 1803

அகரம்[1] ஆயிரம் அந்தணர்க் கீயிலென்
சிகரம்[2] ஆயிரஞ் செய்து முடிக்கிலென்
பகரு ஞானி பகலூண் பலத்துக்கு
நிகரிலை யென்பது நிச்சயந் தானே.[3] 1860

என்தாயோ டென்னப்பன்[1] ஏழேழ் பிறவியும்[2]
அன்றே சிவனுக் கெழுதிய ஆவணம்[3]
ஒன்று யுலகம் படைத்தான்[4] எழுதினன்
நின்றான் முகில்வண்ணன் நேரெழுத் தாயே.[5] 1876

---

1803. [1] இச்சொல்லுக்கு 'அறக்கடலாகிய அந்தணன்' எனப் பொருள் கூறுவர் பரிமேலழகர். (திருக்குறள் 8.)

[2] ஆதியாகிய பராசத்தியுடன் கூடிய பெருமான். ஆதிபகவன் என்பதும் இப்பொருட்டு.

1860. மகேசுவர பூசை (அடியார்க்கு உணவளித்தல்) என்னும் பொருள் பற்றியது இச்செய்யுளாகும்.

[1] அகரம் — அந்தணர் வாழும் குடியிருப்பு நிலம்.

[2] சிகரம்—கோபுரத்தொடு கூடிய கோயில்.

இவ்வறங்கள் யாவும் மெய்யுணர்வினராகிய அடியார் ஒருவர்க்கு ஒரு வேளை உணவுபடைத்தலால் வரும் பயனுக்கு ஒப்பாகா என்பது கருத்து.

1876. இத்திருப்பாட்டு அடியார் பெருமை கூறுவதாம்.

[1] என் தாயும் தந்தையும்.

[2] ஒரு பிறவியின் உணர்வே ஏழேழு நாற்பத்தொன்பது பிறவியளவுந் தொடருதல் கூடும் என்பர். 'எம்மானெந்தை மூத்தப்பன் ஏழேழ் படிகாலெமை யாண்ட பெம்மான்' (திருவாலங்காட்டு மூத்த திருப் பதிகம்) எனக் காரைக்காலம்மையாரும் கூறுதல் காண்க.

[3] ஆவணம்—உரிமைப்பத்திரம் ஆகிய விலைத்தீட்டு.

[4] பிரமன்.

[5] அடிமைச் சீட்டாகிய இந்த ஆவணப் பத்திரத்தை யெழுதினன் பிரமன் எனவும் அதற்குச் சான்றாக முகில்வண்ணனாகிய திருமால் நேரெழுத்தாய் நின்றான் எனவும் உலகியல் வழக்கினைக்கொண்டு கூறிய நுட்பம் உணர்க. நேரெழுத்து—சான்றாய் நின்றவர் கையொப்பம்.

கண்காணி யில்லென்று கள்ளம் பலசெய்வார்[1]
கண்காணி யில்லா விடமில்லை காணுங்கால்[2]
கண்காணி யாகக் கலந்தெங்கும் நின்றானைக்
கண்காணி கண்டார் களவொழிந் தாரே.[3] 2067

செல்லு மளவுஞ் செலுத்துமின் சிந்தையை[1]
வல்ல பரிசால் உரைமின்கள் வாய்மையை[2]
இல்லை யெனினும் பெரிதுளன் எம்மிறை[3]
நல்ல வரனெறி நாடுமி னீரே.[4] 2103

---

2067. கூடா வொழுக்கம் என்னுந் தலைப்பினைச் சேர்ந்தது இப்பாடலாகும்.

[1] நம்மை மேற்பார்வை செய்யுந்தலைவர் இங்குயாவருமில்லை யென்று உலகத்தினர் மறைவாகப் பல தவறுகளைச் செய்கின்றார்கள்.

[2] ஆராய்ந்து நோக்குமிடத்து மேற்பார்வையில்லாத இடம் இவ்வுலகத்து எதுவுமில்லையாம்.

[3] எங்குங்கலந்து கண்காணியாக நின்றானைக் கண்காணி கண்டார்—எவ்வகைப்பட்ட பொருளோடும் ஊடுருவிக்கலந்து நம்மனோர் செய்யும் நலந்தீங்குகளுக்குச் சான்றாய் நின்ற இறைவனை நம்மை இடைவிடாது மேற்பார்க்கும் தலைவனாகக் கண்டுணர்ந்தவர்கள்; களவொழிந்தார்—மறைந்து செய்யும் தீயவொழுக்கங்களை அடியோடு விட்டொழித்தவராவர்.

2103, 2014, 2015 இம்மூன்று பாடல்களும் இதோபதேசம் என்ற தலைப்பிலுள்ளனவாகும்.

[1] உங்கள் உள்ளத்தைக் கூடுமான அளவுக்கு இறைவன் திறத்தே செலுத்தி அவனது திருவருளை நினைமின்கள்.

[2] அவனது மெய்மையான புகழை நீங்கள் கற்று வல்ல அளவுக்குப் பாராட்டிப் போற்றுங்கள்.

[3] சிலர் அவனை இல்லையென்று கூறினும் எம் தலைவனாகிய பெருமான் இல்லை யென்பாருட்பட எல்லாருள்ளத்தும் நீங்காது நிலைபெற்றுள்ளான.

[4] நன்மையையருளும் அப்பெருமானது திருவருள் வழியே யொழுகி நீங்கள் அவனைத் தேடிக் கண்டுகொள்வீராக.

சார்ந்தவர்க் கின்பங் கொடுக்குந் தழல்வண்ணன்[1]
பேர்ந்தவர்க் கின்னாப் பிறவி கொடுத்திடும்[2]
கூர்ந்தவர்க்[3] கங்கே குரைகழல் காட்டிடும்
சேர்ந்தவர் தேவரைச் சென்றுணர் வாரே. 2114

முத்தியை ஞானத்தை முத்தமிழ் ஓசையை
எத்தனை காலமும் ஏத்துவர் ஈசனை
நெய்த்தலைப் பால்போல் நிமலனும் அங்குளன்
அத்தகு சோதி யதுவிரும் பாரே. 2115

---

2114. [1] தன்னைச்சார்ந்த மெய்யடியார்களுக்கு இறவாத பேரின்பத்தைக் கொடுத்தருள்வான். தழல்வண்ணன்—தீயினைப்போன்று ஒளிவிடும் செம்மேனியுடையான்; என்றது சிவனை. "சார்ந்தவர்க் கின்பங்கள் தழைக்கும் வண்ணம் நேர்ந்தவன் (சம்பந்தர் தேவாரம்) என்பது இங்கு ஒப்புநோக்கத்தக்கது.

[2] தன் திருவருள் வழியினின்றும் பெயர்ந்து மாறுபட்டோர்க்குத் துன்பத்திற்கேதுவாகிய பிறவியைக் கொடுத்துத் திருத்துவான்.

[3] கூர்ந்தவர்க்கு—அன்புமீதூரப் பெற்றார்க்கு. கூர்தல்—மிகுதல்.

2115. வீடுபேறாகவும் அதனையடைதற்குரிய மெய்யுணர்வாகவும் அவ்வுணர்வினை நிகழச்செய்தற்கு வழியாகிய இயலிசை நாடகமாகிய மூன்று தமிழின் ஓசையாகவும் விளங்குமீசனை உணர்ந்தோர்பலரும் பலகாலும் போற்றி வழிபடுகின்றார்கள். பாலினை முறுகக்காய்ச்சிக் கடைந்தவழி முன்னிற்கும் வெண்ணெய்போல மாசற்றோனாகிய இறைவனும், அவ்வழிபாட்டின்கண் விளங்கித்தோன்றுகின்றான். அங்ஙனம் உள்ளத்தே கிளர்ந்துதோன்றும் இறைவனது சோதியுருவினை ஏனமக்கள் விரும்பாது வீண்பொழுது போக்குதல் அந்தோ இரங்கத் தக்கதாம் என்றவாறு.

ஆணவ மாயையுங் கன்மமு மாமலம்
காணு முளைக்குத் தவிடுமி[1] யான்மாவும்
தாணுவை யொவ்வாமற் றண்டுல மாய்நிற்கும்[2]
பேணுவாய் மற்றுநின் பாசம் பிரித்தே. 2192

மரத்தை மறைத்தது மாமத யானை
மரத்தின் மறைந்தது மாமத யானை
பரத்தை மறைத்தது பார்முதற் பூதம்
பரத்தின் மறைந்தது பார்முதற் பூதமே. 2290

---

2192. [1] ஆணவம், மாயை, கன்மம் என்பன நெல்லிலே தவிடும் உமியும் முளையும்போல உயிரினை அனாதியே பற்றியுள்ள மும்மலங்களாம். இவற்றுள் முளை கன்மத்துக்கு உவமையாகவும் தவிடு ஆணவமலத்துக்கு உவமையாகவும் உமி மாயைக்கு உவமையாகவும் வந்தன.

[2] இப்பாசங்களாற்பற்றப்பட்ட உயிர், பாசத்தொடர்பற்ற இறைவனை யொத்த அறிவுவிளக்கமின்றி, நெல்லினிடத்தே தவிடு உமி முளை இவற்றுடன் அமைந்த அரிசியையொத்துக் கட்டுப்பட்டு அமைவதாகும். தண்டுலம்—அரிசி. இதன் விளக்கத்தினைச் சிவப்பிரகாசம் 25 ஆம் செய்யுளுக்கு மதுரைச்சிவப்பிரகாசர் எழுதிய உரையிற் காண்க.

2290. மரத்தாற் செய்யப்பட்ட யானையின் வடிவமானது தன்னை முதற்கண் காண்பார்க்கு வெளித்தோற்றமாகிய உருவ அமைப்பினையே வெளிப்படுத்தி நின்று தனக்குக் காரணமாகிய மரத்தை மறைத்துநிற்கின்றது. யானையின் உருவமைப்பினைக்கண்டு மகிழ்ந்தோர் அவ்வுருவம் எவ்வகை மரத்தாற் செய்யப்பட்டதென ஆராய்ந்து பார்க்குங்கால் யானை என்கின்ற எண்ணம் மறைந்து அதன் வடிவத்திற்கு மூலமாகிய மரத்தின் இயல்பே சிந்தனையில் நிலைபெறுகின்றது. இவ்வாறே நிலமுதலாகிய ஐம்பெரும்பூதங்களாக விரிந்துதோன்றும் இவ்வுலகம் தன்னையே காண்பார்க்குத் தனக்கு நிலைக்களமாகிய இறைவன் இயல்பினையுள்ளடக்கி மறைத்துநின்று தன்னையே புலப்படுத்தி நிற்குமெனவும், இங்ஙனந் தோன்றியுளதாம் உலகத்திற்குச் சார்பாய் நிற்கும் மெய்ப்பொருள் யாது என ஆராய்ந்து காணும் மெய்யுணர்வுடையார்க்கு எல்லாம் வல்ல இறைவனியல்பே மீதூர்ந்து தோற்றுதலின் அவ்வழி முன் புலனாகிய உலகம் பரமாகிய முழுமுதற்பொருளால் மறைக்கப்பட்டு மறைந்துபோம் எனவும் இத்திருப்பாடல் அறிவுறுத்து நிற்பதாம். இஃது எடுத்துக்காட்டுவமை.

பார்—நிலம். பரம்—முழுமுதற் பொருளாகிய கடவுள்.

காலினில் ஊறும்[1] கரும்பினிற் கட்டியும்
பாலினுள் நெய்யும் பழத்துள் இரதமும்
பூவினுள் நாற்றமும் போலுளன் எம்மிறை
காவலன் எங்குங் கலந்துநின் றானே. 2639

உருவன்றி யேநின் றுருவம் புணர்க்கும்[1]
கருவன்றி யேநின்று தான்கரு வாகும்[2]
அருவன்றி யேநின்ற மாயப் பிரானைக்
குருவன்றி யாவர்க்குங் கூட வொண்ணாதே.[3] 2840

---

2639. [1] காற்றின் குணமாக அதனிடத்தேயுள்ள ஊற்றுணர்ச்சி. இதனைப் பரிச வுணர்வு என்றுங் கூறுவர்.

எம் தலைவனாகிய கடவுள் காற்றின்கண் பரிசவுணர்வும் கரும்பின்கண் வெல்லக்கட்டியின் தன்மையும் பாலில் நெய்யும் பழத்தின்கண் சுவையும் மலரின் மணமும் பரவிநிற்றல்போல உலகியற் பொருள்கள் எல்லாவற்றினும் பிரிப்பின்றிக் கலந்து விளங்குகின்றான் என்பது இப்பாடலின் பொருளாகும்.

2840. [1] தொன்றுதொட்டு நிகழ்கின்ற இவ்வுலகத்தை இறைவன் முதன் முதற் படைத்த இயல்பு நம்மனோர்க்கு விளங்காததொன்றாம். இத்தகைய முதலுற்பவத்தில் (முதற்படைப்பில்) உயிர்கட்கு எத்தகைய உடம்பும் இல்லாதிருக்கவும் இறைவன் அவற்றிற்குச் சூக்கும தேகத்தையும் (நுண்ணுடம்பினையும்) ஏனைக்கருவிகளையுந் தந்து அவ்வுயிர்கட்கு மனங்காரணமாய் வந்த வேறுபாட்டால் வினையிரண்டுங் கூட்டிப் பருவுடம்பினையும் தருவான் என்பது கருத்து. (போற்றிப் பஃறொடை அடி 22 நோக்குக) 'உருவினாலன்றியே யுருவுசெய்தான்' என ஆளுடைய பிள்ளையாரும், 'விச்சதின்றியே விளைவுசெய்குவாய்' என ஆளுடைய அடிகளும் இம் முதற்படைப்பினைக் குறிப்பிட்டருளுதலறிக.

[2] ஏனைய உயிர்களின் தோற்றம்போலத் தனக்குப் பிறத்தற்குரிய கருவாகிய காரணம் இன்றியும் தன் திருவருளாகிய காரணத்தினின்றும் தனக்குரிய திருமேனிகளைத் தோற்றுவித்துக்கொள்ளும் இயல்புடையான் இறைவன்என்பது கருத்து. இதனைக் 'கருவினாலன்றியே கருவெலாம் ஆயவன்' எனவும் 'மலைமகள் பாகமாக அருள் காரணத்தின் வருவார்' எனவும்வரும் தொடர்களால் திருஞானசம்பந்தப் பிள்ளையார் குறிப்பிடுதல் காண்க.

[3] அருவம் உருவம் அருவுருவம் என்ற கூற்றிலடங்காது அப்பாற்பட்டுக் காணவியலாது மறைந்து நின்றருளவல்ல அப்பெருமானை நல்லாசிரியனது துணையாலன்றி யாவராலும் அடையமுடியாதென்பதாம். அருவன்றியே நின்ற என்பதற்கு, அருவ முதலியன அன்றி அவற்றுக்கு அப்பாற்பட்டு நின்ற எனப் பொருள்கொள்ளப்பட்டது.

செற்றிலென் சீவிலென் செஞ்சாந் தணியிலென்
மத்தகத் தேயுளி நாட்டி மறிக்கிலென்
வித்தகன் நந்தி விதிவழி யல்லது
தத்துவ ஞானிகள் தன்மை குன்றாரே. 2847

---

2847. தத்துவஞானிகள் ஆவார் இறைவனருளால் மெய்யுணர்வு கைவரப் பெற்றுத் தம்மையும் இறைவனையும் உணர்ந்தோர். அவர்களுடம்பிற் பிறர் கருவிகொண்டு பிளத்தலும் ஒவ்வொரு உறுப்பாகத்தனியே அறுத்துக் குறைத்தலும் தலையின்கண் உளியை யடித்துக் கொலை செய்தலும் ஆகிய துன்பங்களைச் செய்தாலும், செவ்விய நறுமணமுள்ள சந்தன முதலியவற்றை அவர்கள் உடம்பிற் பூசிப் போற்றுதலைச்செய்தாலும் இறைவன் ஆணையாகிய ஊழின் வழியென் றுணர்வதல்லது தம்தன்மை சிதையமாட்டார்கள் அப்பெரியோர்கள்.

செற்றுதல்—பிளத்தல், செதுக்குதல். சீவுதல்—அறுத்துக் குறைத்தல். மத்தகம்—தலை. மறித்தல்—அழித்தல். நந்தி—சிவன். விதி—ஊழ்.

''யாதோரிடத்தும் சிவத்தையே கண்டு யான் பிறர் என்று காண்குதலை யொழிந்து யாதொன்றுவரினும் எடுத்தவுடற்கு அடைத்த பொறி யளவே வந்து முடியாநிற்குமென்று தமது மனோவாக்குக்காயங்கள் அசையாமல் அடங்கிநிற்பர் மெய்யுணர்வுடையோர்'' எனத் (அவிரோ—7-செய்யுளுரை) திருப்போரூர்ச் சிதம்பர சுவாமிகள் இத்திருமந்திரத்திற்குக் கருத்துரை கூறினமை உணர்தற்குரியதாம்.

## அணைந்தோர் தன்மை *

ஒழிந்தேன் பிறவி, யுறவென்னும் பாசங்
கழிந்தேன், கடவுளும் நானுமொன் றானேன்,
அழிந்தாங் கினிவரும் ஆக்கமும் வேண்டேன்,
செழுஞ்சார் புடைய சிவனைக்கண் டேனே. 2958

---

2958. * வினைத்தொடர் பொழியப்பெற்ற சீவன்முத்தர்களது தன்மையினை உணர்த்தும் பகுதி.

செழுஞ்சார்புடைய சிவனைக்கண்டேன் (ஆதலால்) உறவென்னும் பாசம் கழிந்தேன், பிறவியொழிந்தேன், கடவுளும் நானும் ஒன்றானேன், அழிந்து ஆங்கு இனிவரும் ஆக்கமும் வேண்டேன் என வினைமுடிபு செய்க.

மலமாயாகன்மங்கள் மேவிடாமல் உயிர்கட்குச் சார்பாய்நின்று அருள் செய்யும் சிவபெருமானை அவனருளே கண்ணாகக்கொண்டு கண்டு மகிழ்ந்தேன். ஆதலால் பாசப்பற்றொழிந்து பிறவிப்பிணிப்பினின்றும் விடுபட்டேனாயினேன். இங்ஙனம் இப்பாசத் தொடர்பையறுத்தரு ளும் கடவுளது திருவருள் ஞானத்தோடுங்கூடி இரண்டற ஒற்றித்து நின்றேனாதலால் அழியுமியல்பினதாகிய இவ்வுலகியற் செல்வத்தைப் பொருளாக விரும்பேன் என்பதாம். இச் செய்யுளில் கடவுளும் நானும் ஒன்றானேன் என்றது, ஆன்மா தற்போதமாய் நிற்பதுஞ் செய்யாமல் தான் என்கின்ற முதல் கெடுவதுஞ் செய்யாமல் தற் போதங் கெட்டு அக்கடவுளோடுங்கூடி இரண்டறநின்று அனுபவித் தலை. "நவமாய செஞ்சுடர் நல்குதலும் நாமொழிந்து சிவமானவா பாடித் தெள்ளேணங் கொட்டாமோ" என்பது திருவாசகம்.

உ

திருச்சிற்றம்பலம்

# பதினோராந் திருமுறை

காரைக்காலம்மையார்

## திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகங்கள்

### பண்—நட்டபாடை

துத்தங் கைக்கிள்ளை விளரிதாரம்
உழையிளி யோசை[1]பண் கெழுமப்[2]பாடிச்
சச்சரி கொக்கரை தக்கையோடு
தகுணிதந் துந்துபி தாளம்வீணை
மத்தளங் கரடிகை வன்கைமென்தோல்
தமருகங் குடமுழா மொந்தை வாசித்
தத்தனை விரவினோ டாடுமெங்கள்
அப்பனிடந்திரு வாலங் காடே. 9

---

9. [1] இவற்றுடன் குரல் என்பதனை முதற்கண் சேர்த்துக் குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் என ஏழிசைகளையும் வழங்குதல் தமிழ்மரபு. கைக்கிளை கைக்கிள்ளை எனத்திரிந்து நின்றது.

[2] கெழும—பொருந்த. சச்சரி, கொக்கரை என்பன வாத்தியவகையில் இன்னவெனப் புலப்படவில்லை. தக்கை, தகுணிதம் என்பன அகப்புறமுழவுகள். துந்துபி—பேரிகை. மத்தளம், கரடிகை, குடமுழா என்பன அகமுழவுகள். தமருகம்—உடுக்கை. மொந்தை—ஒருவகைப் பறை. இவற்றுள் மத்தளம் என்ற சொல்லில் மத்து ஓசைப்பெயரென்றும் இசையிடனாகிய கருவிகட்கெல்லாம் இக்கருவி தளம் (அடிப்படை) ஆதலின் மத்தளமென்று பெயராயிற்று என்றும், கரடிகையென்பது கரடி கத்தினாற்போலும் ஓசையையுடைத்தாதலால் அப்பெயர் பெற்றது என்றும் அடியார்க்கு நல்லார் சிலப்பதிகார வுரையிற் குறிப்பிட்டுள்ளமை இவண் கருதத்தகுவதாம். அத்தனை விரவினோடு ஆடும் எங்கள் அப்பன்—அவ்வகைக் கருவிகள் கலந்த ஓசைக்கேற்பத் திரு நடஞ்செய்யும் எம் தந்தையாகிய பெருமான்.

### பண்—இந்தளம்

எட்டி யிலவம் ஈகை சூரை காரை படர்ந்தெங்குஞ்
சுட்ட சுடலை சூழ்ந்த கள்ளி சோர்ந்த குடர்கௌவப்
பட்ட பிணங்கள் பரந்த காட்டிற் பறைபோல் விழிகட்பேய்
கொட்ட முழவங் கூளி பாடக் குழக னாடுமே. 1

### திருவிரட்டை மணிமாலை

கழற்கொண்ட சேவடி காணலுற்
றார்தம்மைப் பேணலுற்றார்
நிழற்கண்ட போழ்தத்து நில்லா
வினை[1] நிக ரேதுமின்றித்
தழற்கண்ட சோதிச்செம் மேனியெம்
மானைக்கைம் மாமலர்தூய்த்
தொழக்கண்டு நிற்கிற்கு மோதுன்னி
நம்மடுந் தொல்வினையே.[2] 11

---

1. எட்டி, இலவு ஈகை, கள்ளி யென்ற மரங்களும் சூரை, காரை என்ற செடிகளும் நீரற்ற நிலத்தே உள்ளனவாகும். சோர்ந்தகுடர் கௌவப் பட்ட பிணங்கள் பரந்தகாட்டில்—சரிந்தகுடர்களை நரி முதலியன கௌவி யிழுத்துச் சிதைக்கப்பட்ட பிணங்கள் நிரம்பிய இடுகாட்டில். முழுவங்கொட்ட கூளிபாடக் குழகன் ஆடும் எனமுடிக்க. கூளி—சிவகணமாகிய பூதம். குழகன்—இளமையும் அழகும் உடையோன்.

11. [1] வீரக்கழலினைக் கொண்ட இறைவன் திருவடியினைக் கண்டு வழிபடு மியல்புடைய அடியார்களைப் போற்றியவரது உடம்பின் நிழலைக் கண்டபோதே எத்தகைய வினைகளும் நில்லா தொழிவன.

[2] அங்ஙனமாகவும் எம் சிவபெருமானைக் கையால் மலர்தூவி வழி படுதலைப் பார்த்தபின்னரும் நம்பால் நிற்கவல்லதோ நம்மை வருத்தும் பழையவினை, வருத்தாது என்றவாறு. துன்னி—நெருங்கி. நம் அடும்—நம்மை வருத்தும். நிற்கிற்குமோ—நிற்கவல்லதோ.

## அற்புதத் திருவந்தாதி

இறைவனே யெவ்வுயிருந் தோற்றுவிப்பான்[1] தோற்றி
இறைவனே யீண்டிறக்கஞ் செய்வான்[2]—இறைவனே
எந்தா யெனவிரங்கும் எங்கள்மேல் வெந்துயரம்
வந்தா லதுமாற்று வான்.[3] 5

வானத்தா னென்பாரு மென்கமற் றும்பர்கோன்
தானத்தா னென்பாருந் தாமென்க—ஞானத்தான்
முன்னஞ்சத் தாலிருண்ட மொய்யொளிசேர் கண்டத்தான்
என்னெஞ்சத் தானென்பன் யான். 6

---

5. [1] உயிர்கட்கு உடல்கருவிகளைத்தந்து படைக்கவல்லான்.

[2] இறக்கஞ் செய்வான்—மீள அவற்றை ஒடுக்குதலைச் செய்வான்.

[3] எங்கள்மேல் வெந்துயரம் வந்தால் அது மாற்றுவான் எனவே இவ்வுலகில் நிலைபெற வாழச்செய்து காப்பாற்றுவான் என்பது கருத்து. இங்ஙனங் கூறவே முத்தொழிற்கும் முதல்வன் இறைவனுகிய சிவனொருவனே எனத்தெளித்தருளினாராயிற்று.

6. ஞானத்தான்—ஞானமே திருமேனியாகவுடையான். முன் நஞ்சத்தால் இருண்ட மொய் ஒளிசேர் கண்டத்தான்—முன்பு தேவர்களைக் காப்பாற்றுதல் கருதி உண்ணப்பட்ட ஆலகாலமாகிய நஞ்சின் கருமையால் இருள்நிறமடைந்த மிக்க ஒளிசேர்ந்த மிடற்றினையுடையான்.

"நம்மால் அணுகவொண்ணுச் சேய்மையிடத்தான் என்று இறைவனைச் சொல்லுவார் சொல்லுக. யான் என் நெஞ்சமாகிய அணிய இடத்தின்கண் நின்று அருள் செய்பவனென்றே கூறுவேன்" என அம்மையார் கூறியது, இறைவனது அப்பாற்பட்ட நிலையை எண்ணி வழிபாட்டில் ஊக்கம்குன்றிய உலகத்தவரை அன்பர்க்கணியான் எனத் தெளிவித்து வழிபடச்செய்து உய்வித்தல் கருதியேயாம்.

அருளே யுலகெலாம் ஆள்விப்ப தீசன்
அருளே பிறப்பறுப்ப தானல்—அருளாலே
மெய்ப்பொருளை நோக்கும் விதியுடையேன்[1]
எஞ்ஞான்றும்
எப்பொருளு மாவ தெனக்கு. 9

அறிவானுந் தானே[1] அறிவிப்பான் தானே
அறிவா யறிகின்றான் தானே[3]—அறிகின்ற
மெய்ப்பொருளுந் தானே விரிசுடர்பார் ஆகாயம்
அப்பொருளுந் தானே அவன். 20

---

9. இறைவன் திருவருளே எல்லாவற்றிற்கும் பற்றுக்கோடா மென்பது இத்திருப்பாடலின் கருத்தாகும்.

[1] சிற்றறிவாயுள்ள ஆன்மாவைப் பேரறிவாகிய சிவன் அறிவிக்க அம்முதல்வனது திருவருளாலேயே உயிர்கள் அவனைக்கண்டு வழிபடுதல் கூடும் ஆதலால் "அருளாலே மெய்ப்பொருளை நோக்கும் விதியுடையேன்" என அம்மையார் குறிப்பிட்டருள்வாராயினர். இவ்வாறே "காண்பாரார் கண்ணுதலாய்க் காட்டாக்காலே" (6—95—3) என ஆளுடைய அரசும் "அவனருளாலே அவன் தாள் வணங்கி" (திருவாசகம் சிவபுராணம்) எனத் திருவாதவூரடிகளும் குறிப்பிட்டருளுதல் காண்க.

20. [1] அறியும் இயல்புடைய ஆன்மாவேயாய்க் கலந்து நிற்பவனும் அவனே.

[2] கண்ணும் அதற்கு விளக்கந்தரும் ஞாயிறும்போலப் பொருட்டன்மையால் வேறுநின்று உயிர்க்குப் பொருள்களின் இயல்பினை அறிவித்து நிற்பவனும் அவனே.

[3] கண்ணினது ஒளியும் அதனோடு உடன் நின்றுகாணும் உயிரின் அறிவும்போல உயிர்க்குயிராய்ப் பிரிப்பின்றி உடன்நின்று காட்டிக் காண்பவனும் அவனே யென்பதாம்.

இறைவன் எல்லாவற்றினுங் கலந்துநிற்றலால் உலகெலாம் ஆகியும் அங்ஙனங் கலந்து நிற்பினும் அவற்றின் தன்மை தனக்கெய்தலின்றிப் பொருட்டன்மையால் வேறுபட்டு நிற்றலால் வேறாகியும் உயிர்க்குயிராய்க் காட்டி உடன் நிற்றலால் உடனாகியும் இவ்வாறு ஒற்றித்து நிற்கும் மூவகை நிலையினையும் இத்திருப்பாடல் விளக்குதல் காண்க. இக்கருத்தினை மெய்கண்டதேவதம்பிரானர் "அவையே தானேயாய் ...... நீக்கமின்றி நிற்குமன்றே" யெனவும், அருணந்தி சிவனர் உலகெலாமாகி வேறாய் உடனுமாய்......நின்றனன்" எனவும் விரித்துரைத் துள்ளமை யுணர்க.

மகிழ்தி மடநெஞ்சே மானுடரில் நீயுந்
திகழ்தி பெருஞ்சேமஞ் சேர்ந்தாய்[1]—இகழாதே
யாரென்பே யேனும் அணிந்துழல்வார்க் காட்பட்ட
பேரன்பே யின்னும் பெருக்கு.[2] 31

நூலறிவு பேசி நுழைவிலா தார்திரிக[1]
நீல மணிமிடற்றான் நீர்மையே—மேலுலந்த[2]
தெக்கோலத் தெவ்வுருவாய் எத்தவங்கள் செய்வார்க்கும்
அக்கோலத் தவ்வுருவே யாம்.[3] 33

---

31. [1] மடநெஞ்சே நீயும் மானுடரில் திகழ்தி (ஆதலின்) பெருஞ் சேமம் சேர்ந்தாய் (அதுகருதி) மகிழ்தி—மடமை பொருந்திய மனமே நீயும் மக்கட் பிறப்பினருள் ஒருவர்க்குரிய மனமாக விளங்குகின்றாய், ஆதலால் ஏனைச் சிற்றுயிர்களின் நெஞ்சம் போலன்றிப் பெரிய பாதுகாவலைப் பெற்றனையாயினை, இவ்வுயர்நிலை உனக்கெய்தியது குறித்து மகிழ்வாயாக.

[2] யார் என்பேயேனும் இகழாதே அணிந்து உழல்வார்க்கு ஆட்பட்ட பேரன்பே இன்னும் பெருக்கு—எவருடைய எலும்பேயாயினும் இகழ்ச்சி செய்யாது அணிந்து ஆடுவாராகிய இறைவனுக்குத் தொண்டு செய்தற்குரிய பேரன்பினையே மேன்மேலும் பெருக்கிக் கொள்வாயாக; என்றது, அறிவு வளர்ச்சிக்குப் பாதுகாவலாகிய மக்கட்பிறவி யுள்ளபொழுதே இறைவன்பாற் கொள்ளத்தகும் உயிர்ப்பண்பாகிய அன்பினை வளர்த்து உய்திபெறுக என அறிவுறுத்தியவாறாம்.

33. [1] நுழைவு இலாதார் நூலறிபேசித்திரிக—நுண்ணறிவு வாய்க்கப் பெறாதார் வெறும் நூற்புலமையினையே கருவியாகக்கொண்டு பலவும் பேசித்திரிவாராக; வாழ்க்கைக்குப் பயன்படாத வெறும் பேச்சு கருதத்தக்கதன்று என்பது குறிப்பு.

[2] நீலமணிபோலும் கண்டத்தினையுடைய இறைவனது பெருமையே தனக்கு மேலாவது ஒன்றுமின்றி யுயர்ந்ததாகும்.

மேல் உலந்தது—தனக்கு மேலாம் நிலைமையற்றது.

[3] அன்பால் நினைந்து வழிபடும் அடியார்களுக்கு அவரவர் நினைந்த திருமேனியொடு வெளிப்பட்டுத் தோன்றியருள்வான் என்பது கருத்து. "ஆரொருவர் உள்குவாருள்ளத்துள்ளே அவ்வுருவாய் நிற்கின்ற அருளுந்தோன்றும்" என நாவுக்கரசரும் "எவ்வுருவில் யாரொருவர் உள்குவார் உள்ளத்துள், அவ்வுருவாய்த் தோன்றியருள்கொடுப்பான்" எனச் சேரமான்பெருமாளும் இக்கருத்தினை விளக்குதல் காண்க.

ஒருபால் உலகளந்த மாலவனாம் மற்றை
ஒருபால் உமையவளாம் என்றால்—இருபாலும்
நின்னுருவ மாக நிறந்தெரிய மாட்டோமால்
நின்னுருவோ மின்னுருவோ நேர்ந்து. 41

கண்டெந்தை யென்றிறைஞ்சிக் கைப்பணியான் செய்யேனேல்
அண்டம் பெறினும் அதுவேண்டேன்—துண்டஞ்சேர்
விண்ணாளுந் திங்களாய் மிக்குலகம் ஏழினுக்குங்
கண்ணாளா ஈதென் கருத்து. 72

ஐயடிகள் காடவர்கோன் நாயனார் அருளிய

**க்ஷேத்திர வெண்பா**

குந்தி நடந்து குனிந்தொருகை கோலூன்றி
நொந்திருமி ஏங்கி நுரைத்தேறி—வந்துந்தி
ஐயாறு வாயாறு பாயாமுன் நெஞ்சமே
ஐயாறு வாயால் அழை.[2] 3

---

41. ஒரு பக்கத்தில் திருமாலும் மற்றொரு பக்கத்தில் உமாதேவியும் சிவபெருமானது திருமேனியைச் சார்ந்துள்ளமையால் அப்பெருமானது திருமேனியின் செம்மை நிறத்தை முற்றத் தெரிந்துகொள்ள வியலவில்லை யென்பதாம். இத்திருமேனியின் இயல்பு 'மாதொருபாலும் மாலொருபாலும் மகிழ்கின்ற நாதர்' (1—97—2) எனத் தேவாரத்துங் குறிக்கப்படுதல் அறிக.

72. 'விண் ஆளும் துண்டம் சேர்திங்களாய், மிக்க உலகம் ஏழினுக்கும் கண்ணாளா' என்ற தொடரை முதலிற் கூட்டிப் பொருள்கொள்க.

வானிடத்தே யியங்கும் பிறைத்திங்களையணிந்த பெருமானே, பெரிய உலகம் ஏழினையும் கண்போன்று பாதுகாக்கவல்ல கடவுளே, நின்னை அருளாற் காணப்பெற்று, என் தந்தையே யென்று வணங்கி என்னாலியன்ற கைத்தொண்டுகளைச்செய்து மகிழேனாயின், தேவவுலக வாழ்வாகிய உயர்ந்தபதவி தானே கிடைத்தாலும் அதனை ஒரு பொருளாக விரும்பமாட்டேன் இதுவே எனது உள்ளக்கருத்தாகும் என அம்மையார் இறைவனை நோக்கிக் கூறிய இத்திருப்பாடலில் "கூடும் அன்பினிற் கும்பிட லேயன்றி, வீடும் வேண்டா விறலின்" விளங்கிய அடியார் இயல்பு நன்கு புலனாதல் காண்க.

3. [2] ஐ—கோழை. வாயாறு—வாய்வழியே. கோழை ஆறுபோல் வாய்வழியே பாய்வதற்கு முன் ஐயாறு என்னுந் திருத்தலத்தினை வாயாற் சொல்லி வழிபட்டு உய்வாயாக.

என்னெஞ்சே யுன்னை யிரந்தும் உரைக்கின்றேன்
கன்னஞ்செய் வாயாகிற்[1] காலத்தால்—வன்னெஞ்சேய்
மாகம்பத் தானை யுரித்தானை[2] வண்கச்சி
ஏகம்பத் தானை யிறைஞ்சு. 20

சேரமான்பெருமாள் நாயனார்

**பொன்வண்ணத்தந்தாதி**

நெஞ்சந் தளிர்விடக் கண்ணீர் ததும்ப முகமலர
அஞ்செங் கரதலங் கூம்ப அட்டாங்கம் அடிபணிந்து
தஞ்சொல் மலரால் அணியவல் லோர்கட்குத்
தாழ்சடையான்
வஞ்சங் கடிந்து திருத்திவைத் தான்பெரு வானகமே. 11

---

20. [1] செவிகொடுத்துக் கேட்பாயானால். கன்னம்—காது.

[2] வன்னெஞ்சு ஏய் மாகம்பத்து ஆனை உரித்தானை—வலிய நெஞ்சத்தை யுடைய மிக்க நடுக்கத்தைத்தரும் யானையை உரித்த பெருமானை. கம்பம்—நடுக்கம். கச்சி என்பது ஊர்ப்பெயர். ஏகம்பம் என்பது கோயிற்பெயர்.

11. வழிபட வேண்டும் என்னும் ஊக்கத்தால் நெஞ்சம் தளிர்க்க, கண்களினின்றும் அன்புக்கண்ணீர் ததும்பிவழிய, முகம் நப்ப த்தால் மலரின் பொலிவுடையதாக, அழகிய சிவந்த கைகளாகிய மலர்கள் குவிய அட்டாங்கமாக வீழ்ந்து திருவடிகளை வணங்கித் தம் சொற்களாகிய மலர்களால் அருச்சித்து வழிபடவல்ல அடியார்கள் தங்குதற்கென்றே, தாழ்சடையானாகிய இறைவன் வானோர்க்கும் உயர்ந்த உலகமாகிய நன்னிலையினை வஞ்சனைமுதலாயினவின்றித் தூய்மையுடையதாகத் திருத்தியமைத்தான் என்பது இச்செய்யுளின் பொருளாகும்.

பொய்யா நரகம்[1] புகினுந் துறக்கினும் போந்துபுக்கிங்
குய்யா வுடம்பினொ[2] டோர்வ நட்பப் பறப்பவென்று
நையா விளியினும்[3] நானிலம் ஆளினும் நான்மறைசேர்
மையார் மிடற்றான்[4] அடிமற வாவரம் வேண்டுவனே. 98

வேண்டிய நாட்களிற் பாதியுங் கங்குல், மிகஅவற்றுள்
ஈண்டிய வெந்நோய், முதலது பிள்ளைமை, மேலதுமூப்
பாண்டின அச்சம் வெகுளி அவாஅழுக் காறிங்ஙனே
மாண்டன, சேர்தும் வளர்புன் சடைமுக்கண்
மாயனையே. 99

---

98. [1] பொய்யா நரகம் — துன்புறுத்துதலில் தப்பாத நரகம்; அன்றிப் பொய்யாம் நரகம் எனப்பிரித்துப் பொய்மை விரவிய செயல்களின் பயனாய் அநுபவித்தற்குரிய நரகம் எனப் பொருள்கூறினும் பொருந்தும்.

[2] உய்யா உடம்பு — பிழைத்தற்கேற்ற காவலில்லாத உடம்பு; என்றது மக்களுடம்பல்லாத மற்றைய உயிர்களின் உடம்புகளை.

[3] வருந்திக் கெட்டாலும்.

[4] நான்மறைசேர் மிடற்றான், மையார்மிடற்றான், எனத் தனித்தனி கூட்டுக. மை — நஞ்சக்கறை. இன்பநிலையினுந் துன்பநிலையி னும் இறைவன் திருவடியை மறவாது போற்றும் வரத்தினையே தமக்கு அருளுதல் வேண்டும் எனச் சேரமான் பெருமாள் இறைவனைப் போற்றிய திறம் நினைந்து போற்றுதற்குரியதாம்.

99. மக்கள் விரும்பி வாழும் வாழ்நாளிற் பாதிப்பகுதி உறக்கத்திற்குரிய இரவுப்பொழுதாய்ப் பயனின்றிக் கழிகின்றது. எஞ்சிய பாதி நாட்களில் நெருங்கி வருத்தும் கொடிய நோய்களும் ஒன்றுமறியா இளமையும் எதுவும் செய்ய முடியாத முதுமையும் விரவி வருத்து வனவாம். அன்றியும் அப்பகுதியில் அச்சம் வெகுளி அவா பொறாமை என இங்ஙனமாகத் தீக்குணங்கள் பல செறிந்து நிறைவனவாம். ஆதலால் இங்ஙனம் பயனின்றிக் கழியும் பிறவியிற் சாராது முக்கட் பகவனாகிய இறைவனையே பற்றுக் கோடாக அடைந்து வழிபட்டு உய்வோம் என்பது இதன் பொருளாகும்.

**திருவாரூர் மும்மணிக்கோவை**

மனமா லுறுதேமற் றென்செய்யும் வாய்ந்த
கனமால் விடையுடையோன் கண்டத்—தினமாகித்
தோன்றினகார் தோன்றிலதேர் சோர்ந்தனசங் கூர்ந்தனபீர்
கான்றனநீர் ஏந்திழையாள் கண். 2

நக்கீரதேவ நாயனுர்

**கைலைபாதி காளத்திபாதி அந்தாதி**

வாளா பொழுது கழிக்கின்றார் மானுடவர்
கேளார்கொல் அந்தோ கிறிபட்டார்—கீளாடை
அண்ணற் கணுக்கராய்க் காளத்தி யுள்நின்ற
கண்ணப்ப ராவார் கதை. 12

நின்னியல்பை யாரே யறிவார் நினையுங்கால்
மன்னியசீர்க் காளத்தி மன்னவனே—நின்னில்
வெளிப்படுவ தேழுலகும் மீண்டே யொருகால்
ஒளிப்பதுவு மானுல்[1] உரை. 46

---

2. கார்ப்ப நவங் கண்டு ஆற்றுளாகிய தலைமகளைக் கண்ட தோழி ஆற்றுளாய்க் கூறியது. விடையுடையோனுகிய இறைவனுடைய நீலகண்டத்துக்கு ஒப்பாகிக் கார்தோன்றின. தலைவன் தேர் தோன்றில. சங்கு சோர்ந்தன. பீர் ஊர்ந்தன. ஏந்திழையாள் கண் நீர்கான்றன. (ஆதலின) மனம் மாலுறுதே என்செய்யும் என வினை முடிவு செய்க.

கார்—மேகம். சங்கு—வளையல். சோர்ந்தன—கழன்றன. பீர்—தலைவன் பிரிவினுல் உண்டாகுந் தேமல். நீர் கான்றன—நீரைச் சொரிந்தன. மாலுறுதல்—மயக்கமடைதல்.

12. வாளா—வீணுக

கிறிபட்டார்—பிறரது மாயத்துட்பட்டு மயங்கினுர். கிறி—மாயம்.

அணுக்கர்—நெருங்கித் தொண்டு செய்வோர்.

"மானுடவர் கண்ணப்பராவார் கதை கேளார்கொல் வாளா பொழுது கழிக்கின்றார் அந்தோ" என இரங்கியவாறும்.

46. [1] நின்னை யாதாரமாகக் கொண்டு நின்னிடத்தினின்றும் வெளிப்பட்ட ஏழுலகமும் மீண்டும் ஒருசேர நின் கண்ணேயே ஒடுங்குமாயின் நினையுங்கால் நின் இயல்பை அறிவார் யாரே? உரை என இயைத்துரைக்க.

இவரே முதற்றேவர் எல்லார்க்கும் மிக்கார்
இவரல்ல ரென்றிருக்க வேண்டாம்—கவராதே[1]
காதலித்தின் றேத்துதிரேற் காளத்தி யாள்வார்நீர்
ஆதரித்த தெய்வமே யாம்.[2] 72

மற்றும் பலபிதற்ற வேண்டாம் மடநெஞ்சே
கற்றைச் சடையண்ணல் காளத்தி—நெற்றிக்கண்
ஆரா அமுதின் திருநாமம் அஞ்செழுத்துஞ்
சோராமல் எப்பொழுதுஞ் சொல்.[1] 100

**திருஈங்கோய்மலையெழுபது.**

கல்லாக் குரங்கு பளிங்கிற் கனிகாட்ட
எல்லாக் குரங்கும் உடனீண்டி—வல்லே
இருந்துகிராற் கற்கிளைக்கும் ஈங்கோயே[1] மேனிப்
பொருந்தஅராப் பூண்டான் பொருப்பு. 29

---

72. [1] கவராது—இவர்தேவர் அவர்தேவர் என்று இருபாற்பட்டு ஐயுறாமல்.

[2] அன்பு கூர்ந்து எத்துவீர்களானால் காளத்தி யிறைவர் நீங்கள் விரும்பி யேத்திய தெய்வம் எதுவோ அத்தெய்வமாக வந்து அருள்புரிவர் என்பது கருத்து. "யாதொரு தெய்வங்கொண்டீர் அத்தெய்வமாகி யாங்கே மாதொரு பாகனார்தாம் வருவர்" என அருணந்தி சிவனாரும் இக்கருத்தினைத் தெளிவித்து விளக்கினமை காண்க.

100. [1] நெஞ்சமே இறைவனது திருப்பெயராகிய திருவைந்தெழுத்தினைத் தவறாமல் எப்பொழுதும் சொல்வாயாக. இத்திருப்பெயரைத் தவிர மற்றும் பயனில்லாத சொற்கள் பலவற்றையும் சொல்லாதொழிக என நெஞ்சத்திற்கு அறிவுறுத்தினமை யுணர்க.

29. [1] உலகியற் பொருள்களின் இயல்பினைக் கற்றுணராத குரங்கொன்று, பளிங்குக் கல்லில் தோன்றிய பழத்தின் சாயலைப் பார்த்து உண்ணத் தக்க பழம் என்று நினைத்துத் தன் இனமாகிய குரங்குகளுக்குக் காண்பிக்க, அதனைக் கண்டு எல்லாக் குரங்குகளும் ஒருசேரத்திரண்டு கூடியிருந்து, விரைந்து தம் கை நகங்களால் அப்பளிங்குக் கல்லினைக் கிளைத்துத் தோண்டிப் பார்க்கும் வளமுடையது ஈங்கோய்மலை யென்றவாறு. அரா—பாம்பு. பொருப்பு—மலை.

சந்தனப்பூம் பைந்தழையைச் செந்தேனில் தோய்த்தியானை
மந்தண் மடப்பிடியின்[1] வாய்க்கொடுப்ப—வந்ததன்
கண்களிக்கத் தான்கலிக்கும்[2] ஈங்கோயே தேங்காதே
விண்களிக்க[3] நஞ்சுண்டான் வெற்பு. 38

வழுகிதழ்க் காந்தள்மேல் வண்டிருப்ப ஒண்டீ
'முழுகியதென் றஞ்சிமுது மந்தி—பழகி
எழுந்தெழுந்து கைநெரிக்கும்[1] ஈங்கோயே திங்கட்
கொழுந்தெழுந்த செஞ்சடையான் குன்று. 70

---

38. 1 மந்தண் மடப்பிடி—மென்மையும் அழகும் உடைய பெண் யானை.

2 கலிக்கும்—மகிழும்.

3 தேங்காது விண்களிக்க—மனங்கலங்குதலின்றி விண்ணகத்தார் மகிழ. நஞ்சுண்டான் வெற்பு ஈங்கோயே என முடிக்க.

70. 1 மெல்லிய இதழையுடைய செங்காந்தள் மலரின்மேல் வண்டு தங்கியிருத்தலைக் கண்ட முதியமந்தி செங்காந்தளைத் தீயென்று எண்ணி ஒளியுடைய தீயில் அவ்வண்டு அகப்பட்டுத் துன்புறுகின்றதாகக் கருதி அவ்வண்டினை உறவாக எண்ணி அதனது துன்பத்தை நீக்க மாட்டாமையால் எழுந்தெழுந்து சென்று தன் கையை நெரித்துக் கொண்டு வருந்தும் என்பதாம்.

வழுகு—மென்மை. மந்தி—பெண்குரங்கு. பழகி—உறவுகொண்டு. கை நெரித்தல் அல்லற்படுவார் செயல்.

'குழலிசைய வண்டினங்கள் கோழிலைய செங்காந்தட் குலைமேற்பாய
அழலெரியின் மூழ்கினவால் அந்தோ அளிய என்று அயல்வாழ் மந்தி
கலுழ்வன போல் நெஞ்சயர்ந்து கல்லருவி தூஉம்
நிழல்வரை நன்னாடன் நீப்பனோ வல்லன்' (யாப்பருங்கல மேற்கோள்)
எனவரும் செய்யுள், இவ் வெண்பாவின் கருத்தினைத் தழுவியுள்ளமை காணலாம்.

கபிலதேவ நாயனார்

## மூத்தநாயனார் திருவிரட்டை மணிமாலை.

### வெண்பா

திருவாக்குஞ்[1] செய்கருமங் கைகூட்டுஞ்[2] செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கும்[3]—உருவாக்கும்[4]
ஆதலால் வானோரும் ஆனை முகத்தானைக்
காதலாற் கூப்புவர்தங் கை.[5] 1

### கட்டளைக்கலித்துறை

நல்லார் பழிப்பி லெழிற்செம் பவளத்தை நாணநின்ற
பொல்லா முகத்தெங்கள் போதகமே[1]புர மூன்றெரித்த
வில்லான் அளித்த விநாயகனே என்று மெய்ம்மகிழ
வல்லார் மனத்தன்றி மாட்டாள் இருக்க[2] மலர்த்திருவே. 20

---

1. [1] செல்வத்தை அளிப்பான்.

[2] செய்யத்தக்க நற்செயல்களை முடித்தருளுவான்.

[3] நன்மைதருஞ் செஞ்சொற்களாற் பெருகிய சொல்வன்மையையும் பெருமையினையுந் தந்தருளுவான்.

[4] அழகினையும் பொருந்த அளிப்பான்.

ஆக்கும் கூட்டும் பெருக்கும் ஆக்கும் என்னும் பயனிலைகட்கு ஆனை முகத்தான் என்னும் எழுவாயை வருவித்துரைக்க.

[5] தம்கை கூப்புவர் என மாற்றிப் பொருள் கூறுக.

20. [1] பழிக்கப்படாத அழகிய செம்மை நிறமுடைய பவளத்தையும் தன் அழகினால் நாணும்படி செய்த உளியாற் பொள்ளப்படாத முகத்தையுடைய எங்கள் யானைமுகப்பெருமானே.

பொல்லா—உளியாற் பொளியப்படாத. போதகம்—யானை.

[2] இருக்க மாட்டாள் என இயைத்துரைக்க.

## சிவபெருமான் திருவிரட்டை மணிமாலை

### வெண்பா

அடியோமைத் தாங்கியோ ஆடை யுடுத்தோ
குடியோம்ப மாநிதியங் கொண்டோ—பொடியாடும்
நெற்றியூர் வாளரவ நீள்சடையாய் நின்னூரை
ஒற்றியூ ராக்கிற் றுரை. 15

### கட்டளைக்கலித்துறை

இயலிசை நாடக மாயெழு வேலைக ளாய்[1]வழுவாப்
புயலியல் விண்ணொடு[2] மண்முழு தாய்ப்பொழு தாகிநின்ற
மயிலியன் மாமறைக் காடர்வெண் காடர்வண் தில்லைமல்கு
கயலியல் கண்ணிபங் காரன்பர் சித்தத் தடங்குவரே.[3] 24

---

15. இறைவன் எழுந்தருளியவூர்களில் திருவொற்றியூரும் ஒன்றாகும். ஒற்றியென்றால் அடைமானம் என்பது பொருளாம். அங்ஙனங் கொள்ளவே ஒற்றியூர் என்பது ஒருவர்பால் கடனுக்கு அடைமானமாக ஒற்றிவைத்த ஊர் எனப் பொருள்படும். தன்னைச் சார்ந்தோரை உணவளித்துப் பாதுகாத்தற் பொருட்டோ அன்றித் தான் ஆடை முதலியன வுடுத்து நன்றாக வாழ்தற் பொருட்டோ அன்றித் தாழ்ந்த தன் குடும்ப நிலையை யுயர்த்துப் பாதுகாத்தற் பொருட்டோ இவற்றுள் ஏதாவதொரு காரணங்கருதித் தன்னிடத்துள்ள பொருளை ஒற்றிவைத்துக் கடன் வாங்குதல் உலகத்தாரியல்பாம். மேற்குறித்த காரணங்களுள் எந்தக்காரணங்கருதி நின் ஊரை ஒற்றியூராக்கினை யெனக் கபிலதேவ நாயனார் இச்செய்யுளால் இறைவனை வினவுந் திறம் உணர்ந்து இன்புறுதற்குரியதாம்.

24. [1] ஏழு கடல்களாய்.

[2] தவறாது பெய்யும் மேகம் இயங்குகின்ற விசும்புடன்.

[3] உலகத்து எல்லாப் பொருள்களாகவும் விரிந்து தோன்றுகின்ற கயற்கண்ணி பங்காளனாகிய இறைவன் அன்பினால் தன்னை வழிபடும் அடியார்களின் உள்ளத்தே அடங்குவர் என்பதாம். பங்கர் பங்கார் என நீண்டது.

பரணதேவ நாயனார்

## சிவபெருமான் திருவந்தாதி

ஈரம் உடைய இளமதியஞ்[1] சூடினீர்
ஈர முடைய சடை[2]யினீர்—ஈர
வருங்கால மாயினீர்[3] இவ்வுலக மெல்லாம்
வருங்கால மாயினீர் வாழ்வு.[4] 74

தீயான மேனியனே செம்பவளக் குன்றமே
தீயான[1] சேராமற் செய்வானே—தீயான
செம்பொற் புரிசைத் திருவாரூ ராய்என்னைச்
செம்பொற் சிவலோகஞ் சேர். 98

---

74. [1] குளிர்ச்சியினையுடைய பிறைத்திங்கள்.

[2] கங்கையாறு தோய்தலால் நனைந்த சடை.

[3] நாளென்று வரையறுக்கப்படுவதொரு பொருள்போல மயக்கி நின்று உயிர்களின் உடம்பினை ஈர்ந்து (பிளந்து) செல்கின்ற வாளாகிய காலமாய் விளங்குகின்றவர் நீரேயென்பதாம். காலம் வாளாதலை 'நாளெனவொன்று போற்காட்டியுயிரீரும் வாளதுணர்வார்ப்பெறின்' (334)என்ற குறளுக்குப் பரிமேலழகர்கூறிய உரையான் உய்த்துணர்க. இறைவன் காலமாய் நின்று உடம்பினை நீக்கி உலகு உயிர்களைத் தன்கண் ஒடுக்குமியல்பினன் என்பது, "ஐந்தலையுயரிய அணங்குடையருந்தலை, மைந்துடையொருவனும் மடங்கலும் நீ" என வரும் பரிபாடற் பகுதிக்கு "ஐந்து தலையைத்தோன்றுவித்த அணங்குடை அருந்திறலையுடைய......ஈசன், மடங்கல் — அவனாகிய உலகுயிர்களினது ஒடுக்கம்" எனப் பரிமேலழகர் கூறிய உரையால் விளங்குதலறிக.

[4] நும்மிடத்து ஒடுங்கிய இவ்வுலகமெல்லாம் மீளவும் நும்மிடத்தினின்றும் முறையே தோன்றியுளதாங்காலத்து எல்லாவுயிர்கட்கும் வாழ்க்கை நலங்களை நுகரச்செய்பவரும் நீவிரே எனப் பரணதேவ நாயனார் இறைவனைப்போற்றிய திறம் நினைக. வருங்காலம் வாழ்வாயினீர் என இயைத்துரைக்க.

98. தீயான— தீய வினைகள்.

இளம்பெருமானடிகள்

**சிவபெருமான் திருமும்மணிக்கோவை.**

வேந்துக்க மாக்கடற் சூரன்முன் னுள்பட வென்றி கொண்ட
சேந்தற்குத் தாதை[1]யிவ் வையம் அளந்த தெய்வத் திகிரி
ஏந்தற்கு மைத்துனத் தோழ[2]னின் றேன்மொழி வள்ளி
யென்னுங்
கூந்தற் கொடிச்சிதன் மாமன்[3]வெம் மால்விடைக்
கொற்றவனே. 18

---

18. [1] வேந்து உக்க—வேந்தர்களையெல்லாம் வென்று நிலைகுலைத்த. மாக் கடற் சூரன் — பெரிய கடலை அரணாகவுடைய சூரபதுமன். பட—இறக்க. சேந்தற்குத்தாதை—முருகனுக்குந் தந்தை. சேந்தன் என்பது முருகனுக்குரிய திருப்பெயர்களுள் ஒன்று.

[2] இவ்வுலகத்தைத் தனது ஓரடியால் அளந்த தெய்வத்தன்மை வாய்ந்த சக்கரப்படையை யுடைய தலைவனாகிய திருமாலுக்கு மைத்துனன் எனப் பாராட்டத்தகுந்தோழன். திருமால் தன் தங்கையாகிய உமையம்மையை இறைவனுக்கு மணஞ்செய்து கொடுத்தமையால் அவனுக்கு மைத்துனத் தோழன் ஆயினன் என்பது புராண வரலாறு. திகிரி — சக்கரப்படை. ஏந்தல் — ஆடவரிற்சிறந்தோன்; என்றது புருடோத்தமன் என்றவாறும்.

[3] கொடிச்சி என்பது குறிஞ்சிநிலத் தலைவி பெயர். வள்ளியம்மையார் மலைவாணர் மகளாதலின் கொடிச்சியென அழைக்கப் பெறுவாராயினர். தன் கணவனாகிய முருகனையீன்றவன் இறைவன் ஆதலின் வள்ளி யம்மையார்க்கு மாமன் எனப் பெற்றான். வெம்மால் விடைக் கொற்றவன் என்பதனை எழுவாயாக்கித் தாதை, தோழன், மாமன் என்பவற்றைத் தனித்தனிப் பயனிலையாக்கி முடிக்க.

அதிராவடிகள்.

## மூத்த பிள்ளையார் திருமும்மணிக்கோவை.

ஏறு தழீஇயவெம் புத்தேள் மருக[1]வெங் குந்தவள
நீறு தழீஇயவெண் தோளவன் செல்வ[2]வண் டுண்ணநெக்க
ஆறு[3]தழீஇய கரதலத் தையநின் றன்னையல்லால்
வேறு தழீஇத் தொழுமோ வணங்காத வியன்சிரமே. 21

பட்டணத்துப் பிள்ளையார்

## கோயில் நான்மணிமாலை

நானே பிறந்து பயன்படைத் தேனயன் நாரணனெங்
கோனே யெனத்தில்லை யம்பலத்தேநின்று கூத்துகந்த
தேனே[1] திருவுள்ள மாகியென் தீமையெல் லாமறுத்துத்
தானே புகுந்தடி யேன்மனத் தேவந்து சந்திக்கவே. 10

---

21. [1] நப்பின்னையை மணத்தல் வேண்டிக் கண்ணபிரான் ஆயர் விடுத்த கொல்லேற்றினைத் தழுவினர் என்பது தமிழ்நாட்டில் வழங்கும் வரலாறாதலின் 'ஏறு தழீஇய வெம்புத்தேள்' எனத் திருமாலைச் சிறப்பித்துப் போற்றினர். திருமாலுக்குத் தங்கையாகிய உமையம்மையார் ஈன்ற புதல்வர் விநாயகர் ஆதலால் அவர் திருமாலுக்கு மருகன் என அழைக்கப்பெற்றார்.

[2] திருமேனியெங்கும் வெண்ணீற்றினைப் பூசிய எட்டுத் திருத்தோள்களையுடைய சிவனுடைய புதல்வனே.

[3] வண்டுகள் படிந்து உண்ண நெகிழ்ந்தோடும் ஆறு; என்றது மதநீர்ப் பெருக்கை.

10 [1] தேன் என்றது ஈண்டு இறைவனை. 'தினைத்தனை யுள்ளதோர்' எனத் தொடங்குந் திருவாசகத்தில் 'அனைத்தெலும்பு உள் நெக ஆனந்தத் தேன் சொரியும் குனிப்புடையான்' எனத் திருவாதவூரடிகள் போற்றினமை இங்கு நினைவு கூர்தற்குரியது. இறைவன் தானே புகுந்து அடியேன் மனத்தே வந்து சந்திக்கப்பெற்றதனால் நானே பிறந்த பயன் படைத்தேன் என வினை முடிபு கூறுக.

### திருக்கழுமல மும்மணிக்கோவை

போதும் பெறாவிடிற் பச்சிலையுண்டு புனலுண் டெங்கும்
ஏதும் பெறாவிடில் நெஞ்சுண்டன் றேயிணை யாகச்செப்புஞ்[1]
சூதும்[2] பெறுமுலை பங்கர்தென் தோணி புரேசர்வண்டின்
தாதும் பெறாத அடித்தாமரை[3] சென்று சார்வதற்கே. 12

### திருவிடைமருதூர் மும்மணிக்கோவை

அன்றென்றும் ஆமென்றும் ஆறு சமயங்கள்
ஒன்றொன்றொ டொவ்வா துரைத்தாலும் — என்றும்
ஒருதனையே நோக்குவார் உள்ளத் திருக்கும்
மருதனையே நோக்கி வரும். 17

---

12. [1] செப்பு — குடம்.

[2] சூது — சூதாடு கருவி.

[3] வண்டினையும் தாதாகிய மகரந்தப் பொடியையும் பெறாத அடித் தாமரை யெனவே உலகிலுள்ள தாமரைப்பூ அல்லாமை புணர வைத்தார். திருவருளாகிய திருவடி என்பது குறிப்பு.

17. நீவிர் கூறுவது மெய்யன்று யாம் கூறுவதே உண்மையாம் என அறுவகைச் சமயத்தவர்களும் தம்முள் பொருள் வகையில் மாறு கொண்டு வேறுபடுவாராயினும் அவர்கள் தம் மனவிருப்பத்திற்கேற்பச் சொல்லும் முதற்பொருளாகிய இறைவன் இயல்பும் அவர்தாம் செய்யும் வழிபாடுகளும் ஒருமையுடையார் உள்ளத்தில் எழுந்தருளிய இடைமருதீசனாகிய முதல்வனையன்றி வேறு சார்தற்கு இடமின்மையால் அப்பெருமானையே யடையும் என்பது இத் திருப்பாட்டின் பொருளாகும்.

## திருவேகம்பமுடையார் திருவந்தாதி

உள்ளம் பெரியரல் லாச்சிறு மானுடர் உற்றசெல்வங்
கள்ளம் பெரிய சிறுமனத் தார்க்கன்றிக் கங்கையென்னும்
வெள்ளம் பெரிய சடைத்திரு வேகம்பர் விண்ணரணம்
தள்ளம் பெரிகொண் டமைத்தா[1]ரடியவர் சார்வதன்றே. 29

நம்பியாண்டார் நம்பி

## திருநாரையூர் விநாயகர் திருவிரட்டை மணிமாலை

முகத்தாற் கரிய னென்றாலுந் தனையே முயன்றவர்க்கு
மிகத்தான் வெளிய[1]னென்றே மெய்ம்மை யுன்னும்
[விரும்படியார்
அகத்தான் திகழ்திரு நாரையூ ரம்மான் பயந்தவெம்மான்
உகத்தா னவன்றன் உடலம் பிளந்த ஒருகொம்பனே[2] 2

---

29. [1] விண் அரணம் தள் எரி அம்புகொண்டு அமைத்தார் அடியவர் - விசும்பின்கண் திரியும் கோட்டைகளாகிய முப்புரங்களைத் தள்ளி வீழ்த்த வல்ல தீக்கடவுளாகிய அம்பினை யேவி அழித்தவராகிய இறைவருடைய அடியார்கள்.

தன்னிடத்துள்ள பொருள்களை இல்லாதார்க்கு உவந்து கொடுக்கும் விரிந்த உள்ளம் இல்லாத சிறியோர் கடும்பற்றுள்ளத்தால் ஈட்டிய செல்வமானது களவாடுதலிற் பயின்ற திருடர்களுக்குப் பயன்படுமேயன்றி இறைவனுடைய மெய்யடியார்கட்கு ஒரு சிறிதும் உதவும் இயல்புடையதாகாது என்பது இத்திருப்பாடலின் கருத்து.

2. [1] தன் திருமுகத்தால் கரியின் (யானையின்) இயல்பினையுடையவன் எனினும் தன்னையே இடைவிடாது முயன்று வழிபட்ட அடியார்களுக்குத் தான் மிகவும் வெளிப்பட்டு அருளும் இயல்புடையான் என்பதாம். இதன்கண் யானைமுகத்தான் என்ற பொருளில் வந்த 'கரியன்' என்பதும் வெளிப்பட்டு அருள்வன் என்ற பொருளில் வந்த 'வெளியன்' என்பதும் கருமை வெண்மை எனச் சொல்லால் முரண்பட வந்தமையால் இச்செய்யுளில் சொல் முரண் என்னும் அணியமைந்து நிற்றலறிக.

[2] தானவன்றன் உடலம் உகப்பிளந்த ஒரு கொம்பன் என இயைத்துரைக்க. தானவன் — யானையாய்வந்த அசுரன்.
உக — சிதர்ந்து கெடும்படி.

பூந்தண் பொழில்சூழ் புலியூர்ப் பொலிசெம்பொ
[னம்பலத்து
வேந்தன் தனக்கன்றி யாட்செய்வ தென்னே
[விரிதுணிமேல்
ஆந்தண் பழைய வெவிழை யன்பாகிய பண்டைப்பறைச்
சேந்தன் கொடுக்க அதுவுந் திருவமிர் தாகியதே[1] 26

பொன்னம் பலத்துறை புண்ணிய னென்பர் புயன்மறந்த
கன்னன்மை தீரப்[1]புனிற்றுக் கலிக்காமற் கன்றுபுன்கூர்
மன்னு மழைபொழிந் தீரறு வேலிகொண் டாங்கவற்கே
பின்னும் பிழைதவிர்த் தீரறு வேலிகொள் பிஞ்ஞகனே[2] 54

---

26. [1] விரிந்த பழைய துணியிடத்தே பொருந்திய தனது முயற்சியால் கிடைத்த பழைய கூழாகிய சிற்றுணவினை அன்பு மீதூர்ந்த பழை பறையர் குடும்பத்தவராகிய சேந்தன் என்பார் படைக்க அவ்வெளிய சிற்றுணவும் தில்லைக் கூத்தப்பெருமானுக்குத் திருவமுதாயிற்று, ஆதலால் அன்பினால் அடியார்கட்கு எளியவனாகிய அப்பெருமானுக்கன்றி ஏனையோர்க்கு ஆட்செய்வது கூடாதென்பதாம்.

54. [1] மழை பெய்யாது மறத்தலால் உண்டாகிய வாட்டம் நீங்க. கருகி வாடுதல் என்னும் பொருண்மைத்தாகிய கன்றல் என்னுஞ்சொல் கன்னல், கன்னன்மை என மருவி வழங்கியதாகும். புனிற்றுக் கலிக்காமற்கு — அப்பொழுது முளைத்த நாற்றாகிய இளம் பயிரையுடைய ஏயர்கோன் கலிக்காம நாயனார் வேண்டியதற்கேற்ப.

[2] அறுபத்து மூன்றடியார்களுள் ஒருவராகிய ஏயர்கோன் கலிக்காம நாயனார் என்பவர் சுந்தரமூர்த்தி சுவாமிகள் காலத்தவராவர். பெருநிலக்கிழவராகிய இவர் நாட்டில் மழையில்லாமையால் வயலில் நீரின்றிப் பயிர்கள் வாடியது கண்டு வருந்தித் திருப்புன்கூரிறைவரை வணங்கி 'இறைவா, எம்பொருட்டு நல்ல மழையினைப் பெய்யும்படி செய்தருளினால் இத்திருப்புன்கூர்த் திருக்கோயில் வழிபாட்டிற்குப் பன்னிருவேலி நிலம் தேவதானமாகத் தருகின்றேன்' என வேண்டி நிற்ப அவ்வாறே நல்ல மழைபெய்யத் தொடங்கியது. அது கண்டு மகிழ்ந்த கலிக்காமர் தாம் முன் சொன்னபடி பன்னிரு வேலிநிலத்தையும் கோயிலுக்கு உரிமையாக்கிவிட்டார். அவர் வேண்டுகோ

வருவா சகத்தினின் முற்றுணர்ந் தோனைவண்
[தில்லைமன்னைத்
திருவாத வூர்ச்சிவ பாத்தியன் செய்திருச் சிற்றம்பலப்
பொருளார் தருதிருக் கோவைகண் டேயுமற்
[றப்பொருளைத்
தெருளாத வுள்ளத்தவர் கவிபாடிச் சிரிப்பிப்பரே. 58

---

ளால் பெய்யத் தொடங்கிய மழை மேலும் விடாது பெய்தமையால் நாடெங்கும் வெள்ளமயமாகிப் பயிருக்கு அழிவு செய்யும்போல் தோன்றிற்று. அதுகண்டு வருந்திய கலிக்காம நாயனர் மீண்டும் திருப் புன்கூரிறைவரை வணங்கி இம்மழை நின்றால் இன்னும் பன்னிரு வேலிநிலம் தருவேன் என வேண்டிக் கொண்டார். அந்நிலையில் இறைவரருளால் மழையும் நின்றது. அது கண்ட கலிக்காமனர் பெயர்த்தும் பன்னிரு வேலிநிலத்தை இறைவனுக்குக் கொடுத்தார் என்பது வரலாறு. தம் காலத்து நிகழ்ந்த இச்செய்தியை

> வையக முற்று மாமழை மறந்து
> வயலில் நீரிலை மாநிலந் தருகோம்
> உய்யக் கொள்கமற் றெங்களை யென்ன
> ஒளிகொள் வெண்முகி லாய்ப்பரந் தெங்கும்
> பெய்யு மாமழைப் பெருவெள்ளந் தவிர்த்துப்
> பெயர்த்தும் பன்னிரு வேலி கொண்டருளும்
> செய்கை கண்டுநின் திருவடி யடைந்தேன்
> செழும் பொழிற் றிருப்புன்கூ ருளானே.

என வருந் திருப்பாடலில் சுந்தரமூர்த்திசுவாமிகள் குறிப்பிட்டருளி னமை யுணர்க.

பிழை என்றது மழை மிகுதியால் வருந்துன்பத்தினை.

58. திருவாதவூர்ச் சிவ பாத்தியன் — திருவாதவூரிற் பிறந்தருளிய மாணிக்கவாசக சுவாமிகள். சிவபாத்தியன் — சிவனுடைய திருவடி களைத் தலைக்கு அணியாக அணிந்தவன் என்பது பொருளாம். "தெண்ணீர்க் கரந்த செஞ்சடைக் கடவுள் வண்ணச்சேவடி மணிமுடி வைத்தலின்" எனச் சிலப்பதிகாரத்தும் செங்குட்டுவன் சிவன் திருவடிகளைத் தலைக்கணியாகப் புனைந்து வழிபட்டமை குறிக்கப் படுதல் உணர்க.

## திருத்தொண்டர் திருவந்தாதி

தனமா வதுதிரு நாவுக் கரசின் சரணமென்று
மனமார் புனற்பந்தர் வாழ்த்திவைத் தாங்கவன்
[வண்டமிழ்க்கே
இனமாத் தனது பெயரிடப் பெற்றவன்[1] எங்கள்பிரான்
அனமார் வயல்திங்க ளூரினில் வேதியன் அப்பூதியே. 29

ஞான ஆரூரரைச் சேரரை யல்லது நாமறியோம்
மானவ ஆக்கை யொடும் புக்கவரை வளரொளிப்பூண்
வானவ ராலும் மருவற் கரிய வடகயிலைக்
கோனவன் கோயில் பெருந்தவத் தோர்தங்கள்
[கூட்டத்திலே. 86

---

29. [1] மதிக்கத்தக்க பொருளாவது திருநாவுக்கரசடிகளார் திருவடியே யெனக் கொண்டு தம் மனம்விரும்பிய தண்ணீர்ப்பந்தர் முதலிய நல்லறங்களுக்கு நாவுக்கரசு என்னுந் திருப்பெயரையே வைத்து வழங்கியவரும் அவ்வரசர் பாடிய வண்டமிழ்ப் பாடலில் "அஞ்சிப் போய்க் கலிமெலிய அழலோம்பும் அப்பூதி" எனத் தமது பெயரிட்டு அழைக்கப்பெற்ற பெருமையுடையாரும் திங்களூரிற் றோன்றிய அப்பூதியடிகளாரேயாவர் என்பதாம்.

86. தேவர்களாலும் அடைதற்கரிய கயிலைப் பெருமான் திருக்கூட்டத்துள் ஞான ஆரூரராகிய சுந்தரரும் சேரமான் பெருமாளும் ஆகிய இவ்விரு பெரியவருமே களையாத மக்களுடம்புடன் சேரப்பெற்ற சிறப்புடையோராவர். இவ்விருவரை யல்லது மானவ ஆக்கை யொடும் புகுந்தவராக மற்றொருவரையும் நாம் அறியோம் என நம்பியாண்டார் நம்பிகள் அவ்விருவரையும் நினைத்துப் பாராட்டுதல் அறிக.

மானவ ஆக்கை — மக்கள் உடம்பு. யாக்கை ஆக்கையெனத் திரிந்தது.

பெறுவது நிச்சயம் அஞ்சல் நெஞ்சே பிரமாபுரத்து
மறுவறு பொற்கழல் ஞானசம் பந்தனை வாழ்த்துதலால்
வெறியுறு கொன்றை மறியுறு செங்கை விடையெடுத்த
பொறியுறு பொற்கொடி யெம்பெரு மானமர்
[பொன்னுலகே. 42

பாடிய செந்தமி ழாற்பழங் காசு பரிசில்பெற்ற
நீடிய சீர்த்திரு ஞானசம் பந்தன்[1] நிறைபுகழா
னேடிய பூந்திரு நாவுக்கரசோ டெழின் மிழலைக்
கூடிய கூட்டத்தினால் உளதாய்த்திக் குவலயமே[2] 80

---

42. ஞானசம்பந்தனை வாழ்த்துதலால் எம்பெருமான் அமர் பொன்னுலகு பெறுவது நிச்சயம் அஞ்சல் நெஞ்சே என வினைமுடிவு செய்க. இப் பாட்டு பூட்டுவிற் பொருள்கோள்.

அஞ்சல் — அஞ்சாதே. பிரமாபுரம் — சீகாழி

மறு — குற்றம். வெறி — நறுமணம்.

80. [1] இறைவன் தமக்கு அருளிய வழக்கற்ற பழைய காசினை 'வாசி தீரவே காசுநல்கு வீர்' எனத் தாம் பாடிய செந்தமிழ்ப் பதிகத்தால் வட்டந் தீரப் பெற்றருளிய திருஞானசம்பந்தப் பிள்ளையார்.

[2] திருஞானசம்பந்தப் பிள்ளையாரும் திருநாவுக்கரசடிகளும் திருவீழி மிழிலையில் ஒருங்கிருந்து தாம் பெற்ற படிக்காசினால் பஞ்சம் நீக்கிப் பாதுகாத்துத் தொண்டுசெய்த அக்கூட்டுறவின் பண்புடைமையால் இவ்வுலகியல் அழியாது நிலைபெற்றதென்பது கருத்து. 'பண்புடையார்ப் பட்டுண் டுலகம் அதுவின்றேல், மண்புக்கு மாய்வது மன்' என வருந்தெய்வப் புலவர் வாய்மொழி இங்குச் சிந்திக்கத் தகுவதாம்.

### ஆளுடையபிள்ளையார் திருச்சண்பை விருத்தம்

ஆறதே றுஞ்சடை யானருள் மேவ அவனியர்க்கு
வீறதே றுந்தமி ழால்வழி கண்டவன்[1] மென்கிளிமாந்
தேறல்கோ தித்தூறு சண்பகந் தாவிச் செழுங்கமுகின்
தாறதே றும்பொழிற் சண்பையர் காவலன் சம்பந்தனே. 5

### ஆளுடையபிள்ளையார் திருமும்மணிக் கோவை

பிறவியெனும் பொல்லாப் பெருங்கடலை நீந்தத்
துறவியெனுந் தோற்றோணி[1] கண்டீர்—நிறையுலகில்
பொன்மாலை மார்பன் புனற்காழிச் சம்பந்தன்
தன்மாலை ஞானத் தமிழ். 11

---

5. [1] கங்கை நதி பொருந்திய சடையினையுடைய சிவபெருமானது திருவருளைப் பெறுதற்கு இவ்வுலகத்தார்க்குப் பிறிதொன்றற் கில்லாத சிறப்புடைய திருநெறிய தமிழ் மொழியால் நன்னெறி கண்டுணர்த்திய பெரியோன்; என்றது திருஞான சம்பந்தப் பெருமானை.

11. [1] சம்பந்தன் ஞானத்தமிழ், பிறவியாகிய பொல்லாத பெருங்கடலை நீந்திக் கடத்தற்கு உள்ளே நீர் கசியாதபடி தோலாற்பொதிந்து அமைக்கப்பட்ட அழகிய தோணியாய் நின்று உதவும் என்பதாம்.

தோல் தோணி — உள்ளே நீர் கசியாதபடி தோலாற் பொதிந்த தோணி.

## திருநாவுக்கரசுதேவர் திருவேகாதசமாலை

இலைமா டென்றிடர் பரியா[1] ரிந்திர
னேயொத் துறுகுறை வற்றாலும்
நிலையா திச்செல்வ மெனவே கருதுவர்[2]
நீள்சன் மக்கட லிடையிற்புக்
கலையார்[3] சென்றர னெறியா குங்கரை
அண்ணப் பெறுவர்கள்[4] வண்ணத்திண்
சிலைமா டந்திகழ் புகழா ரூரிறை
திருநா வுக்கர சென்போரே. 4

---

4 வண்ணத்திண் சிலைமாடம் திகழ் புகழ் ஆரூர் இறை திருநாவுக்கரசு என்போர் — நிறந்தீற்றிய வலிய மலைபோல் மாளிகைகள் உயர்ந்து விளங்கும் புகழத்தக்க திருவாரூரிற் பிறந்தருளிய தலைவர் திருநாவுக்கரசு என அப்பெருமான் திருப்பெயரை ஒருகாற் சொல்லவல்லவர்கள்.

[1] மாடு இலை என்று இடர்பரியார்—நம்பாற் செல்வமில்லையே யென இடருற்று வருந்துவாரல்லர்.

[2] இந்திரன் ஒத்து உறுகுறைவு அற்றாலும் இச்செல்வம் நிலையாது எனவே கருதுவர்—வானுலக வேந்தனாகிய இந்திரனைப் போன்று குறைவின்றி நிரம்பிய செல்வமுடையவராய்த் தாம் இருப்பினும் தம்மிடத்துள்ள செல்வம் நிலையாது என்று கருதும் மெய்யுணர்வையே கொண்டு வாழ்வார்கள்.

[3] நீள் சன்மக் கடலிடையிற் புக்கு அலையார் — நீண்ட பிறவியாகிய கடலினுள் அகப்பட்டுத் திரிந்து துன்புறுவாரல்லர்.

[4] சென்று அரன் நெறியாகுங்கரை அண்ணப்பெறுவர்கள்—இப்பிறவித் துன்பத்தினின்றும் பிழைத்துச்சென்று சிவனது திருவருள் நெறியாகிய முத்திக்கரையினை அணைந்து மகிழ்வர் என்பதாம்.

மாடு — செல்வம். சன்மக்கடல் — பிறவியாகிய கடல்.

அண்ணப்பெறுவர்கள் — அணுகப்பெறுவார்கள்.

உ

திருச்சிற்றம்பலம்.

# பன்னிரண்டாந் திருமுறை.

சேக்கிழார்பெருமான் அருளிய

## திருத்தொண்டர் புராணம்.

### காரைக்காலம்மையார் புராணம்.

மானமிகு தருமத்தின் வழிநின்று[1] வாய்மையினில்
ஊனமில்சீர்ப் பெருவணிகர்[2] குடிதுவன்றி[3] யோங்குபதி
கூனல்வளை[4] திரைசுமந்து கொண்டேறி மண்டுகழிக்
கானல்மிசை யுலவுவளம் பெருகுதிருக் காரைக்கால். 1

வங்க[1]மலி கடற்காரைக் காலின்கண் வாழ்வணிகர்
தங்கள்குலத் தலைவனார் தனதத்த னார்[2] தவத்தால்
அங்கவர்பால் திருமடந்தை யவதரித்தா ளெனவந்து
பொங்கியபே ரழகுமிகப் புனிதவதி யார்[3]பிறந்தார். 2

---

1. [1] மானம் - ஒருவன் தன்னிலையில் தாழாமையும் ஊழ்வினையால் தனக்குத் தாழ்வு வந்துழி உயிர்வாழக் கருதாமையும் ஆகிய பெருமை. இப்பெருமையின் நீங்காது மனமாசு நீங்கிச் செய்யும் நல்லறங்களில் நிலைபெற்ற குடிகள் என்பார் "மானமிகு தருமத்தின் வழிநின்று" என்றார்.

[2] தம்முடையபொருளையும் பிறர்பொருளையும் தம் பொருளொப்ப ஆராய்ந்து நடுநிலையென்னுங் குணம் நன்றாக நிலைபெற்ற நெஞ்சினையுடையவராய்த் தாம் கொள்ளும் சரக்கையும் தாம் கொடுக்கும் பொருட்கு மிகுதியாகக்கொள்ளாமல், தாம் கொடுக்குஞ் சரக்கையும் தாம் வாங்கும்பொருட்குக் குறையாகக் கொடாமல் தாம் பெற்ற இலாபத்தையும் வெளியாகச்சொல்லிக் கொடுக்கும் வாய்மையில் தவறாத சீர்த்திமிக்க வணிகர் என்பார் "வாய்மையினில் ஊனமில் சீர்ப்பெரு வணிகர்" என்றார்.

[3] துவன்றி - நிறைந்து.

[4] கூனல்வளை - வளைந்த சங்கு.

2. [1] வங்கம் - கப்பல்.

[2] தனதத்தனார் - காரைக்காலம்மையாரது தந்தையார்.

[3] புனிதவதியார் - அம்மையாரது இயற்பெயர்.

வணிகர்பெருங் குலம்விளங்க வந்துபிறந் தருளியபின்
அணிகிளர்மெல் லடிதளர்வுற் றசையுநடைப் பருவத்தே
பணியணிவார்[1] கழற்கடிமை பழகிவரும் பாங்குபெறத்
தணிவில்பெரு மனக்காதல் ததும்பவரும் மொழி
[ பயின்றார்[2]. 3

பல்பெருநற் கிளையுவப்பப்[1] பயில்பருவச் சிறப்பெல்லாம்
செல்வமிகு தந்தையார் திருப்பெருகுஞ் செயல்புரிய
மல்குபெரும் பாராட்டின் வளர்கின்றார் விடையவர்பால்[2]
அல்கிய[3] அன் புடன்அழகின் கொழுந்தெழுவ தென
[ வளர்வார். 4

வண்டல்[1]பயில் வனவெல்லாம் வளர்மதியம் புனைந்தசடை
அண்டர்பிரான் திருவார்த்தை யணையவரு வனபயின்று
தொண்டர்வரில் தொழுதுதாதியர் போற்றத் துணைமுலைகள்
கொண்டுநுசுப் பொதுங்குபதங் கொள்கையினிற்
[ குறுகினார். 5

---

3. [1] பாம்பினை அணிகலனாக அணிந்த இறைவன்.

[2] அம்மையார் தாம் தளர்நடை கொண்டு விளையாடும் பிள்ளைமைப் பருவத்திலேயே அப் பெருமானது திருவடித் தொண்டில் ஈடுபட்டுப் பயின்ற திறத்தைப் "பிறந்து மொழி பயின்ற பின்னெல்லாங் காதல் சிறந்து நின் சேவடியே சேர்ந்தேன்" என வரும் அற்புதத் திருவந் தாதிப் பாடலால் விளக்கியருளுதல் காண்க.

4. [1] சுற்றத்தார் மகிழ.

[2] சிவபெருமானிடத்து.

[3] அல்கிய - தங்கிய.

5. [1] வண்டல் - இளமகளிர் விளையாட்டு. புனிதவதியார் இத்தகைய விளையாட்டிற்பழகிய இளம்பருவத்திலும் சிவபிரானுடைய புகழாகிய திருவார்த்தைகளையே பேசும் இயல்புடையார் என்பதனை இப்புராணத்து மூன்றும் பாடற்குறிப்பான் உணர்க.

நல்லவென உறுப்புநூ லவர்[1] உரைக்கும் நலம்நிரம்பி
மல்குபெரும் வனப்புமீக் கூரவரு மாட்சியினால்
இல்லிகவாப் பருவத்தில்[2] இவர்கள்மர பினுக்கேற்கும்
தொல்குலத்து வணிகர்மகட் பேசுதற்குத் தொடங்குவார். 6

நீடியசீர்க் கடல்நாகை[1] நிதிபதியென் றுலகின்கண்
பாடு[2]பெறு புகழ்வணிகன் பயந்தகுல மைந்தனுக்குத்
தேடவருந் திருமரபிற் சேயிழையை மகட்பேச
மாடமலி காரைக்கால் வளநகரில் வரவிட்டார். 7

வந்தமூ தறிவோர்கள் மணங்குறித்த[1] மனைபுகுந்து
தந்தையாந் தனதத்தன் றனைநேர்ந்து[2] "நீபயந்த
பைந்தொடியை நிதிபதிமைந் தன்பரம தத்தனுக்கு[3]
முந்தைமர பினுக்கேற்கும் முறைமைமணம் புரி"
[ கென்றார். 8

---

6. [1] சாமுத்திரிக இலக்கண நூல் வல்லார்.

[2] இளையோராய குலமகளிர் அறிவு வந்தபின்னர் மணமாகா நிலையில் வீட்டினைக் கடந்து வெளியே செல்லப் பெறாராதலின் அத்தகைய பருவத்தை இல்லிகவாப்பருவம் என்றார். இல் - மனை. இகத்தல்- கடத்தல்.

7. [1] நாகை - நாகப்பட்டினம் என்பதன் மரூஉ.

[2] பாடு - பெருமை.

8. [1] மணங்குறித்து. பா. வே.

[2] நோக்கி. பா. வே.

[3] பரமதத்தன் என்பது மணமகன் பெயர்.

மற்றவனும்[1] முறைமையினால் மணம்இசைந்து
[ செலவிடச்சென்
றுற்றவர்கள் உரைகேட்ட நிதிபதியும் உயர்சிறப்புப்
பெற்றனன்போல்[2] உவந்துதனிப் பெருமகட்குத்
[ திருமலியும்
சுற்றமுடன் களிகூர்ந்து வதுவைவினைத் தொழில்[3]
[ பூண்டான். 9

மணமிசைந்த நாளோலை[1] செலவிட்டு மங்கலநாள்
அணையவது வைத்தொழில்க ளானவெலாம் அமைவித்தே
இணரலங்கல்[2] மைந்தனையும் மணவணியின் எழில்விளக்கிப்
பணைமுரசம்[3] எழுந்தார்ப்பக் காரைக்காற் பதிபுகுந்தார். 10

அளிமிடைதார்த்[1] தனதத்தன் அணிமாடத் துள்புகுந்து
தெளிதருநூல்[2] விதிவழியே[3] செயல்முறைமை
[ செய்தமைத்துத்
தளிரடிமென் னகைமயிலைத்[4] தாதவிழ்தார்க் காளைக்குக்[5]
களிமகிழ்சுற் றம்போற்றக் கல்யாணஞ் செய்தார்கள். 11

---

9. 1 மற்றவன் என்றது தனதத்தனை.

2 எதிர்காலத்தில் தான் காரைக்கால் நகரத்துத் தனதத்தனுடன் உறவின் முறையாற் பெறக்கருதிய உயர் சிறப்பினை யெல்லாம் இன்றே பெற்றுவிட்டதுபோலக் கருதி மகிழ்ந்தான் என்பார் 'பெற்றனன் போல் உவந்து' என்றார்.

3 திருமண வினைக்குரிய செயல்கள்.

10. 1 திருமணத்திருமுகம்.

2 பூங்கொத்துக்களை மிடைந்து தொடுத்த மாலை.

3 பணையும் முரசமும் எனக்கொள்க. பணை - இயம் என்னும் வாத்தியப் பொது. அன்றிப் பெருமை மிக்க முரசம் எனினும் ஆம்.

11. 1 அளி மிடை தார் - வண்டுகள் நெருங்கி மொய்க்கும் மாலை.

2 ஒருவனும் ஒருத்தியும் அன்பினால் மணந்து வாழும் இயல்பினைத் தெளிந்து கோடற்குரிய மணநூல் என்பது கருத்து.

மங்கலமா மணவினைகள் முடித்தியல்பின் வைகுநாள்
தங்கள்குடிக் கரும்புதல்வி யாதலினால் தனதத்தன்
பொங்கொலிநீர் நாகை[1]யினிற் போகாமே கணவனுடன்
அங்கணமர்ந் தினிதிருக்க அணிமாடம் மருங்கமைத்
[தான். 12

மகட்கொடையின் மகிழ்சிறக்கும் வரம்பில்தனங்[1]
[கொடுத்ததற்பின்
நிகர்ப்பரிய பெருஞ்சிறப்பின் நிதிபதிதன் குலமகனும்[2]
தகைப்பில்பெருங் காதலினால் தங்குமனை வளம்பெருக்கி
மிகப்புரியுங் கொள்கையினில்[3] மேம்படுதல் மேவினான். 13

ஆங்கவன்றன் இல்வாழ்க்கை அருந்துணையா யமர்கின்ற
பூங்குழலா ரவர்[1] தாமும் பொருவிடையார் திருவடிக்கீழ்
ஓங்கியஅன் புறுகாதல் ஒழிவின்றி மிகப்பெருகப்
பாங்கில்வரும் மனையறத்தின் பண்புவழா மையிற்பயில்
[வார். 14

---

[3] வழி முறையே. பா. வே.

[4] தளிர் போன்று ஒளிவளராநின்ற பாதத்தினையும் மெல்லிய முறுவலையும் மயில் போன்ற சாயலையுமுடைய புனிதவதியாரை.

[5] காளை போல்வானாகிய பரமதத்தனுக்கு.

12. [1] பொங்கு ஒலி நீர் நாகை - மிக்க ஆரவாரமுடைய கடலாற் சூழ்ந்த நாகப்பட்டினம். "கனையுமா கடல்சூழ் நாகை" எனவரும்திருநாவுக்கரசர் தேவாரத்தொடர் ஒப்பு நோக்கத்தக்கது.

13. [1] வரம்பு இல் தனம் - எல்லையற்ற பெருஞ்செல்வம்.

[2] பரமதத்தன்.

[3] பொருள்புரிதொழிலாகிய வாணிகத்துறையில்.

14. [1] புனிதவதியார்.

நம்படி யார[1]ணைந்தால் நல்லதிரு வமுதளித்தும்
செம்பொன்னு நவமணியுஞ் செழுந்துகிலு முதலான
தம்பரிவி னா[2]லவர்க்குத் தகுதியின்வேண்டுவ கொடுத்தும்
உம்பர்[3]பிரான் திருவடிக்கீழ் உணர்வுமிக வொழுகுநாள். 15

பாங்குடைய நெறி[1]யின்கட் பயில்பரம தத்தனுக்கு
மாங்கனிகள் ஓரிரண்டு வந்தணைந்தார் சிலர்கொடுப்ப[2]
ஆங்கவைதான் முன்வாங்கி அவர்வேண்டுங்
[குறை[3]யளித்தே
"ஈங்கிவற்றை இல்லத்துக் கொடுக்க"வென இயம்பினான்.
16

கணவன்றான் வரவிடுத்த கனியிரண்டுங் கைக்கொண்டு
மணமலியு மலர்க்கூந்தல் மாதரார் வைத்ததற்பின்
பண அரவம்[1] புனைந்தருளும் பரமனார் திருத்தொண்டர்
உணவின்மிகு வேட்கையினால் ஒருவர்மனை யுட்புகுந்தார். 17

---

15. [1] சிவனடியார்.

[2] தாம்கொண்ட அன்பினால்.

[3] உம்பர் - தேவர்.

16. [1] முற்கூறிய இயல்புமிக்க வாணிகத்துறை.

[2] வந்தணைந்தார் சிலர் பரமதத்தனுக்கு ஓரிரண்டு மாங்கனிகள் கொடுப்ப எனக்கூட்டிப் பொருள்கொடுக்க.

[3] குறை—முடிக்க வேண்டும் காரியம்.

17. [1] பண அரவம்—படத்தையுடைய பாம்பு.

வேதங்கள் மொழிந்தபிரான் மெய்த்தொண்டர் நிலைகண்டு
நாதன்றன் அடியாரைப் பசிதீர்ப்பேன் எனநண்ணிப்
பாதங்கள் விளக்கநீர் முன்னளித்துப் பரிகலம்[1] வைத்
தேதந்தீர் நல்விருந்தா[2] இன்னடிசில் ஊட்டுவார். 18

கறியமுதங் குதவாதே திருவமுது கைகூட
வெறி[1] மலர்மேற் றிருவனையார் "விடையவன்றன்
[அடியாரே
பெறலரிய விருந்தானாற் பேறிதன்மே லில்லை"யெனும்
அறிவினராய் அவரமுது செய்தவனுக் காதரிப்பார். 19

இல்லாளன்[1] 'வைக்க'எனத்[2] தம்பக்கல் முன்னிருந்த
நல்லநறு மாங்கனிக[3] ளிரண்டினிலொன் றைக்கொண்டு
வல்விரைந்து[4] வந்தணைந்து படைத்துமன மகிழ்ச்சியினால்
அல்லல்தீர்ப் பவரடியார் தமையமுது செய்வித்தார். 20

---

18. [1] பரிகலம்—உண்கலம்.

[2] ஏதம் — குற்றம். ஏதந்தீர் விருந்து நல்விருந்து எனத் தனித்தனி கூட்டுக.

19. [1] வெறி—நறுமணம்.

[2] மனையறக் கடமையாகிய விருந்தோம்பலும் சமயவழிபாடாகிய அடியார்ப்பேணலும் சிவனடியார்க்குத் திருவமுதளித்தலாகிய இவ்வொரு செயலானே நிறைவேறுதலின் இதன்மேற் பேறு ஒன்றுமில்லையெனக் கொண்டார் என்பார் "பேறிதன்மேல் இல்லையெனும் அறிவினராய்" எனச் சிறப்பித்தார் ஆசிரியர்.

20. [1] இல்லாளன் — மனைக்கு உரியவனாகிய பரமதத்தன்.

[2] "வைக்க" என்றது அவன் தன் ஏவலர்பால் மாங்கனிகளை வீட்டிற்குக் கொடுத்தனுப்பும்போது அவர்வழியாக மனைவியார்க்குச் சொல்லிய சொல்.

[3] இன்சுவையும் நறுமணமும் ஒருங்குடைய பழம் என்பார் நல்ல மாங்கனிகள் என்ற அளவிலமையாது நல்ல நறு மாங்கனிகள் என்றார்.

[4] மிகவிரைந்து.

மூப்புறுமத் தளர்வாலும் முதிர்ந்துமுடு கியவேட்கைத்
தீப்பசி[1]யின் நிலையாலும் அயர்ந்தணைந்த திருத்தொண்டர்
வாய்ப்புறுமென் சுவையடிசில் மாங்கனியோ டினிதருந்திப்
பூப்பயில்மென் குழல்மடவார் செயலுவந்து போயினார். 21

மற்றவர்தாம் போயினபின் மனைப்பதியா கியவணிகன்
உற்றபெரும் பகலின்கண்[1] ஓங்கியபே ரில்லெய்திப்
பொற்புற[2] முன் னீராடிப் புகுந்தடிசில் புரிந்தயிலக்[3]
கற்புடைய மடவாருங் கடப்பாட்டி[4] லூட்டுவார். 22

இன்னடிசில்[1] கறிகளுடன் எய்துமுறை யிட்டதற்பின்
மன்னியசீர்க் கணவன்றான் மனையிடைமுன் வைப்பித்த
நன்மதுர[2] மாங்கனியில் இருந்ததனை நறுங்கூந்தல்
அன்னமனை யார்தாமுங் கொடுவந்து கலத்[3]தளித்தார். 23

மனைவியார் தாம்படைத்த மதுரமிக வாய்த்தகனி
தனைநுகர்ந்த இனியசுவை ஆராமைத்[1] தார்வணிகன்
"இனையதொரு பழம்[2] இன்னும் உள[3] ததனை இடுக" என
அனையதுதாங் கொண்டுவர அணைவார்போல்
[அங்ககன்றார். 24

---

21. 1 தீப்பசி—அளவுகடந்த நிலைமையால் தீப்போன்று உயிருணர்வைச் சுடும் பசிநோய்.

22. 1 பெரும்பகல்—நண்பகல்.
2 பொலிவுபெற.
3 அடிசில்புரிந்து அயில—உணவினை விரும்பியுண்ண.
4 கடப்பாடு—செய்தற்குரிய முறைமை.

23. 1 இனிய சோற்றினை.
2 மதுரம்—இன்சுவை.
3 கலம்—உண்கலம்.

24. 1 ஆராமை — நுகரும் வேட்கை முற்றாமையால்.
2 இதனையொத்த சுவையும் மணமுமுடைய பழம்.
3 வேறொன்றும் உளது.

அம்மருங்கு நின்றயர்வார் அருங்கனிக்கங் கென்செய்வார்
மெய்ம்மறந்து நினைந்துற்ற விடத்துதவும் விடையவர்தாள்
தம்மனங்கொண் டு[1]ணர்தலுமே அவரருளால் தாழ்குழலார்
கைம்மருங்கு வந்திருந்த ததிமதுரக் கனி[2]யொன்று. 25

மற்றதனைக் கொடுவந்து மகிழ்ந்திடலும் அயின்றதனில்
உற்றசுவை அமுதினுமேற் படவுளதாயிட "இதுதான்
முற்றருமாங் கனியன்று மூவுலகிற் பெறற்கரிதால்
பெற்றதுவே றெங்"[1]கென்று பெய்வளையார் தமைக்
[கேட்டான். 26

அவ்வுரைகேட் டலுமடவார் "அருளுடையார் அளித்
[தருளுஞ்
செவ்வியபே ரருள்விளம்புந் திறமன்"றென் றுரைசெய்யார்[1]
"கைவருகற் புடைநெறியால் கணவனுரை காவாமை
மெய்வழியன்" றென்விளம்பல் விடமாட்டார்
[விதிர்ப்புறுவார்.[2] 27

---

25. [1] அன்புடையார்க்குத் துன்பம் வந்துற்ற காலத்து அதனையறவே நீக்கி வேண்டுவன புரிந்து உதவும் சிவபிரான் திருவடிகளைத் தம் மனத்துட் சிந்தித்தனர் என்பதாம். "அன்புடைத்தொண்டர்க்கமு தருத்தி இன்னல் களைவன இன்னம்பரான்றன் இணையடியே" என்னும் தொடர் ஈண்டு நினைக்கத்தகுவது.

[2] சுவைமிக்கதொருபழம்.

26. [1] பரமதத்தன் கூற்று.

27. [1] அருளேயுருவாகிய இறைவனது செம்மை நெறியிற் பொருந்திய திருவருட்செயல் பிறர்க்கு விளங்க எடுத்துரைக்கும் எளிமையது அன்று என்பது கருதி அதனைக் கணவனுக்குச் சொல்ல மாட்டாதவராயினர்.

[2] உயிரினும் சிறந்த ஒழுக்கத்தின்பாற்பட்ட தமது கற்புமேம்பாட்டினாலும் கணவனது சொல்வழியொழுகாமை நல்வழியன்று என்னும் கருத்தினாலும் நிகழ்ந்தது கூறுதலையும் விடுதற்கியலாதவராய் இவ்விரு நிலையினும் பட்டு நடுக்கமுறுவராயினர் என்பதாம்.

"செய்தபடி சொல்லுவதே கடன்"என்னுஞ் சீலத்தார்
மைதழையுங் கண்டர்[1]சே வடிகள்மனத் துறவணங்கி
"எய்தஅருங் கனியளித்தார் யார்"என்னுங் கணவனுக்கு
மொய்தருபூங் குழல்மடவார் புகுந்தபடி[2] தனை
[மொழிந்தார். 28

"ஈசனருள்" எனக்கேட்ட இல்லிறைவன் அதுதெளியான்[1]
வாசமலர்த் திருவனையார் தமைநோக்கி "மற்றிதுதான்
தேசுடைய சடைப்பெருமான் திருவருளேல் இன்னுமொர்
ஆசில்கனி அவனருளால் அழைத்தளிப்பாய்"
[எனமொழிந்தான். 29

பாங்ககன்று மனைவியார் பணியணிவார் தமைப்பரவி
"ஈங்கிதளித் தருளீரேல் என்னுரைபொய் யாம்"[1]என்ன
மாங்கனியொன் றருளால்வந் தெய்துதலும் மற்றதனை
ஆங்கவன்கைக் கொடுத்தலுமே அதிசயித்து வாங்கினன்.30

---

28. [1] கருமை நிறம் செறிந்த நீல கண்டத்தையுடைய சிவபிரானார்.

[2] பசியினால் வருந்திய சிவனடியார் ஒருவர் தம் மனை நோக்கி வந்ததும் கறியமுது சமைக்கப்படாத அந்நிலையில் அவருக்குத் திருவமுதுடன் கணவன் கொடுத்தனுப்பிய மாம்பழத்திலொன்றைப் படைத்ததும், இச் செயலறியாது மாம்பழத்தின சுவையிலீடுபட்ட கணவன் "இனியது ஒரு பழம் இன்னும் உளது அதனையிடுக" எனத் துணிந்து கூறிய ஆணையை நிறைவேற்றவேண்டித் தாம் ஒரு புறஞ் சென்று அயர்ந்து நின்ற காலத்து இறைவனருளால் திருவருள் நெறியினாலன்றிப் பிறரெவரும் பெறுதற்கரிய இம் மாங்கனி தம் கையகத்துத் தானே வந்தமையும் ஆகிய நிகழ்ச்சி முழுவதையும் கணவனுக்கு எடுத்துரைத்தார் என்பார் "புகுந்தபடி தனை மொழிந்தார்" எனச் சுருங்கக் கூறினர் ஆசிரியர்.

29. [1] பரமதத்தன் அத்திருவருள் நிகழ்ச்சியைத் தெரிந்து நம்புதற்குரிய ஆற்றலற்றவனாயினன் என்பார் "இல்லிறைவன் அது தெளியான்" என்றார்.

30. [1] கணவன் கேட்டுக்கொண்டபடி மற்றொரு கனியையும் இறைவன் அருளாதொழியின் தமக்கு மாம்பழம் தந்தது இறைவன் அருள் என முன்னர்க்கூறிய சொல்லால் விளங்கிய "ஈசனருள்" ஒன்றுண்டு என்னும் உண்மை மறுக்கப்பட்டு அது பொய்ப் பொருளாக உலகினரால் ஒதுக்கப்பட்டுவிடுமே என வருந்துவார் "ஈங்கிதளித்தருளீரேல் என்னுரை பொய்யாம்" என இறைவன்பால் முறையிடுவாராயினர்.

வேறு.

வணிகனுந் தன்கைப்புக்க மாங்கனி பின்னைக்காணான்[1]
தணிவரும் பயமேற்கொள்ள உள்ளமுந் தடுமாறெய்தி
அணிகுழ லவளைவேறோர் அணங்கெனக் கருதிநீங்கும்
துணிவுகொண் டெவர்க்குஞ்சொல்லான் தொடர்வின்றி
[ யொழுகுநாளில்[2] 31

விடுவதே எண்ணமாக மேவியமுயற்சி செய்வான்
படுதிரைப் பரவை[1]மீது படர்கலங் கொண்டுபோகி
நெடுநிதி கொணர்வேன் என்ன நிரந்தபல்கிளைஞராகும்
வடுவில்சீர்[2] வணிகமாக்கள் மரக்கலஞ் சமைப்பித்
[ தார்கள். 32

கலஞ்சமைத் ததற்குவேண்டுங் கம்மியர்[1]உடனே செல்லும்
புலங்களில் விரும்புபண்டம் பொருந்துவ நிரம்பஏற்றிச்
சலந்தரு கடவுட்[2]போற்றித் தலைமையாம் நாய்கன்[3]தானும்
நலந்தரு நாளில்ஏறி நளி[4]திரைக் கடல்மேற் சென்றான். 33

---

31. [1] முதன் முறையில் திருவருளாற் பெற்ற பழத்தினை இது தெய்வத்தாற் கிடைத்ததோ என்னும் ஆராய்ச்சியின்றித் தான் அனுப்பிய பழமென்று கருதினமையாலும் சிவனடியார்க்குணவாகிய இவன் பொருள் மீண்டும் பயன் வகையால் நுகரப்படுதல் முறையாதலானும் அஃது அவனுக்கு உணவாயிற்று. இரண்டாம்முறை பெற்ற இக் கனி அத்திருவருளை ஐயுற்றுச் சோதித்தற்பொருட்டு மீண்டும் மனைவியாரைக்கொண்டு வேண்டிய நிலையில் அவனது ஐயத்தைத் தீர்த்தலொன்றேகருதி யளிக்கப்பட்டதாகலின் அவனது நுகர்ச்சியொடுபட்ட ஆராய்ச்சிக்கு அகப்படாது காணுமல் மறைந்துவிட்டது என்பர் பெரியோர்.

[2] புனிதவதியாரது திருவருட்பேற்றினை நேரிற் கண்டு தெளிவின்றி யஞ்சி மனத்தடுமாற்றமடைந்த பரமதத்தன் அவரைத் தம் மனைவியாராகக் கருதாது வேறொரு தெய்வமென்றே கருதித் தனக்கு அவர் வாழ்க்கைத் துணையென்னுந்தொடர்பின்றி யொழுகினான் என்பது இப்பாட்டின் கருத்து.

32. [1] ஒலிக்கும் அலைகளையுடைய கடல்.

[2] பழியில்லாத கீர்த்தி.

33. [1] கப்பல் தொழில் செய்யுந் தச்சர் முதலியோர்.

[2] சலந்தரு கடவுள்—வருணன். கடலில் யாத்திரை செய்யுமியல்புடையோர் கடற்றெய்வத்தை வழிபடுதல் மரபு.

[3] நாய்கன் — வணிகன் என்னும் பொருளது.

[4] நளி — செறிவு.

கடல்மிசை வங்கம் ஓட்டிக் கருதியு தேயந் தன்னில்
அடைவுறச் சென்று சேர்ந்தங் களவில்பல் வளங்கள் முற்றி
இடைசில நாட்கள் நீங்க மீண்டும்அக்கலத்தில் ஏறிப்
படர்புனற் கன்னி நாட்[1]டோர் பட்டின மருங்கு
[ சேர்ந்தான். 34

அப்பதி தன்னில் ஏறி அலகில்[1]பல் பொருள்கள் ஆக்கும்
ஒப்பில்மா நிதியம் எல்லாம் ஒருவழிப் பெருக உய்த்து
மெய்ப்புகழ் விளங்கும் அவ்வூர்[2] விரும்பவோர்
[ வணிகன் பெற்ற
செப்பருங் கன்னி தன்னைத் திருமலி வதுவை செய்தான். 35

பெறலருந் திருவினாளைப் பெருமணம் புணர்ந்து, முன்னை
அறலியல் நறுமென் கூந்தல் அணங்கனாள்[1] திறத்தில்
[ அற்றம்
புறமொரு வெளியுறாமற் பொதிந்தசிந் தனையி னோடு[2]
முறைமையின் வழாமை வைகி, முகமலர்ந் தொழுகு
[ நாளில். 36

---

34. [1] கன்னிநாடு என்னும்பெயர் பாண்டிநாட்டைக் குறித்து வழங்குவதாம். பட்டினமெனவே அந்நாட்டிலுள்ளதொரு கடற்கரையூரிற் பரமதத்தன் தங்கினனாதல் வேண்டும்.

35. [1] அலகுஇல் — அளவில்லாத.

[2] அவ்வூரிலுள்ளார்; ஆகு பெயர்.

36. [1] முதற்கண் மணஞ் செய்துகொண்ட கருமணல் போன்ற நறிய மெல்லிய கூந்தலையுடைய தெய்வம் போன்ற புனிதவதியார்.

[2] தான் அவரது தெய்வத்தன்மைக்கு அஞ்சிச் சொல்லாது வந்த மறைவு நிகழ்ச்சியைப் பிறரெவர்க்கும் புலப்படுத்தாமல் தன்மனத்தே யடக்கி யொழுகும் நினைவுடன்.

முருகலர்[1] சோலைமூதூ ரதன்முதல் வணிக ரோடும்
இருநிதிக் கிழவன்[2] என்ன[3] எய்திய திருவின் மிக்குப்
பொருகடற் கலங்கள் போக்கும் புகழினன் மனைவி தன்பால்
பெருகொளி விளக்குப் போலோர் பெண்கொடி
[அரிதிற் பெற்றான். 37

மடமகள் தன்னைப் பெற்று மங்கலம் பேணித் தான்முன்
புடனுறை வஞ்சி நீத்த ஒருபெரு மனைவி யாரைத்[1]
தொடர்வற நினைந்து தெய்வத் தொழுகுலம்
[என்றே கொண்டு
கடனமைத் தவர்தம் நாமம் காதல்செய் மகவை
[யிட்டான்[2] 38

இந்நிலை யிவன்இங் கெய்தி இருந்தனன் இப்பால் நீடுங்
கன்னிமா மதில்சூழ் மாடக் காரைக்கால் வணிக னான
தன்னிகர் கடந்த செல்வத் தனதத்தன் மகளார் தாமும்
மன்னிய கற்பி னோடு மனையறம் புரிந்து வைக. 39

---

37. [1] முருகு — நறுமணம்.

[2] குபேரன்.

[3] என்று பிறரெல்லார் தன்னைப் போற்ற.

38. [1] தான் முன்பு உடனுறைவு அஞ்சி நீத்த ஒரு பெரு மனைவியாரென்றது புனிதவதியாரை.

[2] புனிதவதியார் என்ற பெயரைத் தன் இரண்டாம் மனைவி பெற்ற பெண்குழந்தைக்குத் தெய்வப் பெயராக இட்டு வழங்கினன். மகவை இட்டான் என்பது மகவுக்கு இட்டான் என்னும் பொருளில் வந்த உருபு மயக்கம்.

"விளைவளம் பெருக்க வங்க மீதூபோம் பரமதத்தன்
வளர்புகழ்ப் பாண்டி நாட்டோர் மாநகர் தன்னில் மன்னி
அளவில்மா நிதியம் ஆக்கி யமர்ந்தினி திருந்தான்" என்று
கிளரொளி மணிக்கொம் பன்னார்[1] கிளைஞர்தாங்
[கேட்டாரன்றே. 40

அம்மொழி கேட்ட போதே அணங்கனார் சுற்றத் தாரும்
தம்முறு கிளைஞர்ப் போக்கி யவன்நிலை தாமுங் கேட்டு
மம்மர்[1]கொள் மனத்த ராகி "மற்றவ[2] னிருந்த பாங்கர்க்
கொம்மைவெம் முலையி னாளைக் கொண்டுபோய்
[விடுவ" தென்றார். 41

மாமணிச் சிவிகை[1] தன்னில் மடநடை மயிலன் னாரைத்
தாமரைத் தவிசில் வைகுந் தனித்திரு வென்ன வேற்றிக்
காமரு கழனி வீழ்த்துக் காதல்செய் சுற்றத் தாருந்
தேமொழி யவ[2]ருஞ் சூழச் சேணிடைக் கழிந்து[3]
[சென்றார். 42

சிலபகல் கடந்து சென்று செந்தமிழ்த் திருநா[1] டெய்தி
மலர்புகழ்ப் பரம தத்தன் மாநகர் மருங்கு வந்து
குலமுதல் மனைவி யாரைக் கொண்டுவந் தணைந்த தன்மை
தொலைவில் சீர்க் கணவ னார்க்குச் சொல்லிமுன்
[செல்ல விட்டார். 43

---

40. [1] ஒளிகிளர் மணிக்கொம்பு அன்னார் என்றது புனிதவதியாரை.

41. [1] மம்மர் — மயக்கம்.
[2] பரமதத்தன்.

42. [1] பெருமை தங்கிய மணிகள் இழைக்கப் பெற்ற பல்லக்கு.
[2] தேன்போலும் இனிய மொழியினையுடைய மகளிர்.
[3] நெடுந்தொலைவு கடந்து.

43. [1] திரிபுர மெரித்த விரிசடைக் கடவுளாகிய இறையனாருடன் புலவர் பலர் ஒருங்கிருந்து தமிழாராய்ந்த சங்கத்தைத் தன்கட் பெற்றமை குறித்தும் அத்தகைய தமிழ்ச் சங்கத்தை நிறுவியும் கவியரங்கேறியுந் தமிழ் வளர்த்த வேந்தர்களாகிய பாண்டியர்களுக்கு உரிமை மிக்க நாடாதல் குறித்தும் தமிழ் நிலைபெற்ற பாண்டி நாட்டினைச் செந்தமிழ்த் திருநாடு எனச் சேக்கிழாரடிகள் பாராட்டிப் போற்றினமை காண்க.

வந்தவ ரணைந்த மாற்றங் கேட்டலும் வணிகன் றானும்
சிந்தையில் அச்ச மெய்திச் செழுமணம் பின்பு செய்த
பைந்தொடி தனையுங் கொண்டு பயந்தபெண் மகவி னோடு
முந்துறச் செல்வேன் என்று மொய்குழ லவர்[1]பால்
[ வந்தான். 44

தானுமம் மனைவி யோடுந் தளர்நடை மகவி னோடும்
மானிளம் பிணைபோல் நின்ற மனைவியார்[1]
[ அடியில் தாழ்ந்தே
“யான்உம தருளால் வாழ்வேன் இவ்விளங் குழவி தானும்
பான்மையால் உமது நாமம்”[2] என்றுமுன் பணிந்து
[ வீழ்ந்தான். 45

கணவர்தாம் வணங்கக் கண்ட காமர்[1]பூங் கொடிய னாரும்
அணைவுறுஞ் சுற்றத்தார்பால் அச்சமோ டொதுங்கி நிற்ப
உணர்வுறு கிளைஞர் வெள்கி[2] “உன்றிரு மனைவி தன்னை
மணமலி தாரினாய்நீ வணங்குவ தென்கொல்” என்றார். 46

மற்றவர் தம்மை நோக்கி, “மானுடம் இவர்தா மல்லர்[1]
நற்பெருந் தெய்வ மாதல் நானறிந் தகன்ற பின்பு
பெற்றவிம் மகவு தன்னைப் பேரிட்டேன்[2] ஆதலாலே
பொற்பதம் பணிந்தேன் நீரும் போற்றுதல்
[ செய்மின்” என்றான்.[3] 47

---

44. [1] புனிதவதியார்.

45. [1] மனைவியார் — புனிதவதியார்.
[2] பரமதத்தன் அவரைப் பணிந்து கூறிய கூற்று.

46. [1] காமர் — அழகிய.
[2] வெள்கி — வெட்கமுற்று.
[3] புனிதவதியாருடைய சுற்றத்தார் பரமதத்தனை நோக்கி வினவியது.

47. [1] இவர் மக்கட் பிறப்பினர் அல்லர்.
[2] கருதியது அளிக்கவல்ல பெருமை மிக்க தெய்வமாந் தன்மையை யான் அறிந்து அஞ்சி விலகிய பின்னர் என்னாற் பெறப்பட்ட இப் பெண்மகவுக்கு இவர் தம் அருமைத் திருப்பெயரை இட்டுப் போற்றி யுள்ளேன்.
[3] தன் கண்கண்ட தெய்வமாதல்பற்றி ‘நீரும் போற்றுதல் செய்மின்’ எனச் சுற்றத்தாருக்கு அறிவுறுத்துவானாயினன்.

என்றலுஞ் சுற்றத் தாரும்,
"இதுவென்கொல்"[1] என்று நின்றார்
மன்றலங் குழலி னாரும்[2]
வணிகன்[3]வாய் மாற்றங் கேளாக்
கொன்றைவார் சடையி னார்தங்
குரைகழல் போற்றிச் சிந்தை
ஒன்றிய நோக்கில் மிக்க
உணர்வுகொண் டுரைசெய் கின்றார். 48

"ஈங்கிவன் குறித்த கொள்கை இது,இனி இவனுக் காகத்
தாங்கிய வனப்பு நின்ற தசைப்பொதி கழித்திங் குன்பால்
ஆங்குநின் தாள்கள் போற்றும் பேய்வடி வடியே னுக்குப்
பாங்குற வேண்டும்"[1] என்று பரமர்தாள் பரவி நின்றார். 49

ஆனஅப் பொழுது மன்றுள் ஆடுவார் அருளி னாலே
மேல்நெறி உணர்வு[1] கூர[2] வேண்டிற்றே பெறுவார் மெய்யில்
ஊனடை வனப்பை யெல்லாம் உதறியெற் புடம்பே யாக
வானமும் மண்ணு மெல்லாம் வணங்குபேய்
[வடிவ[3] மானார். 50

48. [1] அது கேட்ட சுற்றத்தார் வியப்புந் திகைப்பும் மேற்பட நின்றார் என்பார். "இதுவென்கொல்" என வினவி நின்றார் என்றார்.

[2] புனிதவதியார்.

[3] பரமதத்தன்.

49. [1] இஃது இறைவனை ஒன்றிய சிந்தையினால் நினைந்து போற்றிய புனிதவதியாரது வேண்டுகோளாகும்.

50. [1] வீட்டு நெறியினை யளிக்கவல்ல மெய்யுணர்வு; ஆவது சிவஞானம்.

[2] மிகுதலால்.

[3] இவ்வம்மையார் இறைவனை வேண்டிப் பெற்ற பேய்வடிவம் வேட்டவற்றை நுகரப்பெறாது அலைந்து திரியும் அழுக்குடைய வுலகத்து இழிதகவிற்றாய பேய்வடிவ மன்றென்பதும் இறைவனைச் சூழ்ந்து போற்றும் தூய்மை வடிவினராய பதினெண் கணங்களுள் ஒன்றாகிய மேன்மையுடையதென்பதும் விளங்க "வானமும் மண்ணு மெல்லாம் வணங்கு பேய்வடிவம்" எனச் சேக்கிழாரடிகள் சிறப்பித் தருளினாரென்க. இவ்வுண்மை "மற்றொருகண் நெற்றிமேல் வைத் தான்றன் பேயாய, நற்கணத்தி லொன்றாய நாம்" எனவரும் அம்மையார் வாய்மொழியானும் புலனாதல் காண்க.

மலர்மழை பொழிந்த தெங்கும் வானதுந் துபியின் நாதம்
உலகெலாம் நிறைந்து விம்ம உம்பரும் முனிவர் தாமும்
குலவினர்[1] கணங்கள் எல்லாங் குணலையிட்டன[2] முன் நின்ற
தொலைவில்பல் சுற்றத்தாருந் தொழுதஞ்சி யகன்று
[போனார். 51

உற்பவித் தெழுந்த ஞானத்
தொருமையின் உமைகோன் றன்னை
அற்புதத் திருவந் தாதி
யப்பொழு தருளிச் செய்வார்[1]
"பொற்புடைச் செய்ய பாத
புண்டரீ கங்கள் போற்றும்
நற்கணத் தினிலொன் றானேன்
நான்"[2]என்று நயந்து பாடி. 52

ஆய்ந்தசீர் இரட்டை மாலை யந்தாதி[1] யெடுத்துப் பாடி
ஏய்ந்தபே ருணர்வு பொங்க எயிலொரு மூன்று முன்னாள்
காய்ந்தவர் இருந்த[2] வெள்ளிக் கைலைமால் வரையை நண்ண
வாய்ந்தபே ரருள்முன்கூர வழிபடும் வழியால் வந்தார். 53

---

51. [1] தேவர்களும் முனிவர்களும் அளவளாவி மகிழ்ந்தனர்.

[2] சிவகணங்கள் எல்லாம் மகிழ்ச்சி மிகுதியால் குணலைக் கூத்தாடின.

52. [1] காரைக்காற்பேயார் ஆகிய இவ்வம்மையார் முதன் முதல் திருவாய் மலர்ந்தருளியது இவ் அற்புதத் திருவந்தாதியென்பது இங்கு உணரத் தக்கது.

[2]
பெறினும் பிறிதியாதும் வேண்டேம் நமக்கி
தறினும் உருவொழியு மேனுஞ்—சிறிதுணர்த்தி
மற்றொருகண் நெற்றிமேல் வைத்தான்றன் பேயாய
நற்கணத்தி லொன்றாய நாம்.

எனவரும் அற்புதத் திருவந்தாதிப் பாடலில் இக்கருத்து தெளிவு பெற அமைந்திருத்தல் படித்து இன்புறற்பாலது.

53. [1] கட்டளைக் கலித்துறையும் வெண்பாவும் முறையே முன்னும் பின்னும் தொடர்ந்துவந்து மாலைபோலமைய இருபதுசெய்யுட்களால் அமைந்த திருவிரட்டை மணிமாலையென்னும் இப் பிரபந்தம் அந்தாதித்தொடையமையப் பாடியருளப்பெற்றதாகலின் அதனை 'இரட்டைமாலையந்தாதி' என ஆசிரியர் குறிப்பிட்டனர்.

[2] பகைவருடைய மும்மதில்களையும் முன்னொரு காலத்துச் சிரித் தெரித்த இறைவன் எழுந்தருளிய.

கண்டவர் வியப்புற் றஞ்சிக்
　　கையகன் றோடு வார்கள்
கொண்டதோர் வேடத் தன்மை
　　உள்ளவா[1] கூறக் கேட்டே
"அண்டர் நாயகனார் என்னை
　　யறிவரேல் அறியா வாய்மை
எண்டிசை மாக்களுக்[2] கியான்
　　எவ்வுரு வாயென்" என்பார். 54

வடதிசைத் தேச மெல்லாம் மனத்தினுங் கடிது சென்று
தொடையவிழ் இதழி[1] மாலைச் சூலபாணியனார்[2] மேவும்
படரொளிக் கைலை வெற்பின் பாங்கணைந் தாங்குக் காலின்
நடையினைத் தவிர்ந்து பார்மேல் தலையினால் நடந்து
[சென்றார்[3]. 55

தலையினால் நடந்து சென்று சங்கர னிருந்த வெள்ளி
மலையின்மே லேறும் போது மகிழ்ச்சியால் அன்பு பொங்கக்
கலையிளந் திங்கட் கண்ணிக் கண்ணுதல்[1] ஒரு பாகத்துச்
சிலைநுதல் இமைய வல்லி திருக்கண் ணோக்குற்ற
[தன்றே.[2] 56

---

54. [1] உள்ளவாறு.

[2] மாக்கள் — மனவுணர்விலாதார்; ஐயறிவுடைய விலங்கினையொத்தவர்.

5. [1] இதழி — கொன்றை.

[2] சூல மேந்திய கையினராகிய சிவபெருமானார்.

[3] இறைவன் எழுந்தருளிய தூய்மையுடையதாகிய திருமலையைத் தமது கால்களால் மிதித்து ஏறுதலாகாதெனக்கொண்டு தலையினால் நடந்தேறிய அன்பின் திறம் இவண் நினைந்து போற்றத் தகுவதொன்றாம்.

56. [1] கலைவளர் இளம்பிறையாகிய முடிமாலையையணிந்த நெற்றிக்கண்ணுடைய சிவபிரான்.

[2] இமயவல்லி—உமாதேவியார். "அருளது சத்தியாகும்" என்பராதலின் ஈண்டு இறைவன் திருவருட் சத்தியின் நோக்கம் புனிதவதியார்க்கு உளதாயிற்றென்பார் "சிலைநுத லிமையவல்லி திருக்கண்ணோக்குற்றதன்றே" என்றார். "மேலான சுகசொரூபமாகிய

அம்பிகை திருவுள் ளத்தின் அதிசயித் தருளித் தாழ்ந்து
தம்பெரு மானை நோக்கித், "தலையினால் நடந்திங் கேறும்
எம்பெரு மானோ ரெற்பின் யாக்கை அன் பென்னே"[1] என்ன
நம்பெரு மாட்டிக் கங்கு நாயகன் அருளிச் செய்வான். 57

"வருமிவள் நம்மைப் பேணும்
அம்மைகாண்[1] உமையே மற்றிப்
பெருமைசேர் வடிவும் வேண்டிப்
பெற்றனள்" என்று பின்றை
அருகுவந் தணைய நோக்கி,
"அம்மையே" என்னுஞ் செம்மை
ஒருமொழி உலக மெல்லாம்
உய்யவே[2] அருளிச் செய்தார். 58

---

சிவபோகத்தைத் தன்னடியார்க்கு அளித்தருளும் அருட் சத்தியே அம்மையாதலின் அத் தாய் வாயிலாகவே தந்தையாகிய சிவத்தைக் கண்டு வழிபடுதல் மரபு. இவ்வுண்மை "அவனருளாலே அவன்றாள் வணங்கி" எனவும் "சத்திதன்னைச் சென்று சார்ந்து பின்னர்ச், சிவமேவுவர் என்றுகாண் கொச்சை காவலன் சித்திரிப்பே" எனவும் வரும் பகுதிகளிற் குறிக்கப் படுதல் காண்க.

57. [1] "எம்பெருமான், தலையினால் நடந்து இங்கு ஏறும் ஓர் எற்பின் யாக்கை அன்பு என்னே" எனக் கூட்டுக. எம்பெருமான்— அண்மைவிளி. ஆருயிர்க்கு என்போடு இயைந்த தொடர்பு அன்போடு பொருந்துதற்கு வந்த நெறியின்பயன் என்பர். "எற்பின் யாக்கை அன்பு என்னே" என வினவிய குறிப்பு ஓர்க.

58. [1] அன்பேசிவம் ஆதலின் அத்தகைய மெய்யன்பினை வளர்த்த பெருமாட்டியாராகிய புனிதவதியாரைச் சிவபிரான் சுட்டிக்காட்டி "வருமிவள் நம்மைப்பேணும் அம்மைகாண் உமையே" என உமாதேவியாரிடம் கூறியருளினர்.

[2] தம் அருகுவந்த நிலையில் "அம்மையே" யென்னும் செம்மை நன்மொழியால் அவரை இறைவன் அழைத்தருளினராதலின் அன்று தொட்டு அம்மையார் என்னுந் திருப்பெயர் காரைக்காற் புனிதவதியாரைக்குறித்து வழங்குவதாயிற்று.

அங்கணன்[1] "அம்மையே" யென்
றருள்செய "அப்பா" என்று
பங்கயச் செம்பொற் பாதம்
பணிந்துவீழ்ந் தெழுந்தார் தம்மைச்
சங்கவெண் குழையி னாருந்
தாமெதிர் நோக்கி "நம்பால்
இங்கு வேண்டுவதென்" என்ன
இறைஞ்சி நின்றியம்பு கின்றார். 59

இறவாத இன்ப அன்பு
வேண்டிப்பின் வேண்டு கின்றார்
"பிறவாமை வேண்டும் மீண்டும்
பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும்
வேண்டும்நான் மகிழ்ந்து பாடி
அறவா நீ ஆடும்போதுன்
அடியின்கீழ் இருக்க"[1] என்றார். 60

---

59. [1] அங்கணன் — சிவன்.

60. [1] காரைக்காலம்மையார் சிவபெருமான் திருமுன்னிலையில் வேண்டிய விண்ணப்பம் இதுவாகும். பிறப்புத்துன்பமாதலையறிந்த பெரியோர் ஒன்றைவேண்டுங்கால் பிறவாமையினையே முதற்கண் வேண்டுவராதலின் ஈண்டு அம்மையாரும் அதனையே முதற்கண் வேண்டினார். மீண்டும் பிறப்புநேரின் அதற்கு வித்தாகிய அவாவின் வழிப்பட்ட இருவகைப்பற்றும்அற ஒழுகவேண்டுமிடத்து அவ்வொழுக்க நெறிக்குப் பற்றுக்கோடாக எல்லாப் பொருட்குஞ் சார்பாய செம்பொருளாகிய இறைவனை உண்மையான்உணர்ந்து போற்றும் மெய்யுணர்வினை யருளவேண்டும் என்பார் மீண்டும் பிறப்புண்டேல் உன்னையென்றும் மறவாமை வேண்டும் என வேண்டிக்கொண்டார். மெய்ஞ்ஞானத்தான் அறிதலைக் கைவிட்டு இறைவன் திருவடியாகிய திருவருளிற் கலந்து ஒன்றாதலே சிவப்பேறு என்ப ஆதலின் அறவாநீ யாடும்போது உன் அடியின் கீழிருக்க என அப்பேற்றினையே அம்மையார் முடிந்தபேறாக வேண்டிப் போற்றினர்.

கூடுமா றருள் கொடுத்துக்[1]
"குலவுதென் றிசையில் என்றும்
நீடுவாழ் பழன மூதூர்[2]
நிலவிய ஆலங் காட்டில்
ஆடுமா நடமு நீகண்
டானந்தஞ் சேர்ந்தெப் போதும்
பாடுவாய் நம்மை" என்றான்
பரவுவார் பற்றாய் நின்றான். 61

அப்பரி சருளப் பெற்ற அம்மையுஞ் செம்மை வேத
மெய்ப்பொரு ளானார் தம்மை விடைகொண்டு வணங்கிப்
[போந்து
செப்பரும் பெருமை யன்பால் திகழ்திரு வாலங் காடாம்
நற்பதி தலையி னாலே நடந்துபுக் கடைந்தா ரன்றே. 62

ஆலங்கா டதனில் அண்ட முறநிமிர்ந் தாடுகின்ற
கோலங்[1]காண் பொழுது "கொங்கைதிரங்கி" என்
[றெடுத்துத்தங்கு
மூலங்காண் பரியார் தம்மை மூத்தநற் பதிகம்[2]பாடி
ஞாலங்கா தலித்துப் போற்றும் நடம்போற்றி நண்ணு
[நாளில். 63

---

61. [1] அம்மையார் வேண்டியவண்ணம் இறைவன் தன் திருவருளாகிய திருவடியிற் பிரிவறக் கூடியிருந்து மேலான சிவானந்தமாகிய பேரின்பத்தை நுகரும் வண்ணம் திருவருள் செய்து.

[2] பழனமூதூர் இது பழனை எனவும் மருவிவழங்கும். பழனை என்பது ஊர்ப்பெயர். ஆலங்காடு என்பது கோயிற் பகுதியைக் குறிக்கும்.

63. [1] இத்திருக் கோலத்தினை "மண்டல நின்றங்குளாளமிட்டு வாதித்து வீசியெடுத்தபாதம், அண்டமுற நிமிர்ந்தாடுமெங்கள் அப்பனிடந் திருவாலங்காடே" (மூத்த—4) எனவரும் அம்மையார் வாய்மொழியாலறியலாம்.

[2] 'கொங்கைதிரங்கி' யெனத் தொடங்கும் திருப்பதிகமும் 'எட்டியிலவ' மென்பதும் இவ்வம்மையாரால் முதன் முதல் பண்ணொடு பாடப் பெற்ற தெய்வப்பாடலாக விளங்குவதுபற்றி 'மூத்ததிருப்பதிகம்' எனப் போற்றப் பெறுவனவாகும்.

வேறு:

மட்டவிழ் கொன்றையினார்தந் திருக்கூத்து முன்வணங்கும்
இட்டமிகு பெருங்காதல் எழுந்தோங்க வியப்பெய்தி
"எட்டியில வம்மீகை" என வெடுத்துத் திருப்பதிகங்
"கொட்டமுழ வங்குழகன் ஆடும்"[1] எனப் பாடினார். 64

மடுத்தபுனல் வேணியினார் "அம்மை" யென மதுரமொழி
கொடுத்தருளப் பெற்றாரைக் குலவியதாண் டவத்தில் அவர்
எடுத்தருளுஞ் சேவடிக்கீழ் என்றுமிருக் கின்றாரை
அடுத்த பெருஞ் சீர்[1]பரவல் ஆரளவா யினதம்மா. 65

திருச்சிற்றம்பலம்.

---

64. [1] "பட்டபிணங்கள் பரந்த காட்டிற் பறைபோல் விழிகட்பேய் கொட்ட முழவங் கூளிபாடக் குழகனாடுமே" என்ற தொடர் ஈண்டு ஒப்பு நோக்கத்தக்கது.

65. [1] சீர்மையாகிய சிறப்பு அடிக்கடி பிறந்திறப்போரைச் சார்ந்து தான் நிலைபெற வழிகாணாது பின் இறவாநிலையில் இறைவன் திருவடிக் கீழுள்ள காரைக்காலம்மையாரைச் சார்ந்து நிலைபெற்ற பெருச்சீரா யிற்று, என்பது விளங்க 'என்றுமிருக்கின்றாரை அடுத்த பெருஞ்சீர்' என ஆசிரியர் நயமுறக் கூறிய குறிப்புணர்க.

——:o:——

## திருநீலகண்ட யாழ்ப்பாண நாயனார் புராணம்.

எருக்கத்தம் புலியூர் மன்னி வாழ்பவர் இறைவன் றன்சீர்
திருத்தகும் யாழி லிட்டுப் பரவுவார் செழுஞ்சோ ணாட்டில்
விருப்புறு தான மெல்லாம் பணிந்துபோய் விளங்கு கூடற்
பருப்பதச் சிலையார் மன்னும் ஆலவாய் பணியச்
[சென்றார். 1

ஆலவாய் அமர்ந்தார் கோயில் வாயிலை யடைந்து நின்று
பாலையீ ரேழு கோத்த பண்ணியற் கருவி வீக்கிக்
காலமா தரித்த பண்ணிற் கைபல முறையும் ஆராய்ந்
தேலவார் குழலாள் பாகர் பாணிகள் யாழி லிட்டார். 2

மற்றவர் கருவிப்பாடல் மதுரைநீ டால வாயிற்
கொற்றவன் திருவுள்ளத்துக் கொண்டுதன் தொண்டர்க்
[கெல்லாம்
அற்றைநாட் கனவில் ஏவ அருட்பெரும் பாணனாரைத்
தெற்றினார் புரங்கள்செற்றார் திருமுன்பு கொண்டு புக்கார். 3

அன்பர்கள் கொண்டுபுக்க பொழுதினில் அரிவை பாகன்
தன்பெரும் பணியாம் என்று தமக்குமெய்யுணர்த லாலே
மன்பெரும் பாணனாரும் மாமறை பாட வல்லார்
முன்பிருந் தியாழிற் கூடல் முதல்வரைப் பாடு கின்றார். 4

---

1. எருக்கத்தம்புலியூர் என்பது ஸ்ரீமுஷ்ணத்திற்கு 4-மைல் தூரத்தில் தென்னார்க்காடு சில்லாவிலுள்ளது. இராஜேந்திர பட்டணம் என இப்பொழுது வழங்குகின்றது. பருப்பதச்சிலையார்—மேரு மலையை வில்லாகவுடைய சிவபெருமான்.

2. பாலை ஈரேழுகோத்த பண்ணியற் கருவி யென்றது பதினான்கு நரம்புகள் கட்டப்பெற்ற சகோடயாழினை. சகோடயாழின் பழைய தமிழ்ப்பெயர் செம்முறைக்கேள்வி யென்பதாகும். "ஈரேழ் தொடுத்த செம்முறைக்கேள்வியின் ஓரேழ்பாலை நிறுத்தல் வேண்டி" என்பர் இளங்கோவடிகள்.

3. கருவிப்பாடல்—யாழ்க்கருவியோடு இசைந்த மிடற்றுப்பாடல். ஆலவாயிற்கொற்றவன் என்றது சோமசுந்தரக்கடவுளை. தெற்றினார்—மாறுபட்ட அவுணர்கள்.

4. அரிவைபாகன்—உமையொருபாகனாகிய இறைவன். மன்பெரும் பாணனார்—நிலைபெற்ற இசைப்புலமை மிக்க திருநீலகண்ட யாழ்ப் பாணர். மாமறைபாட வல்லாராகிய கூடல்முதல்வர்முன்பு இருந்து யாழிற் பாடுகின்றார் என இயையும்.

திரிபுர மெரித்த வாறும் தேர்மிசை நின்ற வாறும்
கரியினை யுரித்த வாறும் காமனைக் காய்ந்த வாறும்
அரியயற் கரிய வாறும் அடியவர்க் கெளிய வாறும்
பரிவினாற் பாடக் கேட்டுப் பரமனார் அருளி னாலே. 5

அந்தரத் தெழுந்த ஓசை "அன்பினிற் பாணர் பாடும்
சந்தயாழ் தரையிற் சீதந் தாக்கில்வீக் கழியும் இன்று
சுந்தரப் பலகை முன்நீர் இடும்" எனத் தொண்டரிட்டார்
செந்தமிழ்ப் பாணனாருந் திருவருள் பெற்றுச் சேர்ந்தார். 6

தமனியப் பலகை யேறித் தந்திரிக் கருவி வாசித்
துமையொரு பாகர் வண்மை உலகெலாம் அறிய ஏத்தி
இமையவர் போற்ற ஏகி எண்ணில் தானங்கள் கும்பிட்
டமரர்நா டாளா தாரூ ராண்டவர் ஆரூர் சேர்ந்தார். 7

கோயில் வாயில் முன்னடைந்து
கூற்றஞ் செற்ற பெருந்திறலும்
தாயின் நல்ல பெருங்கருணை
அடியார்க் களிக்குந் தண்ணளியும்
ஏயுங் கருவி யிற்றொடுத்தங்
கிட்டுப் பாடக் கேட்டங்கண்
வாயில் வேறு வடதிசையில்
வகுப்பப் புகுந்து வணங்கினார். 8

---

5. திருநீலகண்ட யாழ்ப்பாணர் யாழிலிசைத்துப் பாடிய பாடற் பொருளாக அமைந்தவை திரிபுர மெரித்தது, யானை யுரித்தது, மன்மதனை யெரித்தது, திருமாலும் பிரமனும் தேட வெளிப்படாது நின்றது முதலிய இறைவனுடைய புகழமைந்த வரலாறுகளாகும்.

6. வீக்கு அழியும்—நரம்பின் இறுக்கம் நெகிழ்ந்து கெடும்.

7. தமனியப்பலகை — பொற்பலகை. தந்திரிக்கருவி — நரம்புகளையுடைய யாழ்க்கருவி. "அயிராவணமேறாது ஆனேறேறி அமரர் நாடாளாதே யாரூராண்ட அயிராவணமே" என வரும் திருநாவுக்கரசர் வாய்மொழி இங்கு ஒப்புநோக்குதற் குரியது.

8. தாயின் நல்ல பெருங்கருணை—பால் நினைந்தூட்டும் தாய் தன் குழந்தையிடத்துக் காட்டும் அன்பைவிட மிகவுஞ் சிறப்புடைய பேரருள்.

மூலத் தானத் தெழுந்தருளி
 யிருந்த முதல்வன் றனைவணங்கிச்
சாலக் காலம் அங்கிருந்து
 தம்பி ரான்றன் திருவருளால்
சீலத் தார்கள் பிரியாத
 திருவா ரூரி னின்றும்போய்
ஆலத் தார்ந்த கண்டத்தார்
 அமருந் தானம் பலவணங்கி. 9

ஆழி சூழுந் திருத்தோணி
 யமர்ந்த அம்மான் அருளாலே
யாழின் மொழியாள் உமைஞானம்
 ஊட்ட உண்ட எம்பெருமான்
காழி நாடன் கவுணியர்கோன்
 கமல பாதம் வணங்குதற்கு
வாழி மறையோர் புகலியினில்
 வந்தார் சந்த இசைப்பாணர். 10

ஞான முண்டார் கேட்டருளி
 நல்ல இசையாழ்ப் பெரும்பாணர்க்
கான படியாற் சிறப்பருளி
 அமரு நாளில் அவர்பாடும்
மேன்மைப் பதிகத் திசையாழில்
 இடப்பெற் றுடனே மேவியபின்
பானற் களத்தார் பெருமணத்தி
 லுடனே பரமர் தாளடைந்தார். 11

---

9. மூலத்தானம்—திருவாரூர்த் திருமூலட்டானம். சாலக்காலம்—நெடுங்காலம். சீலத்தார்கள்—நல்லொழுக்கமுடைய பெரியோர்கள்.

10. புகலி—சீகாழி

11. ஞானம் உண்டார் — உமையம்மையாரளித்த ஞானப்பாலை யுண்டருளிய திருஞானசம்பந்தர். பானற்களத்தார்—நீரோற்பலமலர் போலும் திருநீலகண்டத்தையுடைய சிவபெருமான். பெருமணம்—திருஞானசம்பந்தருக்குத் திருமணம் நிகழ்ந்த திருநல்லூர்ப் பெருமணம்.

வரும்பான் மையினிற் பெரும்பாணர்
மலர்த்தாள் வணங்கி வயற்சாலிக்
கரும்பார் கழனித் திருநாவ
லூரிற் சைவக் கலைமறையோர்
சுரும்பா நின்ற அணிநிலவும்
பணியும் அணிந்தார் அருள்பெற்ற
சுரும்பார் தொங்கற் சடையனார்
பெருமை சொல்ல லுறுகின்றாம். 12

## சடைய நாயனார் புராணம்.

தம்பிரானைத் தோழமை கொண்டருளித்
தமது தடம்புயஞ்சேர்
கொம்பனார்பால் ஒருதூது செல்ல
ஏவிக் கொண்டருளும்
எம்பிரானைச் சேரமான் பெருமாள்
இணையில் துணைவராம்
நம்பியாரூ ரரைப் பயந்தார்
ஞாலமெல்லாங் குடிவாழ.

## இசைஞானியார் புராணம்.

ஒழியாப் பெருமைச் சடையனார்
உரிமைச் செல்வத் திருமனையார்
அழியாப் புரங்கள் எய்தழித்தார்
ஆண்டநம்பி தனைப் பயந்தார்
இழியாக் குலத்தின் இசைஞானிப்
பிராட்டியாரை என்சிறு புன்
மொழியாற் புகழ முடியுமோ
முடியா தேவர்க்கும் முடியாதால். 1

12. சாலி—நெல். பணி—பாம்பு. சுரும்பார்தொங்கல்—வண்டுகள் மொய்க்கும் மலர்மாலை.

1. கொம்பனார் என்றசொல் ஈண்டுக் கொடிபோல்வாராகிய பரவை யாரைக் குறித்தது. தம்பிரானதோழர், சேரமான்றோழர் என்பன நம்பியாரூரராகிய சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்கு வழங்கும் சிறப்புப் பெயர்களாகும் ஞாலமெல்லாங் குடிவாழ நம்பியாரூரரைப் பயந்தார் என இயைத்துரைக்க. பயந்தார்—பெற்றார்.

1. அழியாப் புரங்கள் எய்தழித்தார்—ஒருவராலும் அழிக்க வியலாத முப்புரங்களையும் அழித்தருளிய இறைவன். ஆண்டநம்பி—இறைவனே வலிய வந்து தடுத்து ஆட்கொள்ளப்பெற்ற சிறப்புடைய நம்பியாரூரர். சுந்தரமூர்த்தி சுவாமிகளைப் புதல்வராகப் பெறும் பேறுடைய இசை ஞானியாரது பெரும் புகழ் சொற்களின் எல்லையைக் கடந்ததென்பது கருத்து.

# செய்யுள் முதற் குறிப்பகராதி.


| பாட்டு | பக்கம் |
|---|---|
| அகரமாயிரம் | 203 |
| அங்கணன் | 253 |
| அங்கத்தை | 70 |
| அங்கமேபூண்டாய் | 106 |
| அஞ்சினாலியற்றப் | 66 |
| அஞ்சொண்புலனும் | 4 |
| அட்டமாசித்திகள் | 38 |
| அடியோமைத் | 222 |
| அடுத்தானை யுரித்தானை | 54 |
| அண்டமாரிருளூடு | 89 |
| அத்தாவுன்னடியேனை | 105 |
| அத்தியின் உரிதனை | 36 |
| அந்தணர் வேள்வியும் | 36 |
| அந்தமாயுலகாதியும் | 38 |
| அந்தரத் | 258 |
| அந்தியுநண்பகலும் | 125 |
| அப்பணிசெஞ்சடை | 200 |
| அப்பதிதன்னில் | 245 |
| அப்பரிசருளப் | 254 |
| அப்பனியர்மைநீ | 102 |
| அப்பனைநந்தியை | 191 |
| அம்பலத்தருநடம் | 187 |
| அம்பளிங்குபகலோன் | 177 |
| அம்பிகை | 252 |
| அம்மருங்கு | 242 |
| அம்மைபயக்கும் | 94 |
| அம்மொழிகேட்ட | 247 |
| அரிக்கும்பிரமற்கும் | 141 |
| அரியகாட்சியராய்த் | 40 |
| அரியானையந்தணர் | 91 |
| அருந்துணையை | 91 |
| அருளேயுலகெலாம் | 213 |
| அல்லலென்செயும் | 78 |
| அல்லாய்ப்பகலாய் | 186 |
| அல்லிக்கமலத் | 149 |
| அல்லியம் பூம்பழனத் | 182 |
| அல்ராயிரந்தந்து | 164 |
| அவ்வுரைகேட்டலும் | 242 |
| அழகியோமிளையோம் | 84 |
| அளிமிடைதார்த் | 237 |
| அற்புதத்தெய்வம் | 178 |
| அறிவானுந்தானே | 213 |

| பாட்டு | பக்கம் |
|---|---|
| அறிவுமிக்கநன் | 185 |
| அன்பர்கள் | 257 |
| அன்புஞ்சிவமும் | 199 |
| அன்றென்றும் | 226 |
| அன்றேயென்றன் | 152 |
| அன்னநடையார் | 186 |
| அன்னம்பாலிக்கும் | 78 |
| ஆங்கவன்றன் | 238 |
| ஆட்டான்பட்டமையால் | 114 |
| ஆட்டுவித்தால் | 103 |
| ஆட்பாலவர்க்கருளும் | 41 |
| ஆடும் எனவும் | 43 |
| ஆணவமாயையுங் | 206 |
| ஆதியனாதிரையன் | 129 |
| ஆய்ந்தசீர் | 250 |
| ஆர்க்கும் இடுமின் | 197 |
| ஆரொருவருள்கு | 93 |
| ஆலங்காடதனில் | 254 |
| ஆலவாயமர்ந் | 257 |
| ஆலமாமரவமோ | 37 |
| ஆலைப்படுகரும்பின் | 98 |
| ஆவா இருவர் | 161 |
| ஆழிசூழுந் | 259 |
| ஆற்றிற்கிடந்த | 202 |
| ஆறதேறுஞ்சடை | 232 |
| ஆனஅப்பொழுது | 249 |
| இட்டமதமர்பொடி | 15 |
| இடர்கெடுமாறெண் | 95 |
| இடரினுந்தளரினும் | 34 |
| இடுக்கண்பட்டிருக் | 55 |
| இணையார்திருவடி | 142 |
| இந்நிலையிவன் | 246 |
| இம்மைவானவர் | 80 |
| இயலிசைநாடக | 222 |
| இரப்பவர்க்கீய | 67 |
| இருகையானையை | 135 |
| இருதலைக்கொள்ளியின் | 136 |
| இருநிலனாய்த்தீயாகி | 102 |
| இருளாயவுள்ளத்தின் | 99 |
| இல்லகவிளக்கது | 57 |
| இல்லாளன் | 240 |
| இலைமாடென்றிடர் | 233 |

| பாட்டு | பக்கம் | பாட்டு | பக்கம் |
|---|---|---|---|
| இவ்வரும் பிறவிப் | 175 | எல்லாவுலகமும் | 79 |
| இவரேமுதற்றேவர் | 219 | எல்லாவுலகிற்கும் | 201 |
| இறவாத இன்ப | 253 | எவரேனுந்தாமாக | 100 |
| இறைவனே | 212 | எழிலையாழ்செய்கைப் | 181 |
| இன்னடிசில் | 241 | எறிசுறவங் | 7 |
| ஈங்கிவன் | 249 | என்தாயோ | 203 |
| ஈசனருள் | 243 | என்பேவிறகா | 199 |
| ஈசற்குயான் | 162 | என்பொனே | 79 |
| ஈட்டுமாநிதி | 83 | என்றலுஞ்சுற்றத் | 249 |
| ஈரம் உடைய | 223 | என்னபுண்ணியஞ் | 29 |
| ஈரவார்சடை | 27 | என்னலறியாப் | 156 |
| ஈறாய்முதலொன்றாய் | 1 | என்னெஞ்சே | 216 |
| ஈன்றாளுமாய் | 74 | ஏகநாயகனை | 172 |
| உங்கையிற் | 138 | ஏதுக்களாலும் | 42 |
| உடம்பெனுமனை | 70 | ஏதுமொன்றும் | 83 |
| உடுத்தவன் | 44 | ஏர்தருமேழுலகேத்த | 144 |
| உடையாளுன்றன் | 146 | ஏழிசையாய் | 119 |
| உய்யலுறுவீர்காள் | 13 | ஏழுடையான் | 158 |
| உயிராவணமிருந் | 95 | ஏழைத்தொழும்பனேன் | 142 |
| உரமன்னுயர்கோட் | 9 | ஏறுதழீஇய | 225 |
| உரவெங்கரியின் | 4 | ஏனமருப்பினொடு | 130 |
| உரிஞ்சாயவாழ்க்கை | 25 | ஒடுங்கிநிலைபெற்ற | 202 |
| உருகுமனத்தடியவர் | 101 | ஒருபால் உலகளந்த | 215 |
| உருத்தெரியாக் | 151 | ஒருவனையுமல்லாது | 107 |
| உருமலிகடல் | 15 | ஒழிந்தேன் | 209 |
| உருவன்றியே | 207 | ஒழியாப் | 260 |
| உள்ளத்தீரே | 28 | ஒன்றியிருந்து | 72 |
| உள்ளம்பெரிய | 227 | ஓசையொலியெலாம் | 96 |
| உள்ளமிக்கார் | 32 | ஓதுவித்தாய்முன் | 75 |
| உளங்கொள்போகம் | 29 | ஓம்பினேன் | 68 |
| உற்பவித்தெழுந்த | 250 | கங்காளர் | 17 |
| உற்றஆக்கையின் | 148 | கங்கையாடிலென் | 90 |
| உற்றாரை | 155 | கங்கையார் | 37 |
| உற்றிருந்த | 97 | கங்கையைச் | 67 |
| உறவாகியபோகமும் | 172 | கட்டலர்த்த | 22 |
| ஊர்திரைவேலை | 23 | கடல்மிசை | 245 |
| ஊராருவரிச் | 26 | கடவுந்திகிரி | 77 |
| ஊழியூழி | 32 | கடியார்கணம்புல்லர் | 182 |
| ஊன்பாயுமுடைதலை | 18 | கடுகியதேர் | 61 |
| ஊனத்திருள் | 4 | கடையவனேனை | 136 |
| ஊனிலாவி | 78 | கண்காணி | 204 |
| எட்டியிலவம் | 211 | கண்டவர்வியப் | 251 |
| எண்ணிலேன் | 147 | கண்டெந்தை | 215 |
| எண்ணுகேன் | 106 | கண்ணப்பனொப்ப | 141 |
| எந்தையீசனெம் | 27 | கண்ணவன்காண் | 97 |
| எம்பந்தவல்வினை | 182 | கண்ணாயேழுலகுங் | 115 |
| எருக்கத்தம் | 257 | கண்ணினாற் | 79 |

| பாட்டு | பக்கம் |
|---|---|
| கண்பொலிநெற்றி | 43 |
| கண்மேற்கண்ணும் | 9 |
| கணங்களாய் | 49 |
| கணவர்தாம் | 248 |
| கணவன்ருன் | 239 |
| கந்தமலர்க் | 101 |
| கரவலாளர் | 28 |
| கரவாடும் | 53 |
| கரவின்றி | 4 |
| கருத்தனே | 38 |
| கரும்புதேன் | 38 |
| கருவாய்க்கிடந்துன் | 74 |
| கருவுற்றநாள் | 75 |
| கல்லா அரசனும் | 195 |
| கல்லாக்குரங்கு | 219 |
| கல்லினேடெனைப் | 84 |
| கல்வாயகிலும் | 108 |
| கலஞ்சமைத் | 244 |
| கலைமலிந்த | 116 |
| கழற்கொண்ட | 211 |
| கள்ளனேன் | 70 |
| கள்ளிமுதுகாட்டில் | 94 |
| களிவானுலகிற் | 183 |
| களையாவுடலோடு | 183 |
| கற்றுக்கொள்வன | 88 |
| கறிமாமிளகும் | 108 |
| கறியமுதங் | 240 |
| கறைகொள்கண்டத்தர் | 31 |
| கறையணி | 36 |
| கனியினுங் | 80 |
| கனைகொளிருமல் | 29 |
| கனைத்தெழுந்த | 6 |
| காக்கைகவரிலென் | 192 |
| காடடைந்த | 5 |
| காண்டலே | 63 |
| காயமே | 71 |
| காரணிகற்பகங் | 170 |
| காரிருளுருவ | 11 |
| காலமுண்டாகவே | 154 |
| காலமுநாழிகையும் | 130 |
| காலமுநாள்க | 61 |
| காவினில் ஊறும் | 207 |
| காலையார் வண்டினம் | 36 |
| கானமர் சோலைக் | 25 |
| கிழக்கெழுந் | 194 |
| கீதமினிய | 144 |
| குணங்கள் | 81 |
| குந்திநடந்து | 215 |
| குருகுபாயக் | 117 |
| குருந்தமேறிக் | 39 |
| குலங்களென் | 85 |
| குலப்பொல்லேன் | 105 |
| குலவெஞ்சிலை | 10 |
| குறவர்கொல்லைப் | 33 |
| குனித்த புருவமும் | 73 |
| கூசநோக்காது | 33 |
| கூடவேடத்த | 90 |
| கூடாமன்ன | 112 |
| கூடியடியார் | 123 |
| கூடுமாறருள் | 254 |
| கைப்போது | 54 |
| கைம்மகவேந்தி | 14 |
| கையதுவீழினும் | 35 |
| கையார்வளை | 139 |
| கொடிகளிடைக் | 111 |
| கொள்ளேன் | 131 |
| கொலையே | 194 |
| கோங்கமே | 37 |
| கோடிமா | 69 |
| கோடுயர் | 109 |
| கோயில் | 258 |
| சங்கநிதி | 105 |
| சடையார்புன | 1 |
| சந்தமார் | 37 |
| சந்தனப்பூம் | 220 |
| சலமிலன் | 56 |
| சாத்திரம்பல | 83 |
| சாதலும்பிறத்த | 120 |
| சார்ந்தவர்க் | 205 |
| சித்தந்தெளி | 12 |
| சிந்தனைநின் | 133 |
| சிந்திப்பார் | 89 |
| சிம்மாந்து | 115 |
| சிரிப்பார் | 146 |
| சிலபகல் | 247 |
| சிறையாரும் | 8 |
| சீரளவில்லாத் | 169 |
| சீரார்பவளங் | 143 |
| சீருந்திருவும் | 190 |
| சீலமின்றி | 157 |
| சுண்ணவெண் | 51 |
| சுரும்பிவர் | 167 |
| சுற்றமொடு | 20 |
| சூழ்தரு | 44 |

| பாட்டு | பக்கம் |
|---|---|
| சூழொளி | 125 |
| செங்கணனும் | 88 |
| செந்துவர் | 49 |
| செய்தபடி | 243 |
| செய்யதாமரை | 50 |
| செருமேவு | 113 |
| செல்லுமளவும் | 204 |
| செற்றிலென் | 208 |
| சேலுலாம் | 188 |
| சைவப்பெருமைத் | 201 |
| சொற்றுணை | 54 |
| சொன்மாலை | 59 |
| சோதியேசுடரே | 150 |
| ஞாலமே | 79 |
| ஞானஆரூரரை | 230 |
| ஞானமிலாதார் | 196 |
| ஞானமுண்டார் | 259 |
| தண்ணுஅரக்கன் | 24 |
| தண்புனலும் | 113 |
| தத்தஞ்சமயத் | 196 |
| தத்தையங்கனையார் | 179 |
| தப்பிவானந் | 85 |
| தம்பிரானை | 260 |
| தம்மையேபுகழ்ந் | 116 |
| தமனியப் | 258 |
| தலமல்கிய | 3 |
| தலையினல் | 251 |
| தவமே | 132 |
| தழைகொள் | 33 |
| தளருங்கோளர | 81 |
| தன்னைச் | 76 |
| தனதனற் | 171 |
| தனமாவது | 230 |
| தாயிற்சிறந் | 165 |
| தாரமாகிய | 122 |
| தானுமம் | 248 |
| தானேயிருநிலம் | 191 |
| திரிபுரமெரித்த | 258 |
| திருக்கோயிலில்லாத | 104 |
| திருந்தலார் | 30 |
| திருநாமமஞ்செழுத்தும் | 104 |
| திருவாக்குஞ் | 221 |
| தீயானமேனி | 223 |
| தீச்சான | 184 |
| துஞ்சிருள் | 69 |
| துத்தங்கைக்கிள்ளை | 210 |
| தும்மலோடருந் | 35 |

| பாட்டு | பக்கம் |
|---|---|
| துன்பந்துடைப் | 12 |
| துன்பநும்மைத் | 65 |
| துன்னஆடை | 28 |
| தூண்டுசுடரனைய | 93 |
| தெள்ளுநீறவனீறென் | 176 |
| தென்பாலுகந் | 141 |
| தேவதேவன் | 155 |
| தேவர்கோவறியாத | 134 |
| தேற்றத்தெளிமின் | 193 |
| தேன்பழச்சோலை | 144 |
| தேனையம்பாடும் | 14 |
| தேனினுமினியர் | 11 |
| தேனெய்புரிந் | 111 |
| தேனைக்குந் | 53 |
| தொண்டரஞ்சு | 31 |
| நங்கடம்பனை | 81 |
| நடுவுநின்றார்க் | 200 |
| நண்ணியார் | 65 |
| நம்பரடியார் | 239 |
| நம்பனே | 66 |
| நமச்சிவாயவே | 86 |
| நரப்பெழுகைகள் | 52 |
| நல்லவென | 236 |
| நல்லார்பழிப் | 221 |
| நலங்கொள் | 26 |
| நலமிலராக | 50 |
| நற்பதங்கள் | 8 |
| நற்பதத்தார் | 103 |
| நற்றாமரைமலர் | 25 |
| நன்றுடையானை | 13 |
| நனவினும் | 35 |
| நாடினர் | 64 |
| நாளுமின்னிசை | 121 |
| நானேபிறந்து | 225 |
| நானேயோ | 154 |
| நிச்சலேத்து | 19 |
| நிலைபெறுமா | 96 |
| நின்னடியே | 6 |
| நின்னுவார் | 104 |
| நின்னியல்பை | 218 |
| நீடியசீர்க் | 236 |
| நீநாளும் | 21 |
| நீறுரு | 110 |
| நீரோடு | 18 |
| நீவாராதொழிந் | 177 |
| நீறடைந்த | 5 |
| நூலடைந்த | 5 |

| பாட்டு | பக்கம் |
|---|---|
| நூலறிவுபேசி | 214 |
| நெக்குநெக்கு | 87 |
| நெஞ்சந்தளிர் | 216 |
| நெய்யும் பாலும் | 110 |
| நேயத்ததாய் | 159 |
| நொந்தாவொண் | 114 |
| பட்டநெற்றியர் | 47 |
| படும்தழுமிட | 185 |
| படைகொள்கூற் | 28 |
| பண்டுசெய்த | 82 |
| பண்ணில்யாழினர் | 47 |
| பண்ணிலோசை | 82 |
| பண்ணினர் | 69 |
| பண்ணும்பத | 2 |
| பத்திமையாற் | 98 |
| பத்திமையும் | 119 |
| பரசுபாணியர் | 47 |
| பரவும்பரிசொன் | 123 |
| பருவரை | 60 |
| பல்பெருநற் | 235 |
| பல்லிலோட்டினர் | 47 |
| பல்லிலோடுகை | 39 |
| பலபலகாமத்த | 51 |
| பவளமே | 175 |
| பவளமேனியர் | 47 |
| பழியிலான் | 53 |
| பற்றற்றார் | 62 |
| பற்றாங்கவை | 152 |
| பற்றிநின்ற | 96 |
| பறக்குமெங் | 118 |
| பறையும்பழி | 3 |
| பன்னியசெந் | 101 |
| பன்னெடுங் | 180 |
| பாங்ககன்று | 243 |
| பாங்குடைய | 239 |
| பாசமுங் | 68 |
| பாசமொன்றில | 80 |
| பாடலங்காரப் | 173 |
| பாடியசெங் | 231 |
| பாதம்விண்ணோர் | 32 |
| பாந்தள்பூணாரம் | 180 |
| பாருருவாய | 156 |
| பாரூர்பௌவத் | 66 |
| பாரூரும் | 128 |
| பாரொடு | 149 |
| பாவமும் | 89 |
| பாறுறுமலர்ச் | 7 |

| பாட்டு | பக்கம் |
|---|---|
| பிட்டுநேர் | 150 |
| பிடியதனுரு | 16 |
| பிண்டமறுப்பீர் | 13 |
| பிணிகலந்த | 27 |
| பிழையுளன | 126 |
| பிறத்தலும் | 64 |
| பிறந்தினைய | 52 |
| பிறவாநெறி | 203 |
| பிறவியறுப்பீர் | 12 |
| பிறவியெனும் | 232 |
| பிறையும்புனலும் | 9 |
| பீரடைந்த | 5 |
| புக்கணைந்து | 88 |
| புடையினர் | 19 |
| புரங்கடந் | 162 |
| புலனைந்தும் | 16 |
| புவனநாயகனே | 176 |
| புவனியிற்போய்ப் | 145 |
| புழுவாய்ப் | 75 |
| புள்ளுவரைவர் | 72 |
| புற்றாடரவம் | 109 |
| புற்றில்வாளர | 121 |
| புற்றில்வாளரவும் | 153 |
| பூங்கழல் | 63 |
| பூணுவ | 112 |
| பூந்தண் | 228 |
| பூரியாவரும் | 85 |
| பூவியல் | 15 |
| பூவினுக் | 55 |
| பெண்ணொர்பாகம் | 33 |
| பெருந்தகையைப் | 100 |
| பெறலருந் | 245 |
| பெறுவது | 231 |
| பேயாயின | 3 |
| பேராயிரம் | 99 |
| பைங்குவளைக் | 137 |
| பொய்யாநரகம் | 217 |
| பொய்யேயுனைப் | 119 |
| பொருட்பற்றிச் | 142 |
| பொன்றிரண் | 10 |
| பொன்னம்பலத் | 228 |
| பொன்னவிலுங் | 127 |
| பொன்னார்திருவடிக் | 77 |
| பொன்னார்மேனி | 115 |
| பொன்னைவகுத் | 77 |
| போய்க்காடே | 21 |
| போதும் | 226 |

| பாட்டு | பக்கம் |
|---|---|
| போற்றுந்தகையன | 76 |
| மகிழ்தி | 214 |
| மங்கலமா | 238 |
| மகட்கொடை | 238 |
| மங்கையர்க்காசி | 48 |
| மட்டவிழ் | 255 |
| மட்டிட்ட | 22 |
| மடம்படு | 20 |
| மடமகள் | 246 |
| மடலார்ந்த | 24 |
| மடித்தாடு | 127 |
| மடுத்தபுனல் | 255 |
| மண்புகார் | 21 |
| மண்பொருந்தி | 59 |
| மணமிசைந்த | 237 |
| மந்தம்முழ | 14 |
| மரத்தை | 206 |
| மருந்தினோடு | 82 |
| மலர்மழை | 250 |
| மலிவிழா | 24 |
| மலைபுரிந்த | 6 |
| மலையின்மிசை | 46 |
| மலையேவந்து | 87 |
| மற்றதனைக் | 242 |
| மற்றவர்கருவிப் | 257 |
| மற்றவர்தம்மை | 248 |
| மற்றவர்தாம் | 241 |
| மற்றவனும் | 237 |
| மற்றும்பல | 219 |
| மற்றொருதுணை | 120 |
| மறைகளாயின | 122 |
| மறையவன் | 39 |
| மறையினர் | 19 |
| மறையுடையாய் | 6 |
| மன்னுகதில்லை | 189 |
| மன்னுமலைமகள் | 76 |
| மன்மாலுருதே | 218 |
| மனமெனுங் | 68 |
| மனிதர்காளிங்கே | 88 |
| மனைக்கே | 26 |
| மனைவியார் | 241 |
| மாடமாளிகை | 125 |
| மாசில்வீணை | 86 |
| மாதினையோர் | 99 |
| மாதொர்கூறனை | 31 |
| மாப்பிணை | 58 |
| மாமணிச் | 247 |
| மாலுலாமனந் | 174 |
| மாற்றேனென | 163 |
| மானமிகு | 234 |
| மானும்மறை | 124 |
| மானேர்கலை | 174 |
| மிடுக்கிலா | 117 |
| மிண்டுமனத் | 190 |
| மீண்டாரென | 166 |
| மீளாவடிமை | 128 |
| முகத்தாற் | 227 |
| முத்திநெறி | 157 |
| முத்தியை | 205 |
| முத்துநற் | 140 |
| முத்துவிதான | 65 |
| முதுசினவில் | 45 |
| முதுவாயோரி | 118 |
| முந்தித்தானே | 62 |
| முந்திவந்து | 32 |
| முருகலர் | 246 |
| முன்னமவ | 95 |
| முன்னெறி | 58 |
| முன்னையொப் | 191 |
| மூப்புறுமத் | 241 |
| மூலத்தானத் | 259 |
| மெய்த்தவன் | 98 |
| மெய்ம்மையாம் | 71 |
| மைப்பயந்த | 22 |
| மைப்பூசும் | 23 |
| மைம்மலர்க் | 12 |
| மையாடிய | 3 |
| மையார்கதலி | 168 |
| மையார்தடங் | 1 4 |
| மையிலங்கு | 136 |
| மைவார் | 160 |
| யாவர்க்குமாம் | 198 |
| வங்கமலி | 234 |
| வஞ்சித்தென் | 59 |
| வஞ்சிநுண் | 126 |
| வடதிசைத் | 251 |
| வடிகொள் | 26 |
| வடிவேறு | 92 |
| வண்டணை | 20 |
| வண்டரங்கப் | 7 |
| வண்டல்பயில் | 235 |
| வணிகர்பெருங் | 235 |
| வணிகனுந்தன் | 244 |
| வந்தவரணைந்த | 248 |

| பாட்டு | பக்கம் |
|---|---|
| வந்தமூதறி | 236 |
| வம்மின்னடியீர் | 2 |
| வருங்குன்ற | 159 |
| வரும்பயனை | 92 |
| வரும்பான்மை | 260 |
| வருமிவள் | 252 |
| வருவாசகத்தினின் | 229 |
| வல்லைவரு | 45 |
| வழகிதழ்க் | 220 |
| வழங்குகின் | 147 |
| வளைக்கைமட | 23 |
| வனபவள | 52 |
| வாங்கினர் | 19 |
| வாணுதற்கொடி | 183 |
| வாய்த்தது | 73 |
| வாரமாகித் | 111 |
| வாழ்கஅந்தணர் | 40 |
| வாழ்த்தவல்லார் | 192 |
| வாழ்த்தவாயும் | 86 |
| வாழ்த்துவதும் | 133 |
| வாழினுஞ் | 34 |
| வாளாபொழுது | 218 |
| வானத்தானென் | 212 |
| வானவர்கள் | 45 |
| வானவர்கள்வேண்ட | 188 |
| வானகி | 132 |
| விச்சுக்கேடு | 135 |
| விடம்படு | 44 |
| விடலேறு | 17 |

| பாட்டு | பக்கம் |
|---|---|
| விடுவதே | 244 |
| விடையான் | 74 |
| விண்டொழிந்தன | 30 |
| விண்ணுளுந் | 139 |
| விண்ணுற | 55 |
| விரித்தவன் | 44 |
| விளக்கினர் | 71 |
| விளைவளம் | 247 |
| விற்றுக்கொள்வீர் | 129 |
| விறகிற்றீயினன் | 87 |
| வீடிருலகினில் | 57 |
| வீழிம்மிழலை | 2 |
| வெங்கோல் | 184 |
| வெம்பவரு | 103 |
| வெந்தசாம்பல் | 41 |
| வெந்தநீறருங் | 56 |
| வெற்றவே | 48 |
| வேடநெறி | 195 |
| வேண்டத்தக்க | 151 |
| வேண்டியநாட்களிற் | 217 |
| வேதங்கள் | 240 |
| வேதமொடு | 20 |
| வேதமொழியர் | 143 |
| வேதமோதி | 8 |
| வேதமோதிலென் | 90 |
| வேந்துக்க | 224 |
| வேயனை | 46 |
| வைத்தமாடு | 84 |